D
Y211, 31' P03
P03 .38.1.
184535

**28-03-2003**

**உள்ளடக்கம்**


பக்கங்கள்

ஆளுநரும் அமைச்சரவையும் iii-vii

Governor and Council of Ministers ix-xii

பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் xiii-xvi

பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) xvii-xxvii

1. **வினாக்கள்-விடைகள்—**

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள் 1-36

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல்கள் 8 மற்றும் 9) 36-103

2. **அறிக்கைகள் அளித்தல்—**

பொதுக் கணக்குக் குழு 104

3. **அறிவிப்புகள்—**

(அ) முன்பண மானியக் கோரிக்கைகள், 2003-2004, மொழிதல் (ஆ.செ.) 104

(ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, 2003 (ஆஇ.) 109

4. **முன்பண மானியக் கோரிக்கைகள், 2003-2004, வாக்கெடுப்பு—** 104-108

5. **அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)—**

தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, 2003 109-110

பக்கங்கள்

6. **அரசினர் தீர்மானம்—**

விதி 30, 130 மற்றும் 132-ஐத் தளர்த்தல் 110

7. **அரசினர் சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்)—**

தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, 2003 110-11

8. **வரவு செலவுத் திட்டம், 2003-2004,** 112-118
**பொது விவாதம்**—தொடர்ச்சி 123-200

திரு. ஜெக. வீரபாண்டியன் 113, 115-118

*திரு. கோ. இரவிராஜ் 123-128

*திருமதி செல்வி முருகேசன் 128-136

டாக்டர் க. பொன்முடி 137-156, 158-160

திரு. எம்.ஏ. ஹக்கீம் 160-179

*திரு. க. பாரமலை 179-186

திரு. கே. பாண்டுரங்கன் 186-200

9. **விதி 110-ன்கீழ் அறிக்கை—**

விவசாயிகளுக்கு வரிகள் இரத்து, கூட்டுறவுக் கடன்கள் வட்டி தள்ளுபடி மற்றும் சலுகைகள் குறித்த மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை 119-122

10. **பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்—** 201-202



## ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர்-திரு. பெ. ஸ்ரீ. ராமமோகன் ராவ்

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. **முதலமைச்சர்** .. **மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல துறை மற்றும் சிறுபான்மையினர் நலன்.

2. **பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள், சிறுபாசனம் உட்பட பாசனம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு, இலஞ்ச ஒழிப்பு மற்றும் சிறைகள், வருவாய், மாவட்ட வருவாய்த் துறை பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள், பத்திரப் பதிவு, முத்திரைத்தாள் சட்டம், எழுதுபொருள் & அச்சுத் துறை, அரசு அச்சகம், பூமிதானம், கிராமதானம் மற்றும் கடவுச் சீட்டுகள்.

3. **நிதி அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** நிதி, திட்டமிடல், தேர்தல் மற்றும் சட்டமன்றம், சட்டமியற்றல், எடைகள், அளவைகள், கடன் கொடுத்தல் மீதான சட்டம் உட்பட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்களைப் பதிவு செய்தல்.

4. **சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல்.

5. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:**

இந்து சமய மற்றும் அறநிலையங்கள்

6. மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. செ. செம்மலை:**

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன், கல்வி, தொழில்நுட்பக் கல்வி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல், விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், தொல் பொருளியல், தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாடு, வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப் பட்டோர்.

7. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. அ. பாப்பாசுந்தரம்:**

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன்.

8. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:**

தொழிலாளர்கள், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு, மக்கள்தொகை கணக்கெடுப்பு மற்றும் வக்ஃபு.

9. வேளாண்மைத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:**

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்பு மேம்பாடு.

184535
நூலகம்



10. சமூக நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:**

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், இரவலர் மறுவாழ்வு இல்லங்கள், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம்.

11. ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:**

ஆதிதிராவிடர் நலன், பழங்குடியினர், கொத்தடிமைத் தொழிலாளர்கள் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்.

12. போக்குவரத்துத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:**

போக்குவரத்து, நாட்டுடைமை யாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் சட்டம் மற்றும் துறைமுகங்கள்.

13. மின் மற்றும் தொழில் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:**

மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு, தொழிற்சாலைகள், இரும்பு, உருக்குக் கட்டுப்பாடு, சுரங்கங்கள், கனிமங்கள் மற்றும் மின்னணுவியல்.

14. வணிக வரித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:**

வணிக வரிகள்.

15. கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ப. மோகன்:**

கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல், விலைக் கட்டுப்பாடு மற்றும் புள்ளியியல்.

**16. உள்ளாட்சித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு எம்.சி. சம்பத்:**

நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்பு திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல.

**17. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்**

கால்நடை பராமரிப்பு.

**18. ஊரகத் தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஆர். வடிவேல்:**

குடிசைத் தொழில்கள் உட்பட ஊரகத் தொழில்கள், சிறு தொழில்கள் மற்றும் கதர் கிராமத் தொழில் வாரியம்.

**19. வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:**

வனம், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு.

**20. வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:**

வீட்டுவசதி, வீட்டுவசதி மேம்பாடு, நகரமைப்புத் திட்டமிடல், குடிசை மாற்றுத் திட்டங்கள், இடவசதிக் கட்டுப்பாடு, நகர்ப்பகுதி வளர்ச்சி, சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

**21. பால் வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:**

பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி.



**22. செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன்:**

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல், திரைப்படச் சட்டம் மற்றும் செய்தித்தாள் கட்டுப்பாடு.

**23. கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:**

கைத்தறி மற்றும் துணித் தொழில்.

**24. மீன்வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு.எம்.ராதாகிருஷ்ணன்:**

மீன்வளம்.

**25. சுற்றுலாத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. அ. மில்லர்:**

சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.

## GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR - THIRU P.S. RAMAMOHAN RAO

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

| | | |
|---|---|---|
| **1. Chief Minister** | .. | **The Hon. Selvi J Jayalalithaa:** Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, District Revenue Officers, Home, Police and Minorities Welfare. |
| **2. Minister for Public Works, Prohibition & Excise and Revenue** | .. | **The Hon. Thiru O. Panneerselvam:** Public Works, Highways, Irrigation including Minor Irrigation, Prohibition and Excise, Molasses, Prevention of corruption, Prisons, Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Registration, Stamp Act, Stationery & Printing, Government Press, Bhoodhan & Gramdhan and Passports. |
| **3. Minister for Finance** | .. | **The Hon. Thiru C. Ponnaiyan:** Finance, Planning, Elections and Legislature, Legislation, Weights and Measures, Debt Relief including Legislation on money lending, Chits and Registration of Companies. |
| **4. Minister of Law and Information Technology** | .. | **The Hon. Thiru D. Jayakumar:** Law, Courts and Information Technology. |
| **5. Minister for Hindu Religious and Charitable Endowments** | .. | **The Hon. Thiru P.C. Ramasamy:** Hindu Religious and Charitable Endowments. |

6. **Minister for Health and Education** .. **The Hon. Thiru S. Semmalai:**

Health, Medical Education and Family Welfare, Education, Technical Education, Science and Technology, Sports and Youth Welfare, Archaeology, Tamil Development and Tamil Culture, Indians Overseas, Refugees and Evacuees.

7. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru A. Papasundaram:**

Backward Classes, Most Backward Classes and Denotified Communities.

8. **Minister for Labour** .. **The Hon. Thiru A. Anwer Rhazza:**

Labour, Employment and Training, Urban and Rural Employment, Census and Wakfs.

9. **Minister for Agriculture** .. **The Hon. Thiru R. Jeevanantham:**

Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development.

10. **Minister for Social Welfare** .. **The Hon. Tmt. B. Valarmathi:**

Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Beggar Homes, Orphanages and Correctional Administration.

11. **Minister for Adi-Dravidar Welfare** .. **The Hon. Thiru C. Karuppasamy:**

Adi-Dravidar Welfare, Hill Tribes, Bonded Labour and Welfare of Ex-Servicemen.



12. **Minister for Transport** .. **The Hon. Thiru R. Viswanathan:**

Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

13. **Minister for Electricity and Industries** .. **The Hon. Thiru Nainar Nagenthran:**

Electricity, Non-conventional Energy Development, Industries, Iron & Steel Control, Mines & Minerals and Electronics.

14. **Minister for Commercial Taxes** .. **The Hon. Thiru Se.Ma. Velusamy:**

Commercial Taxes.

15. **Minister for Co-operation, Food & Civil Supplies & Consumer Protection** .. **The Hon. Thiru P. Mohan:**

Co-operation, Food, Civil Supplies, Price Control and Statistics.

16. **Minister for Local Administration** .. **The Hon. Thiru M.C. Sampath:**

Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply.

17. **Minister for Animal Husbandry** .. **The Hon. Thiru P.V. Damodaran:**

Animal Husbandry.

18. **Minister for Rural Industries** .. **The Hon. Thiru R. Vadivel:**

Rural Industries including Cottage Industries, Small Scale Industries, Khadi and Village Industries Board.

| | | |
|---|---|---|
| **19. Minister for Forests and Environment** | .. | **The Hon. Thiru R. Vaithilingam:**<br>Forests & Environment and Pollution Control. |
| **20. Minister for Housing and Urban Development** | .. | **The Hon. Thiru Anitha R. Radhakrishnan:**<br>Housing, Housing Development, Town Planning, Slum Clearance, Accommodation Control, Urban Development and C.M.D.A. |
| **21. Minister for Dairy Development** | .. | **The Hon. Thiru S. Ramachandran:**<br>Milk and Dairy Development. |
| **22. Minister for Information and Publicity** | .. | **The Hon. Thiru K.K. Balasubramanian:**<br>Information and Publicity, Film Technology, Cinematograph Act and Newsprint Control. |
| **23. Minister for Handlooms and Textiles** | .. | **The Hon. Thiru V. Somasundaram:**<br>Handlooms and Textiles. |
| **24. Minister for Fisheries** | .. | **The Hon. Thiru M. Radhakrishnan:**<br>Fisheries. |
| **25. Minister for Tourism** | .. | **The Hon. Thiru A. Miller:**<br>Tourism and Tourism Development Corporation. |



## பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

### பேரவைத் தலைவர்

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து

### பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. அ. அருணாசலம்

### மாற்றுத் தலைவர்கள் *

திரு. கே. பாண்டுரங்கன்

டாக்டர் தே. குமாரதாஸ்

திரு. லா. சந்தானம்

திருமதி சி. எம். சூரியகலா

திரு. சி. சிவசாமி

திரு. வி. ஜெயராமன்

### செயலாளர்

திரு. வெ. இராசாராமன்

* 28-1-2003 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

| | |
|---|---|
| திருமதி பானுமதி ஆனந்தராஜன், பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. கூடுதல் செயலாளர் |
| திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல். | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் |
| திரு. செ. சந்திரகுமார், எம்.ஏ., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. வே. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. எம். ஜோசப், பி.காம்., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. இல. மாரியப்பன், பி.ஏ. | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திருமதி சீ. கனகவல்லி, டி.சி.பி. | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) (விடுப்பு) |
| திரு. பா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். | .. குழு அலுவலர் |



| | |
|---|---|
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | .. குழு அலுவலர் |
| திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்.சி., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்.சி., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல் | .. தலைமை நிருபர் |
| திருமதி ந. மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ., பி.எல். | .. தலைமை நிருபர் |
| திரு. தி. உமாபதி, பி.ஏ. | .. தலைமை நிருபர் |
| திருமதி ப. சாஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. கோ. தேவராஜன், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திருமதி ச.இரா. சுகுணா, பி.ஏ. | .. தலைமை நிருபர் |
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல் | .. சார்புச் செயலாளர் |

| | | |
|---|---|---|
| திருமதி சை.உ. சலீம் உன்னிசா, பி.ஏ. | .. | சார்புச் செயலாளர். |
| திரு. ந. ருத்ரமணி, எம்.ஏ. | .. | சார்புச் செயலாளர், பேரவைத் தலைவரின் தனிச் செயலர் (பொறுப்பு) |
| திரு. க. கிருஷ்ணன், பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி சி. நிர்மலா, பி.காம். | .. | தலைமை நிருபர் (விடுப்பு) |
| திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | தலைமை நிருபர் |
| திரு. நா. வீரராகவன், எம்.ஏ., பி.ஜி.டி.சி.ஏ. | .. | தலைமை நிருபர் (பொறுப்பு) |



## பேரவை உறுப்பினர்கள்

### (அகர வரிசைப்படி)

### பெயர்களும் தொகுதிகளும்

| | | | |
|---|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. | .. | திருவாரூர் (செ.வ.) |
| 2. | அண்ணாதுரை, திரு. செ. | .. | ஜெயங்கொண்டம் |
| 3. | அண்ணாமலை, திரு. கு. | .. | தென்காசி |
| 4. | அண்ணாவி, திரு. ப. | .. | தொட்டியம் |
| 5. | அப்பாவு, திரு. மு. | .. | ராதாபுரம் |
| 6. | அய்யாறு வாண்டையார், திரு. கே. | .. | திருவையாறு |
| 7. | அரசன், திரு. ப. | .. | அறந்தாங்கி |
| 8. | அருணாசலம், திரு. அ. | .. | வரகூர் (செ.வ.) |
| 9. | அருள், திரு. பி.எஸ். | .. | புவனகிரி |
| 10. | அழகம்மாள், திருமதி வி. | .. | தலைவாசல் (செ.வ.) |
| 11. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | .. | திருச்செந்தூர் |
| 12. | அன்பழகன், திரு. ஆ.கு.சீ. | .. | பெரணமல்லூர் |
| 13. | அன்பழகன், திரு. கு. | .. | நிலக்கோட்டை (செ.வ.) |
| 14. | அன்பழகன், திரு. கே.பி. | .. | பாலக்கோடு |
| 15. | அன்பழகன், திரு. ஜெ. | .. | தியாகராய நகர் |
| 16. | அன்பழகன், பேராசிரியர் க. | .. | துறைமுகம் |
| 17. | அன்பில் பெரியசாமி, திரு. | ... | திருச்சிராப்பள்ளி-2 |
| 18. | அன்வர் ராஜா, திரு. அ. | .. | இராமநாதபுரம் |
| 19. | ஆண்டிவேல், திரு. ப. | .. | வேடசந்தூர் |
| 20. | ஆறுமுகம், திரு. கே. | .. | செங்கல்பட்டு |

21. ஆறுமுகம், திரு. த. - திருவொற்றியூர்
22. ஆற்காடு நா. வீராசாமி, திரு. - அண்ணா நகர்
23. ஆஸ்டின், திரு. - நாகர்கோவில்
24. இரவிராஜ், திரு. கோ. - திருத்தணி
25. இராசேந்திரன், திரு. சி. - திருவோணம்
26. இராசேந்திரன், திரு. சோ. - கோவில்பட்டி
27. இராமசாமி, திரு. கே.ஆர். - திருவாடனை
28. இராமச்சந்திரன், திரு. எஸ். - கலசப்பாக்கம்
29. இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். - கம்பம்
30. இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். - சாத்தூர்
31. இராமு, திரு. ந. - உளுந்தூர்பேட்டை (செ.வ.)
32. இராம் பிரபு, திரு. இரா. - பரமக்குடி (செ.வ.)
33. இராஜசேகர், திரு. மா. - ராஜபாளையம் (செ.வ.)
34. இராஜரெத்தினம், திரு. ப. - பெரம்பலூர் (செ.வ.)
35. இராஜா, திரு. டி.கே. - திருப்பத்தூர்
36. இராஜேந்திர பிரசாத், திரு. கே.பி. - பத்மநாபபுரம்
37. இராஜேந்திரன், திரு. பி.ஜி. - ஆலங்குளம்
38. இலட்சுமணன், திரு. கே.என். - மயிலாப்பூர்
39. இளவழகன், திரு. ப. - அரியலூர்
40. இளையகண்ணு, திரு. கா.தி. - ஏற்காடு (ஆ.வா)
41. இன்பத் தமிழன், திரு. இரா.தா. - ஸ்ரீவில்லிபுத்தூர்
42. ஈஸ்வரன், திரு. ரா. - வாசுதேவநல்லூர் (செ.வ)



43. உசேன், திரு. எஸ்.ஏ.எம். - திருவல்லிக்கேணி
44. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். - தஞ்சாவூர்
45. உமாதேவன், திரு. கே.கே. - திருப்பத்தூர்
46. உலகரட்சகன், திரு. பி.எஸ். - செய்யாறு
47. ஏழுமலை, திரு. வெ. - செஞ்சி
48. கணபதி, திரு. ந. - வானூர் (செ.வ.)
49. கணேசன், திரு. ஐ. - எடப்பாடி
50. கணேசன், திரு. ஆர்.டி. - தேனி
51. கண்ணன், திரு. ஏ.எஸ். - பொன்னேரி (செ.வ.)
52. கந்தசாமி, திரு. க.ரா. - சத்தியமங்கலம்
53. கந்தசாமி, திரு. கா. - குன்னூர் (செ.வ.)
54. கருணாகரன், திரு. கே.சி. - சிங்காநல்லூர்
55. கருணாநிதி, திரு. மு. - சேப்பாக்கம்
56. கருப்பசாமி, திரு. சொ. - சங்கரநயினார்கோவில் (செ.வ.)
57. கருப்பணன், திரு. கே.சி. - பவானி
58. கருப்பாயி, டாக்டர் திருமதி ஆ. - குளத்தூர் (செ.வ.)
59. கலாவதி, திருமதி கு. - சேந்தமங்கலம் (ஆ.வா.)
60. கனகதாரா, செல்வி. சி. - பேரணாம்பட்டு (செ.வ.)
61. கனிதா சம்பத், திருமதி எஸ். - திருப்போரூர் (செ.வ.)
62. காசாம்பு பூமாலை, திருமதி - சங்கராபுரம்
63. காமராஜ், திரு. மே.ப. - தாரமங்கலம்

64. கார்த்தி, திரு. மு. .. சேலம்-2

65. காளிமுத்து, டாக்டர் கா. .. திருமங்கலம்

66. கிருஷ்ணமூர்த்தி, திரு. வே. .. அரூர் (செ.வ.)

67. கிருஷ்ணன், திரு. ஆர். .. அந்தியூர் (செ.வ.)

68. குமாரதாஸ், டாக்டர் தே. .. கிள்ளியூர்

69. குரு என்கிற குருநாதன், திரு. ஜெ. .. ஆண்டிமடம்

70. கோதண்டராமன், திரு. ஜி. .. முகையூர்

71. கோபிநாத், திரு. கே. .. ஓசூர்

72. கோவிந்தசாமி, டாக்டர் ஆர். .. விருத்தாசலம்

73. கோவிந்தராஜ், திரு. வெ. .. கிருஷ்ணகிரி

74. கோவை தங்கம், திரு. .. வால்பாறை (செ.வ.)

75. சக்திவேல் முருகன், திரு. எம். .. அம்பாசமுத்திரம்

76. சக்ரபாணி, திரு. ஆர். .. ஒட்டன்சத்திரம்

77. சசிகலா, திருமதி ஆர். .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)

78. சண்முகநாதன், திரு. எஸ்.பி. .. ஸ்ரீவைகுண்டம்

79. சண்முகம், திரு. சி. .. பூந்தமல்லி

80. சண்முகம், திரு. சி.வி. .. திண்டிவனம்

81. சண்முகவேலு, திரு. சி. .. உடுமலைப்பேட்டை

82. சந்தானம், திரு. லா. .. உசிலம்பட்டி

83. சந்திரசேகரன், திரு. எம். எஸ். .. இராணிப்பேட்டை

84. சந்திரமோகன், திரு. நா. .. சீர்காழி (செ.வ.)

85. சந்திரன், திரு. வீ. .. சிவகங்கை

86. சம்பத், திரு. எம்.சி. .. நெல்லிக்குப்பம்



87. சரவணன், திரு. துரை. கி. .. சிதம்பரம்

88. சரோஜா, திருமதி இரா. .. உப்பிலியாபுரம் (ஆ.வா.)

89. சாமி, திரு. ஆர். .. மேலூர்

90. சாமிநாதன், திரு. மு.பெ. .. வெள்ளக்கோவில்

91. சிதம்பரம், திரு. ப. .. பவானிசாகர்

92. சிவகாமி, திருமதி வி. .. தாராபுரம் (செ.வ.)

93. சிவசாமி, திரு. கே.கே. .. அருப்புக்கோட்டை

94. சிவசாமி, திரு. சி. .. திருப்பூர்

95. சிவசுப்பிரமணியன், திரு. டி.என். .. கரூர்

96. சிவபுண்ணியம், திரு. வை. .. மன்னார்குடி

97. சிவபெருமாள், திரு. அ. .. ஒட்டப்பிடாரம் (செ.வ.)

98. சிவராஜ், திரு. சு. .. ரிஷிவந்தியம்

99. சின்னசாமி, திரு. மா. .. பழனி (செ.வ.)

100. சினிவேல், திரு. எஸ்.எம். .. திருப்பரங்குன்றம்

101. சுதர்சனம், திரு. கே. .. கும்மிடிப்பூண்டி

102. சுதர்சனம், திரு. டி. .. திருவள்ளூர்

103. சுந்தரம், திரு. பி.ஆர். .. ராசிபுரம்

104. சுந்தராம்பாள், திருமதி செ. .. மேட்டூர்

105. சுப்பிரமணியன், திரு. வீ. .. கண்டமங்கலம் (செ.வ.)

106. சுப்பையா பாண்டியன், திரு. எம். .. கடையநல்லூர்

107. சூரியகலா, திருமதி சி.எம். .. குடியாத்தம்

108. செம்மலை, திரு. செ. .. ஓமலூர்

109. செல்லையா, திரு. வி.ஏ. - மருங்காபுரி
110. செல்வம், திரு. எஸ்.கே. - வீரபாண்டி
111. செல்வராஜ், திரு. ஏ.கே. - மேட்டுப்பாளையம்
112. செல்வி முருகேசன், திருமதி - காங்கேயம்
113. சேகரன், திரு. கே.என். - திருவெறும்பூர்
114. சேகர்பாபு, திரு. பி.கே. - டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
115. சோமசுந்தரம், திரு. வி. - உத்திரமேரூர்
116. ஞானசேகரன், திரு. சி. - வேலூர்
117. ஞானமூர்த்தி, திரு. கே.ஜி.பி. - திருநாவலூர்
118. தமிழரசன், திரு. செ.கு. - நன்னிலம் (செ.வ.)
119. தமிழ்மொழி ராஜதத்தன், திருமதி - மேல்மலையனூர்
120. தம்பிதுரை, டாக்டர் மு. - பர்கூர்
121. தவமணி, திரு. க. - திருவிடைமருதூர்
122. தளவாய் சுந்தரம், திரு. ந. - கன்னியாகுமரி
123. தனபால், திரு. ப. - சங்கரி (செ.வ.)
124. தாமோதரன், திரு. எஸ். - விருதுநகர்
125. தாமோதரன், திரு. செ. - கிணத்துக்கடவு
126. தாமோதிரன், திரு. ப.வெ. - பொங்கலூர்
127. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. - பேராவூரணி
128. திருநாவுக்கரசு, திரு. எஸ்.எஸ். - காஞ்சிபுரம்
129. திருமாவளவன், திரு. இரா. - மங்களூர் (செ.வ.)
130. துரைமுருகன், திரு. - காட்பாடி
131. துரைராஜ், திரு. சி. - சேடப்பட்டி



132. தென்னரசு, திரு. கே.எஸ். - ஈரோடு
133. நடராஜன், திரு. அ. - குத்தாலம்
134. நடராஜன், திரு. எஸ். - நாட்ராம்பள்ளி
135. நடராஜன், திரு. பி.கே.டி. - ஆத்தூர்
136. நடராசன், திரு. வது. - இளையான்குடி
137. நயினார் நாகேந்திரன், திரு. - திருநெல்வேலி
138. நரசிம்மன், திரு. பி.எம். - பள்ளிப்பட்டு
139. நளினி மனோகரன், திருமதி - போளூர்
140. நன்மாறன், திரு. என். - மதுரை கிழக்கு
141. நீலகண்டன், திரு. ப. - ஆற்காடு
142. நீலமேகவர்ணம், திரு. லெ. - சாத்தான்குளம்
143. நெப்போலியன், திரு. து. - வில்லிவாக்கம்
144. பச்சைமால், திரு. தா. - குளச்சல்
145. பதினெட்டாம்படியான், திரு. க. - முதுகுளத்தூர்
146. பரணிகுமார், திரு. பா. - திருச்சிராப்பள்ளி-I
147. பரிதி இளம்வழுதி, திரு. - எழும்பூர் (செ.வ.)
148. பவானி கருணாகரன், திருமதி கே. - அரக்கோணம் (செ.வ.)
149. பழனிசாமி, திரு. கே.எஸ். - பெருந்துறை
150. பழனிசாமி, திரு. ஜி. - திருத்துறைப்பூண்டி (செ.வ.)
151. பழனியப்பன், திரு. பெ. - மொரப்பூர்
152. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. - குறிஞ்சிப்பாடி

153. பன்னீர்செல்வம், திரு. ஓ. .. பெரியகுளம்

154. பாண்டுரங்கன், திரு. கே. .. அணைக்கட்டு

155. பாப்பாசுந்தரம், திரு. அ. .. குளித்தலை

156. பாரமலை, திரு. க. .. மானாமதுரை (செ.வ.)

157. பாரிமோகன், திரு. கி. .. தருமபுரி

158. பாலகிருஷ்ணன், திரு. சோ. .. கடலாடி

159. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.ஆர். .. தொண்டாமுத்தூர்

160. பாலசுப்பிரமணியன், திரு. கே.கே. .. ஸ்ரீரங்கம்

161. பாலபாரதி, செல்வி க. .. திண்டுக்கல்

162. பாலன், திரு. எஸ்.எம். .. லால்குடி

163. பால் மனோஜ் பாண்டியன், திரு. பி.எச். .. சேரன்மகாதேவி

164. பிச்சாண்டி, திரு. கு. .. திருவண்ணாமலை

165. புகழேந்தி, திரு. இ. .. கடலூர்

166. பூபதி மாரியப்பன், திருமதி .. வலங்கைமான் (செ.வ.)

167. பூவராகமூர்த்தி, திரு. ஏ. .. அச்சரப்பாக்கம் (செ.வ.)

168. பெருமாள், திரு. என்.கே. .. விளாத்திகுளம்

169. பொன்முடி, டாக்டர் க. .. விழுப்புரம்

170. பொன்னம்பலம், திரு. ப. .. சமயநல்லூர் (செ.வ.)

171. பொன்னையன், திரு. சி. .. திருச்செங்கோடு

172. போளூர் வரதன், திரு. .. செங்கம் (செ.வ.)

173. மகாலிங்கம், திரு. எஸ். .. அவினாசி (செ.வ.)

174. மகேந்திரன், திரு. கே. .. பெரம்பூர் (செ.வ.)



175. மகேஸ்வரி, திருமதி எஸ். .. கோயம்புத்தூர் மேற்கு

176. மணி, திரு. கோ.சி. .. கும்பகோணம்

177. மணி, திரு. டி. .. விளவங்கோடு

178. மணி, திரு. ஜி.கே. .. பெண்ணாகரம்

179. மலையப்பசாமி, திரு. அ.இரா. .. கபிலர்மலை

180. மல்லிகா சின்னசாமி, திருமதி .. முசிறி

181. மாணிக்கராஜ், திரு. எஸ். .. நாங்குநேரி

182. மில்லர், திரு. அ. .. கூடலூர்

183. முரளிதரன், திரு. கே.வி. .. தளி

184. முருகவேல் ராஜன், திரு. க. .. வந்தவாசி (செ.வ.)

185. முருகேசன், திரு. ஆ.கு. .. ஆத்தூர்

186. முனுசாமி, திரு. கா.பூ. .. காவேரிப்பட்டினம்

187. மைதீன்கான், திரு. டி.பி.எம். .. பாளையங்கோட்டை

188. மோகன், திரு. ப. .. சின்னசேலம்

189. யசோதா, திருமதி டி. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)

190. ரங்கநாதன், திரு. ப. .. புரசைவாக்கம்

191. ரங்கராஜன், திரு. என்.ஆர். .. பட்டுக்கோட்டை

192. ரமணீதரன், திரு. எஸ்.எஸ். .. கோபிசெட்டிப் பாளையம்

193. ராதாகிருஷ்ணன், திரு. எம். .. திருமயம்

194. ராதாரவி, திரு. .. சைதாப்பேட்டை

195. ராமசாமி, திரு. பி.சி. .. மொடக்குறிச்சி

196. ராமராஜ், திரு. ச. .. போடிநாயக்கனூர்

197. ராம்குமார், திரு. எம். .. பாபநாசம்

| | |
|---|---|
| 198. ராஜகோபால், திரு. ஆ. | .. சிவகாசி |
| 199. ராஜம்மாள், திருமதி எஸ். | .. தூத்துக்குடி |
| 200. ராஜா, திரு. எச். | .. காரைக்குடி |
| 201. ராஜாங்கம், திரு. வி.ஆர். | .. சோழவந்தான் |
| 202. ராஜூ, திரு. எச்.எம். | .. உதகமண்டலம் |
| 203. ரெங்கநாதன், திரு. என். | .. பூம்புகார் |
| 204. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார், திரு. மா.ப. | .. பேரூர் |
| 205. லட்சுமணன், திரு. வி.கே. | .. கோயம்புத்தூர் கிழக்கு |
| 206. லியாவுதீன் சேட், திரு. இ.ஏ. | .. அரவக்குறிச்சி |
| 207. வடிவேல், திரு. ஆர். | .. வாணியம்பாடி |
| 208. வளர்மதி, திருமதி பா. | .. ஆலந்தூர் |
| 209. வளர்மதி ஜெபராஜ், திருமதி | .. மதுரை மேற்கு |
| 210. வள்ளல் பெருமான், டாக்டர் பி. | .. காட்டுமன்னார் .. கோவில் (செ.வ.) |
| 211. வாசுதேவன், திரு. பெ. | .. மதுராந்தகம் |
| 212. விசுவநாதன், திரு. இரா. | .. நத்தம் |
| 213. வில்வநாதன், திரு. இரா. | .. சோளிங்கர் |
| 214. விநாயகமூர்த்தி, திரு. எஸ்.ஜி. | .. பூங்கா நகர் |
| 215. விஜயபாஸ்கர், டாக்டர் சி. | .. புதுக்கோட்டை |
| 216. விஜயலட்சுமி பழனிச்சாமி, திருமதி ப. | .. பனமரத்துப்பட்டி |
| 217. வீரபாண்டியன், திரு. ஜெக. | .. மயிலாடுதுறை |
| 218. வெங்கடாசலம், திரு. அ. | .. ஆலங்குடி |



| | |
|---|---|
| 219. வெங்கடாஜலம், திரு. செ. | .. சேலம்-I |
| 220. வேதரத்தினம், திரு. எஸ்.கே. | .. வேதாரண்யம் |
| 221. வேலுசாமி, திரு. செ.ம. | .. பல்லடம் |
| 222. வேலு, திரு. எ.வ. | .. தண்டராம்பட்டு |
| 223. வேல் முருகன், திரு. தி. | .. பண்ருட்டி |
| 224. வைதியலிங்கம், திரு. மீ.அ. | .. தாம்பரம் |
| 225. வைத்திலிங்கம், திரு. ஆர். | .. ஒரத்தநாடு |
| 226. ஜீவானந்தம், திரு. இரா. | .. நாகப்பட்டினம் |
| 227. ஜெமினி கே. ராமச்சந்திரன், திரு. | .. ஆரணி |
| 228. ஜெயக்குமார், திரு. கு. | .. நாமக்கல் (செ.வ.) |
| 229. ஜெயக்குமார், திரு. டி. | .. இராயபுரம் |
| 230. ஜெயராமன், திரு. வி. | .. பொள்ளாச்சி |
| 231. ஜெயலலிதா, செல்வி ஜெ | .. ஆண்டிப்பட்டி |
| 232. ஸ்டாலின், திரு. மு.க. | .. ஆயிரம் விளக்கு |
| 233. ஹக்கீம், திரு. எம்.ஏ. | .. மதுரை மத்தி |
| 234. ஹேமச்சந்திரன், திரு. ஜே. | .. திருவட்டாறு |
| 235. சான்ட்ரா டான் க்ரவல், திருமதி | .. (நியமனம்) |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

| | |
|---|---|
| திரு. என்.ஆர். சந்திரன் | .. தலைமை வழக்கறிஞர் |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## பங்குனி 14, சித்ரபானு - திருவள்ளுவர் ஆண்டு 2034

## 2003 மார்ச் 28, வெள்ளிக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் கா. காளிமுத்து அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்"

நீதி நெறிமுறைகள் தவறாமல் குடிமக்களைக் காப்பாற்றும் ஆட்சியாளரை மக்கள் ஒப்பற்ற தெய்வம் என்று மதித்துப் போற்றுவார்கள்.

## 1. வினாக்கள் - விடைகள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள் - விடைகள். வினா எண் 121, திரு. அன்பில் பெரியசாமி, மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

**121—**

**புறவழிச் சாலை**

***2515—திரு. அன்பில் பெரியசாமி:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அனைத்து மாவட்ட பேருந்துகளும் திருச்சிராப்பள்ளி நகர் வழியாக பிற மாவட்டங்களுக்குச் செல்வதால் திருச்சிராப்பள்ளியில் நெரிசலைத் தவிர்க்கப் புறவழிச் சாலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) திருச்சி மாநகரத்தில் ஏற்கெனவே புறவழிச் சாலை அமையப்பெற்றுள்ளதால் புதிதாக புறவழிச் சாலை அமைக்கத் தேவையில்லை என்று கருதப்படுகிறது.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. அன்பில் பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 1999 ஆம் ஆண்டு அன்றைக்கு தி.மு.க. ஆட்சியிலே, மறைந்த, மத்திய அமைச்சராக இருந்த மாண்புமிகு ரங்கராஜன் குமாரமங்கலம் அவர்களும், அன்றைக்கு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சராக இருந்த அன்புமிகு அண்ணன் நேரு அவர்களும், அன்றைக்கு திருச்சி-2-வது தொகுதி சட்டமன்ற உறுப்பினராக இருந்த மறைந்த அண்ணன் அன்பில் பொய்யாமொழி அவர்களும், அன்றைக்கு 1-வது தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், இன்றைக்கு இருக்கின்ற அண்ணன் பரணிகுமார் அவர்களும் மற்றும் அதிகாரிகளும் கலந்துபேசி ஓர் ஆய்வை செய்து தமிழக அரசுக்கு அதை அனுப்பி வைத்தார்கள். அந்தப் பணி ஆட்சி மாற்றத்தால் நிறுத்தப்பட்டது. கடந்த 3 மாதங்களுக்கு முன்னால் மதிப்பீட்டுக் குழுத் தலைவர் மாண்புமிகு சிவசாமி அவர்கள் திருச்சி மாவட்டத்திற்கு ஆய்வு செய்ய வந்தபோது இந்தத் திட்டத்தைப் பற்றி நான் மதிப்பீட்டுக் குழு உறுப்பினர் என்ற முறையிலே அவர்களிடம் முறையிட்டேன். அவர் அதற்கு, அரசிலே முறையிட்டு, இந்த திருச்சி மாவட்டத்திற்கு வாங்கித் தருகிறேன் என்று உறுதிமொழி கொடுத்தார்கள். ஆனால், அப்போதிருந்த Local Plan-LPA சார்பாக, எங்களுக்கு ஓர் அறிக்கையைத் தந்தார்கள். அந்த அறிக்கையிலே திருச்சி மாவட்டத்திற்கு இந்த புற வழிச் சாலை தேவையில்லை என்று கூறி, அந்தத் திட்டத்தை காஞ்சிபுரம் மாவட்டத்திற்கு மாற்றுவதாக இருக்கிறது என்று



குறிப்பிடப்பட்டிருக்கிறது. மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் மீண்டும் இந்தத் திட்டத்தை மறு ஆய்வு செய்து, திருச்சி மாவட்டத்திற்கு வரும் நிதியாண்டிலோ அல்லது அடுத்த நிதியாண்டிலோ அமைத்துத் தருமாறு தங்கள் வாயிலாகத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாநகரத்தில் புறவழிச் சாலை ஏற்கெனவே அமையப் பெற்றுள்ளது. இது தேசிய நெடுஞ்சாலைத் துறையினரால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்தப் புறவழிச் சாலையில் பிற மாவட்டங்களுக்குச் செல்லும் பேருந்துகளும் சென்று வருகின்றன. அரசு ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்டங்கள் எதிலும் புறவழிச் சாலை அமைப்பதற்குண்டான சாத்தியக்கூறுகள் இல்லை என்று கருத்துருவில் சொல்லப்பட்டிருக்கிறது. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருச்சியில் புறவழிச் சாலை அமைப்பதற்கான அவசியத்தினை இங்கே எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அதை மறு ஆய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அன்பில் பெரியசாமி.

**திரு. அன்பில் பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நன்றி சொன்ன முதல் உறுப்பினர் நீங்கள்தான்.

வினா எண் 122, திரு. ப. பொன்னம்பலம், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

**122—**

## கிராமச் சாலை

***18656-திரு. ப. பொன்னம்பலம்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 மார்ச் 28

(அ) கிராமச் சாலைகள் அபிவிருத்தித் திட்டம் மூலம் காதக்கிணறு ஊராட்சியிலுள்ள காதக்கிணறு கிராமத்திற்குச் சாலை அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலையில் கி.மீ. 0/0 முதல் கி.மீ. 0/6 வரை பிரதமரின் கிராமச் சாலைகள் திட்டத்தில் மேம்பாடு செய்யப்படவுள்ளது. எஞ்சியுள்ள 0.4 கி.மீ. பகுதியை கிராமச் சாலைகள் திட்டத்தின் மூலம் மேம்பாடு செய்ய சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைச் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. ப. பொன்னம்பலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காதக்கிணறு சாலையில் கி.மீ.0/0 முதல் கி.மீ. 0/6 வரை பிரதமரின் கிராமச் சாலைகள் திட்டத்தில் மேம்பாடு செய்யப்படும் என்று சொல்வது எப்போது முடிவடையும் என்று கேட்டு, எஞ்சியுள்ள 0.4 கிலோ மீட்டர் பகுதி, கிராமச் சாலைகள் திட்டத்தின் மூலமாக அடுத்த நிதி ஆண்டிலாவது செய்து முடிக்கப்படுமா என பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வினாவிலே குறிப்பிடப்பட்டிருக்கிற சாலை, மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்ததாகும். இது வகைப்படுத்தப்படாத ஊராட்சி சாலையாகும். இந்தச் சாலை மதுரை அழகர்கோவில் சாலையில் கிலோ மீட்டர் 10/4-ல் பிரிந்து செல்கிறது.

சாலையின் மொத்த நீளம் ஒரு கிலோ மீட்டர் ஆகும். இதில் கி.மீ. 0/0 முதல் கி.மீ. 0/6 வரை உள்ள பகுதி மண் சாலையாக விளைநிலங்களின் வழியாக செல்லும் சாலையாக உள்ளது. காதக்கிணறு பஞ்சாயத்தின் மொத்த மக்கள் தொகை 236 பேர். சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிடும் காதக்கிணறு கிராமம் கி.மீ.0/0-ல் இருந்து அரசு சாலையில் அமைந்து உள்ளது. மேலும் இந்தச் சாலையில் கிலோ மீட்டர் 0/0 முதல் கி.மீ. 0/6 வரை பாரதப் பிரதமரின் கிராமச் சாலைகள் மேம்பாட்டு திட்டத்தில் (TNGSY)



2003 மார்ச் 28]

மேம்பாடு செய்யப்பட உள்ளது. மீதம் உள்ள பகுதியில் கி.மீ. 0/6 முதல் ஒரு கி.மீ. வரை நில ஆர்ஜிதம் செய்யப்பட வேண்டி உள்ளது. ஆர்ஜிதம் செய்யப்பட வேண்டிய நிலம் தனியார் நிலம். நபார்டு திட்டத்தின்கீழ் சாலைகள் மேம்பாடு செய்வதற்கு சாலையின் நீளம் குறைந்தது 1.6 கி.மீ இருக்க வேண்டும். ஆனால் ஏற்கெனவே 0.6 கி.மீ. போடப்பட்டுள்ள நிலையில் எஞ்சியுள்ள 0.4 கி.மீ. பகுதியை கிராமச் சாலைகள் திட்டத்தின் மூலம் மேம்பாடு செய்கிற சாத்தியக் கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கிராமப்புறச் சாலைகளை மேம்பாடு செய்வதற்கு, அமைத்துத் தருவதற்காக தனியாக மாநில அரசின் சார்பிலே, கிராமப்புறச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் என்கின்ற முறையில் அதற்கு தலைமைப் பொறியாளர் இருக்கிறார். மற்ற பொறியாளர்கள் அனைவரும் கீழ் மட்டத்திலிருந்து மேலே வரை இருக்கிறார்கள். ஆனால் இந்த இரண்டு ஆண்டுகளாக நமது மாநில அரசின் சார்பிலே பெரும்பாலும் அந்த கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழாக எந்தத் தொகுதியிலும் வேலைகள் எடுத்துக்கொள்ளாத ஒரு நிலை இருக்கிறது என்பதை அரசு அறியுமா? அவர்களுக்கு உரிய பணியினை மாநில அரசு மூலமாக வழங்குவதற்கு அரசு முன்வருமா? ஒரு முறை மதிப்பீட்டுக் குழுவிலே சென்று இருந்தபோதுகூட ஆய்வு செய்கின்ற நேரத்திலே ஒரு கோட்டப் பொறியாளருக்கு, அவருக்கு வழங்கப்பட்டு இருக்கின்ற தூரமே 5, 10 கிலோ மீட்டர்கள்தான். அவருக்கு இந்த ஆண்டு திட்டத்திலே வழங்கப்பட்டு இருக்கிறது என்று சொன்னார்கள். அப்படி அவர்கள் எல்லாம் வேலை இல்லாமல் இருக்கின்ற காரணத்தினால் அவர்களுக்கு உரிய வாய்ப்பை அளிக்கின்ற பொருட்டும், அதைப்போல, கிராமப்புறங்களில் இருக்கின்ற சாலைகளை மாநில அரசு சீர்திருத்துகின்ற பொருட்டும், இந்த ஆண்டு நிதித் திட்டத்திலே கிராமப்புறச் சாலைகளுக்கு என்று தனியாக நிதியை ஒதுக்க அரசு முன்வருமா என்று தங்கள் மூலம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்தானம் அவர்கள்

[2003 மார்ச் 28

குறிப்பிடுகின்ற கிராமச் சாலைத் திட்டம் என்பது ஊராட்சிப் பகுதிகளில் இருக்கின்ற மண் சாலைகளை, கிராமச் சாலைத் திட்டத்தின்கீழ் எடுத்து, மேம்படுத்தி, தார் சாலைகளாகப் போட்டு அவற்றை பராமரிப்பதாகும். 1991-1996-ல் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களினுடைய காலத்தில் இப்படிப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களில் மண் சாலைகளாக இருந்த சாலைகளை கிராமச் சாலைத் திட்டத்தின்கீழ் எடுத்து, தார் சாலைகளாக மாற்றி அவற்றை நெடுஞ்சாலைத் துறையிடம் ஒப்படைத்து பராமரிக்கப்பட்டு வந்தன. ஆனால் 1997-ல் இருந்து கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில் அப்படி மேம்பாடு செய்யப்பட்ட கிராமச் சாலைகள் நெடுஞ்சாலைத் துறையின் பராமரிப்பில் இருக்க வேண்டாம் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அதன் விளைவாக இன்றுவரை அந்தச் சாலைகள் மேம்படுத்தப்படாத, பழுதுபார்க்கப்படாத, அதாவது மண் சாலையாக இருந்து தார் சாலையாக மாற்றப்பட்ட சாலைகள் பழுதுகூட பார்க்கப்படாத ஒரு சூழ்நிலை இருந்தது. இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இந்த நிதிநிலை அறிக்கையில் எதிலும் சாராத அந்தச் சாலைகளை மேம்படுத்துவதற்கு ரூ.50 கோடி ஒதுக்கித் தந்திருக்கின்றார்கள் என்பதனை நான் இங்கு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 123, திருமதி காசாம்பு பூமாலை, மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்.

**123—**

### சட்டக் கல்லூரி

***19431—திருமதி காசாம்பு பூமாலை:**

மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரத்தில் நடப்பு நிதியாண்டில் அரசு சட்டக் கல்லூரி தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2003 மார்ச் 28]

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டம் பற்றியும், மனித உரிமை பற்றியும், விழிப்புணர்வு அதிகம் உள்ளதால் பல இளைஞர்கள் சட்டம் படிக்க முன் வருகின்றனர். விழுப்புரம், கடலூர், திருவண்ணாமலை மாவட்ட இளைஞர்கள் சட்டம் படிக்க ஏதுவாக அரசு சட்டக் கல்லூரி ஒன்றினை அடுத்த நிதியாண்டிலாவது சங்கராபுரத்தில் நிறுவ ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டம் படிக்க வேண்டும் என்கின்ற அந்த விழிப்புணர்வு காரணமாகத்தான் ஒவ்வோர் ஆண்டும் கிட்டத்தட்ட 20 ஆயிரத்திலிருந்து 22 ஆயிரம் வரையில் விண்ணப்பங்கள் பெறப்படுகின்றன. எனவே மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மொத்தம் இந்த ஆண்டு கிட்டத்தட்ட 562 இடங்கள் சென்னையிலே இருக்கின்ற, சட்டக் கல்லூரியிலே இருக்கின்ற 3 ஆண்டுகள் மற்றும் 5 ஆண்டுகள் பட்டப் படிப்புக்குரிய இடங்களை மற்ற கல்லூரிகளுக்குக் கொடுத்த நிலையிலே School of Excellence மற்றும் சென்னையில் உள்ள அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியை upgrade செய்ததன் காரணமாக 80+40=120 இடங்களை அதிகமான அளவுக்கு நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். சங்கராபுரத்திலே சட்டக் கல்லூரி அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்று சொல்வதற்குக் காரணம் இந்திய வழக்கறிஞர்கள் மன்ற விதிமுறைகளின்படி, மாவட்ட நீதிமன்றங்கள் அமைந்துள்ள இடங்களில் மட்டுமே சட்டக் கல்லூரியைத் தொடங்க முடியும். எனவே, அந்த இடத்தில் மாவட்ட நீதிமன்றம் இல்லாத ஒரு சூழ்நிலையில் அங்கே சட்டக் கல்லூரி அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2003 மார்ச் 28

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : மாண்புமிகு உறுப்பினர் திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசு சார்பில் சட்டக் கல்லூரி அமைக்க முடியாத சூழ்நிலையில் தனியார், சட்டக் கல்லூரியை அமைக்க முன்வந்தால் அரசு அனுமதி அளிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தற்போது சேலத்திலே ஒரு தனியார் சட்டக் கல்லூரி செயல்பட்டுக் கொண்டுள்ளது. சேலத்திலே இயங்குகின்ற அந்த சட்டக் கல்லூரி மீதுகூட சில புகார்கள் இருக்கின்ற காரணத்தால் உடனடியாக மேற்கொண்டு மற்ற இடங்களில் தனியார் சட்டக் கல்லூரிகள் தொடங்குவது குறித்து அரசின் பரிசீலனையில் எதுவும் இல்லை. அவர்கள் உச்ச நீதிமன்றத்தில் தடையாணை பெற்று அந்தக் கல்லூரியை நடத்திக் கொண்டிருந்தார்கள். அந்த வழக்கின் மீதான தீர்ப்பு தற்போது பெறப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா என் 124, திரு. என்.கே. பெருமாள், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

**124—**

### வணிக வளாகம் மற்றும் திருமண மண்டபம்

**•25503—திரு. என்.கே. பெருமாள்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளாத்திக்குளம் மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்திற்கான இடத்தில் வணிக வளாகம் மற்றும் திருமண மண்டபம் அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2003 மார்ச் 28]

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், விளாத்திக்குளம் அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் வணிக வளாகம் மற்றும் திருமண மண்டபம் அமைத்திட திருக்கோயிலில் நிதியாதாரம் இல்லாததனால் இத்திட்டத்தை நிறைவேற்ற வாய்ப்புக் குறைவாக உள்ளது என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. என்.கே. பெருமாள்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம், தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசைநோக்கி வணங்குகிறேன். மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், போன நிதி ஆண்டில், பழுதான விளாத்திக்குளம் தேரை பழுதுபார்க்க 10 இலட்சம் ரூபாயை வாரி வழங்கியதற்கு தொகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

விளாத்திக்குளத்தில் அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில் அமைந்துள்ளது. இக்கோயிலுக்கு ஒரு வரலாறு உண்டு. மதுரையிலே உள்ள அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலுக்கு விளாத்திக்குளத்திலிருந்து நந்தனார் ஒருவர் வழிபடச் செல்வது வழக்கம். நந்தனார் வயதான காரணத்தால் அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரரை மதுரைக்குச் சென்று தரிசிக்க முடியவில்லை என ஏங்கினார், கண்ணீர் சிந்தினார், கதறினார், மனம் நொந்தார். நந்தனாரின் பக்தியைத் தெரிந்துகொண்ட அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் நந்தனாருக்கு காட்சி தந்து, 'நந்தனாரே, நீர் மதுரை வந்து எம்மை தரிசிக்க வேண்டும் என்பதில்லை. விளா-அத்தி குளக்கரையில் நான் உனக்கு காட்சி தருகிறேன், அங்கு என்னை தரிசிக்கலாம்' என்று அருள் கூறினார். இச்செய்தியை அறிந்த சுமார் 600 ஆண்டுகளுக்கு முன்பு..... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இது என்ன மானியக் கோரிக்கையா? கேள்வி கேளுங்கள்.

**திரு. என்.கே. பெருமாள்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புகழ்மிக்க கோயிலாக இருப்பதால் என்னுடைய கோரிக்கையைச்

சொல்வதற்கு மேலும் ஒரு நிமிடம் அதிகமாகத் தாருங்கள் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். விளா-அத்தி குளக்கரையில் இறைவன் காட்சி தருவதாகச் சொன்ன வரலாறு உள்ளது. அப்பேற்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தத் திருக்கோயிலுக்கு மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள், திருச்செந்தூர் திருக்கோயில் அல்லது இராமேஸ்வரம் திருக்கோயில் நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்து—அந்தப் பகுதியிலே சுமார் 1000 திருமணங்கள் ஆண்டு ஒன்றுக்கு நடைபெற்று வருகின்ற காரணத்தால், அந்தத் திருக்கோயில் நிதியிலிருந்து திருமண மண்டபம் கட்டுவதற்கு வசதியில்லாத காரணத்தால், அங்கே திருமண மண்டபம் கட்டவேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு, விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இத்திருக்கோயிலுக்கு நஞ்சை 4 ஏக்கர் 90 சென்டும், புஞ்சை 238 ஏக்கர் 5 சென்டும் நிலங்கள் சொந்தமாக இருக்கின்றன. இருந்தாலும், இவற்றிலிருந்து போதுமான வருவாய் பெறப்படுவதில்லை. இந்த 238 ஏக்கர் 5 சென்ட் புஞ்சை நிலங்களிலிருந்தும் 5 ஏக்கர் நஞ்சை நிலங்களிலிருந்தும் ஆண்டு ஒன்றுக்கு 9,770 ரூபாய்தான் வருவாய் வருகிறது.

இத்திருக்கோயிலின் ஆண்டு வருவாய் ரூ. 87 ஆயிரம் மட்டுமே. இந்நிலையில் திருமண மண்டபம் மற்றும் வணிக வளாகம் கட்டப் போதுமான நிதிவசதியில்லை. நன்கொடைகள் வழங்க யாரும் முன்வராத நிலையில் திருமண மண்டபம், வணிக வளாகம் கட்டும் திட்டம் நிறைவேற்ற இயலாத நிலையில் உள்ளது. இருந்தாலும் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் முன்வந்து அங்குள்ள நிலங்களுக்கு குத்தகையை முறைப்படி பெற்றுத் தந்தால், அதன்மூலம் கிடைக்கும் வருவாயை வைத்து மாண்புமிகு உறுப்பினர் கேட்கும் கோயிலிலிருந்து கடன் பெற்று அவர் கேட்கும் கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-15

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சிவசாமி.

**திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இருக்கக்கூடிய பெரும்பான்மையான



கோயில்களில் மக்கள் தங்களது திருமணத்தை அந்தத் தெய்வாலயங்களில் நடத்துகின்றார்கள். அப்படி திருமணங்களைக் கோயில்களிலே நடத்துகின்றபோது, அங்கே விருந்துகள் பரிமாறுவதற்கு திருமண மண்டபம் மற்றும் சிறு சமுதாய நலக் கூடங்கள் போன்ற இடங்கள் தேவைப்படுகின்றன. எனவே தமிழகத்திலே இருக்கக்கூடிய இந்து அறநிலையத் துறையைச் சார்ந்த கோயில்களில் வருமானம் வருகின்ற காரணத்தால், இட வசதியும் இருக்கின்ற காரணத்தால் அப்படிப்பட்ட இடங்களைத் தேர்வு செய்து பெரிய கோயில்களில் திருமண மண்டபங்களையும், சிறிய கோயில்களில் சமுதாயக் கூடங்களைப்போல் சிறு மண்டபங்களையும் அமைத்துத் தந்தால் அரசிற்கும் கூடுதல் வருமானம் வரும் என்கின்ற அடிப்படையில் மாண்புமிகு அமைச்சரவர்கள் இதுபோன்ற வணிக வளாகங்கள் மற்றும் திருமண மண்டபங்களை அனைத்து கோயில்களிலும் அமைத்துத் தர முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வருவாய் உள்ள ஆலயங்களில் பல்வேறு ஆலயங்களில் இன்றைக்கு திருமண மண்டபங்கள் இருந்து கொண்டு இருக்கின்றன. இப்படி பல்வேறு ஆலயங்களில், அருகில் திருவேற்காட்டில் இருக்கிற கருமாரியம்மன் ஆலயத்தில்கூட ரூ.50 இலட்சம் செலவில், இந்த ஆண்டு திருமண மண்டபம் கட்டுவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. இதுபோன்று வசதியுள்ள ஆலயங்களில் திருமண மண்டபங்கள் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற திருப்பூர் தொகுதியிலும், அங்கே ஆலயத்தில் நிதியிருக்கிற அளவை பரிசோதனை செய்து பார்த்து, அங்கேயும் திருமண மண்டபம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சிவபெருமாள்.

**திரு. அ. சிவபெருமாள்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இன்று தமிழகத்திலே எத்தனையோ பெரிய பெரிய கோயில்கள் பல அமைந்துள்ளன. அந்தக் கோயில்களுக்குச் சொந்தமான இடங்கள் ஒவ்வொரு கோயிலுக்கும் அதிகமாக உள்ளன.

[2003 மார்ச் 28

அந்தக் கோயில்களுக்குச் சொந்தமான இடங்கள் டவுன் பகுதியில் இருந்தால் அதை அறிந்து, அந்தக் கோயில்களுக்குப் பக்கத்திலே வணிக வளாகங்கள் அல்லது திருமண மண்டபங்கள் அமைக்கும் போது, அந்தக் கோயில்களைப் பராமரிப்பதற்குரிய வருமானமும் அந்த இடத்தில் கிடைப்பதற்கு வாய்ப்பாக இருக்கும் என்பதால் மாண்புமிகு அமைச்சரவர்கள் மேலும் பரிசீலனை செய்வார்களா என்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறநிலையத் துறைக்கு என்று 4 இலட்சத்து 75 ஆயிரம் ஏக்கருக்கு மேல் நிலங்கள் இருந்தாலும், வசதி படைத்தவர்கள் சிலபேர் அந்த நிலங்களில் உழுதுகொண்டு, அதை விடுவதற்கு இன்றைக்கு நீதிமன்றத்திற்குச் சென்று கொண்டிருக்கின்றார்கள். உயர்நீதிமன்றத்தில் மட்டுமல்லாமல், உச்சநீதிமன்றத்திற்கும் சென்று, பல்வேறு கோயில்களுக்கான பல ஏக்கர் நிலங்கள் இப்போது பெறப்பட்டிருக்கின்றன. அதனடிப்படையில் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், அவருடைய தொகுதியில் எங்கே திருமண மண்டபம் கட்ட வேண்டுமென்று சொல்கிறாரோ அந்த இடத்தில் ஆலயத்திற்கு நிதி இருக்குமானால், நிச்சயமாக திருமண மண்டபம் கட்டுவதற்கு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் *125*, திரு. க. பாரமலை, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்.

**125—**

**அறுவை சிகிச்சை அரங்கம்**

***6488—திரு. க. பாரமலை:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மானாமதுரை தொகுதி, திருப்புவனத்தில். ஆரம்ப சுகாதார நிலையத்தில் குடும்ப நல அறுவை சிகிச்சைக்கான அரங்கு அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?



2003 மார்ச் 28]

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

மானாமதுரை தொகுதி, திருப்புவனத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்தி, *30* படுக்கைகள் கொண்டதாகவும், அறுவை சிகிச்சை அரங்கு எக்ஸ்-ரே வசதியோடு கூடியதாகவும், ஒரு தாலுகா மருத்துவமனை அந்தஸ்துக்கு தரம் உயர்த்த மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. அந்த நடவடிக்கை முடியும் தருவாயில் மாண்புமிகு உறுப்பினர், பெரியவர் பாரமலை விரும்பும் அனைத்து வசதிகளும் அந்த ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கிடைத்துவிடும்.

**திரு. க. பாரமலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி. அவர்கள் அந்த மருத்துவமனைக்கு நேரடியாக வந்து பார்வையிட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே இருந்த உள் நோயாளிகள் பிரிவு மூடப்பட்டிருந்தது. அவர்கள் அங்கு வந்தபின்னால்தான் மீண்டும் மதிய உணவு கொடுக்கின்ற வாய்ப்பை ஏற்படுத்தியதால் மீண்டும் அந்தப் பிரிவு நடைபெறுகிறது. அதோடு அங்கு இரவில் டாக்டர்கள் தங்குவதற்காக இருந்த வீடு அடியோடு தகர்ந்துவிட்டது. அதையும் நேரடியாக அவர்கள் பார்த்தார்கள். இவ்வளவு சிறப்பாக *30* படுக்கைகள் கொண்டதாக உயர்த்தப்பட இருக்கிற சூழ்நிலையில் நிச்சயமாக டாக்டர்கள் செவிலியர்கள் தங்குவதற்கு வீடுகள் கட்டி கொடுக்கப்படவேண்டும். அப்பொழுதுதான் முழுமையாக அது பயன்படுத்தப்படும் என்ற காரணத்தால் அதையும் செய்வதற்கு அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் *10-20*

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த திருப்புவனம் ஆரம்ப சுகாதர நிலையம் ஆரம்பத்திலே ஒரு மருந்தகமாக இருந்தது. அதை விரிவுபடுத்தவேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தமிழகத்தினுடைய முன்னாள் முதல்வர் பொன்மனச் செம்மல் டாக்டர் புரட்சித் தலைவரிடம் வேண்டுகோளை வைத்து, அது பின்னாலே ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றப்பட்டு, அவருடைய கோரிக்கையை ஏற்றுத்தான்

அங்கே உள் நோயாளிகள் தங்கி சிகிச்சை பெறுகின்ற அந்த வார்டுகள்கூட அவர் காலத்திலே கட்டப்பட்டன. எனவே நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக்காலத்தில் இது தாம் உயர்த்தப்பட இருப்பதால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற அந்தக் கோரிக்கையினை ஏற்று, அதனுடைய தரம் உயர்த்தப்படுகிறபோது அங்கே டாக்டர்கள் தங்கி பணியாற்றுகிற வகையிலே அவர்களுக்கு குவார்ட்டர்சும் நிச்சயமாக கட்டிக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஞானசேகரன் அவர்கள். (குறுக்கீடு) திரு. பாரமலை.

**திரு. க. பாரமலை:** நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, மாண்புமிகு ஞானசேகரன் அவர்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே ....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அது என்ன, உங்களுக்கு மட்டும் மைக் இப்படி இருக்கிறது? நன்றாகத்தான் இருக்கிறது. பேசுங்கள். நீங்கள் அழுக்கி அழுக்கி அதை வீணாக்குகிறீர்கள். மைக்கைக் கொஞ்சம் அழுத்திப் போடுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளிலிருந்து இப்போது நிறைய பேர் சென்னை விமான நிலையத்திற்கு வருகிறபோதும் சரி, அல்லது கப்பல் போக்குவாத்து மூலமாக வருகிற போதும் சரி, SARS என்கிற ஒரு நோயினால் தாக்கப்பட்டு தமிழக எல்லைக்குள் அவர்கள் நுழைந்து விடுவார்களோ என்று பயந்து நம்முடைய doctors team அங்கு இப்போது நிறைய Check-up எல்லாம் செய்து அனுப்பக்கூடிய ஒரு நிலை உருவாகி இருக்கிறது. காரணம், தமிழர்கள் நிறைய வாழக்கூடிய ஒரு பகுதியாக சிங்கப்பூர் இருக்கிற காரணத்தினாலே, அங்கிருந்து வரக்கூடிய அந்த நோயாளிகள் எங்கே SARS என்கிற நோயைக் கொண்டுவந்து விடுவார்களோ என்கிற முன்னெச்சரிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஏனென்றால் இப்போது சிங்கப்பூரில் 60



பேர் அதற்கு பலியாகி இருக்கிறார்கள். நிறைய, 600 பேருக்கு மேல் இப்போது பாதிக்கப்பட்டு சிங்கப்பூரில் இருக்கக்கூடிய அனைத்துப் பள்ளிகளும் மூடப்பட்டு, மாணவர்களோ, மற்றவர்களோ பாதிக்கப்பட்டவர்கள் வீட்டுக்கு உள்ளேயே இருக்கவேண்டுமென்று அவர்கள் எச்சரிக்கப்பட்டிருக்கிறார்கள்.

தமிழகத்திற்கு உள்ளே அப்படிப்பட்ட சார்ஸ் என்ற மருந்தே இல்லாத, நம்மையெல்லாம் காப்பாற்றிக்கொள்ள முடியாத அளவிற்கு அச்சுறுத்தலாக இருக்கக்கூடிய அந்த நோயை இங்கே வரவிடாமல் தடுப்பதற்கு நம்முடைய அமைச்சர் அவர்கள் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள், அது எந்த வைரஸ் மூலமாகப் பரவுகிறது என்று கண்டுபிடித்தாரா, SARS என்று சொன்னால் அதனுடைய விளக்கம் என்ன என்பதை எல்லாம் அமைச்சர் அவர்கள் அவைக்குத் தெரிவிக்குமாறு பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நானும் அந்த செய்தியைப் பத்திரிகையில் பார்த்தேன். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் பணிவோடு சொல்லிக்கொள்வது, இதுபோன்ற செய்திகளைப் பரப்பி, மக்களை பீதிக்குள்ளாக்க வேண்டாம். ஒருவேளை சிங்கப்பூரிலே இப்போது ஏற்படுகிற அந்த வியாதி ஒருவேளை இங்கே விமானத்திலே வருபவர்கள் மூலமாக அது பரவுவதற்கு வாய்ப்பு இருக்குமேயானால், அதனுடைய அறிகுறி தென்படுமேயானால், கப்பல் துறைமுகத்தில் அல்லது விமானநிலையத்தில் அதற்காக பரிசோதனை செய்வதற்கு டாக்டர்கள் குழுமத்தை அனுப்பி அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை நிச்சயமாக இந்த அரசு எடுக்கும். அதுபோல, மக்களையும், உங்களையும் பாதுகாப்பதற்கு இந்த அரசு அக்கறையோடு இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி பாலபாரதி.

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு தமிழக சட்டப்பேரவையினுடைய துணைத் தலைவர் மற்றும் தமிழகத்தினுடைய இனிய, இசைமேதை அவர்களே, உங்களது இனிய பாடலைக் கேட்டு நாங்கள் எல்லாம் மகிழ்ந்திருந்தோம். தமிழக மக்கள்கூட மகிழ்ச்சி தெரிவித்திருக்கிறார்கள். இந்த ஆரம்ப சுகாதார நிலையங்களில்...

[2003 மார்ச் 28

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ரொம்ப நன்றி, ஏனென்றால் என் தொகுதிக்கு நீங்கள் எல்லாம் போயிருக்கிறீர்கள்.

**செல்வி. க. பாலபாரதி:** தமிழகத்திலுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் குடும்பநல அறுவை சிகிச்சைக்கான அரங்குகள் - என்னுடைய தொகுதி மற்றும் திண்டுக்கல் மாவட்டத்தில் நான் பார்க்கவில்லை—தொடங்கப்படுவது அவசியம் தேவை என்று கருதுகின்றேன். மேலும் ஓர் ஆண்டில் இந்த குடும்ப நல அறுவை சிகிச்சைக்கு வரக்கூடியவர்களில் பெண்களின் எண்ணிக்கைதான் அதிகமாக இருக்கிறது. ஆண்களுக்கு இந்த குடும்ப நல அறுவை சிகிச்சையைப் பொறுத்தவரை பெண்கள்தான் செய்துகொள்ளவேண்டும் என்ற ஒரு கருத்தும் இருக்கிறது. ஆகவே அதைப் போக்குவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கான கருத்துப் பிரச்சாரம் செய்வதற்கு நம்முடைய ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் அரசு பொது மருத்துவமனைகளில் திட்டங்கள் ஏதேனும் இருக்கின்றனவா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், அரசு மருத்துவமனைகளிலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல நம்முடைய இந்த ஆட்சி பொறுப்பேற்றதற்கு முன்னாலே அக்கறை இல்லாமல் அதுபோன்ற அறுவை சிகிச்சை நிலையங்கள் பயன்படுத்தப்படாமல் இருந்தது உண்மைதான். நான் பெருமைக்காகச் சொல்லவில்லை. நம்முடைய மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு, கிட்டத்தட்ட 120 ஆரம்ப சுகாதார நிலையங்களிலே அறுவை சிகிச்சை அரங்குகள் புதுப்பிக்கப்பட்டு, அதேபோல மருத்துவமனைகளிலும் அறுவை சிகிச்சை அரங்குகள் புதுப்பிக்கப்பட்டு அதற்கு குளிர்சாதன வசதிகள் எல்லாம் செய்து கொடுக்கப்பட்டு இன்றைக்கு அவை நல்ல முறையிலே இயங்கி வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல இந்த ஆண்டு மட்டும் மார்ச் மாதம் 31 ஆம் தேதி வரை, சென்ற ஆண்டைவிட 4 ஆயிரம் குடும்ப நல



2003 மார்ச் 28]

அறுவை சிகிச்சைகள் இதுவரை அதிகமாக இந்த ஆண்டு செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன. அந்த அளவிற்கு வசதி வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு நல்ல கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். பெண்கள்தான் அதிகமாக இரண்டாவது குழந்தை பிறந்தபிறகு அல்லது மூன்றாவது குழந்தை பிறந்தபிறகு குடும்ப நல அறுவை சிகிச்சை செய்துகொள்வதற்கு முன்வருகிறார்கள். ஆண்கள் ஏன் வரவில்லை என்று நீங்கள் கேட்கிறீர்கள். உள்ளபடியே உங்களுடைய இந்த கோரிக்கையை ஏற்று ஆண்களுக்கும் பாதிப்பு இல்லாத வகையிலே இப்போது 'No Scalpel' அதாவது கத்தி இன்றி அறுவை சிகிச்சை செய்யப்படுகிற வசதி எல்லாம் இருக்கிறது. பாதிப்பே இல்லை. அறுவை சிகிச்சை செய்து கொண்டவுடன் 2 மணி நேரத்திலே மருத்துவமனையை விட்டு நல்ல உடல்நலத்தோடு வெளியே வரலாம். ஆண்களுக்கு அது ஏனோ புரியவில்லை. பாதிப்பு ஏற்படுகிறது என்பதைப்போல நினைக்கிறார்கள். எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருத்தை நானும் வரவேற்கிறேன்.

பெண்களைப்போல ஆண்களும் தங்களை குடும்ப நல அறுவை சிகிச்சைக்கு உட்படுத்திக்கொள்ள வேண்டும். அவர்களுக்கு எந்தவித ஆபத்தும் அதனால் இல்லை. உடல்நலத்தோடு இருக்கலாம். எனவே உறுப்பினருடைய கோரிக்கையை ஆண்களும் நிச்சயமாக ஏற்றுக்கொள்வார்கள் என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெண்களுக்கு குடும்ப நல அறுவை சிகிச்சை செய்யப்படுகிறபோது அந்த அறுவை சிகிச்சை முறையை சரியாக செய்யாத காரணத்தினால் மீண்டும் அந்த மாதிரிப் பெண்களுக்கு, அறுவை சிகிச்சை செய்யப்பட்ட பெண்களுக்கு கரு தரித்து குழந்தை பிறந்ததினால் குடும்பத்தில் குழப்பம் விளைகிறது. அந்தக் குழப்பம் விளைவிக்காத வகையிலே, அறுவை சிகிச்சை முறையிலே மாறுதல் செய்வதற்கு அரசிடத்திலே ஏதாவது திட்டம் இருக்கிறதா?

அப்படிப்பட்ட குழப்பம் ஏற்பட்ட காரணத்தினால் பல குடும்பங்கள் பிரிய வேண்டிய அவசியம்கூட ஏற்படுகின்றன. ஆகையால் இதற்கு உரிய முறையில அரசு என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு போவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள் சொன்னதைப்போல இதிலே ஒரு குழப்பமும் இல்லை. ஆனால் ஏதோ 1000-க்கு ஒன்று அல்லது 10 ஆயிரத்திற்கு ஒன்று இதுபோன்று தவறுதலாக, தவறுதலாக அல்ல மீண்டும் குழந்தை பிறப்பதற்குரிய வாய்ப்பும் ஏற்பட்டிருக்கிறது. அது தவிர்க்க முடியாதது. மீண்டும் மறு அறுவை சிகிச்சை செய்வதன் மூலம் அந்தக் குறைபாடு போக்கப்பட்டிருக்கிறது. எனவே இந்தக் காரணத்திற்காக யாரும், யாரையும் சந்தேகப்பட வேண்டிய அவசியம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களே சந்தேகத்தை கிளப்பிவிட வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆர்.கே. பன்னீர்செல்வம்.

**திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு போவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைக் கூறினார்கள். எல்லோருக்கும் ஒரு அட்வைஸ் செய்தார்கள். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கருத்தடை செய்து கொண்டாரா என்பதைத் தங்கள் வாயிலாக நான் தெரிந்துகொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு போவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய மனைவியே கருத்தடை செய்து கொண்டதாலே நான் கருத்தடை செய்து கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் *126*, திரு. ஜி. கோதண்டராமன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்.





**126—**

**கட்டடத்தைப் புதுப்பித்தல்**

**•23852—திரு. ஜி. கோதண்டராமன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முகையூர் தொகுதி, மணலூர்பேட்டையில் இருக்கும் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடத்தைப் புதுப்பிக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு போவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) முகையூர் தொகுதி, மணலூர்பேட்டை ஆரம்ப சுகாதார நிலையத்திலுள்ள பழுதுகள் ஏற்கெனவே சரிசெய்யப்பட்டுள்ளன. மேலும் அந்த ஆரம்ப சுகாதார நிலையத்தைப் புதுப்பிக்க அல்லது பழுதுடன் இருந்தால் பழுதுபார்க்க என்ன செய்ய வேண்டும் என்று உறுப்பினர் அவர்கள் சொல்வாரேயானால் ஆர்.சி.எச். அதாவது பேறுசார் மற்றும் குழந்தைகள் நல திட்டத்தின் கீழ் அதற்குத் தேவையான நிதியொதுக்கம் செய்யப்பட்டு அதைச் செய்து கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.

*முற்பகல் 10-30*

**திரு. ஜி. கோதண்டராமன்:** மாண்புமிகு போவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் எங்கள் இதய தெய்வம், 6½ கோடி தமிழக மக்களின் இதயங்களில் நீங்கா இடம் பெற்றிருக்கும் அம்மா அவர்கள், நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்ற பழமொழிக்கேற்ப தமிழக மக்களின் சுகாதார நிலையை மேம்படுத்த இந்த ஆண்டு ரூ.1380.48 கோடி நிதி ஒதுக்கியுள்ளார்கள். எனவே, ஆன்றோர்களும், சான்றோர்களும் அம்மா அவர்களைப் பாராட்டுகிறார்கள். தொடக்க சுகாதார மையங்களை 30 படுக்கை வசதிகள் கொண்ட மருத்துவமனையாக தரம் உயர்த்தி நடவடிக்கை எடுத்து அரசு செயல்படுத்தி வருகிறது. அம்மா அரசு இந்த ஆண்டும்

[2003 மார்ச் 28

35 தொடக்க சுகாதார நிலையங்களை நிலை உயர்த்துவதற்கு எடுத்துள்ளது. மணலூர்பேட்டை பேரூராட்சியாகும். இங்குள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் தினந்தோறும் சுற்றியுள்ள 15 கிராமங்களிலிருந்து மக்கள் வந்து மருத்துவ சிகிச்சை பெற்றுச் செல்கிறார்கள். இங்குள்ள கட்டடம் மிகவும் பழைய கட்டடமாகும். மருத்துவர் அறை, மருந்து கிடங்கு ஆகியவற்றில் மழைக்காலங்களில் முழுவதும் கசிவு ஏற்படுகின்றது. ஆகவே, கட்டடம் புதுப்பிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன். பிரசவ வசதிகளுடன்கூடிய 30 படுக்கைகள் வசதி கொண்ட மருத்துவமனை, ஆய்வுக்கூடம், சுற்றுச்சுவர் ஆகியவை கட்டிக்கொடுக்கப்படுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்துவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. அந்த வகையில் மாண்புமிகு உறுப்பினருடைய தொகுதியான முகையூர் தொகுதியில், முகையூர் ஊராட்சி ஒன்றியத்தில் முகையூர் ஆரம்ப சுகாதார நிலையம்தான் ஒன்றியத்தினுடைய பிரதான ஆரம்ப சுகாதார நிலையமாக இருந்து வருகிறது. அதைத்தான் 30 படுக்கைகள் கொண்டதாக தரம் உயர்த்துவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. ஒருவேளை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முகையூர் ஆரம்ப சுகாதார நிலையத்தைவிட மணலூர்பேட்டை ஆரம்ப சுகாதார நிலையம்தான் தரம் உயர்த்துவதற்கு தகுதியானது என்று கருதுவாரேயானால் எழுத்துமூலமாக அந்தக் கோரிக்கையை அவர்கள் கொடுப்பாரேயானால் அந்த ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்துவதற்கு இந்த அரசு பரிசீலிக்கும். அதைப்போல இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்போது செயல்பட்டு வருகிற அந்த சுகாதார நிலையம் பழுதுபார்க்க வேண்டிய நிலைமையிலே இருக்கிறது என்று சொன்னார்கள். அதற்கு நிதி ஒதுக்கம் செய்யப்பட்டு அது நிச்சயமாக பழுதுபார்க்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் ஆர். கோவிந்தசாமி அவர்கள்.

**டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி இல்லையென்றாலும் இதற்கு



2003 மார்ச் 28]

முன்னால் உள்ள கேள்விக்கு மீண்டும் ஒரு விளக்கம் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கேட்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் எம்.பி.பி.எஸ்.-தானே ?

**டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** எம்.டி.-ங்க.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எம்.டி.-யா, இல்லை, இல்லை. Veterinary Doctor-கூட Doctor என்று போட்டுக் கொள்வார்கள், அதற்குத்தான். *(சிரிப்பு)*

**டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** முதலிலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் பேசும்போது SARS Pneumonitis பற்றி பேசினார்கள். அது ஒரு வைரஸ் கிரிமியால் ஏற்படக்கூடிய நோய். உடனடியாகக் கண்டுபிடித்தால் தடுக்கக்கூடிய நோய். It is a different type of A.R.D.S. Artificial Respiratory Distress Syndrome மூச்சுத் திணறல் ஏற்படும், ஜுரம் வரும், கட்டுக்கடங்காமல் இருக்கும். அதையெல்லாம் உடனடியாகக் கண்டுபிடித்தால் நோயைக் கட்டுப்படுத்தலாம், சிராக்கலாம். அதைப்போலவே, மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள் பேசும்போது, குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்தவர்களுக்கு மீண்டும் குழந்தை பிறக்கிறது என்று கூறினார்கள். உண்மையிலே Recanilisation 1% possibility உண்டு. எவ்வளவுதான் அந்த டியூபைக் கட் பண்ணி எடுத்தாலும்கூட, அந்த இரண்டு டியூபும் சேருவதற்கு மீண்டும் வாய்ப்புகள் உண்டு. அதை இப்போது laparascopic முறையிலே Laser முறையிலே மீண்டும் அறுவை சிகிச்சை செய்கிறார்கள். ஆகவே, குடும்பத்தில் குழப்பம் ஏற்படாது. இவற்றையெல்லாம் தடுக்க மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் Proper Doctors, Anaesthetists, Surgeon போன்ற டாக்டர்களை நியமிக்க வேண்டும். நிறைய மருத்துவமனைகளில் டாக்டர்கள் பற்றாக்குறை இருக்கிறது. அதிலும் குறிப்பாக Proper Sterilisation கிடையாது. அதைவிட முக்கியமானது, குளிரூட்டு சாதனங்கள் பொருந்திய அறுவை சிகிச்சை அரங்குகள் இல்லாததுதான் குறை

[2003 மார்ச் 28

என்று எண்ணுகிறேன். இதையெல்லாம் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கவனத்தில் கொண்டு உடனடியாக நிவர்த்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-35*

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கோவிந்தசாமி அவர்கள் ஒரு சிறந்த மருத்துவ நிபுணர். எனவே, இந்த அரசுக்கு நல்ல ஆலோசனைகளைக் கூறியிருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு பொறுப்பேற்ற பிறகுதான் அவர் சொன்னதைப்போல, அவர் இங்கே சுட்டிக்காட்டியதைப்போல, அனைத்து அறுவை சிகிச்சை அரங்குகளுக்கும் இப்போது குளிர்சாதன வசதி செய்து கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சில அறுவை சிகிச்சை அரங்குகளிலே Sterilisation குறைபாடுகள் கண்டறியப்பட்டு முறையாக Sterilisation செய்ய வேண்டுமென்று மருத்துவ நிபுணர்களுக்கு நாங்கள் அறிவுறுத்தியிருக்கிறோம். டாக்டர்கள் பற்றாக்குறையைப் பற்றிச் சொன்னார்கள். அவர்களுக்கே நன்றாகத் தெரியும். இந்த அறுவை சிகிச்சை செய்வதற்கு மயக்க மருந்து நிபுணர்கள் பற்றாக்குறையாக இருக்கிறார்கள். அதற்குக்கூட நம்முடைய டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அரசு இப்போது வெளியிலேருந்து அந்த Anaesthetist-களை hire செய்வதற்குக்கூட ஏற்பாடு செய்திருக்கிறது. எனவே, பற்றாக்குறையைப் போக்குவதற்கு இந்த ஆண்டு மட்டும் 500 புதிய டாக்டர்களை நியமிப்பதற்கு புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்தப் பணி இப்போது தொடங்கப்பட்டு, நம்முடைய தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலமாக அந்தத் தேர்வும் நடக்க இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வினா எண் *127*, திரு. பி.கே. சேகர்பாபு, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.



2003 மார்ச் 28]

**127—**

**வேலை வாய்ப்பு**

**•18464—திரு. பி.கே. சேகர்பாபு:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, வியாசர்பாடி பகுதியிலுள்ள தொழுநோயாளிகளின் குழந்தைகளில் சுமார் 100 பேர் தொழிற்கல்வி/பட்டப் படிப்பு படித்துள்ளவர்களுக்குத் தனியார் அல்லது அரசு சார்பு நிறுவனங்களில் வேலைவாய்ப்பு பெற்றுத்தர அரசு தனிக் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தொழுநோயாளிகளின் குழந்தைகள் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்திருந்தால், அவர்களது கல்வித் தகுதி, வயது, பதிவு மூப்பு மற்றும் இட ஒதுக்கீடு ஆகியவற்றின் அடிப்படையில் வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு அறிவிக்கப்படும் காலியிடங்களுக்கு அவர்களது பெயர்கள் பரிந்துரை செய்யப்படும்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களை இந்தச் சமுதாயமானது, ஒதுக்கப்பட்டவர்களாகக் கருதி நடத்துவதை நாம் அனைவரும் நன்றாக அறிவோம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தங்களுடைய பதிலுரையில் இடஒதுக்கீட்டின் அடிப்படையில் அவர்களுக்கு வேலைவாய்ப்பு அலுவலகங்களில் நேர்முகத் தேர்வுக்குப் பரிந்துரைக்கப்படும் என்பதைத் தெரிவித்திருக்கிறார். அப்படி இடஒதுக்கீட்டைப் பின்பற்றுகிறபோது இவர்கள் ஊனமுற்றோர் பட்டியலின் அடிப்படையில் தேர்வு செய்யப்படுகிறார்களா அல்லது ஜாதி அடிப்படையில் தேர்வு செய்யப்படுகிறார்களா என்பதை அறிய இருக்கின்ற அதே நேரத்தில், இப்படி தொழுநோயால் பாதிக்கப்பட்டிருக்கின்றவர்களின் பிள்ளைகள் படித்திருக்கின்ற, இந்தப் படிப்பினை முன்னுரிமையாகக் கொண்டு அவர்களுக்கு

[2003 மார்ச் 28

அரசாங்கத்திலேயும் முன்னுரிமை அடிப்படையில் வேலை அளிக்கின்ற அதேநேரத்தில், தனியார் நிறுவனங்களிலும் இவர்கள் பணியில் சேருவதற்கு அவர்களுக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்தித் தரவேண்டுமென்ற அதேநேரத்தில், இவர்கள் தொழிற் கல்வி பயின்று இருப்பதால், சொந்தமாகத்தொழில் நடத்துவதற்கும், வங்கியிலே கடனுதவி பெறுவதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிந்துரைப்பார்களா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழுநோயாளிகளின் குழந்தைகள் அவர்கள் விரும்பினால் அரசினர் மகளிர் காப்பகங்களில், அதாவது சமுகநலத் துறையின் சார்பில் நடத்தப்பெறுகின்ற அரசினர் மகளிர் காப்பகங்களிலே அவர்களைத் தங்க வைத்து முழுமையாக மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, அவர்களின் படிப்புச்செலவை எஸ்.எஸ்.எல்.சி. வரை ஏற்றுக்கொள்கிறது. அவர்களுக்கு உணவு, உடை, தங்குகின்ற இடம், மருத்துவ வசதி போன்ற எல்லா வசதிகளும் அளிக்கப்படுகின்றன. அவர்களில் உடல் ஊனமுற்றவர்கள் இருந்தால், அல்லது உடல் ஊனமுற்றவர்களாக இருக்கிறார்கள் என்று சான்றிதழ் பெற்று வந்தால், அதற்குரிய இடஒதுக்கீட்டை அவர்களுக்கு வழங்குவதற்கு அரசு உரிய ஏற்பாடுகளைச் செய்திருக்கிறது. இது தவிர, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதைப்போல, அவர்களுக்கு உதவுகின்ற வகையில் தனியார் நிறுவனங்களில் பணியமர்த்தம் பெற்றுத் தருவதற்கு இந்த அரசு நிச்சயமாக முயற்சி செய்யும். அப்படி தனியார் நிறுவனங்களில் நம்முடைய மாநிலம் முழுவதும் பல்வேறு இடங்களில் பணியமர்த்தங்கள் இப்போது மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசில் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

முற்பகல் 10-40

அதேபோல, மாண்புமிகு உறுப்பினர் சேகர்பாபு அவர்கள் எடுத்துத் தெரிவித்திருக்கின்ற இந்தக் குறிப்பிட்ட பகுதியில் வாழுகின்ற அந்தத் தொழுநோயாளிகளினுடைய குடும்பத்தில் இருக்கின்ற, படித்த வேலை வாய்ப்பு இல்லாமல் இருக்கின்ற அந்தப் பகுதியினருக்கு தனியார் துறைகளில் பணியமர்த்தம் பெற்றுத் தருவதற்கு அரசு தன்னால் ஆன எல்லா முயற்சிகளையும் செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.



2003 மார்ச் 28]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சேகர்பாபு அவர்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய பதிலுரையிலே இப்படி தொழிற் கல்வி பயின்று இருக்கின்ற தொழுநோயாளிகளுடைய பிள்ளைகளுக்கு வங்கிகளிலே அவர்கள் தொழில் செய்வதற்குப் பரிந்துரைப்பார்களா என்று கேட்டிருந்தேன். அதற்கு, இவர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய காலத்தில் அனாதை இல்லங்களில் இப்படி தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அனைத்து வசதிகளையும் செய்வதாகக் கூறியதால், விதவை, முதியோர்களுக்கு வழங்குவதைப்போல, இவர்களுக்கும் உதவித்தொகை வழங்கப்படுகிறதா? அப்படி வழங்கப்பட்டால், இவர்களுக்கு எவ்வளவு தொகை வழங்கப்படுகிறது? அப்படி வழங்கப்படுகின்ற நேரத்தில் இந்தத் தொழுநோயாளிகளுக்கு முதியோர், விதவைகளுக்கு வழங்கப்படுவதைப்போல் வயது வரம்பை நிர்ணயிக்காமல், அவர்களுக்கும் அரசாங்கத்தின் சலுகைகளின் அடிப்படையில், தகுதிகளைத் தளர்த்தி உதவித்தொகை வழங்க அமைச்சர் அவர்கள் பரிந்துரைப்பார்களா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழுநோயை இந்தியாவிலேயிருந்து விரட்டவேண்டும் என்பது இந்திய அரசு, மாநில அரசினுடைய கொள்கை. அந்தவகையிலே நூற்றுக்கு நூறு சதவிகிதம் தொழுநோயை ஒழிக்கவேண்டும் என்று முயன்று, பெரும்பாலும் அதில் நம்முடைய அரசு வெற்றி கண்டிருக்கிறது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப்போல் வங்கிகளிலே தொழில் செய்வதற்கு அவர்கள் மனு செய்வார்களேயானால், அது அரசின் கவனத்திற்கு எடுத்து வரப்படுமேயானால் உரிய வங்கிகளுக்கு, அவர்களுக்கு உதவி செய்ய அரசு பரிந்துரை செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் கே. மகேந்திரன் அவர்கள்.

**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே வேலை நியமனத் தடையாணை இருக்கக்கூடிய காரணத்தினால், வேலைவாய்ப்பு அலுவகங்களில் பணிமூப்பு அடிப்படையிலே, இடஒதுக்கீடு அடிப்படையிலே.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** தனிக் கேள்வி போடுங்கள். சம்பந்தம் இல்லை.

வினா எண் 128, திரு. வி.கே. லட்சுமணன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**128—**

**மாணவர்கள் சேர்க்கை**

**•23230—திரு. வி.கே. லட்சுமணன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் மாணவர்கள் சேர்க்கைக்கு 10 ஆம் வகுப்புத் தேர்வில் தோல்வியடைந்த மாணவர்களையும் சேர்த்துக் கொள்ளும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

10 ஆம் வகுப்பு தேர்வில் தோல்வியடைந்த மாணவர்களை அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் சேர்த்துக் கொள்ளும் திட்டம் இப்போது நடைமுறையில் உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வி.கே, லட்சுமணன், இருக்கையில் இல்லை. திரு. சி. ஞானசேகரன் அவர்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 10 ஆம் வகுப்பில் தேர்ச்சி பெற்றவர்களுக்குக்கூட, 75 சதவிகிதம் மாணவர்களுக்கு இப்போது நம்முடைய அரசு தொழிற் பயிற்சி நிலையங்களிலே இடம் கிடைப்பதில்லை. அதிலேகூட, 80, 75 சதவிகிதம், பொதுவாக ஃபிட்டர், வெல்டர் போன்ற நல்ல டிரேடுகளுக்கு எல்லாம் இப்போது அவ்வளவாக இடம் கிடைக்ககூடிய சூழ்நிலை





இல்லாமல் இருக்கிறது. ஆகவே, அரசு தொழிற்பயிற்சிக் கூடத்தில் கொஞ்சம் குறைந்த கட்டணத்தில் மாணவர்கள் படித்துவிட்டு, தங்களால் ஆன ஒரு குறைந்தபட்ச வேலையைப் பெறுவதற்கு அவர்கள் முயலுகிற காரணத்தினாலே, அவர்களுக்கு, பாஸ் செய்தவர்களுக்கு மட்டுமாவது இடம் கிடைக்க வழி செய்ய வேண்டும். எல்லா இன்ஸ்டிடியூட்டுகளிலேயும் இருக்கைகளை, இரண்டு மடங்காகவும் நீங்கள் பெருக்கலாம். ஏனென்றால் தனியார் பயிற்சிக் கூடங்கள் எல்லாம் கீற்றுக் கொட்டகைகளிலேயும், தகர டப்பாக்களிலேயும் நடந்துகொண்டு, பணத்தைப் பறித்துக் கொண்டிருக்கிற காரணத்தினாலே, நீங்கள், அரசு இந்த தொழிற்பயிற்சிக் கூடங்களிலே, பொதுவாக சிவில் போன்ற எந்த டிரேடை எடுத்துக்கொண்டாலும் அந்த டிரேடுகளினுடைய சீட்டுகளை இரண்டு மடங்காகவோ அல்லது இரண்டரை அல்லது மூன்று மடங்காகவோ நீங்கள் பெருக்கி அந்த மாணவர்கள் படிப்பதற்கு வாய்ப்பினை அளிக்க முற்படுவீர்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஆரம்பத்திலேயே சொல்லி இருக்கவேண்டும். இந்தக் கேள்வியே 10 ஆம் வகுப்பில் தவறியவர்களுக்கு ஐ.டி.ஐ.-ல் இடம் தரப்படுமா என்பதுதான். அது ஏற்கனவே தரப்பட்டு வந்திருக்கிறது. எல்லா டிரேடுகளிலும் தரப்படுகின்றன. SCVT-லும், NCVT-லும் தரப்படுகின்றன. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல இடம் கிடைக்கவில்லை என்ற பேச்சுக்கே இடமில்லை. ஏனென்றால், எல்லாவிதமான டிரேடுகளிலும் அவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள். அப்படி இடம் கிடைக்கவில்லை என்கிற மாதிரி சூழ்நிலை இருக்குமானால் அதற்குரிய விண்ணப்பங்களை நீங்கள் அளித்தால், அதைக் குறிப்பிட்டுச் சொன்னால் அந்த இடத்தை உயர்த்துவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நிச்சயமாக முயற்சி செய்யும்.

*முற்பகல் 10-45*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 129, திரு. டி.கே இராஜா, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

[2003 மார்ச் 28

**129—**

## பழத்தோட்டம்

***19589—திரு. டி.கே. இராஜா:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் தொகுதி, ஜவ்வாது மலையிலுள்ள தகரக்குப்பம், கூடப்பட்டு அரசு பழத்தோட்டப் பண்ணைகள் பாராமரிப்பு இல்லாமலுள்ளதை அரசு தனியாருக்குக் குத்தகை விடுமா அல்லது பண்ணைகளைச் சீரமைக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கூடப்பட்டு மற்றும் தகரக்குப்பம் அரசு தோட்டக்கலைப் பண்ணைகளைத் தனியாருக்குக் குத்தகை விடும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய வேலூர் மாவட்டத்திலே மூன்று பழத் தோட்டப் பண்ணைகள்தான் இருக்கின்றன. ராணிப்பேட்டையிலே இருக்கின்ற நவ்லாக், ஜவ்வாது மலையிலே இருக்கின்ற தகரக்குப்பம், கூடப்பட்டு. ஆனால் இன்றைய நிலைமையிலே இந்தப் பண்ணைகள் எல்லாம் அழிந்துகொண்டு வருகின்றன. பராமரிப்பு இல்லாமல் அங்கே ஒட்டு வீரியச் செடிகளை முறையாக உற்பத்தி செய்யாததாலும் அந்தப் பண்ணைகளை எல்லாம் மூடக்கூடிய நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. எனவே, தகரக்குப்பத்திலே இருக்கின்ற அந்தத் தோட்டப் பண்ணையிலே மா, கொய்யா, சப்போட்டா, மாதுளை போன்ற வீரிய ரகச் செடிகளை ஒட்டு இறக்குகிறார்கள். அதேபோல, கூடப்பட்டியிலே இருக்கின்ற பண்ணையிலும் ஒட்டு இறக்குகிறார்கள். அங்கே பல பூச்செடிகளையும் குரோட்டன்ஸ் செடிகளையும் உற்பத்தி செய்து மாநில திட்டங்களுக்கும், தனியார்களுக்கும் விற்று வருகிறார்கள். ஆனால், தொடர்ந்து



2003 மார்ச் 28]

நஷ்டத்திலே இயங்கிக் கொண்டிருக்கின்ற அந்தப் பண்ணைகளை இலாபம் அடைய வைக்க வேண்டும் என்று சொன்னால், அங்கே தகரக்குப்பத்தில் இருக்கின்ற அந்தப் பண்ணையிலே மூன்று கிணறுகள் இருந்தும் இன்று வரை அதற்கு மின் சர்வீஸ் கொடுக்கப்படவில்லை. அங்கே டீசல் எஞ்சின் மூலமாகத்தான் 80 ஏக்கர் நிலத்திலே இருக்கின்ற அந்தப் பண்ணைக்கு இன்றுவரைக்கும் தண்ணீர் பாய்ச்சிக் கொண்டு இருக்கிறார்கள். எனவே, மும்முனை மின்சார இணைப்பு கொடுத்து அங்கே 3 எச்.பி. மோட்டார் போட்டு தண்ணீர் இறைப்பதற்கு ஆவன செய்யப்படுமா? அதேபோல செடிகளை உற்பத்தி செய்து வனத் துறை DPAP-தரிசுநில மேம்பாடு மற்றும் Agro Forestry, Social Forestry போன்ற நிறுவனங்களுக்குச் சப்ளை செய்தால் அதிகப்படியான இலாபம் கிடைக்கும். இப்போழுது தனியாரிடத்திலேயிருந்து அதிக விலை கொடுத்து வாங்குவதால் இதை, இதுபோன்ற நிறுவனங்களுக்கு உற்பத்தி செய்ய அரசு இந்தப் பண்ணைக்கு ஆர்டர் வழங்க ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூடப்பட்டு அரசு தோட்டக்கலைப் பண்ணை 25 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ளது. இந்தப் பண்ணையில் ஒவ்வொரு ஆண்டும் ஒரு இலட்சத்துப் பதினேழாயிரம் மா, கொய்யா, சப்போட்டா, மாதுளை, புளி போன்ற பழச் செடிகள் மற்றும் அழகு மலர்ச் செடிகள் உற்பத்தி செய்யப்பட்டு மாநிலத் திட்டங்களுக்கு, விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. இந்தப் பண்ணையிலே 25 பேர் பணிபுரிகிறார்கள். இந்தப் பண்ணை ஆண்டுக்கு ஐந்து இலட்சம் முதல் எட்டு இலட்சம் வரை லாபத்திலே இயங்கிக் கொண்டிருக்கிற பண்ணை. அதுபோல தகரக்குப்பம், அந்தப் பண்ணையிலும் கிட்டத்தட்ட தொண்ணூற்று ஐந்தாயிரம் அளவுக்குச் செடிகள் உற்பத்தி செய்யப்பட்டு அரசினுடைய திட்டங்களுக்குப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அந்தப் பண்ணை மூலமும் கிட்டத்தட்ட ஒரு இலட்சம், இரண்டு இலட்சம் ரூபாய் அளவுக்கு ஆண்டுக்கு லாபம் வந்து கொண்டிருக்கிறது. அங்கே மூன்று கிணறுகள் இருக்கின்றன; அதற்கு மின் இணைப்பு கொடுக்கப்படவில்லை என்று உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அதைப்பற்றி ஆய்ந்து அறிந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை உங்களின் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[2003 மார்ச் 28

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் *130*, திரு. வெ. கோவிந்தராஜ், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**130—**

**பதப்படுத்தும் தொழிற்சாலை**

***23120—திரு. வெ. கோவிந்தராஜ்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி தொகுதியில் புளி, மா பழவகைகளைப் பதப்படுத்த அரசு சார்பில் பதப்படுத்தும் தொழிற்சாலை அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) கிருஷ்ணகிரி தொகுதியில் புளி, மா பழவகைகளை அரசு சார்பில் பதப்படுத்தும் தொழிற்சாலை அமைப்பதற்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்விக்கிடமில்லை.

**திரு. வெ. கோவிந்தராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறையில் பல புதுமைகளைப் படைத்துக் கொண்டு இருக்கின்றது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு. தருமபுரி மாவட்டத்தில் உள்ள ஓசூரில் மலர்களை ஏற்றுமதி செய்கின்ற மையத்தை தந்த இதய தெய்வம் டாக்டர் அம்மா அவர்களுக்கு மாவட்ட மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எங்களுடைய மாவட்டம் புளி, மா, பலா வகைகள் அதிகமாக உற்பத்தியாகின்ற மாவட்டமாக இருந்துகொண்டிருக்கிறது. விவசாயத்தை நம்பி வாழ்ந்துகொண்டிருக்கின்ற மாவட்ட மக்களுடைய வருவாயைப்



2003 மார்ச் 28]

பெருக்கும் வகையில் பழ வகைகளைப் பதப்படுத்தி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கேற்ப குளிர்சாதனக் கிடங்கையும், புளியில் இருந்து சாஸ் தயாரிக்கின்ற தொழிற்சாலையையும் ஏற்படுத்த அம்மா அவர்களுடைய அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-50*

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி பகுதியில் பழம் பதனிடும் *5* தனியார் தொழிற்சாலைகள் செயல்பட்டு வருகின்றன. கிருஷ்ணகிரி பகுதியில் *3* புளி பதப்படுத்தும் தொழிற்சாலைகளும் உள்ளன. தருமபுரி மாவட்டத்தில் *4* குளிர்பதனக் கிடங்குகள் உள்ளன. தருமபுரி மாவட்டத்தில் *28* பழப் பதப்படுத்தும் தொழிற்சாலைகள் உள்ளன. கிருஷ்ணகிரி தொகுதியிலே விளையக்கூடிய மாம்பழத்தினுடைய *50* சதவிகிதம் பழரசம் தயாரிக்கும் தொழிற்சாலைகளுக்கு அனுப்பப்படுகிறது. ஆகவே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல அங்கே புதிதாக தொழிற்சாலை தொடங்க வேண்டிய அவசியம் இல்லை என்று பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தருமம் புரிகிற, தரும சிந்தனை உள்ள மக்கள் வாழக்கூடிய மாவட்டம். வானம் பார்த்த பூமியாக இருக்கிற, மானாவாரிப் பயிர்களைப் பயிரிடக்கூடிய பகுதி. அதிலும் குறிப்பாக மாவட்டம் என்பது மிகவும் பின்தங்கிய, தொடர்ந்து வறட்சியாக உள்ள மாவட்டம். அந்த மாவட்டம், தென்னகத்திலேயே சுவை மிகுந்த புளி அதிகமாக விளையக்கூடிய பகுதி. அதிலும் வெளிநாடுகளுக்கு மாம்பழம் அதிகமாக ஏற்றுமதி செய்யக்கூடிய மாவட்டம். நம்முடைய அமைச்சர் அவர்கள்கூட பதில் உரையிலே இங்கே சொன்னார்கள். அங்கே வாழக்கூடிய மக்கள் எல்லாம் களி சாப்பிடக்கூடிய மக்கள். புளி அதிகம் விளையக்கூடிய மாவட்டம். இதையெல்லாம் மனதிலே கொண்டு, பின்தங்கியிருக்கிற அந்த மாவட்டத்தில் மாம்பழம் அதிகமாக, புளி அதிகமாக உற்பத்தி ஆகக்கூடிய மாவட்டத்திலே, பதப்படுத்துவதற்காக, ஏற்றுமதியைப் பெருக்கக்கூடிய வகையிலே நடப்பு ஆண்டிலே விதிகளைத் தளர்த்தி, முன்னுரிமை அடிப்படையிலே,

பின்தங்கிய மாவட்டம் என்பதைக் கருதி, இந்தப் பதப்படுத்தும் தொழிற்சாலை அவசியம் தேவை என்பதைக் கருதி அரசு இதிலே ஆர்வம் காட்டுமா, உடனடியாக அந்தப் பதப்படுத்தும் தொழிற்சாலையை அமைப்பதற்கு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வேளாண்மைத் துறையில் பல்வேறுபட்ட புதிய மாறுதல்களை உருவாக்கி வருகிறார்கள். புரட்சித் தலைவி அம்மா அவர்கள் புதிய தொழிற்சாலைகளை உருவாக்குவதற்கு அதிகமான கவனம் எடுத்து வருகிறார்கள். அந்த வகையிலே புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் இதுபோன்ற தொழில்களைத் தொடங்குவதற்கு முன்வருவார்களானால் அவர்களுக்குத் தேவையான உதவிகளை அரசு அளிக்கும் என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா என் *131*, திருமதி ஆர். சசிகலா, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

**131—**

### ஆதிதிராவிடர் மாணவ விடுதி

***7365—திருமதி ஆர். சசிகலா:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணராயபுரம் தொகுதியிலுள்ள ஆதிதிராவிடர் மாணவ, மாணவியர் விடுதியில் மாணவர்கள் எண்ணிக்கையை உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. செ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.



**திருமதி ஆர். சசிகலா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாயுள்ளம் கொண்ட, தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் அனைத்து மாணவ, மாணவியர் விடுதியை அரசு சொந்தக் கட்டடத்தில் இயங்க, எந்த அரசும் செய்யாத சிறப்புத் திட்டம் கொண்டுவந்து, செயலாற்றிக்கொண்டிருக்கும் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய கிருஷ்ணராயபுரம் தொகுதி தனித் தொகுதி என்பதாலும் அங்கு அதிகம் ஆதிதிராவிட மக்கள் வசித்து வருவதாலும், அந்த மாணவ, மாணவியர் தங்கிப் படிக்கும் விடுதியில் போதிய கட்டட வசதியும், அடிப்படை வசதிகளும் உள்ளதாலும் அம்மாவின் அரசு வரும் நிதியாண்டிலாவது மறுபரிசீலனை செய்து மாணவர்களின் எண்ணிக்கையை உயர்த்தித்தர ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் நலத் துறையின்கீழ் *731* மாணவர் விடுதிகளும், *345* மாணவியர் விடுதிகளும், ஆக மொத்தம் *1,076* விடுதிகள் இயங்கி வருகின்றன. இவ்விடுதிகளில் *51,762* மாணவர்களும், *24,538* மாணவியர்களும் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இம்மாணவ, மாணவியர்களின் கல்வி முன்னேற்றத்திற்காக உணவும், தங்கும் இடமும் இலவசமாக அரசால் வழங்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்கள் இந்த மாணவர்களுக்கு அனுமதிக்கப்பட்டு வந்த உணவுக் கட்டணத்தை *5-12-2001* முதல் மாதம் ரூ.*225*-லிருந்து *300* ரூபாயாக உயர்த்தி வழங்கியுள்ளார்கள். உணவுக் கட்டணமாக ஆண்டிற்கு ரூ.*24.10* கோடி செலவிடப்படுகிறது. ஒவ்வொரு விடுதியிலும் குறைந்தபட்சம் *50* மாணவர்கள் தங்கிப் பயின்று வருகின்றனர். இப்போது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு மூலம் ஆரோக்கியமான சூழ்நிலையில் மாணவர்கள் தங்கிப் படிக்கவேண்டுமென்று அனைத்து அடிப்படை வசதிகளுடன்கூடிய விடுதிக் கட்டடம் கட்டிக்கொடுக்கப்பட்டு வருவதாலும், மாணவர்களுக்கு உணவுக் கட்டணத்தை உயர்த்தியதாலும், ஆதிதிராவிட மாணவர்கள் அனைவருக்கும் விடுதிகளில் தங்கிப் படிக்கவேண்டுமென்கிற ஆர்வம் இருந்து வருகிறது. இருந்தாலும், தற்போது நிலவிவரும் கடுமையான நிதி நெருக்கடியின் காரணமாக இவ்விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

[2003 மார்ச் 28

*முற்பகல் 10-55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. பாரமலை:

**திரு. க. பாரமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய பதிலிலே மாணவர்களுடைய எண்ணிக்கையை உயர்த்துவதற்கு வாய்ப்பு இல்லையென்று சொன்னார்கள். பொதுவாக புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது ஒவ்வொரு ஹாஸ்டலிலே மாணவர்களைச் சேர்க்கின்ற காலத்தில் ஒவ்வோர் ஆண்டும் அரசு அனுமதி பெறாமலேயே 10 சதவிகிதத்தை உயர்த்திச் சேர்த்துக்கொள்ளலாம். அந்த விவரம் அரசுக்கு வந்தபின்னாலே அதை ratify பண்ணுவார்கள். 50 பேர் வைத்து ஆரம்பித்த மாணவர்கள் இல்லங்களில் 5 ஆண்டுகளிலே 70, 80 என்று எண்ணிக்கை உயர்ந்து போய்க்கொண்டு இருந்தது. ஆனால், இப்போது அது தலைகீழாக மாற்றப்பட்டு, 10 சதவிகிதத்தை எடுக்கிறார்கள். ஓர் ஆண்டு என்று சொல்லி வருடம் முடிந்த உடனேயே அவர்கள் நீக்கப்பட்டு விடுகிறார்கள். மீண்டும் பத்து சதவிகிதம் சேர்க்கப்படுகிறது. ஆகவே, நான் கேட்டுக்கொள்வது ஒவ்வோர் ஆண்டும் 10 சதவிகிதம் அந்த எண்ணிக்கையின்மேல் சேர்ப்பதற்கு, அதை அதிகரித்துக் கொடுப்பதற்கு அமைச்சர் நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலங்களில் இப்படிப்பட்ட விடுதிகளில் ஏதாவது ஒரு விடுதியில் மாணவர்கள் குறைவாகச் சேர்க்கப்படுவார்களேயானால், மற்ற விடுதிகளுக்கு, குறிப்பாக குறைந்தபட்சம் 50 மாணவர்களுக்குண்டான அந்த விகிதாச்சாரத்தின் அடிப்படையில் மற்ற விடுதிகளுக்கு அதை ஈடு செய்துகொண்டு வருவது வழக்கமாக இருந்து வருகிறது. இப்போது புரட்சித் தலைவி அம்மா அவர்கள் காலத்தில் இப்படிப்பட்ட நவீனமான விடுதிகளைக் கட்டிக் கொடுப்பதாலும், உணவுக் கட்டணத்தை உயர்த்தியதாலும், எல்லா இடங்களிலும் அனைத்து மாணவர்களும் அதிகமான அளவிற்கு, எண்ணிக்கை அதிகமான அளவிற்கு விரும்பிப் படிப்பதற்கு, விடுதியிலே தங்கிப் படிப்பதற்கு வருகை தந்துகொண்டு இருக்கிறார்கள். இருந்தாலும் தகுதிக்கு ஏற்ப அந்த மாணவர்களுடைய குடும்பத்தினுடைய சூழ்நிலைக்கு ஏற்ப, நலனுக்கு ஏற்ப இப்படிப்பட்ட மாணவர்களைச் சேர்ப்பதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு ஆழ்ந்து ஆய்வு செய்து வருகிறது.



2003 மார்ச் 28]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் விளக்கமாகச் சொன்னார்கள். நிலைமைகளையும் சொல்கிறார்கள். புரிந்துகொள்கிறேன். ஆதிதிராவிட மாணவர்களுக்கான விடுதிகளில், பல இடங்களில் இப்படிப்பட்ட சிரமங்கள் இருக்கின்றன. ஆகவே, மனுதாரர்கள் அளிக்கின்ற மனுவைப் பொறுத்தும், அதனுடைய தகுதியைப் பொறுத்தும் பரிசீலித்து, இடம் கொடுப்பதற்கான முயற்சி என்ற அடிப்படையில் பார்த்தால்கூட ஆண்டுதோறும் அப்படிப்பட்ட இடப்பற்றாக்குறை ஏற்பட்டுகொண்டே இருக்கின்றது. குறிப்பாக, என்னுடைய மன்னார்குடி தொகுதியில் ஏழை மாணவர்கள் ஆண்டுதோறும் இப்படிப்பட்ட பிரச்சினைக்கும், சிரமத்திற்கும் உள்ளாகிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மரியாதைக்குரிய மாண்புமிகு உறுப்பினர் பாரமலை அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னதுபோல ஆண்டுதோறும் 10 சதவிகிதம் உயர்வு என்ற அடிப்படையிலே மாணவர்களை இணைப்பதற்கான முயற்சி எடுப்பது என்பதுதான் சாதாரண தாழ்த்தப்பட்ட பகுதி மாணவர்களுடைய படிப்பிற்கு உதவிகரமாக இருக்கும். குக்கிராமங்களுக்கு வந்து செல்வதற்கு உரிய வாய்ப்பு இல்லாத மாணவர்கள், படிப்பதற்கு வசதி ஏற்படும் என்ற முறையில் அரசு அதை மீண்டும் பரிசீலித்து மாணவர்களுடைய எண்ணிக்கையை உயர்த்துவதற்கான ஒரு பொதுவான உத்தரவினை இடுவதற்கான முயற்சியை அமைச்சர் மேற்கொள்வாரா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு பொத்தாம் பொதுவான குறிப்பை, ஒரு தவறான தகவலை இங்கே அவைக்குத் தந்து கொண்டிருக்கிறார். அவருடைய மன்னார்குடி தொகுதியில் அதிகமான அளவிற்கு மாணவர்கள் எண்ணிக்கையை அதிகரித்துக்கொண்டு இருக்கிறார்கள் என்பதைச் சொன்னார்கள். நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில்தான் இந்த அளவிற்கு மாணவர்கள் நவீன விடுதி கட்டடமாக இருப்பதால், அதிகமான அளவிற்கு வருகை தந்துகொண்டு இருக்கிறார்கள். இருந்தாலும், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழ்பவர்கள் இல்லையென்ற நிலையை ஏற்படுத்திக்கொண்டு வருவதால், அதனால் அந்த வறுமை நிலையிலே வாழ்ந்து வருகின்ற குடும்பங்களின் வாழ்க்கைத் தரம் உயர்நிலைக்கு வருகின்ற நேரத்தில், இதுபோன்ற நிலைமைகள் வராது.

[2003 மார்ச் 28

முற்பகல் 11-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுரை முடிகிறவரைக்கும் கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை, நிதிநிலைக்கேற்ப ஆய்வு செய்யப்படும்.

## (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

### (பட்டியல்கள் 8 மற்றும் 9)*
### (எட்டாவது பட்டியல்)

1—

### மராமத்து செய்தல்

**வினா 15807—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டி தொகுதி, கசவன்குன்று-வாலம்பட்டி சாலை கி.மீ. 0/0 முதல் கி.மீ. 3/0 சாலையை மராமத்து செய்து தார்ச்சாலையாகப் போடும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இச்சாலையில் கி.மீ. 0/0 முதல் கி.மீ. 3/0 பகுதியினை தார் புதுப்பித்து மேம்படுத்தத் தோராயமாக ரூ.10.50 இலட்சம் தேவைப்படும். இப்பணி தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் எந்தத் திட்டப் பணியிலும் இடம் பெறவில்லை. வரும் நிதியாண்டில் நிதி நிலைமைக்கேற்ப செயல்படுத்திட பரிசீலிக்கப்படும்.

*இப்பட்டியல்களில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தவையாகும்.



2—

### நவீன கழிப்பிட வசதி

**வினா 27224—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம், சுகவனேஸ்வரர் ஆலயத்தில் நவீனக் கழிப்பிட வசதிகள் செய்து கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் அருள்மிகு சுகவனேஸ்வரர் திருக்கோயிலில் பக்தர்களின் வசதிக்காக, இலவச நவீனக் கழிப்பிடங்கள் நான்கு கட்டப்பட்டு, ஆண், பெண், இருபாலருக்கும் தலா இரண்டு வீதம் ஒதுக்கீடு செய்து உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றன.

3—

### அவசர ஊர்தி

**வினா 23457—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி அரசு தலைமை மருத்துவமனைக்குக் கூடுதல் அவசர ஊர்தி (ஆம்புலன்ஸ்) ஒதுக்கீடு செய்து தர அரசு முன்வருமா?

[2003 மார்ச் 28

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி அரசு தலைமை மருத்துவமனைக்குக் கூடுதல் அவசர ஊர்தி ஒதுக்கீடு செய்யும் கருத்துரு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**4—**

### ஆரம்ப சுகாதார நிலையம் பழுதுபார்த்தல்

**வினா 23872—திரு. எம். ராம்குமார்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாபநாசம் தொகுதி, பண்டாரவாடை ஆரம்ப சுகாதார நிலையம் பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதனைச் சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பாபநாசம் தொகுதி, பண்டாரவாடை ஆரம்ப சுகாதார நிலையக் கட்டட பழுதுகளை 2002-2003 ஆம் ஆண்டில் கட்டடப் பழுதுகளுக்காக ஒதுக்கப்படும் நிதி ஒதுக்கீட்டிலிருந்து சரிசெய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**5—**

### வாகனம் மற்றும் தொலைபேசி

**வினா 24917—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2003 மார்ச் 28]

சேலம் மாவட்ட சித்த மருத்துவ அதிகாரிக்கு வாகன வசதி மற்றும் தனித் தொலைபேசி வசதி செய்துதர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறையின்கீழ் 22 மாவட்ட சித்த மருத்துவ அலுவலர்கள் பணிபுரிகிறார்கள். இவர்களுக்கு வாகன வசதி மற்றும் தனித் தொலைபேசி வசதி செய்து தரப்படவில்லை. எனவே, பிற மாவட்ட சித்த மருத்துவ அலுவலர்களுக்கு வாகன வசதி மற்றும் தனித் தொலைபேசி வசதி செய்து தரும்போது சேலம் மாவட்ட சித்த மருத்துவ அலுவலருக்கும் செய்து தரப்படும்.

**6—**

### ஆம்புலன்ஸ் வழங்குதல்

**வினா 29814—திரு. அ. இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் தொகுதி, புதுச்சத்திரம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட புதுச்சத்திரம் அரசினர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஆம்புலன்ஸ் வழங்கும் திட்டம் அரசின் வசம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் துணை இயக்குனர், சுகாதாரப் பணிகளின் கட்டுப்பாட்டின்கீழ் புதுச்சத்திரம் வட்டாரத்தில் இயங்கி வரும் புதுச்சத்திரம் ஆரம்ப சுகாதார நிலையம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையமாகும். கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு

[2003 மார்ச் 28

வாகன வசதிகள் வழங்கும் திட்டம் தற்பொழுது இல்லாததால், புதுச்சத்திரம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஆம்புலன்ஸ் வழங்கும் கருத்துரு தற்பொழுது பரிசீலனையில் இல்லை.

7—

**தொழிலாளர் நல மையம்**

**வினா 9495—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி நகரில் ஒரு தொழிலாளர் நல மையம் தொடங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்சமயம் எடப்பாடி தொகுதியில், தொழிலாளர் நல மையம் தொடங்குவது குறித்த கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

8—

**ஊக்கத் தொகை**

**வினா 28080—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குழந்தைத் தொழிலாளர்களுக்கு வழங்கும் **ஊக்கத் தொகையை** உயர்த்த அரசிடம் ஏதேனும் திட்டம் உள்ளதா?



2003 மார்ச் 28]

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

மத்திய அரசால் செயல்படுத்தப்பட்டுவரும் தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டத்தின்கீழ் இயங்கும் சிறப்புப் பள்ளிகளில் கல்வி பயிலும் குழந்தைத் தொழிலாளர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.100/- ஊக்கத் தொகையாக மத்திய அரசால் வழங்கப்படுகிறது. இது ஒரு மத்திய அரசின் திட்டமாகும்.

9—

**மருத்துவமனை**

**வினா 28793—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், நாமக்கல் தொகுதி, நாமக்கல் நகரில் தொழிலாளர் அரசு காப்பீட்டுக் கழக மருத்துவமனை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) நாமக்கல் மாவட்டம், நாமக்கல் தொகுதி, நாமக்கல் நகரில் தொழிலாளர் அரசு காப்பீட்டுக் கழக மருத்துவமனை அமைக்கும் திட்டம் அரசிடம் இல்லை.

(ஆ) எழவில்லை.

(ஆ) 2000-2001 ஆம் ஆண்டில் எத்தனை விதவைகளுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் 2000-2001 ஆம் ஆண்டில் முதியோர் ஓய்வூதியம் வழங்கப்பட்ட நபர்களின் எண்ணிக்கை .. .. 28,720.

(ஆ) சேலம் மாவட்டத்தில் 2000-2001 ஆம் ஆண்டில் விதவை ஓய்வூதியம் வழங்கப்பட்ட நபர்களின் எண்ணிக்கை .. .. 30,591.

**14—**

**மகளிர் மன்றக் கட்டடம்**

**வினா 22568—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, காடாம்புலியூர் கிராமத்தில் மகளிர் மன்றக் கட்டடம் கட்டித்தர அரசு இடத்தை ஒதுக்கீடு செய்து தர முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மகளிர் மன்றக் கூட்டங்கள் அங்கன்வாடி மையக் கட்டடங்களிலோ அல்லது வேறு ஏதாவது ஒரு அரசுக் கட்டடத்திலோ நடத்திக்கொள்ளப்படுவதால் தனியாகக் கட்டடம் கட்டத் தேவை இல்லை.

**15—**

**போக்குவரத்து உரிமம்**

**வினா- 26626—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—





போக்குவரத்து உரிமம் பெறுவதிலுள்ள சிரமங்களை களைய உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

அனைத்து வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் மற்றும் பகுதி அலுவலகங்களில் உரிய கட்டணம் செலுத்தி விண்ணப்பிக்கும் அனைத்து நபர்களுக்கும் எழுத்துத் தேர்வு நடத்தி தாமதமின்றி பழகுனர் உரிமம் வழங்கப்படுகிறது. பழகுனர் உரிமம் பெற்ற 30 நாட்களுக்கு மேல் உரிய கட்டணத்தைச் செலுத்தி விண்ணப்பிக்கும்பொழுது மோட்டார் வாகன ஆய்வாளர்களால் எழுத்துத் தேர்வு மற்றும் ஓட்டுநர் தேர்வு ஆகியவை நடத்தப்பட்டு அதில் தேர்வு அடைந்த நபர்களுக்கு மட்டும் அன்றே ஓட்டுநர் உரிமம் வழங்கப்படுகிறது. இந்த நடைமுறையினால் சிக்கலோ, சிரமமோ இல்லை.

**16—**

**வருவாய்**

**வினா 24640—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டத்தில் 2002-2003 ஆம் ஆண்டில் வணிக வரித் துறையின் மூலம் அரசுக்குக் கிடைத்த வருவாய் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரித் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை வணிக வரி மாவட்டத்தில் 2002-2003 ஆம் ஆண்டில் செப்டம்பர் 2002 முடிய வணிக வரித் துறையின் மூலம் அரசுக்குக் கிடைத்த வருவாய் ரூ. 769.03 இலட்சம் ஆகும். அதன் விவரம் பின்வருமாறு:-

| | | |
|---|---|---|
| தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம் | : | ரூ. 418.08 இலட்சம் |
| மத்திய விற்பனை வரிச் சட்டம் | : | ரூ. 265.75 இலட்சம் |
| கேளிக்கை வரிச் சட்டம் | : | ரூ. 69.65 இலட்சம் |
| ஆடம்பர வரிச் சட்டம் | : | ரூ. 0.87 இலட்சம் |
| விளம்பரச் சட்டம் | : | ரூ. 0.02 இலட்சம் |
| நுழைவு வரி (வாகனம்) | : | ரூ. இல்லை |
| நுழைவு வரி (சரக்கு) | : | ரூ. 14.66 இலட்சம் |
| மொத்தம் | : | ரூ. 769.03 இலட்சம் |

**17—**

## விற்பனை வரி

**வினா 27620—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் விற்பனை வரி செலுத்துவோர் எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) தொழில் முனைவோர் வணிக வரித் துறையில் எவ்வளவு பேர் பதிந்துள்ளார்கள்?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் விற்பனை வரி செலுத்துவோர் எண்ணிக்கை 6,232.

(ஆ) வணிக வரித் துறையில் பதிந்துள்ள தொழில் முனைவோர் எண்ணிக்கை 19,851.





**18—**

## தேயிலை கொள்முதல்

**வினா 21246—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு அரசு பொது விநியோகத் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் லிமிடெட் மூலம் மாதம் ஒன்றுக்கு எத்தனை டன் தேயிலைத் தூள் அரசு கொள்முதல் செய்தது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

இண்டுகோ சர்வ் நிறுவனத்தால் தயாரிக்கப்படும் ஊட்டி தேயிலையை கூட்டுறவுகள் நடத்தும் நியாயவிலைக் கடைகள் மூலம் மாதமொன்றுக்கு 250 டன்னும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் நடத்தும் நியாயவிலைக் கடைகள் மூலம் 50 டன்னும் விநியோகம் செய்யப்பட வேண்டுமென்று அரசு ஆணையிட்டுள்ளது. அதனடிப்படையில் கூட்டுறவுக் கடைகள் மாதமொன்றுக்கு 230 முதல் 240 டன்கள் வரையிலும், நுகர்பொருள் வாணிபக் கழகம் 40 முதல் 45 டன்கள் வரையிலும், ஊட்டி தேயிலை விநியோகம் செய்து வருகிறது.

**19—**

## கடன் தொகை

**வினா 22726—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் நகர கூட்டுறவு வங்கியில் 1996 முதல் 2001 வரை எவ்வளவு நபர்களுக்கு அடமானக் கடன் வழங்கப்பட்டுள்ளது?

(ஆ) அதன் தொகை எவ்வளவு?

[2003 மார்ச் 28

(இ) அடமானக் கடன்தொகை வசூலிக்க முடியாத நபர்களின் எண்ணிக்கை எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் நகர கூட்டுறவு வங்கியில் 1996 முதல் 2001 வரை 8,739 நபர்களுக்கு அடமானக் கடன் தொகையாக ரூ.11,750.03 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

(இ) அனைத்து அடமானக் கடன்களும், அசையாச் சொத்தின் ஆதாரத்தின்பேரில் வழங்கப்பட்டுள்ளதால், அனைத்து அடமானக் கடன்களுமே வசூலிக்கக் கூடியவையாகும்.

**20—**

### கடன்

**வினா 22924—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், சூரமங்கலம் நகர கூட்டுறவு வங்கியில் 1996-2001-ல் ரூ.10 இலட்சத்திற்கும் மேல் எவ்வளவு நபர்களுக்கு கடன் வழங்கப்பட்டுள்ளது?

(ஆ) அதன் மொத்தத் தொகை எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) சூரமங்கலத்தில் உள்ள சுப்பிரமணிய நகர் கூட்டுறவு நகர வங்கியில் 1996-2001-ல் ரூ.10 இலட்சத்திற்கு மேல் எவருக்கும் கடன் ஏதும் வழங்கப்படவில்லை.

(ஆ) வினா எழவில்லை.



2003 மார்ச் 28]

**21—**

### தேயிலை விற்பனை

**வினா 31198—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்திலுள்ள நியாயவிலைக் கடைகளில் ஊட்டி தேயிலை எவ்வளவு கிராம் அளவுள்ள பாக்கெட்டுகள் விற்பனை செய்யப்படுகிறது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

தமிழகத்திலுள்ள நியாய விலைக் கடைகளில் 100 கிராம் எடையுள்ள பாக்கெட்டுகளில் ஊட்டி தேயிலை விற்பனை செய்யப்படுகிறது.

**22—**

### தொகுப்பு விடுகள் சரிபார்த்தல்

**வினா 6913—திரு. எம். ராம்குமார்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பாபநாசம் தொகுதி, ஆவூர் கிராமத்தில் 10 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட இலவச தொகுப்பு வீடுகளை சரி செய்து கொடுக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பழுதடைந்த தொகுப்பு வீடுகளில் பழுதினை நீக்கி சரிசெய்ய மத்திய, மாநில அரசுத் திட்டம் ஏதும் தற்போது நடைமுறையில் இல்லை. எனவே, பழுதடைந்த தொகுப்பு வீடுகளை சரி செய்ய தற்போது வாய்ப்பு இல்லை.

23—

**சோடியம் விளக்கு**

**வினா 10591—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், நாட்றாம்பள்ளி பேரூராட்சிக்குட்பட்ட பேருந்து நிலையத்தில் ஒரு பெரிய சோடியம் மின் விளக்கு போட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நடைமுறைப்படுத்தப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், நாட்றாம்பள்ளி பேரூராட்சிக்குட்பட்ட பேருந்து நிலையத்தில் தற்போது 44 சோடியம் ஆவி விளக்குகள் உள்ளன. இதுவே போதுமானதாகும். கூடுதல் சோடியம் ஆவி விளக்கு அமைப்பதால் பேரூராட்சிக்கு பராமரிப்புக் கட்டணம், மின் கட்டணம் கூடுதலாக செலவாகும். இச்செலவினத்தை ஏற்க பேரூராட்சியில் நிதி வசதி போதுமானதாக இல்லை.

24—

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி**

**வினா 10786—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், நாகர்கூடல் ஊராட்சி, கும்பளப்பாடி கிராமத்தில் நடப்பாண்டில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், நாகர்கூடல் ஊராட்சி, கும்பளப்பாடி குடியிருப்புக்கு 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய விசைப்பம்புத் திட்டம் நிறைவேற்றப்பட்டு 1999 ஆம் ஆண்டில் உள்ளாட்சி வசம் பராமரிப்பிற்காக ஒப்படைப்பு செய்யப்பட்டு தற்போது நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. எனவே, நடப்பாண்டில் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைப்பது பரிசீலனையில் இல்லை.



25—

**வாறுகால் அமைத்தல்**

**வினா 11812—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேரன்மகாதேவி தொகுதி, மேலச்செவல் பேரூராட்சி, சொக்கலிங்கபுரம் நாடார் தெரு (சர்ச் அருகில்) கடைத் தெரு ஆகிய இடங்களில் வாறுகால் அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

மேலச்செவல் பேரூராட்சி, சொக்கலிங்கபுரம் நாடார் தெரு (சர்ச் அருகில்) கடைத் தெரு ஆகிய இடங்களில் வாறுகால் அமைக்க பேரூராட்சியில் தற்போது போதுமான நிதி வசதி இல்லை என்பதால் பணி செய்ய இயலாது.

26—

**பொதுக் குழாய்**

**வினா 11930—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தேர்வு நிலை பேரூராட்சிக்குட்பட்ட மேல 3 ஆம் தெரு, மேல 4 ஆம் தெரு, திருவள்ளுவர் தெரு ஆகிய இடங்களில் பொதுக் குழாய் அமைக்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

[2003 மார்ச் 28

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சோன்மகாதேவி பேரூராட்சிப் பகுதியான மேல 3 ஆம் தெரு, மேல 4 ஆம் தெரு, திருவள்ளுவர் தெரு ஆகிய இடங்களில் 3 ஆழ்குழாய் கிணறுகள் உள்ளன. இவை போதுமானதாகும்.

**27—**

## முட்செடிகள் அகற்றுதல்

**வினா 15463—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், தனக்கர்குளம் ஊராட்சி, பத்திநாதபுரம் தென் பகுதி மயானம் வரையுள்ள முள் செடியை அகற்றிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், தனக்கர்குளம் ஊராட்சி, பத்திநாதபுரம் தென்பகுதி மயானம் வரையுள்ள முள்செடிகளை ஊராட்சி நிதி மூலம் அகற்றி சீர்செய்ய தனக்கர்குளம் ஊராட்சி மன்றத் தலைவருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**28—**

## மயான வசதி

**வினா 17419—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், எடக்குடி, வடபாதி ஊராட்சியில் உள்ள பகத்சிங் நகரில் வாழும் மலைஜாதி இன மக்களான (எஸ்டி) இருளர் மக்களுக்கு மயான வசதி செய்து கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?



2003 மார்ச் 28]

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி ஒன்றியம், எடக்குடி வடபாதி ஊராட்சியிலுள்ள பகத்சிங் நகரில் வாழும் மலைஜாதி இன மக்களான இருளர் மக்கள் எடக்குடி வடபாதி கிராமத்தில் புல எண 2/6-ல் 0.68.5 பரப்பில் அமைந்துள்ள மயானத்தைப் பயன்படுத்தி வருகிறார்கள்.

**29—**

## தொகுப்பு வீடுகள்

**வினா 17482—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், தாண்டவன்குளம் ஊராட்சியில் உள்ள காந்தி நகர் ஆதிதிராவிடர் தெருவிற்கு தொகுப்பு வீடுகள் கட்டித்தரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், கொள்ளிடம் ஊராட்சி ஒன்றியம், தாண்டவன்குளம் ஊராட்சிக்கு 2000-2001-ம் ஆண்டில் பெரிய வகுப்பு, சின்ன வகுப்பு கிராமத்தில் இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தில் 20 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. 2002-2003 ஆம் நிதியாண்டில் தாண்டவன்குளம் ஊராட்சியிலுள்ள காந்தி நகர் ஆதிதிராவிடர் தெருவிற்கு தொகுப்பு வீடுகள் கட்ட வாய்ப்பு இல்லை.

**30—**

## தொகுப்பு வீடுகள் கட்டும் திட்டம்

**வினா 17483—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 மார்ச் 28

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், தாண்டவன்குளம் ஊராட்சியில் உள்ள நவநீதக்கண்ணபுரம், எம்.ஜி.ஆர். நகருக்கு தொகுப்பு வீடுகள் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2000-2001 ஆம் நிதியாண்டில் தாண்டவன்குளம் ஊராட்சியில், பெரிய வகுப்பு, சின்ன வகுப்பு கிராமத்தில் இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின்கீழ் 20 தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. 2002-2003 ஆம் நிதியாண்டில் மேற்படி ஊராட்சியில் உள்ள நவநீதக்கண்ணபுரம், எம்.ஜி.ஆர். நகருக்கு தொகுப்பு வீடுகள் கட்டிக்கொடுக்க வாய்ப்பு இல்லை.

**31—**

## தொகுப்பு வீடுகள்

**வினா 17484—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், தாண்டவன்குளம் ஊராட்சியில் உள்ள ஆதிதிராவிடர் தெரு, அண்ணா நகருக்கு தொகுப்பு வீடுகள் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தாண்டவன்குளம் ஊராட்சியில் பெரிய வகுப்பு, சின்ன வகுப்பு கிராமத்தில் வசிக்கும் ஆதிதிராவிடர்களுக்கு 2000-2001 ஆம் நிதியாண்டில் 20 தொகுப்பு வீடுகளும் மேற்படி ஊராட்சி அண்ணா நகரில் வசிக்கும் ஆதிதிராவிடர்களுக்கு



2003 மார்ச் 28]

1990-91 ஆம் நிதியாண்டில் 20 தொகுப்பு வீடுகளும் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. நடப்பு நிதியாண்டில் மேற்படி ஊராட்சிக்கு தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க வாய்ப்பில்லை.

**32—**

## ஊராட்சி ஒன்றிய அலுவலகம்

**வினா 21197—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தேவூரில் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் கட்ட அரசிடம் கருத்துரு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன என்பதை அரசு தெரிவிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், சங்ககிரி ஊராட்சி ஒன்றிய அலுவலகம், அவ்வொன்றியத்தின் மையப் பகுதியில் செயல்பட்டு வருவதால், தேவூரில் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் கட்டும் அவசியம் எழவில்லை.

**33—**

## தொகுப்பு வீடுகள்

**வினா 21817—திரு. எம். ராம்குமார்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பாபநாசம் தொகுதி, கும்பகோணம் ஒன்றியம், கொத்தங்குடி ஊராட்சியில் ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கும்பகோணம் ஊராட்சி ஒன்றியம், கொத்தங்குடி ஊராட்சிக்கு 2002-2003 ஆம் நிதியாண்டில், ஆதிதிராவிடர்களுக்கு 10 தொகுப்பு வீடுகள் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**34—**

**சாலை அமைத்தல்**

**வினா 22895—செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உள்ளாட்சி அமைப்புகளுக்குட்பட்ட தெருக்களின் சாலை அமைப்பிற்கு சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து சிமெண்ட் சாலைக்கு பரிந்துரை செய்ய அரசு அனுமதிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து தெருக்களுக்கு கான்கிரீட் சாலை அமைக்கும் பணிக்கு வழிகாட்டி நெறிமுறைகளில் தடையேதும் விதிக்கப்படவில்லை. எனவே, இத்தகைய பணிகளை பரிந்துரை செய்ய அரசிடம் அனுமதி பெறவேண்டிய அவசியம் எழவில்லை.

**35—**

**விவசாயிகளுக்குப் பயிற்சி**

**வினா 7869—திரு. ப. பொன்னம்பலம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை விவசாயக் கல்லூரி, பசு, கோழி, பன்றி வளர்ப்பு குறித்து விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டதுபோல் மீண்டும் விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) மதுரையில் தமிழ்நாடு கால்நடைப் பல்கலைக்கழகத்தின் பயிற்சி மையத்தில் உழவர்கள், பொதுமக்கள் மற்றும் வேலையில்லா பட்டதாரிகளுக்கு தேவைக்கேற்ப பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

**36—**

**முகாம்கள்**

**வினா 13267—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி பேரூராட்சிப் பகுதியில் கால்நடை பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் முகாம்களை நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சேரன்மகாதேவி ஊராட்சி ஒன்றியத்தில் கால்நடைப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் 2000 ஆம் ஆண்டு 12 முகாம்களும், 2001 ஆம் ஆண்டு 9 முகாம்களும் நடத்தப்பட்டன. 2002-2003 ஆம் ஆண்டில் 13 முகாம்கள் நடத்தப்பட உள்ளன.

[2003 மார்ச் 28

37—

**கூட்டுறவுச் சங்கம்**

**வினா 15036—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பெண்ணாகரம் வட்டத்தில் ஆடு வளர்ப்போர்க்கு கூட்டுறவுச் சங்கம் தொடங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை. தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பெண்ணாகரம் வட்டத்தில் 8 ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. எனவே, அங்கு புதியதாக ஆடு வளர்ப்போர்க்குக் கூட்டுறவுச் சங்கம் அமைக்க அவசியமில்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

38—

**கால்நடைக் கடன்கள்**

**வினா 15058—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, ஏலகிரி ஊராட்சி, பழைய ஏலகிரியிலுள்ள ஏழை மக்களுக்கு கால்நடைகள் வளர்க்க கடன் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



2003 மார்ச் 28]

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, ஏலகிரி ஊராட்சி, பழைய ஏலகிரியிலுள்ள ஏழை மக்களுக்கு கால்நடைகள் வளர்க்க கடன் வழங்க தற்போது சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லை.

(ஆ) எழாது.

39—

**கால்நடை வளர்ப்பு**

**வினா 20239—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் கால்நடைகள் வளர்ப்பது குறைந்து வருவதை மேம்படுத்த அரசு ஏதாவது திட்டத்தினை நடைமுறைப்படுத்த உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

கால்நடைப் பெருக்கத்திற்காக தமிழ்நாடு கால்நடை மேம்பாடு முகமை ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

40—

**அரசு நிதி உதவி**

**வினா 20864—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 மார்ச் 28

(அ) பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி சிறு கிராமத்தில் நோயினால் 2,500 ஆடுகள் இறந்துவிட்டதால் அந்தக் குடும்பங்களுக்கு அரசு நிதி உதவி அளித்திட முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வே. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) கடலூர் கால்நடை பாராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குநரிடமிருந்து வாப்பெற்ற முடிவான நோய் கிளர்ச்சி அறிக்கையில் மொத்தம் 12 ஆடுகள் பாதிக்கப்பட்டு, அவற்றில் 9 ஆடுகள் மட்டுமே இறந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. முறையாக பாராமரிக்கத் தவறுவதால் ஏற்படும நோய் பாதிப்பும், இழப்பும் தவிர்க்கக் கூடியது. எனவே, அரசு நிதி உதவி அளிப்பது சாத்தியமில்லை.

(ஆ) எழாது.

**41—**

### கறவை மாட்டுக் கடன்

**வினா 24238—திரு. கே.கே. சிவசாமி:** மாண்புமிகு கால்நடை பாராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அருப்புக்கோட்டை தொகுதி, திருச்சுழி ஒன்றியம், பாளச்சி செங்குளம் பகுதியில் கறவை மாட்டுக் கடன் கேட்டு விண்ணப்பித்தவர்கள் எத்தனை பேர்?

(ஆ) அவர்களில் எத்தனை பேருக்கு கடன் வழங்கப்பட்டது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) தற்போதுள்ள நிதிநிலை நெருக்கடி காரணமாக 2002-2003-ம் நிதியாண்டில் கடன் உதவியுடன் கறவை மாடுகள் வழங்க சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லை.



2003 மார்ச் 28]

(ஆ) எழாது.

**42—**

### தொழிற்பேட்டை அமைத்தல்

**வினா 11626—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளி தொகுதியில் தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வடிவேல், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**43—**

### விற்பனை நிலையம்

**வினா 13324—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரத்தில் கிராம கைவினைப் பொருட்கள் விற்பனை நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் செயல்படுத்தப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வடிவேல், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) : கடந்த மூன்று ஆண்டுகளாக தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் நட்டத்தில் இயங்குவதாலும், தருமபுரியிலேயே விற்பனை நிலையத்தை தொடங்க வாய்ப்பு

இல்லாததாலும், சிறிய ஊரான பெண்ணாகரத்தில் விற்பனை நிலையத்தைத் தொடங்குவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

44--

## வண்டி வாகனங்களில் வசூல்

**வினா 5582—திரு. எம். சக்திவேல் முருகன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதி அருள்மிகு சொரிமுத்தையனார் கோயில் வரணதீர்த்தம் வரும் வண்டி வாகனங்களிடம் கொட்டந்தாளம் செக் போஸ்ட்டில் வனத் துறையினர் பணம் வசூல் செய்வது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை —**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) வசூலிக்கப்படும் நுழைவுக் கட்டண விவரம் வருமாறு:—

| | | |
|---|---|---|
| (1) லாரி, டிராக்டர், பஸ் ஒன்றுக்கு | .. | ரூ.20 |
| (2) மோட்டார்கள்/வேன் ஒன்றுக்கு | .. | ரூ.10 |
| (3) மோட்டார் சைக்கிள்/ஸ்கூட்டர் | .. | ரூ.5 |
| (4) பெரியவர் (நபர் ஒன்றுக்கு) | .. | ரூ.5 |
| (5) சிறியவர் (நபர் ஒன்றுக்கு) | .. | ரூ.2 |
| (6) கேமரா (ஒன்றுக்கு) | .. | ரூ.5 |
| (7) வீடியோ கேமரா (ஒன்றுக்கு) | .. | ரூ.50 |



ஒவ்வோர் ஆண்டும் ஆடி அமாவாசைத் திருநாள் அன்றும், அதற்கு முந்தைய ஐந்து நாட்கள் மற்றும் பிந்தைய ஐந்து நாட்கள் ஆக மொத்தம் 11 நாட்கள் நுழைவுக் கட்டணம் வசூலிக்கப்படுவது கிடையாது.

45—

## நலிந்த மக்களுக்கு இடவசதி

**வினா 16438—திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவை நகரில் நிர்மலா கல்லூரிக்கு எதிரிலுள்ள தனியாருக்குச் சொந்தமான கல்லுக்குழியில் குடியிருக்கும் நலிந்த பிரிவைச் சார்ந்த மக்களுக்கு மாற்று இடம் எங்கு ஒதுக்குவதாக அரசு முடிவு செய்துள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

இல்லை.

46—

## அடுக்குமாடி குடியிருப்பு

**வினா 20728—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் நகரப் பஞ்சாயத்துப் பகுதிகளில் நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் அடுக்குமாடிக் குடியிருப்பு கட்டித் தரப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

இல்லை.

**47—**

**பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம்**

**வினா 20865—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, அன்னதானம்பேட்டை கிராமத்தில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் அமைத்துத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம், அன்னதானம்பேட்டை கிராமத்தில் ஒரு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் அமைக்க சாத்தியக்கூறுகள் உள்ளது.

(ஆ) அங்கு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் அமைக்க உடன் நடவடிக்கை எடுக்குமாறு விழுப்புரம் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றிய நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணைய நிர்வாக இயக்குநரால் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்.

**48—**

**பயிற்சி முகாம்**

**வினா 22826—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) பால் வளத் துறையை விரிவுபடுத்த இளைஞர்களுக்குப் பயிற்சி முகாம் நடத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) தற்போது உத்தேசம் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**49—**

**மீன் பதப்படுத்தும் நிலையம்**

**வினா 20307—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் மீன் பதப்படுத்தும் நிலையம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், 2001-2002-ல் எவ்வளவு தொகை ஈட்டப்பட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் அரசால் அமைக்கப்பட்ட மீன் பதப்படுத்தும் நிலையம் ஏதும் இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

**50—**

**மீன் விற்பனை**

**வினா 20534—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்டராம்பள்ளி, செட்டேரி டேமில் மீன்வளத் துறையால் வளர்க்கப்படும் மீன்களை உள்ளூர் கிராமவாசிகளுக்கு விற்காமல் மொத்த விலைக்கு வெளியூர் வியாபாரிகளுக்கு விற்றுவிடுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இந்தத் துறை மீது நடவடிக்கை எடுக்கப்படுமா?

[2003 மார்ச் 28

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) நாட்டாம்பள்ளி செட்டேரியில் (கொட்டாறு அணை) மீன்வளத் துறையினால் வளர்க்கப்படும் மீன்கள் உள்ளூர் கிராம மக்களுக்கு விற்றதுபோக மீதம் உள்ளவைதான் மற்ற வியாபாரிகளுக்கு விற்கப்பட்டு வருவது தற்போது நடைமுறையில் உள்ளது.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**ஒன்பதாவது பட்டியல்**

**1—**

**மடை அமைத்தல்**

**வினா 15819—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், துலுக்கர்பட்டி கிராமத்தில் புதியதாக அமைக்கப்பட்டு வரும் குளத்தின் வடபுறத்தில் கூடுதலாக மடை அமைக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், துலுக்கர்பட்டியில் புதிய குளம் அமைக்கும் வேலை திட்ட மதிப்பீட்டின்படி அனைத்துப் பணிகளும் மார்ச், 2001 (3/2001)-ல் முடிவு பெற்றுள்ளது. ஒரு மடை வடக்கே கட்டி ஏற்கெனவே அமைந்துள்ள நேரடி பாசன ஊட்டுக் கால்வாயில் புதிய கால் மூலம் இணைக்கப்பட்டுள்ளது. கூடுதலாக



2003 மார்ச் 28]

ஒரு மடை வடபுறத்தில் கட்டுவதற்கு குளத்தின் நில மட்ட அளவின்படியும் தொழில்நுட்ப ஆய்வின்படியும் சாத்தியக்கூறு இல்லை.

**2—**

**தீர்த்தக் குளம் தூர்வாருதல்**

**வினா 25612—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு தொகுதிக்குட்பட்ட திருக்கழுக்குன்றம் சங்கு தீர்த்தக் குளம் தூர்வாரி செப்பனிடப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு தொகுதிக்குட்பட்ட திருக்கழுக்குன்றம், அருள்மிகு வேதகிரீஸ்வரர் திருக்கோயில் சங்கு தீர்த்தக் குளத்தில் 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை சங்கு பிறப்பது இன்றளவும் நடைபெற்று வருகிறது. பொதுவாக கடல் நீரில்தான் சங்கு பிறக்கும். திருக்குளத்தில் நன்னீரில் சங்கு பிறப்பது இத்திருக்கோயிலின் திருக்குளத்தில்தான். கடைசியாக 13-8-1999-ல் புனித சங்கு ஒன்று பிறந்தது. இத்தகைய சிறப்பு வாய்ந்த திருக்குளத்தை தூர் வாரினால் புனித சங்கினை உருவாக்கும் உயிரினங்கள் அழிந்துவிடும் என்பதால் இதுநாள் வரை குளம் தூர் வாரப்படவில்லை.

**3—**

**உயர்நிலைப் பள்ளிகள் ஆரம்பித்தல்**

**வினா 10139—திரு. கே.எஸ். பழனிசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 மார்ச் 28

(அ) ஈரோடு மாவட்டம், பெருந்துறை தொகுதியில் இந்த ஆண்டு எத்தனை உயர்நிலைப் பள்ளிகள் ஆரம்பிக்க அரசு உத்தேசித்துள்ளது?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பெருந்துறை தொகுதியில் 2001-2002 ஆம் ஆண்டில் எதுவும் உயர்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்படவில்லை. பெருந்துறை தொகுதியில் 2002-2003 ஆம் கல்வி ஆண்டில் சரவணபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

**4—**

**நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக்குதல்**

**வினா 10415—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதிக்குட்பட்ட செந்துறை ஒன்றியம், பெரியாக்குறிச்சியிலுள்ள நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பெரம்பலூர் மாவட்டம், பெரியாக்குறிச்சியிலுள்ள நடுநிலைப் பள்ளி 2002-2003 ஆம் கல்வியாண்டில் அரசாணை எண் 39, பள்ளிக் கல்வித் துறை, நாள் 23-8-2002-ன்படி, அரசு உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது.



2003 மார்ச் 28]

**5—**

**விடுதிகள்**

**வினா 21285—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் எத்தனை விளையாட்டுப் பள்ளிகள் விடுதிகளுடன் உள்ளன?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

தமிழகத்தில் விடுதி வசதிகளுடன் மூன்று விளையாட்டுப் பள்ளிகள் உள்ளன. அவை:

1. ஒய்.எம்.சி.ஏ. விளையாட்டுப் பள்ளி, சென்னை.

2. என்.எல்.சி. விளையாட்டுப் பள்ளி, நெய்வேலி.

3. சுவாமி சிவானந்தா மேல்நிலை விளையாட்டுப் பள்ளி, கோயம்புத்தூர்.

**6—**

**விளையாட்டரங்கம் அமைத்தல்**

**வினா 21287—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி நகரில் விளையாட்டரங்கம் அமைக்க அரசு முன்வருமா?

[2003 மார்ச் 28

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி நகரில் விளையாட்டரங்கம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

7—

**நவீன நீச்சல் குளம் அமைத்தல்**

**வினா 22346—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலத்திலுள்ள காந்தி உள் விளையாட்டரங்கத்தில் (இன்டோர் ஸ்டேடியம்) நவீன நீச்சல் குளம் அமைத்துக் கொடுக்க அரசு முயற்சி செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

சேலம் திறந்தவெளி விளையாட்டரங்க வளாகத்தில் நீச்சல் குளம் கட்டும் பணி முடியும் தருவாயில் உள்ளது. எனவே, சேலம் மாவட்டம் காந்தி உள் விளையாட்டரங்கத்தில் (இன்டோர் ஸ்டேடியம்) நவீன நீச்சல் குளம் அமைத்துக் கொடுக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

8—

**நீச்சல் குளங்கள் அமைத்தல்**

**வினா 26807—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2003 மார்ச் 28]

(அ) நீச்சல் போட்டி வீரர்கள் பயிற்சி பெற மாவட்டந்தோறும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் மூலம் நீச்சல் குளங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஒவ்வொரு மாவட்ட தலைநகரிலும் ஒரு திறந்தவெளி விளையாட்டரங்கம், ஒரு உள் விளையாட்டரங்கம் மற்றும் ஒரு நீச்சல் குளம் உருவாக்கப்பட வேண்டும் என்பது அரசின் கொள்கையாகும். தற்போது நீச்சல் குளம் இல்லாத மாவட்டங்களில் நிதிநிலையைக் கருத்தில்கொண்டு படிப்படியாக நீச்சல் குளங்கள் கட்ட அரசு பரிசீலிக்கும்.

9—

**ஊக்கத் தொகை**

**வினா 27217—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2001-2002ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் எத்தனை விளையாட்டு வீரர்களுக்கு ஊக்கத் தொகை வழங்கப்பட்டது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

2001-2002 ஆம் ஆண்டில் தேசிய அளவு விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்களைப் பெற்ற சேலம் மாவட்டத்தைச் சார்ந்த ஆறு விளையாட்டு வீரர்களுக்கு ஊக்கத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

**10—**

### இலவச வீட்டுமனைப் பட்டா

**வினா 29347—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், திட்டை ஊராட்சியில் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசிடம் திட்டம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. பாப்பாசுந்தரம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், திட்டை ஊராட்சியில் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம் எதுவும் தற்போது இல்லை.

**11—**

### விடுதிகள்

**வினா 30398—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2001-2002 ஆம் நிதியாண்டில் தமிழகத்தில் எத்தனை பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கான மாணவ/மாணவியர் விடுதிகள் கட்டப்பட்டன?

**விடை —**

**மாண்புமிகு திரு. அ. பாப்பாசுந்தரம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

2001-2002ஆம் நிதியாண்டில் 114 பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ/மாணவியருக்கான விடுதிகளுக்கு கட்டடம் கட்ட ஆணை வெளியிடப்பட்டது. 31-01-2003 நிலவரப்படி, இதில் 14 விடுதிகளுக்கான கட்டடப் பணிகள் முடிவடைந்துள்ளன. மீதி 100 விடுதிகளுக்கான கட்டடப் பணிகள் பல்வேறு நிலைகளில் உள்ளன.



**12—**

### பொம்மைகள் தயாரிப்பு

**வினா 13257—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, சேரன்மகாதேவி பேரூராட்சிப் பகுதியில் துணிப் பொம்மை தயாரிப்பு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) பொறியியல் மற்றும் பொறியியல் சாரா தொழிற் பிரிவுகளில் நடத்தப்பட்டு வரும் பயிற்சியில் பொம்மைகள் தயாரிப்பு இடம் பெறவில்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

**13—**

### வேலை வாய்ப்பளிக்கும் திட்டம்

**வினா 31002—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பார்வையற்றோர் பட்டப்படிப்பு முடித்த நிலையில், அவர்களுக்கு அரசு நிறுவனங்களில் வேலைவாய்ப்பளிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) பார்வையற்றோர், பட்டப்படிப்பு முடித்துள்ள நிலையில், அவர்களுக்கு அரசு நிறுவனங்களில் வேலைவாய்ப்பு அளிக்கும் திட்டம் எதுவும் அரசிடம் தற்போது இல்லை. அரசுத் குறிப்பான திட்டம் எதுவும் அரசிடம் தற்போது இல்லை. அரசுத் துறைகள் மற்றும் மாநில அரசை சார்ந்த பொதுத் துறை நிறுவனங்கள்

[2003 மார்ச் 28

ஆகியவற்றில் சாதாரணமான நபர்களுக்காக ஒதுக்கீடு செய்யப்படும் பணிக் காலியிடங்களுக்கு, உடல் ஊனமுற்றோர் வகையைச் சார்ந்த மனுதாரர்கள் 25 விழுக்காடு வீதத்தில் வேலைவாய்ப்பு அலுவலகங்களால் பரிந்துரை செய்யப்படுகின்றனர்.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

**14—**

## சாலைப் போக்குவரத்தில் மாற்றம்

**வினா 14913—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருகிவரும் சாலை விபத்துகளின் காரணமாக ஏற்படும் அதிக அளவிலான உயிரிழப்புகளைத் தடுக்கும் வகையில் சாலைப் போக்குவரத்தில் புதிய மாற்றங்கள் செய்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) பெருகிவரும் சாலை விபத்துகளின் காரணமாக ஏற்படும் அதிக அளவிலான உயிரிழப்புகளைத் தடுக்க அரசு, காவல் துறையினர் துணையுடன், சாலைப் போக்குவரத்தில் கீழ்க்கண்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது:-

(1) விபத்து அதிகமாக நடைபெறும் பகுதிகளை அடையாளம் கண்டு, அவ்விடங்களில் விபத்துகளைத் தவிர்க்கும்பொருட்டு, போக்குவரத்துக் குறியீடுகள் பொருத்துதல், சாலையை அகலப்படுத்துதல், நெடுஞ்சாலைகளில் ஆக்கிரமிப்புகளை அகற்றுதல், சாலையோரங்களில் கிணறுகளும், குளங்களும் அமைந்துள்ள இடங்களில் சுற்றுச் சுவர்களைக் கட்டுதல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(2) சாலைகள் தெளிவாகத் தெரியும் வகையில் மின் விளக்குகளை அமைத்தல், சாலை விதிகளை உணர்த்தும் வகையில் குறியீடுகள் வரைதல் ஆகிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(3) அதிவேகமாக வாகனங்களை ஓட்டுபவர் மீதும், குடித்துவிட்டு வாகனம் ஓட்டுபவர் மீதும், மேலும் அதிக சுமைகளை ஏற்றிச் செல்பவர் மீதும் கடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(ஆ) எழாது.



2003 மார்ச் 28]

**15—**

## புகையளவு கட்டுப்பாட்டுச் சான்றிதழ்

**வினா 26172—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் புகையளவு கட்டுப்பாட்டுச் சான்றிதழ் வழங்கும் முறை அமல்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்போது செயல்படுத்தப் படவுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சேலம் மாவட்டம் முழுவதும் புகையளவு சோதனை கட்டாயமாக்கப்படும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. இது குறித்து முடிவு எடுத்த பின்னர் அம்மாவட்டத்தில் இம்முறை அமல்படுத்தப்படும்.

**16—**

## கூட்டுறவு வங்கியில் நுகர்வோர் கடன்

**வினா 22922—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் சூரமங்கலம் நகர் கூட்டுறவு வங்கியில் நுகர்வோர் கடன் வழங்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், 1996 முதல் 2001 ஆம் ஆண்டு வரை எவ்வளவு நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், சூரமங்கலம் சுப்ரமணிய நகர் கூட்டுறவு வங்கியில் நுகர்வோர் கடன் வழங்கப்படுகிறது.

[2003 மார்ச் 28

(ஆ) 1-4-1996 முதல் 31-3-2001 முடிய இவ்வங்கியில் 754 நபர்களுக்கு நுகர்வோர் கடன் வழங்கப்பட்டுள்ளது.

17—

### கடன் வழங்குதல்

**வினா 22926—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம், செவ்வாய்ப்பேட்டை கூட்டுறவு வங்கியில் நுகர்வோர் கடன் வழங்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், 1996 முதல் 2001 வரை உள்ள ஆண்டுகளில் எவ்வளவு நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 1996 முதல் 2001 வரை உள்ள ஆண்டுகளில் நுகர்வோர் கடன் கீழ்க்கண்ட எண்ணிக்கையின்படி வழங்கப்பட்டுள்ளது:

| வருடம் | வழங்கப்பட்ட கடன்கள் எண்ணிக்கை |
|---|---|
| 1996-97 | 43 பேர் |
| 1997-98 | 43 பேர் |
| 1998-99 | 57 பேர் |
| 1999-2000 | 55 பேர் |
| 2000-2001 | 24 பேர் |
| மொத்தம் | 222 பேர் |



2003 மார்ச் 28]

18—

### கூட்டுறவுக் கடன்கள்

**வினா 26458—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தற்போது நிறுத்தப்பட்டுள்ள கூட்டுறவுக் கடன்களை மீண்டும் கூட்டுறவுச் சங்கங்கள் வழங்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கடன் வழங்குவது நிறுத்தப்படவில்லை. நிதிநிலையின் அடிப்படையில் அனைத்து கூட்டுறவுச் சங்கங்களும் தகுதியான உறுப்பினர்களுக்கு கடன் வழங்கி வருகின்றன.

(ஆ) கேள்வி எழவில்லை.

19—

### குடிநீர் வழங்குதல்

**வினா 406—திருமதி நளினி மனோகரன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போரூர் நகரில் குடிநீர் பற்றாக்குறையினால் மக்கள் அவதிப்படுவதைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், போளூர் பேரூராட்சியில் பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யும் வகையில் கூடுதல் குடிநீர்த் திட்டம் முடிவுபெற்று தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் 11-11-2000-ல் ஒப்படைக்கப்பட்டு, பேரூராட்சிச் செயல் அலுவலரால் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. மேலும் இத்திட்டம் தற்போது பொது மக்கள் உபயோகத்திற்காக பயன்பாட்டில் உள்ளது.

**20—**

**வீடுகள் விவரம்**

**வினா 1339—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2000-2001 ஆம் ஆண்டில் நாமக்கல் மாவட்டத்தில் இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட வீடுகள் எத்தனை?

(ஆ) ஊராட்சி ஒன்றியம் வாரியாக அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2000-2001ஆம் ஆண்டில் நாமக்கல் மாவட்டத்தில் இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின்கீழ் 478 வீடுகளும் 229 கச்சா வீடுகளும் கீழ்க்கண்ட ஊராட்சி ஒன்றியங்களில் கட்டப்பட்டுள்ளன:—



| | இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம் புதிய வீடுகள் கட்டுதல் | இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம் கச்சா வீடுகள் மேம்படுத்துதல் |
|---|---|---|
| எலச்சிபாளையம் | 28 | 28 |
| எருமப்பட்டி | 20 | 0 |
| கபிலர்மலை | 22 | 0 |
| கொல்லிமலை | 60 | 5 |
| மோகனூர் | 28 | 27 |
| மல்லசமுத்திரம் | 50 | 5 |
| நாமக்கல் | 36 | 18 |
| நாமகிரிப்பேட்டை | 35 | 0 |
| புதுச்சத்திரம் | 48 | 118 |
| பரமத்தி | 26 | 0 |
| பள்ளிப்பாளையம் | 0 | 0 |
| ராசிபுரம் | 35 | 0 |
| சேந்தமங்கலம் | 36 | 13 |
| திருச்செங்கோடு | 32 | 15 |
| வெண்ணந்தூர் | 22 | 0 |
| மொத்தம் | 478 | 229 |

**21—**

**திட்ட நிதிகளை ஒதுக்குதல்**

**வினா 7398—திருமதி ஆர். சசிகலா:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 மார்ச் 28

(அ) கிருஷ்ணராயபுரம் மிகவும் பின்தங்கிய தொகுதியை மேம்பாடு செய்திட அரசு அதிக திட்ட நிதிகளை ஒதுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணராயபுரம் தொகுதியில் அடங்கியுள்ள பேரூராட்சிகள் கிருஷ்ணராயபுரம், பழைய ஜெயங்கொண்ட சோழபுரம், உப்பிடமங்கலம் ஆகிய மூன்று பேரூராட்சிகள் அடங்கும். 2001-2002 ஆம் ஆண்டில் பதினோராவது நிதிக் குழு மானியம் மற்றும் தேசிய குடிசை மேம்பாடு திட்டத்தின்கீழ் கீழ்க்கண்டவாறு நிதி விடுவிக்கப்பட்டு திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

கிருஷ்ணராயபுரம் பேரூராட்சியில் பதினோராவது நிதிக் குழுத் திட்டத்தில் ரூபாய்3,16,000-ம், தேசிய குடிசை மேம்பாட்டுத் திட்டத்தில் ரூபாய் 2,20,000-ம் ஜெயங்கொண்ட சோழபுரம் பேரூராட்சியில் பதினோராவது நிதிக் குழுத் திட்டத்தில் ரூபாய் 2,34,000-ம், தேசிய குடிசை மேம்பாட்டுத் திட்டத்தில் ரூபாய் 2,20,000-ம், உப்பிடமங்கலம் பேரூராட்சியில் பதினோராவது நிதிக் குழுத் திட்டத்தில் ரூபாய் 3,06,000-ம், தேசிய குடிசை மேம்பாட்டுத் திட்டத்தில் ரூபாய் 2,20,000-ம் நிதி விடுவிக்கப்பட்டு திட்டப பணிகள் நடைபெற்று வருகின்றன.

**22—**

## தெரு விளக்குகள் அமைத்தல்

**வினா 7585—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதிக்குட்பட்ட சீர்காழி ஒன்றியத்தில் உள்ள வைத்தீஸ்வரன் கோயில் பேரூராட்சியில் உள்ள தாமரைக்குளத் தெருவில், காலனி வீடுகள், சாலை, தெருவிளக்குகள் அமைத்துத்தர அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2003 மார்ச் 28]

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதிக்குட்பட்ட சீர்காழி ஒன்றியத்தில் உள்ள வைத்தீஸ்வரன் கோயில் பேரூராட்சியில் உள்ள தாமரைக்குளம் பகுதியில் தார்ச்சாலை அமைக்கும் பணியினை ரூபாய் 52,500 மதிப்பீட்டில் 19-3-2002-ல் ஒப்பந்தப்புள்ளிகள் வரவழைக்கப்பட்டு பணி முடிக்கப்பட்டு விட்டது. இத்தெருவில் உள்ள 7 வீடுகளுக்கு ஒரு விளக்கு வசதியும் செய்யப்பட்டுள்ளது. மேலும் தொகுப்பு வீடு கட்டும் திட்டம் பேரூராட்சிகளுக்கு விரிவுபடுத்தப்படவில்லை.

**23—**

## அடிப்படை வசதிகள்

**வினா 10159—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், திருமங்கலம் நகராட்சி பேருந்து நிலையத்திலுள்ள கழிவறைகள், பயணிகளின் வருகைக்கு ஏற்ப போதுமானதாக இல்லை என்பதும், முறையாகவும் சுகாதாரத்துடன் பராமரிப்பு இல்லை என்பதும் அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அரசின் நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருமங்கலம் நகராட்சி பேருந்து நிலையத்தில் இயங்கி வரும் கட்டணக் கழிப்பறையினை பராமரிப்பு செய்து அபிவிருத்தி செய்யும் பணிக்கு ரூ.55,000 (ஐம்பத்தி ஐந்தாயிரம் மட்டும்) செலவில் மராமத்து வேலைகள் செய்ய அனுமதிக்கப்பட்டு வேலைகள் செய்யப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன. இந்தக் கட்டணக் கழிப்பறை பெண்களுக்கும், ஆண்களுக்கும் தனித்தனியாக தலா 10 இருக்கைகள் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. இது தவிர பேருந்து நிலைய வளாகத்தில் பயணிகள் பயன்படுத்தும் விதத்தில் இலவச சிறுநீர் அறை தனித்தனியே ஆண்கள் மற்றும் பெண்களுக்கும் தற்சமயம் பயன்பாட்டில் இருந்து வருகிறது.

24—

**சோடியம் ஆவி விளக்குகள் அமைத்தல்**

**வினா 10210—திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டம், ஆவடி நகராட்சி, 11வது வார்டு செந்தில் நகரில் சோடியம் ஆவி விளக்குகள் அமைத்துத்தரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்போது செயல்படத் தொடங்கும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆவடி நகராட்சி, 11வது பகுதி, செந்தில் நகர் குடியிருப்பு பகுதியில் ஏற்கெனவே 40 வாட்ஸ் திறன்கொண்ட 182 எண்ணிக்கை தெருவிளக்குகள் (குழல் விளக்குகள்) அமைக்கப்பட்டு, நல்ல முறையில் இயங்கி வருகின்றன. எனவே மேற்கண்ட செந்தில் நகர் பகுதியில் கூடுதலாக சோடியம் ஆவி விளக்குகள் அமைக்கும் திட்டம் எதுவும் இல்லை.

25—

**சோடியம் மின் விளக்குகள் அமைத்தல்**

**வினா 11960—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தேர்வுநிலைப் பேரூராட்சிக்குட்பட்ட ஆவுடையம்மன் கோவில் செல்லும் வழியில் மூன்று சோடியம் மின் விளக்குகளும், அண்ணாநகரில் இரண்டு சோடியம் மின்விளக்குகளும் அமைக்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தேர்வுநிலைப் பேரூராட்சிக்குட்பட்ட ஆவுடையம்மன் கோயில் செல்லும் வழியில் மூன்று சோடியம் மின் விளக்குகளும், அண்ணாநகரில் இரண்டு சோடியம் மின் விளக்குகளும் அமைக்கும்பட்சத்தில் பேரூராட்சிக்கு கூடுதல் பராமரிப்புக் கட்டணம் மற்றும் கூடுதல் மின் கட்டணம் செலவாகும். இச்செலவினத்தை ஏற்க பேரூராட்சியில் போதிய நிதி வசதி இல்லை. எனவே, கூடுதல் சோடியம் ஆவி விளக்கு அமைக்க அவசியம் எழவில்லை.

26—

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி**

**வினா 12046—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, ஏ.பி. நாடானூர் பஞ்சாயத்து ஒன்றியம், ஏ.பி. நாடானூர் கிராமத்திற்கு (மக்கள்தொகை அதிகரித்துள்ளதால்) மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித்தர அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், கடையம் ஊராட்சி ஒன்றியம், ஏ.பி. நாடானூர் ஊராட்சி, ஏ.பி. நாடானூர் குடியிருப்பிற்கு குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்பட்டு தற்போது மக்கள் பயனுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

**27—**

**மின் விளக்கு வசதி**

**வினா 12625—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி நகராம், போலீஸ் லைன் 4, 5, 6 வது தெருவிற்கு போதிய மின் விளக்கு வசதி ஏற்படுத்தித் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி நகராம் போலீஸ் லைன் 4, 5, 6 ஆகிய தெருக்களில் போதிய அளவு மின் விளக்கு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. அதன் விவரம் கீழ்வருமாறு:-

4-வது தெருவில் 4 அடி குழல் விளக்குகள் 10 எண்ணிக்கையும், 250 வாட்ஸ் திறன்கொண்ட சோடியம் ஆவி விளக்குகள் 3, 5-வது தெருவில் 4 அடி குழல் விளக்குகள் 6 எண்ணிக்கையும், 250 வாட்ஸ் திறன்கொண்ட சோடியம் ஆவி விளக்குகள் 2, 6-வது தெருவில் 4 அடி குழல் விளக்கு 9 எண்ணிக்கையும் அமைக்கப்பட்டுள்ளன.

**28—**

**பணி நியமனம்**

**வினா 20274—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகராட்சியில் சுகாதாரப் பணியாளர்கள் காலி இடங்கள் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், பணியாளர்கள் பணி நியமனம் செய்ய ஆவன செய்யப்படுமா?





**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாநகராட்சியில் சுகாதாரப் பணியாளர்கள் பணியிடங்கள் காலியாக உள்ளன.

(ஆ) அரசாணை எண். 212, பணியாளர் (ம) நிர்வாகச் சீர்த்திருத்தத் துறை, நாள் 29-11-2001-ல் ஆசிரியர்கள், மருத்துவர்கள் மற்றும் காவல் பணியாளர்களைத் தவிர்த்து ஏனைய காலிப் பணியிடங்களை நிரப்புவதற்குத் தடையாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதால், சேலம் மாநகராட்சியில் காலியாக உள்ள சுகாதாரப் பணியாளர்கள் பணியிடங்கள் நிரப்பப்படவில்லை.

**29—**

**குடிதண்ணீர் வசதி**

**வினா 20570—திரு. எம். சுப்பையா பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூர் நகராட்சியில் 31-வது வார்டில் குடிதண்ணீர் வசதியும், கழிவுநீர் கால்வாய்கள் கட்டவும் அரசிடம் திட்டம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூர் நகராட்சி, 31-வது வார்டு பகுதியில் உள்ள அனைத்து தெருக்களிலும் குடிநீர் பகிர்மான குழாய்கள் மற்றும் கழிவுநீர் கால்வாய்கள் (வாறுகால்) அமைக்கப்பட்டுள்ளன.

[2003 மார்ச் 28

30—

**அடிபம்பு அமைத்தல்**

**வினா 20573—திரு. எம். கப்பையா பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூர் நகரத்திலுள்ள 3, 4, 5, 6, 7, 8, 9 தெருக்களில் அடிபம்பு அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூர் நகரத்தில் ரகுமானியாபுரம் 3 மற்றும் 5-ம் எண் தெருக்களில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சித் திட்டத்தின்கீழ் அடிபம்புகள் அமைக்கும் பணிக்கு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. நிதி வசதிக்கேற்ப ஏனைய தெருக்களிலும், அடிபம்புகள் அமைக்க நகராட்சி ஆணையர் தக்க நடவடிக்கை எடுத்து வருகிறார்.

31—

**கழிப்பிட அறை அமைத்தல்**

**வினா 20846—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி நகராம் 5-வது, 28-வது பகுதியில் கழிப்பிட அறை அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 5-வது மற்றும் 28-வது வார்டில் ஏற்கெனவே கழிவறை ஒன்று உள்ளது.



2003 மார்ச் 28]

32—

**குடிநீர் விநியோக ஊழியர்கள்**

**வினா 22658—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகராட்சியில் சேர்க்கப்பட்ட ஊராட்சிகளில் பணிபுரிந்த குடிநீர் விநியோக ஊழியர்களை, மாநகராட்சி, பணியில் அமர்த்தியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அவர்களது மாதச் சம்பளம் எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாநகராட்சியுடன் சேர்க்கப்பட்ட 21 பேரூராட்சி மற்றும் ஊராட்சிகளின் பகுதிநேர பணியாளர்களாகப் பணிபுரிந்து வந்த குடிநீர் விநியோக ஊழியர்கள் (Tank operators) 1-6-1994 முதல் மாநகராட்சிப் பணிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டார்கள்.

(ஆ) மேற்படி ஊழியர்களுக்கு மாத தொகுப்பூதியமாக ரூ.70 வழங்கப்பட்டு வருகிறது.

33—

**ஆழ்துளைக் கிணறு**

**வினா 29563—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, எடப்பாடி நகராட்சி பகுதியில் வறட்சியின் காரணமாக குடிநீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ள பகுதிகளுக்கு ஆழ்துளைக் கிணறு அமைத்து குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அது பற்றிய விவரத்தை அரசு தெரிவிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி நகராட்சி பகுதிகளுக்கு எடப்பாடி கூட்டுக் குடிநீர்த் திட்டம் மூலம் காவிரி ஆற்றுநீர் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 65 லிட்டர் வீதம் தற்பொழுது வழங்கப்பட்டு வருகிறது. எனினும், தேவைப்படின் குடிநீர்த் தட்டுப்பாடு உள்ள பகுதிகளை ஆய்வு செய்து வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் நகராட்சியே ஆழ்துளைக் கிணறுகளை அமைத்துக் கொள்ளலாம்.

**34—**

## ஆடு வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம்

**வினா 26590—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு தொகுதியிலுள்ள ஆடு வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் எத்தனை?

(ஆ) புதியதாக ஆடு வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) செங்கல்பட்டு தொகுதியில் 13 ஆடு வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன.

(ஆ) இத்தொகுதியிலுள்ள 13 ஆடு வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆடு வளர்ப்போரின் தேவைகளை நிறைவு செய்வதாக உள்ளது. புதியதாக ஆடு வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் பதிவு செய்ய வேண்டி இப்பகுதியிலிருந்து விண்ணப்பங்கள் ஏதும் நிலுவையில் இல்லை. எனவே புதியதாக ஆடு வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்க வேண்டிய அவசியம் தற்சமயம் எழவில்லை.





**35—**

## வாத்துகள் வளர்க்க கடன்

**வினா 27188—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் மாவட்டத்தில் வாத்துகள் வளர்க்க கடன் வழங்க எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

காஞ்சிபுரம் மாவட்டத்தில் வாத்துகள் வளர்ப்பதற்கு கடன் வழங்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**36—**

## தொழிற்பயிற்சி நிலையம் அமைத்தல்

**வினா 13984—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஊராட்சி ஒன்றியத்தில் மூங்கில் கைத்திறன் பொருள் தயாரிப்பு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வடிவேல், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடும் நிதி நெருக்கடி காரணமாக கதர் வாரியத்தால் சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஊராட்சி ஒன்றியத்தில் மூங்கில் கைத்திறன் பொருள் தயாரிப்பு தொழிற்பயிற்சி

நிலையம் அமைக்க இயலாது. இருந்தாலும் ஆர்வமுள்ள மூங்கில் தொழில் கைவினைஞர்களுக்கு விளிம்புத் தொகை திட்டத்தின்கீழ் வங்கியின் மூலம் கடன்பெறும் திட்டம் கதர் வாரியத்தால் செயல்படுத்தப்படுகிறது.

37—

**வருவாய்**

**வினா 24220—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டத்தில் கதர் துறையின் மூலம் அரசுக்கு கிடைத்த வருவாய் எவ்வளவு?

(ஆ) விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வடிவேல், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கதர் கிராமத் தொழில் வாரிய நிர்வாக ஆளுகைக்குட்பட்ட, புதுக்கோட்டை மாவட்ட உதவி இயக்குநர் கட்டுப்பாட்டில் இயங்கும் கதாங்காடிகளில், சென்ற 2001-2002 ஆம் நிதியாண்டில் கதர் மற்றும் கிராமப் பொருட்கள் விற்பனை மூலம், விற்பனை வருவாயாக ரூ.73.21 இலட்சங்கள் ஈட்டப்பட்டுள்ளது.

38—

**வட்டியில்லா கடன்**

**வினா 27365—திரு. கே.எஸ். பழனிசாமி:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பெருந்துறை தொகுதியிலுள்ள பனைமரம் ஏறும் தொழிலாளர்களுக்கு அரசு வழங்கிவரும் சலுகை என்ன?



(ஆ) அவர்களுக்கு வட்டியில்லா கடன் அரசு வழங்கி உதவுமா?

(இ) அதுபற்றிய விவரத்தை அரசு அளிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வடிவேல், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) ஈரோடு மாவட்டம், பெருந்துறை தொகுதியில் உள்ள பனைத் தொழிலாளர்களுக்கு பனைமரம், ஈச்சமரம் மற்றும் தென்னை மரம் ஆகியவற்றிலிருந்து பதநீர் இறக்குவதற்கும், வெல்லம் காய்ச்சுவதற்கும் ஒவ்வோர் ஆண்டும் உரிமம் வழங்கப்படுகிறது. பனைத் தொழிலாளி தொழில் செய்யும்பொழுது விபத்துக்குள்ளாகி உடல் ஊனம் ஏற்பட்டால் ஊனத்திற்கு ஏற்ப ரூ.5,000/-த்திலிருந்து ரூ.10,000/- வரை நிவாரணத் தொகையாகவும், விபத்துக்குள்ளாகி மரணம் அடைந்தால் அவாது குடும்பத்திற்கு ரூ.15,000/- ஒருங்கிணைந்த நிவாரண நிதியிலிருந்து நிவாரண நிதித் தொகை, சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் வழங்கப்பட்டு வருகிறது. பனைத் தொழிலாளர் நல வாரியத்தில் உறுப்பினராகும் அங்கத்தினர்களுக்கு கல்வி, திருமணம், மகப்பேறு, மரணம் மற்றும் ஈமச் சடங்கு போன்ற பல்வேறு காரியங்களுக்கு நிதிச் சலுகைகள் கிடைக்கின்றன.

(ஆ) மற்றும் (இ) பனைத் தொழிலாளர்களுக்கு வட்டியில்லா கடன் வழங்குவதற்கு வாய்ப்பு இல்லை. எனினும், பனைத் தொழிலுக்கு தேவையான மான்யத்துடன் கூடிய கடன் தொகை பெறும் திட்டம், விளிம்புத் தொகைத் திட்டத்தின்கீழ் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மற்றும் கூட்டுறவு வங்கிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

39—

**நர்சரி திட்டம்**

**வினா 16291—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதியில் வனத் துறை மூலம் நர்சரி திட்டம் அலுவலக வசதியுடன் செயல்படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா?

[2003 மார்ச் 28

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

**40—**

**சாலை அமைத்தல்**

**வினா 19933—திரு. ச. ராமராஜ்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

போடி தொகுதி, சாக்குலூத்துமெட்டு மற்றும் குரங்கனி முதல் டாப் ஸ்டேஷன் வரை புதிய சாலை அமைக்க வன இலாகா அதிகாரிகளால் மத்திய அரசிடம் அனுமதி கோரப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

தேனி மாவட்டம், போடி சட்டமன்றத் தொகுதியில் சாக்குலூத்துமெட்டு சாலையை வனப்பகுதியில் அமைக்க அனுமதி கேட்டு வனப் பாதுகாப்பு சட்டம் 1980-ன்படி பிரேரணை ஏதும் இதுவரை பெறப்படவில்லை. பிரேரணை பெறப்பட்டதும், உரிய மேல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

குரங்கனி முதல் டாப் ஸ்டேஷன் வரை சாலை அமைக்க அனுமதி வழங்கினால், இப்பகுதியிலுள்ள வனங்கள் அழிந்து போகக்கூடிய வாய்ப்புகள் அதிகமுள்ளதாலும், சுற்றுச்சூழல் பாதிப்படையும் என்பதாலும், போடி நகராட்சிப் பகுதிக்கான குடிநீர் ஆதாரங்கள் முற்றிலும் பாதிப்பு அடையும் என்பதாலும், மேற்படி சாலை அமைக்க வனத் துறையின் அனுமதி வழங்க இயலாது.



2003 மார்ச் 28]

**41—**

**தண்ணீர் வீணாவதைத் தடுத்தல்**

**வினா 20548—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏலகிரி மலையில் வனத்துறை ஜப்பான் அரசின் நிதியின்கீழ் ஏலகிரி கிராமப் பகுதியில் டேப் (Tap) திட்டத்தை சரியாக செயல்படுத்தாமல் அரசு பணம் (நிதி) வீணாகிக் கொண்டிருப்பதை அரசு கண்டறியுமா?

(ஆ) மீண்டும் அதை சீர் செய்ய அரசிடம் திட்டம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) திருப்பத்தூர் வனக்கோட்டத்தில் ஏலகிரி கிராமப் பகுதியில் 1998ஆம் ஆண்டில் குன்னத்தூர் திட்டக் கிராமமும், 1999 ஆம் ஆண்டில் ஊசி நாட்டான் வட்டம் என்ற கிராமமும் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் தேர்வு செய்யப்பட்டு முழுமையாக பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

1. (அ) 1998 ஆம் ஆண்டில் (குன்னத்தூர் திட்டக் கிராமம்) ஜோலார்பேட்டை காப்புக்காடு மற்றும் பொன்னேரி வன நிலத்திலும் 350 ஏக்கர் பரப்பில் 1,06,000 செடிகள் நடப்பட்டுள்ளன.

(ஆ) கிராம வனக்குழு மற்றும் செயற்குழு ஆகியவற்றால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் 1998 ஆம் ஆண்டில் 6 நபர்களுக்கு ரூ.5,000 வீதம் மொத்தம் ரூ.30,000 தனி நபர் வருமானத்தைப் பெருக்க கடன் உதவிகள் வழங்கப்பட்டன. மேலும் சமுதாயப் பணிகள் திட்டத்தின்கீழ் குடிநீர்த் தட்டுப்பாட்டினை போக்கிட 2 இடங்களில் ஆழ்துளைக் கிணறு அமைத்தல். கிராம வளர்ச்சியை முன்னிட்டு பள்ளிக்கூட சுற்றுச்சுவர் அமைத்தல், புகையில்லா அடுப்பு 500 நலிவுற்ற நபர்களுக்கு இலவசமாக வழங்குதல், கிராம மக்களுக்கு இலவச மாஞ்செடி வழங்குதல் ஆகிய பணிகள்

மேற்கொள்ளப்பட்டன. இவைதவிர 9 தடுப்பணைகள் மற்றும் ஒரு கசிவு நீர்குட்டை கட்டப்பட்டு நீர் ஆதாரம் பெருக்கப்பட்டுள்ளது.

(இ) முதலாமாண்டு பாராமரிப்பின்போது (1999-2000) நலிவுற்ற கிராம மக்கள் 6 நபர்களுக்கு ரூ.16,500 மாற்றுத் தொழிலுக்காக கடன் உதவியும், கிராம சமுதாய மேம்பாட்டு இனத்தின் கீழ் இரு இடங்களில் ஆழ்துளைக் கிணறுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

(ஈ) இரண்டாம் ஆண்டு பாராமரிப்பின்போது (2000-2001) 13 நபர்களுக்கு ரூ.65,000 கடன் உதவியும், ஒரு ஆழ்துளைக் கிணறும் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

(2) (அ) 1999 ஆம் ஆண்டில் (ஊசிநாட்டான் வட்டம் திட்டக் கிராமம்) ஜோலார்பேட்டை காப்புக்காடு மற்றும் பொன்னேரி வன நிலத்தில் மொத்தம் 150 ஹெக்டேர் பரப்பில் 1,32,500 செடிகள் நடப்பட்டுள்ளன.

(ஆ) வனக்குழு மற்றும் செயற்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் 1999-2000 ஆம் ஆண்டில் 23 நபர்களுக்கு ரூ.33,800 தனி நபர் வருமானத்தை பெருக்க கடன் உதவிகள் வழங்கப்பட்டன. மேலும் 100 நபர்களுக்கு புகையில்லா அடுப்பு வழங்குதல், இலவசமாக பழச்செடிகள் வழங்குதல், பள்ளி சுற்றுச்சுவர் கட்டுதல், மேல்நிலைத்தொட்டி அமைத்தல், வனக்குழுக் கட்டடம் கட்டுதல் மற்றும் இலவசமாக விவசாயக் கருவிகள் வழங்குதல் போன்ற சமுதாய மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இவை தவிர இரண்டு தடுப்பணைகள் மற்றும் ஒரு கசிவு நீர்க்குட்டை கட்டப்பட்டு நீர் ஆதாரம் பெருக்கப்பட்டுள்ளது.

(இ) முதலாமாண்டு பாராமரிப்பின்போது (2000-2001) 20 நபர்களுக்கு ரூ.1,00,000 கடன் உதவியும், இரண்டு ஆழ்துளைக் கிணறுகளும் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

(ஈ) இரண்டாமாண்டு பாராமரிப்பின்போது (2001-2002) 15 நபர்களுக்கு ரூ.70,000 கடனுதவியும், ஒரு ஆழ்துளைக் கிணறும் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட பணிகள் இரண்டு திட்டக் கிராமங்களிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆகையால் அரசு பணம் (நிதி) ஏதும் வீணாகவில்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.



42—

**மரக்கன்றுகள் நடும் திட்டம்**

**வினா 21002—திரு. இரா. இராம் பிரபு:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசுக்குச் சொந்தமான தரிசு நிலங்களில் வனத் துறை மூலம் மரக்கன்றுகள் நடும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், பரமக்குடி தொகுதிக்கு எவ்வளவு நிதி ஒதுக்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசுக்குச் சொந்தமான தரிசு நிலங்களில் 2003-2004 ஆம் ஆண்டில் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் இராமநாதபுரம் சமூகக் காடுகள் கோட்டத்தில் 160 ஹெக்டேர் பரப்பில் பரமக்குடி தொகுதியில் அரசு புறம்போக்கு நிலங்களில் ரூ.7.65 இலட்சம் செலவில் மரக்கன்றுகள் நட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

43—

**ஜப்பான் நிதியுதவித் திட்டம்**

**வினா 21190—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஜப்பான் நிதியுதவி திட்டத்தின்கீழ் சேலம் மண்டல வனப்பகுதியில் இந்த ஆண்டு எத்தனை கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன? எந்தெந்த கிராமம் சேர்க்கப்பட்டுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர்:**

சேலம் மண்டல வனப் பகுதியில், *2002-2003* ஆம் ஆண்டில் தமிழ்நாடு, காடு வளர்ப்புத் திட்டம் செயல்படுத்தப்படுவதற்காக கீழ்க்கண்ட *10* திட்டக் கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன:

*(1)* ஆனந்த நகர்

*(2)* விஜயபுரம்

*(3)* கதிரிபட்டி

*(4)* சுரைக்காடு

*(5)* சிங்கிபுரம் பழைய காலனி

*(6)* கல்வேரிபட்டி

*(7)* காமராஜ் நகர்

*(8)* காங்காடு

*(9)* அம்மனேரி

*(10)* கோரிமேடு

**44—**

## திட்டங்கள்

**வினா 24216—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*2002-2003* ஆம் ஆண்டில் புதுக்கோட்டை மாவட்டத்தில் வனத் துறை மூலம் செய்யப்பட இருக்கின்ற திட்டங்களின் விவரம் என்ன?



**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள வனப் பகுதிகளில் தமிழ்நாடு வனத் தோட்டக் கழகம், திருச்சி வனக் கோட்டம், வன ஆராய்ச்சி மண்டலம் மற்றும் சமூக வனக்கோட்டம், புதுக்கோட்டை மூலமாக திட்டப்பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

*2.* புதுக்கோட்டை சமூக வனக்கோட்ட பணிகளை பொறுத்தமட்டில் *2002-2003* ஆம் ஆண்டு கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன:-

(i) *2002-2003* ஆம் ஆண்டு தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் சமுதாய நிலங்களை பசுமையாக்கும் அம்சத்தின் அடிப்படையில் அறந்தாங்கி சரகத்தில் *75* ஹெக்டேர் நிலப்பரப்பில் முந்திரி, நாவல், புங்கன், நெல்லி மற்றும் பனை போன்ற பல்வேறு வகையான *62475* கன்றுகள் நடப்பட்டுள்ளன. இதற்காக ரூ. *7.61* இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ii) தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் *2001-2003* ஆம் ஆண்டு புதுக்கோட்டை, அறந்தாங்கி, கீரனூர், ஆலங்குடி ஆகிய சரகங்களில் உற்பத்தி செய்யப்பட்ட தோட்டங்களின் முதலாமாண்டு பராமரிப்புப் பணிகளுக்கு ரூ.*18.38* இலட்சமும், *2000-2001* ஆம் ஆண்டில், திருமயம், கீரனூர், புதுக்கோட்டை, அறந்தாங்கி மற்றும் ஆலங்குடி ஆகிய சரகங்களில் உற்பத்தி செய்யப்பட்ட தோட்டங்களின் இரண்டாமாண்டு பராமரிப்புப் பணிக்கு ரூ.*11.47* இலட்சமும், *1999-2000* ஆம் ஆண்டில் புதுக்கோட்டை, திருமயம், அறந்தாங்கி ஆகிய சரகங்களில் உற்பத்தி செய்யப்பட்ட தோட்டங்களின் மூன்றாம் ஆண்டு பராமரிப்புப் பணிக்கு ரூ.*4.65* இலட்சமும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

மேலும், தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தில் வெளி மண்டலத்தின் கீழ் இவ்வாண்டு கீழ்க்கண்ட கிராமங்கள் அதற்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ளவாறு பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன:

[2003 மார்ச் 28

| வ. எண் | கிராமத்தின் பெயர் | சரகத்தின் பெயர் | சட்டமன்றத் தொகுதி | மாற்று வேலை வாய்ப்பிற்காக வழங்கப்பட உள்ள தொகை மற்றும் பயனாளிகளின் எண்ணிக்கை | | கிராமத்தில் சமுதாய பணிகள் மேற்கொள்ள ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை |
|---|---|---|---|---|---|---|
| | | | | தொகை ரூ. | எண்ணிக்கை | ரூ. |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1 2000 | புலவனாரகாடு | திருமயம் | திருமயம் | 70000 | 14 | 30000 |
| 2 2000 | சித்தாம்பூர் | கீரனூர் | குளத்தூர் | 70000 | 14 | 30000 |
| 3. 2000 | கருகாம்பட்டி | புதுக்கோட்டை | திருமயம் | 70000 | 14 | 30000 |
| 4. 20000 | செந்தாம்பட்டி | புதுக்கோட்டை | குளத்தூர் | 140000 | 28 | 60000 |

**மாற்று வேலைவாய்ப்பு:**

வனத்தை நம்பி வாழும் மக்களை கண்டறிந்து கிராம வனக் குழு மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களுக்கு மாற்று வேலைவாய்ப்பினை ஏற்படுத்துவதற்காக கறவை மாடு, விசைத் தெளிப்பான், தையல் இயந்திரம் ஆகியவை வாங்கவும், பெட்டிக் கடை, தேநீர் விடுதி, மளிகைக் கடை ஆகியவை வைக்கவும், தலா ரூ.5,000 கடன் வழங்கப்படவுள்ளது.

**சமுதாயப் பணிகள்:**

மேற்கண்ட கிராமங்களுக்கு சமுதாயப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகைகளுக்கு ஏற்ப சமுதாயக்கூடம் அமைத்தல், கதிர் அடிக்க களம் அமைத்தல், பயன்தரக்கூடிய பழக்கன்றுகள் வழங்குதல், வண்ணத் தொலைக்காட்சி வழங்குதல், பஸ் நிறுத்தத்தில் பயணிகள் நிழற்குடை அமைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது.

தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தில், புதுக்கோட்டை மாவட்டத்தில் பொன்னமராவதி ஒன்றியத்தில் 2250 ஹெக்டேர் பரப்பளவில் உள்ள



2003 மார்ச் 28]

தரிசு நிலங்களை பசுமையாக்க ஊரக வளர்ச்சித் துறை மற்றும் கிராம அபிவிருத்தி குழுக்கள் மூலம் ரூ.30.68 இலட்சத்தில் கன்றுகள் நடப்படவுள்ளன.

மத்திய அரசு உதவியுடன் செயல்படுத்தப்படும் காற்றடைப்புத் திட்டத்தின்கீழ் 2001-2002 ஆம் ஆண்டு அறந்தாங்கி சரகத்தில் உற்பத்தி செய்யப்பட்ட 50 ஹெக்டேர் தோட்டத்தில் இவ்வாண்டு ரூ.1.40 இலட்சத்தில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சமுதாய நிலங்களை பசுமையாக்கும் திட்டத்தின்கீழ் புதுக்கோட்டை சரகத்தின் மூலம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் 2001-2002 ஆம் ஆண்டு உற்பத்தி செய்யப்பட்ட 20 ஹெக்டேர் தோட்டத்தில் இவ்வாண்டு ரூ. 0.60 இலட்சத்தில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**45—**

**வனத் துறை மூலம் பணிகள்**

**வினா 24217—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2001-2002 ஆம் ஆண்டில் புதுக்கோட்டை மாவட்டத்தில் வனத் துறை மூலம் நிறைவேற்றப்பட்ட பணிகள் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள வனப் பகுதிகளில் தமிழ்நாடு வனத் தோட்டக் கழகம், திருச்சி வனக்கோட்டம், வன ஆராய்ச்சி மண்டலம் மற்றும் சமூக வனக்கோட்டம், புதுக்கோட்டை மூலமாக திட்டப்பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

புதுக்கோட்டை மாவட்டத்தில் 2001-2002 ஆம் ஆண்டில் வனத் துறை மூலம் நிறைவேற்றப்பட்ட பணிகள் கீழ் வருமாறு:-

[2003 மார்ச் 28

(1) தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின் மூலம் புதுக்கோட்டை, கீரனூர், ஆலங்குடி மற்றும் அறந்தாங்கி ஆகிய சரகங்களில் அருகிலுள்ள கிராம மக்களைக் கொண்டு ரூ.110.44 இலட்சத்தில் 1000 ஹெக்டேர் நிலப்பரப்பில் தோட்டம் எழுப்பப்பட்டுள்ளது.

(2) வனத்தை நம்பி வாழும் மக்களை கண்டறிந்து கிராம வனக் குழு மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களுக்கு மாற்று வேலைவாய்ப்பாக கறவை மாடு, விசைத் தெளிப்பான்கள், தையல் இயந்திரம் ஆகியவை வாங்கவும், பெட்டிக் கடை, தேநீர் விடுதி, மளிகைக் கடை ஆகியவை வைக்கவும் தலா ரூ.5,000 கடன் வழங்கப்படவுள்ளது.

(3) மேற்காண் கிராமங்களுக்கு சமுதாயப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகைகளுக்கு ஏற்ப சமுதாயக்கூடம் அமைத்தல், கதிர் அடிக்க களம் அமைத்தல், பயன்தரக்கூடிய பழக்கன்றுகள் வழங்குதல், வண்ணத் தொலைக்காட்சி வழங்குதல், பஸ் நிறுத்தத்தில் பயணிகள் நிழற்குடை அமைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

(4) டேப் கிராமங்களில் 2000-2001 ஆம் ஆண்டுகளில் உற்பத்தி செய்யப்பட்ட தோட்டங்களின் முதலாம் ஆண்டு பராமரிப்பு பணிகளுக்காக 2001-2002 ஆம் ஆண்டில் ரூ.21.08 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(5) டேப் கிராமங்களில் 1999-2000 ஆம் ஆண்டில் உற்பத்தி செயயபபட்ட தோட்டங்களின் இரண்டாம் ஆண்டு பராமரிப்பு பணிக்கான ரூ.4.19 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள். மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(6) புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்தில் 2001-2002 ஆம் ஆண்டில் 20 ஹெக்டேர் பாப்பளவில் ரூ.3.00 இலட்சத்தில் தோட்டம் எழுப்பப்பட்டுள்ளது.

(7) மத்திய அரசு உதவியுடன் செயல்படுத்தப்படும் காற்றடைப்புத் திட்டத்தின் மூலமாக 2001-2002 ஆம் ஆண்டு அறந்தாங்கி சரகத்தில் 50 ஹெக்டேர் பாப்பளவில் தோட்டம் எழுப்பப்பட்டு செயல் இலக்கு முழுமையாக நிறைவு செய்யப்பட்டுள்ளது.



2003 மார்ச் 28]

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுமக்களுக்காக, பள்ளிக்கூடங்கள் கட்டுவதற்கு, மருத்துவமனைகள் கட்டுவதற்கு போன்ற பல்வேறு திட்டங்களுக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களும் அந்த இடத்தைக் கொடுக்க வேண்டுமென்று ஆணையிட்டிருக்கிறார்கள். அதற்குரிய தொகையைக் கட்டுவதற்கு அங்கேயிருக்கின்ற வருவாய் அலுவலர் சொல்கின்ற நிதியைக் கொடுக்க நீங்கள் முன்வந்தால் உடனடியாக அறநிலையத் துறை கொடுக்கும் என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** அமைச்சர் அவர்களுக்கு நன்றி. எனது வேண்டுகோள், நில மதிப்பை நிர்ணயிக்கின்றபோது, மாவட்ட ஆட்சியர் அவர்கள் மூன்று பேர் கொண்ட ஒரு குழுவை அமைத்தார்கள். அதிலே, கோயில் நிர்வாக அதிகாரியும், மாவட்ட டி.ஆர்.ஓ. அவர்களும், மாவட்டப் பதிவாளர் அவர்களும், மூன்று பேரும் சேர்ந்து, தற்போதுள்ள மார்க்கெட் ரேட்டை அடிப்படையாக வைத்து, சதுர அடி 61 ரூபாய் என விலை நிர்ணயம் செய்யப்பட்டது. இந்த நிலையிலே, இந்தப் பரிந்துரையின்படி, இந்த 4 ஏக்கர் நிலத்தை சதுர அடி 61 ரூபாய் என சரியாக விலை நிர்ணயம் செய்யப்பட்ட இந்த இடத்தை மயிலாடுதுறை நகராட்சி நிருவாகம் ஏற்றுக்கொண்டு, சம்மதக் கடிதத்தினை ஆணையர் அவர்களுக்கு அனுப்பியது. ஆனால்.... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு வாக்கியத்தோடு பேசி முடியுங்கள்.

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** ஒரே நிமிடத்தில் பேசி முடித்து விடுகிறேன். ஆனால் இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் அவர்கள் இதை ஏற்க மறுத்துவிட்டார். இதிலே பல்வேறு விஷயங்கள் இருக்கின்றன. தனியாக ஒரு கோரிக்கை மனுவாக நான் தர இருக்கிறேன்.

மயிலாடுதுறை நகராட்சிக்குச் சொந்தமான ராஜன் தோட்டம் என்ற இடத்தில் 32 ஏக்கர் நிலம் எங்களுக்கு இருந்தது. ஆனால் பொது மக்கள் வசதிக்காக, ஒரு மகளிர் கல்லூரிக்காகவும் அதோடு மேல்நிலைப் பள்ளிக்கு விளையாட்டு மைதானத்திற்காகவும், அரசு

சார்ந்த பிரசவ ஆஸ்பத்திரிக்காகவும், மகளிர் தங்கும் விடுதிக்காகவும் நகராட்சி தன்னுடைய சொந்த இடத்தைத் தானமாகக் கொடுத்து இருக்கிறது. ஆனால் இன்றைக்கு அந்த நகரா நிருவாகத்திற்கு பேருந்து நிலையம் அமைப்பதற்கு சரியான இடம் அமையாத ஒரு சூழ்நிலை அமைந்திருக்கிறது. இப்படிப்பட்ட மிக முக்கியப் பிரச்சினையாக இருக்கிற பேருந்து நிலையம் அமைவதிலே காலதாமதம் ஏற்படுவதால் நகரத்தினுடைய பல ஆதாரப் பிரச்சினைகளான, பாதாளச் சாக்கடைத் திட்டமோ, கூட்டுக்குடிநீர்த் திட்டத்திற்கான ஒத்துழைப்போ மக்களிடத்திலேயிருந்து பெறமுடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஒரு பொது நல நோக்கத்திற்காக இந்த இடத்தைக் கேட்பதால், இதில் சிறப்புக் கவனம் செலுத்தி முந்தைய காலங்களில் பல நகராட்சிகளுக்கும், பேருராட்சிகளுக்கும் கோயில் நிலங்கள் பெயரளவிலான விலைக்கே விற்கப்பட்டதைப்போல, இந்த இடத்தை தமிழக அரசு தருமேயானால் உரிய காலத்திலே பேருந்து நிலையத்தை எங்களால் அமைக்க முடியும் என்ற நம்பிக்கை இருக்கின்றது.

(முற்பகல் 11-15

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கடலூருக்கு வந்தபோது, அதற்கு அடுத்ததாக நாகை மாவட்டத்திற்கு வருவார்கள் என்று நாங்கள் எல்லாம் நம்பியிருந்தோம். ஆனால் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் திருவாரூர் மாவட்டத்திற்குச் சென்று 100 கோடி ரூபாய்க்கு மேலான திட்டங்களை அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். நாகை மாவட்டத்திற்கு வருவதற்கான இருக்கின்ற சூழ்நிலை வருகின்றபோது, திருவாரூர் மாவட்டத்திற்கு எந்த அளவிற்கு 100 கோடி ரூபாய்க்கு மேலே மக்கள் நலத் திட்டங்களை அறிவித்தார்களோ, அதேபோல நிச்சயமாக நாகை மாவட்டத்திற்கும் அறிவிப்பார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. நாகை மாவட்டத்திற்கு வருகின்றபோது, மாண்புமிகு முதல்வர் அவர்கள் மயிலாடுதுறை நகரத்திற்காக ஒரு புதிய பேருந்து நிலையத்திற்காக, ஒரு அடிக்கல் நாட்டு விழாவிற்காக வர வேண்டும் என்ற நகர மக்களின் பேராசையை வெளிப்படுத்தி, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.



# 9. விதி 110-ன்கீழ் அறிக்கை

## விவசாயிகளுக்கு வரிகள் இரத்து, கூட்டுறவுக் கடன்கள் வட்டி தள்ளுபடி மற்றும் சலுகைகள் குறித்த மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 110-ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிக்கை ஒன்றினை அளிக்க அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில், கடந்த சில பருவங்களாகவே, பருவ மழை பொய்த்துவிட்ட காரணத்தினால் 2002-2003 ஆம் ஆண்டு கடும் வறட்சி ஏற்பட்டுள்ளது. மேலும், 2002 ஆம் ஆண்டில் காவிரி நடுவர்மன்றத் தீர்ப்பினை கர்நாடக அரசு செயல்படுத்தாமல் காவிரியிலிருந்து தண்ணீர் திறந்துவிடாத காரணத்தினால், சென்ற ஆண்டு ஜூன் 12 ஆம் தேதி மேட்டூர் அணையைத் திறந்துவிட இயலவில்லை. 2002 ஆம் ஆண்டு செப்டம்பர் 6 ஆம் தேதிதான் மேட்டூர் அணை திறந்துவிடப்பட்டது. இதனால் குறுவை சாகுபடி முழுவதுமாகப் பாதிக்கப்பட்டது. மேலும் கர்நாடக அரசு, காவிரியிலிருந்து போதுமான அளவு தண்ணீர் திறந்துவிடாத காரணத்தினாலும், வடகிழக்குப் பருவ மழை பொய்த்துவிட்ட காரணத்தினாலும், சம்பா பயிரும் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியது. விவசாயப் பெருங்குடி மக்களின் துயர் துடைப்பதற்கு இந்த அரசு பல்வேறு நடவடிக்கைகள் எடுத்துள்ளதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள்.

நிதிநிலை அறிக்கையில், பயிர்ச் சேதம் மற்றும் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகள் பற்றிய மதிப்பீடு செய்யப்பட்டு வருகின்றது என்றும், மத்திய அரசினால் அறிவிக்கப்படும் நிவாரண உதவி வகைப்பாடு மற்றும் தொகையின் அளவு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு, பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கான நிவாரணத் திட்டம் விரைவில் அறிவிக்கப்படும் என்றும் குறிப்பிடப்பட்டு இருந்தது. அதனைத் தொடர்ந்து, நான், இந்த மாமன்றத்தில் விவசாயப் பெருங்குடி மக்களுக்குப் பயனளிக்கக்கூடிய சில அறிவிப்புகளை வெளியிட விரும்புகின்றேன்.

ஜனவரி 2003-ல், மேதகு, ஆளுநர் உரையில், சென்னை நீங்கலாக 28 மாவட்டங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களாக அறிவிப்பு செய்யப்பட்டன. அதனைத் தொடர்ந்து வருவாய் நிர்வாகச் சிறப்பு ஆணையர் அவர்கள், மாவட்ட வருவாய் அலுவலர்களை நில வரி வசூலில் தீவிரம் காட்ட வேண்டாம் என்று அறிவுறுத்தியுள்ளார். தற்போது வருவாய்த் துறையால் பயிர் பாதிப்பு பற்றிய ஆய்வு முழுமையாக முடிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் 1,412 பசலி—Fasli ஆண்டில், அதாவது, ஜுலை 2002-ல் இருந்து ஜுன் 2003 வரை நில வரி முழுமையாக ரத்து செய்யப்படுகின்றது என்பதைத் தெரிவிப்பதில் நான் மன நிறைவு அடைகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) நில வரியோடு உள்ளூர்த் தல வரி (Local Cess) மற்றும் உள்ளூர்த் தல மேல்வரி (Local Cess Surcharge) ஆகியவையும் தள்ளுபடி செய்யப்படுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி). விவசாயிகளுக்கு முழு நிவாரணம் அளிக்கும் வகையில் இந்த முடிவை அரசு எடுத்துள்ளது. இதனால் அரசுக்கு ஏற்படும் நிதிச் சுமை 50 கோடி ரூபாயாக இருக்கும்.

வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு, மீண்டும் அடுத்த பட்டத்தில் பயிர் செய்ய உதவி அளிக்க வேண்டும் என்றும், நிவாரணத் தொகை வழங்க வேண்டும் என்றும் கோரிக்கைகள் எழுப்பப்பட்டுள்ளன. விவசாயிகளுக்கு உதவித் தொகை வழங்கும் வகையில் நிவாரணத் திட்டம் ஒன்றினை அறிவிக்க வேண்டும் என்று, கடந்த 2002 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் மத்திய அரசுக்கு எங்கள் அரசு அளித்துள்ள விவா அறிக்கையிலும், 2003 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் மீண்டும் அளித்துள்ள விவர அறிக்கையிலும், எடுத்துரைக்கப்பட்டுள்ளது. மத்திய அரசு நிவாரணத் தொகை வழங்குவதற்கு வகுத்துள்ள விதிமுறைகளைப் பின்பற்றி, என் தலைமையிலான அரசு விவசாயிகளின் நலனுக்காக சில முக்கியமான நிவாரணங்களை வழங்க முடிவு செய்துள்ளது.

குறுவை மற்றும் சம்பா பருவங்களில் சாகுபடி செய்து 50 சதவீதம் மற்றும் அதற்கு மேல் பாதிப்பு ஏற்பட்ட விவசாயிகளுக்கு, பாசன வசதி படைத்த பயிர்களாக இருந்தால், ஹெக்டேர் ஒன்றுக்கு 2,500 ரூபாய் உதவித் தொகையாக வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)





நிரந்தரப் பயிராக இருந்தால் ஹெக்டேர் ஒன்றுக்கு 4,000 ரூபாய் உதவித் தொகையாக வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) மானாவாரிப் பயிராக இருந்தால் ஹெக்டேர் ஒன்றுக்கு 1,000 ரூபாய் உதவித் தொகையாக வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) வழக்கமாகப் பயிரிடப்பட்டு, இந்த ஆண்டு வறட்சியின் காரணமாக, குறுவைப் பருவத்திலோ அல்லது சம்பா பருவத்திலோ பயிரிட முடியாத விவசாயிகளுக்கு தற்போது நான் குறிப்பிட்ட அளவில் 50 சதவிகிதம் மானியமாக வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

தென்னை விவசாயிகளுக்கு ஏற்பட்ட பாதிப்புக்கு இழப்பீட்டுத் தொகை வழங்குவதுபற்றி ஏற்கெனவே 30.5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, அரசாணை வெளியிடப்பட்டு, விவசாயிகளுக்கு தற்போது, முழுவதும் பட்டுப்போன தென்னை மரம் ஒன்றுக்கு 150 ரூபாய் வீதமும், பகுதி பட்டுப்போன தென்னை மரம் ஒன்றுக்கு 50 ரூபாய் வீதமும், இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டு வருகிறது என்பதையும் இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

புதியதாக இன்றையதினம் அறிவிக்கப்பட்டுள்ள உதவித் தொகை வரும் ஏப்ரல் மாதத்திலிருந்து விவசாயிகளுக்கு வழங்க ஏற்பாடுகள் செய்யப்படும். விவரமான புள்ளிவிவரங்களின் அடிப்படையில் இந்த உதவித் தொகைத் திட்டத்திற்கு ஆகக்கூடிய செலவு மொத்தம் 250 கோடி ரூபாய் என்று கணக்கிடப்பட்டுள்ளது. விவசாயிகளின் நலனுக்காக இந்தச் சிறப்புமிக்க உதவித் தொகைத் திட்டத்தை அறிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கூட்டுறவுக் கடன்களைப் பொறுத்தவரையில், நாம் சாதாரணமாக நபார்டு வங்கி வகுத்துள்ள வழிமுறைகளைப் பின்பற்றி வருகிறோம். ஏனெனில், கூட்டுறவு வங்கிகளின் கட்டுப்பாடு மற்றும் நிதி வழங்கும் முறைகள் நபார்டு வங்கியிடம் உள்ளன. நபார்டு வங்கி மற்றும் கூட்டுறவு வங்கிகளின் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு விவசாயிகளுக்கு அன்னவாரி சான்றிதழ் வழங்க மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அறிவுறுத்தப்படுவார்கள். இவ்வாறு அன்னவாரி சான்றிதழ் பெற்றுள்ள விவசாயிகளுக்குச் சிறப்பு நிவாரணத் திட்டத்தை அறிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2003 மார்ச் 28

நடப்பாண்டில் வழங்கப்பட்ட குறுகிய காலக் கடன்கள் மீது விவசாயிகள் செலுத்தவேண்டிய வட்டியில் 20 சதவிகிதம் தள்ளுபடி செய்து. மீதமுள்ள வட்டியை அசலுடன் சிறு மற்றும் குறு விவசாயிகள் 5 ஆண்டுக் காலத்தில் செலுத்தவேண்டும்; இதா விவசாயிகள் இதனை 4 ஆண்டுகளில் செலுத்தவேண்டும் என்றுதான் பாரதப் பிரதமர் வாஜ்பாய் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

அதை மீண்டும் வாசிக்கிறேன். நடப்பாண்டில் வழங்கப்பட்ட குறுகிய காலக் கடன்கள் மீது விவசாயிகள் செலுத்தவேண்டிய வட்டியில் 20 சதவிகிதம் தள்ளுபடி செய்து, மீதமுள்ள வட்டியை அசலுடன் சிறு மற்றும் குறு விவசாயிகள் 5 ஆண்டுக் காலத்தில் செலுத்தவேண்டும்; இதா விவசாயிகள், இதனை 4 ஆண்டுகளில் செலுத்தவேண்டும் என்றுதான் பாரதப் பிரதமர் வாஜ்பாய் அவர்கள் அறிவித்துள்ளார்கள். இதனை எங்கள் அரசு மேலும் பரிசீலித்து, இது போதுமானதாக இல்லை என்று கருதி, சிறு மற்றும் குறு விவசாயிகள் நடப்பாண்டில் பெற்றுள்ள குறுகிய காலக் கடன்கள் மீது, விவசாயிகள் செலுத்தவேண்டிய வட்டியை முழுமையாகத் தள்ளுபடி செய்வது என்று எங்கள் அரசு முடிவு செய்துள்ளது. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) இதனால் ஏற்படக்கூடிய செலவு 50 கோடி ரூபாயாகும். இதனை சம்பந்தப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் வங்கிகளுக்கு அரசே முழுமையாக வழங்கிவிடும்.

குறுகிய கால பயிர்க் கடனை மத்திய காலக் கடனாக மாற்றுவதற்கு நபார்டு நிறுவனத்தை அணுகி, அவர்கள் வகுத்துள்ள முறைகளைப் பரிசீலித்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும். அதனையொட்டி, மாநில அரசின் பங்காக வழங்கப்படவேண்டிய தொகை வழங்கப்படும்.

இன்றையதினம் நான் வெளியிட்டுள்ள இந்த அறிவிப்புகள் வாயிலாக வறட்சியினால் பாதிக்கப்பட்டுள்ள தமிழக விவசாயப் பெருங்குடி மக்கள் மொத்தம் 350 கோடி ரூபாய் அளவிற்கு பயன்பெறுவார்கள் என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. இரவிராஜ்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு போவைத் தலைவர் அவர்களே,...

**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு போவைத் தலைவர் அவர்களே,...



2003 மார்ச் 28]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பழனிசாமி, இதிலே வேண்டாம். நீங்கள் பேசும்போது பேசுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

*முற்பகல் 11-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. விதி 110-வது அறிக்கைமீது விவாதம் வேண்டாம்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிவிப்பு வந்திருக்கிறது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன சொல்லுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு வரலாறு காணாத வறட்சி ஏற்பட்ட சூழ்நிலையில் அனைத்து எதிர்க்கட்சிகளும், ஆளுங்கட்சியும் சேர்ந்து, தமிழ்நாட்டு விவசாயிகளுக்கு, நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்ன அறிவிப்பார்கள் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். அதையெல்லாம் கடந்த சட்டமன்றக் கூட்ட விவாதத்திலே பங்குகொண்டு எங்களுடைய கருத்துகளை, விவசாயிகளுடைய கருத்துகளைச் சொல்லி இருந்தோம். மாண்புமிகு முதல்வர் அவர்கள், மத்திய அரசு கொடுப்பதைவிட, மத்திய அரசு கொடுக்கின்ற நிதி மட்டுமல்லாமல், தன்னுடைய நிதிநிலை பற்றாக்குறை இருந்தபோதிலும்கூட, இன்றைக்கு விவசாயிகளுக்கு சலுகைகளை அறிவித்திருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பழனிசாமி அவர்களின் பெருந்தன்மையை ரொம்பப் பாராட்ட வேண்டும்.

## 8. வரவு–செலவுத் திட்டம், 2003-2004, பொது விவாதம்—தொடர்ச்சி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. இரவிராஜ்.

•**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003-2004 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்மீது

கலந்துகொண்டு பேசுகின்ற வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். வாடிக்கொண்டிருக்கிற விவசாயப் பெருங்குடி மககளுக்காக இன்றையதினம் இந்த மாமன்றத்திலே நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கக்கூடிய ரூ.350 கோடிக்கான உதவித் தொகைகளை பாட்டாளி மக்கள் கட்சி மகிழ்ச்சியோடு வரவேற்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசு நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பித்ததற்கு முன்பாக எங்களுடைய பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக எங்களுடைய தமிழினப் போராளி டாக்டர் ஐயா அவர்கள், இந்த அரசுக்கு நல்ல ஆலோசனை தருகின்ற வகையிலே ஒரு வரைவு நிதிநிலை அறிக்கையினை வெளியிட்டார்கள். அந்த அறிக்கையிலே நாங்கள் குறிப்பிட்டிருப்பது 2006 ஆம் ஆண்டுக்குள் தமிழகத்தில் வறுமையை ஒழிப்பது, 10-வது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் தமிழகத்தில் 8 சதவீத வளர்ச்சியை உருவாக்குவது, 2005 ஆம் ஆண்டுக்குள் எல்லா குழந்தைகளுக்கும் ஐந்தாம் வகுப்பு வரை கல்வியை வழங்குவது, 2008 ஆம் ஆண்டுக்குள் தமிழகத்தை தொழில் துறை ஏற்றுமதியில் முன்னணி மாநிலமாக உயர்த்தி ஏற்றுமதி வருமானத்தை இருமடங்காக உயர்த்துவது, 2015 ஆம் ஆண்டுக்குள் அனைத்து கிராமங்களுக்கும் மின் வசதி அளிப்பது, ஒவ்வொரு கிராமத்திற்கும் பெருவழிப் பாதை ஒன்று, தொலைபேசி வசதி, இன்டர்நெட் தொடர்பு, ஒரு பள்ளி, பாதுகாக்கப்பட்ட குடிநீர், சிறந்த உள்ளாட்சி அமைப்பு ஆகியவற்றை உருவாக்குவது, தேயிலை தொழில் நலிவடைவதைத் தடுத்தல், கைத்தறி மேம்பாடு, மனிதவள மேம்பாட்டிற்கான கல்வி, மக்கள் நல்வாழ்வை மேம்படுத்தும் மருத்துவ வசதிகள், வேலைவாய்ப்பும், வறுமை ஒழிப்பும், மகளிருக்கு அதிக அதிகாரம் அளித்தல், சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல், நலிவடைந்து வருகிற விவசாயத்தை மேம்படுத்துதல் போன்ற கருத்துகளை உள்ளடக்கிய அந்த வரைவு நிதிநிலை அறிக்கையை சென்னையிலே வெளியிட்டு, பத்திரிகையாளர்கள் மத்தியிலே பேசுகிறபோது எங்களுடைய டாக்டர் ஐயா அவர்கள் குறிப்பிட்டார்கள்; இந்த வரைவு நிதிநிலை அறிக்கையை வெளியிடுவது யாரையும் புண்படுத்துவதற்காக அல்ல, தமிழ்நாட்டினுடைய வளர்ச்சியில் அக்கறை கொண்டிருக்கிற பாட்டாளி மக்கள் கட்சி தொலைநோக்குப் பார்வையோடு, நம்முடைய தமிழக முதலமைச்சர் அவர்கள்



சொல்வதைப்போல, நம்முடைய தமிழ்நாடு இந்தியாவிலேயே முதல் மாநிலமாக வரவேண்டுமென்று சொன்னால், தொலைநோக்குப் பார்வையோடு இந்தத் திட்டங்களைக் கொண்டுவர வேண்டுமென்கிற நல்லெண்ணத்தின் அடிப்படையில்தான், நாங்கள் இதைச் சொல்கிறோம் என்று அன்றைக்குக் குறிப்பிட்டார்கள். அந்த வகையிலே, நம்முடைய அரசு கொண்டு வந்திருக்கிற, பெண்கள் நலன் கருதி கொண்டுவந்திருக்கிற 18 அம்ச திட்டத்தை பாட்டாளி மக்கள் கட்சி வரவேற்கிறது. அந்தத் திட்டம் முழுவதும் மிகச் சிறப்பான முறையிலே நடைபெற வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறோம்.

மகளிர் சுய உதவி குழுக்களுக்குத் தேவையான பயிற்சிகளையும் போதுமான நிதி உதவிகளையும் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாவட்ட ஆட்சியர், மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் போன்ற உயர் பதவிகளில் மூன்றில் ஒரு பங்கை பெண்களுக்கு ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

முற்பகல் 11-30

அதுபோல, நமது தமிழ்நாட்டில் குரூப்-1 தேர்வுகள், ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., போன்ற பதவிகளுக்கான தேர்வுகளுக்கு பெண்களுக்கு சிறப்புப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட வேண்டும். தலைமைச் செயலகத்தில் பெண்களுக்கு என்று தனிப் பிரிவு ஒன்றை ஏற்படுத்த வேண்டும். கட்டடத் தொழில், வேளாண் தொழில், மீன்பிடித் தொழில், தையற் கலை, கைத்தறி போன்ற துறைகளில் பணிபுரிகின்ற பல இலட்சக்கணக்கான பெண்கள் அந்தத் தொழில்களிலே ஈடுபட்டு இருப்பதால் அவர்களுக்கு தனியாக பெண்கள் நல வாரியம் ஒன்று அமைக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் நிமிர்ந்து நின்றால்தான் இந்த நாடு உயர்ந்து நிற்க முடியும். ஆனால், விவசாயிகளினுடைய நிலைமை இன்று, தாங்கள் வாங்கிய கடனைத் திருப்பிக் கட்டமுடியாமல், தலைகுனிந்து தற்கொலை செய்யக்கூடிய ஒரு நிலைமை தமிழகத்திலே ஏற்பட்டிருக்கிறது. வெள்ளையனை எதிர்த்து வீரபாண்டிய கட்டபொம்மன் அவர்கள் முழக்கமிட்டார்கள்; வீரபாண்டிய கட்டபொம்மன் அவர்கள் குரல் கொடுத்தார்கள்; "வானம் பொழிகிறது, பூமி விளைகிறது, உனக்கு ஏன் கொடுக்க வேண்டும் வரி, உனக்கு ஏன் செலுத்தவேண்டும் கிஸ்தி" என்று. ஆனால், இன்றைக்கு வானமும் பொழியவில்லை; பூமியும் விளையவில்லை. ஆனால், பெரு

விவசாயிகள் மின் கட்டணத்தைச் செலுத்த வேண்டுமென்கிற அறிவிப்பை இந்த அரசு செய்திருக்கிறது. அதை நாங்கள் இந்த நேரத்திலே வருத்தத்தோடு சுட்டிக்காட்ட விரும்புகிறோம். அதேபோல, இந்த சட்டசபையிலே பல சட்டமுன்வடிவுகளை அறிமுகப்படுத்திய நம்முடைய அரசு, குறிப்பாக பொது இடங்களிலே சுவரொட்டிகள் ஒட்டுவது, பொது இடங்களிலே புகை பிடிப்பது, எச்சில் துப்புவது போன்ற குற்றங்களிலே ஈடுபடுபவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லி, அந்தச் சட்டத்தை இந்த அவையில் அரசு கொண்டுவந்த நேரத்திலே பாட்டாளி மக்கள் கட்சி அதை வரவேற்றது. ஆனால், அந்தச் சட்டங்கள் இன்றைக்கு முழுமையாகச் செயல்படுகின்றனவா என்றால் இல்லை. இதுவரையிலே குற்றங்களிலே ஈடுபடுவர்கள் மீது எத்தனை பேர் மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறோம். அதேபோல, தடைசெய்யப்பட்ட...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு மணித்துளிகளில் பேசி முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. கோ. இரவிராஜ்:** தடை செய்யப்பட்ட பான்பராக், ஹான்ஸ், குட்கா போன்ற போதைப் பொருட்கள் எல்லா இடங்களிலேயும் மிகத் தாராளமாகக் கிடைக்கின்றன. அவற்றை வாங்கி பயன்படுத்தக்கூடியவர்கள், மாணவர்கள் மட்டுமல்ல, மாணவிகளும் அவற்றைப் பயன்படுத்தி, பாழாகிப் போகின்ற ஒரு நிலைமை தமிழகத்திலே இருந்துகொண்டிருக்கிறது. அந்த போதைப் பொருட்களை விற்பனை செய்கின்றவர்கள்மீது கடுமையாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, படித்த பட்டதாரி இளைஞர்கள் வேலை கிடைக்காமல், ஓட்டுநர்களாகவும், ஓட்டல்களிலும் வேலை செய்யக்கூடிய ஓர் அவல நிலை தமிழகத்திலே இருந்து கொண்டிருக்கிறது. இந்த இரண்டாண்டு ஆட்சிக் காலத்திலே படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு என்பது குறிப்பிட்டுச் சொல்லும்படியாக இல்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, மாண்புமிகு போவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே தமிழ்ப் பாடங்களே இல்லாத ஏராளமான தனியார் கல்வி நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. இது மிகப்பெரிய வேதனைக்குரிய, வெட்கப்பட வேண்டிய ஒரு செய்தி. இந்த அவல



நிலையைப் போக்க அரசு கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன் உலகத்தில் உள்ள 3,000 மொழிகளில் முதன்மையான மொழி நம்முடைய தமிழ் மொழி. அந்தத் தமிழ் மொழி வளர்ச்சிக்காக இன்றையதினம் நம்முடைய அரசு ஒதுக்கியிருக்கக்கூடிய நிதி 3.64 கோடி ரூபாய். இது போதுமானதாக இல்லை. நேற்றையதினம் பேசுகிறபோது அமைச்சர் அவர்கள், சைக்கிள் வழங்குவதற்காக 4 கோடியே 50 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பதாக குறிப்பிட்டுச் சொன்னார்கள். அதை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால், தமிழ் வளர்ச்சிக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற நிதி போதுமானதாக இல்லை என்பதை இந்த நேரத்திலே வருத்தத்தோடு தெரிவித்துக்கொண்டு, என்னுடைய திருவள்ளூர் மாவட்டம் பிரிக்கப்பட்டு, பல ஆண்டுகள் ஆகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி செல்வி முருகேசன். (குறுக்கீடு) நீங்கள் முடிக்க முடியாது. இன்னும் பேசுவதற்கு 5, 6 பேர் இருக்கிறார்கள். (குறுக்கீடு) ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

**திரு. கோ. இரவிராஜ்:** திருவள்ளூர் மாவட்டம் பிரிக்கப்பட்டு ஐந்தாண்டுகளுக்கும் மேலாகிறது. அங்கே செசன்ஸ் நீதிமன்றம் ஒன்று அமைக்கப்படவில்லை. அது அமைக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, எனது தொகுதியிலே இருக்கக்கூடிய பெரும்பாலான கிராமச் சாலைகள் கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியம், திருவாலங்காடு ஒன்றியம், திருத்தணி ஒன்றியம் ஆகிய ஒன்றியங்களிலே மிக மோசமாக இருக்கின்றன. அவற்றை மேம்படுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-35

அதேபோல, திருத்தணியிலிருந்து ஆந்திராவை இணைக்கக்கூடிய பிரதான சாலை நாகலாபுரம் சாலை. அந்தச் சாலை மிக மோசமாக இருக்கிறது. அங்கே மக்கள் எல்லாம் அவதிப்படக்கூடிய நிலைமையிருக்கிறது. இதிலே வேடிக்கை என்னவென்று சொன்னால், கடந்த நான்கு ஆண்டுகளுக்கு முன்னாலே அந்தச் சாலையைப் போடுவதற்காக நிதி ஒதுக்கீடு செய்து டெண்டர் விடப்பட்டு இதுவரையிலே அந்தச் சாலை அமைக்கப்படாமல் இருக்கிறது. இந்த நிலைமைகளை அதிகாரிகளிடத்திலே எடுத்துச் சொல்லி நான் அங்கே

மூன்று மாதத்திற்கு முன்பாக, ஓர் உண்ணாவிரத அறப்போராட்டத்தைக்கூட நடத்தினேன். அதற்குப் பின்னாலேயும் அந்தச் சாலை அமைக்கப்படாமல் இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், அந்தச் சாலையை எடுத்து வேலை செய்யாமல் இருக்கக்கூடிய அந்த ஒப்பந்தக்காரருக்கே இன்றைக்கு முன்னுரிமை தந்து அதிகாரிகள் வேலைகளை வழங்கிக் கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் அந்தப் பழைய வேலையை முடித்துவிட்டு வந்தால்தான் உங்களுக்குப் புதிய வேலை தரப்படும் என்று ஒரு வார்த்தை சொல்லியிருந்தால் நிச்சயமாக அந்த வேலை முடிக்கப்பட்டிருக்கும். எனவே, அமைச்சர் அவர்கள் கவனத்திலே கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே குடிநீர்ப் பிரச்சினை அதிகமாக உள்ளது. அதிக நிதி இதற்கு ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் வை.கோ. அவர்களும், தலைவர் பழ. நெடுமாறன் அவர்களும் மற்றும் பல தலைவர்களும் பொடா சட்டத்திலே கைதுசெய்யப்பட்டு சிறையிலே வாடிக்கொண்டு இருக்கிறார்கள். அவர்களை உடனடியாக இந்த அரசு விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி செல்வி முருகேசன்.

***திருமதி செல்வி முருகேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க கொங்கு மண்டலத்தில் இலட்சக்கணக்கான தொண்டர்களுக்கு மத்தியில் ஏழைத் தொண்டனாக இருந்த, சாதாரணக் குடும்பத்தில் பிறந்த எனக்கு அரசியல் வரலாற்றில் முகவரி கொடுத்து, ஆன்றோர்களும், சான்றோர்களும் அமர்ந்து சாதனை படைத்த மாமன்றத்தில் சட்டசபை உறுப்பினராக, 2003-2004 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் பேசுவதற்கு, மூன்றாவது முறையாகப் பேசுவதற்கு, ஒரு வாய்ப்பைக் கொடுத்து அழகு பார்க்கும் என்னைப் பெறாமல் பெற்றெடுத்த பேரருள் புரிந்த கருணைத் தெய்வமே, எங்கள் குடும்பத்தின் குல தெய்வமே, தங்கள் பொற்பாதங்களை வணங்கி நன்றியைக் காணிக்கையாக்கி எனது உரையைத் தொடங்குகிறேன்.



"அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே,
உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும்,
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே"

அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே

என்று பாடினார் எட்டையபுரத்துக் கவிஞர் பாரதி. தமிழில் எங்கள் தாயைக் கண்டு நடுங்கும் வார்த்தை அச்சம், பயம். பயம் என்றால் என்னவென்றே தெரியாது. நாடு போற்ற, நல்லோர் வாழ்த்த, நல்லாட்சி நடத்துகின்ற எங்கள் சிங்கத் தலைவி அம்மா அவர்களை எதிர்த்த எதிரிகளுக்கு எத்தர்களுக்கு பாரதி கண்ட புதுமைப் பெண்ணாய், அன்பின் சிம்ம சொப்பனமாய் வலம்வரும் புரட்சி பூபாளமே, நெருப்பு ஆற்றிலே நீந்தி, திருவுருவமே, ஆற்றலின் மறு உருவமே, சாதனைகளைச் சரித்திரமாக்கி சோதனைகளை சாதனைகளாக்கி, நாட்டு மக்களையும் காத்துக் கழகத்தையும், கழகத் தோழர்களையும், வேதச் சுவடுகள் படைக்கும் கொண்டு இருக்கின்ற காவல் தெய்வமே, வெண்தாடி வேந்தன் தங்கள் பாதச் சுவடுகள் ஈரோட்டுச் சிங்கம், எங்கள் கொங்கு பகுத்தறிவுப் பகலவன் பெரியார் பிறந்த மண்ணான, சீதனமாக சுமார் நாடு ஈரோட்டு மண்ணில் பதித்து தாய் வீட்டுச் அறிவித்து, கொங்குத் 425 கோடி ரூபாய்க்கு நலத் திட்டங்களாக வாய் நிறைய "ஏனுங்க, தமிழை மரியாதை கலந்த தமிழ் என்று பேசி, கொங்கு நாட்டு அப்படித்தானுங்களே" என்று கொங்குத் தமிழில் ஊட்டி, எங்களை மக்களுக்குப் புத்துணர்ச்சியையும், புது வேகத்தையும் திருவடிகளுக்கு மகிழ்ச்சிக் கடலில் மிதக்க வைத்த எங்கள் தாயின் சார்பாக நன்றியைச் மீண்டும் ஒரு முறை கொங்கு மண்டல மக்களின் சமர்ப்பிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று ஒரு மாமன்ற உறுப்பினர் பேச ஆரம்பிக்கும்போதே நிதிநிலை அறிக்கையைப் பார்த்தேன். அதில் 96 பக்கம்தான் இருந்தது. சதமடிக்க இன்னும் நான்கு பக்கங்கள் இல்லை என்று சொல்லி, கடந்த முறை 63 பக்கத்திற்கு நிதி அமைச்சர் 6 மணி நேரம் எடுத்துக்கொண்டாரா அல்லது 5 மணி நேரம் எடுத்துக்கொண்டாரா என்று தெரியவில்லை என்று கேட்டு, அவர் கையை காண்பிக்கும்போதே எனக்கு ஒரு சிறிய சந்தேகம் வந்தது. அவர்களுக்கு இப்படித்தானே பழக்கம் அவர் என்ன நேற்று இப்படி அல்லவா கைகளை விரித்துக் காண்பித்தார். அதனால் எங்களுக்கு ஒரு சின்ன சந்தேகம் வந்துவிட்டது. அது நாளைக்குத் தெரியும். நாளை பதிலுரையில் எத்தனை மணி நேரம் ஆகும் என்பது.

அதைக் கண்டு அவர் பயப்பட வேண்டாம். நாங்கள் சட்டசபைக்குள் வரும்போதே, ஒன்றேகால் சதத்திற்கு மேலேதான் உள்ளே வந்தோம். அப்புறம் விதியின் விளையாட்டால் ஒவ்வொருவராகப் போய்ச் சேர இன்று ஒன்றரை சதத்திற்கு மேல் அமர்ந்திருக்கின்றோம். இன்னும் சொல்ல முடியாது. இரண்டு சதம் அடித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. நாட்டிற்கு நிலையான ஆட்சி, மக்களுக்கு நிம்மதியான வாழ்வு அளிக்கப் பிறந்த தீர்க்கத்தரிசியே, "உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்" என்பதற்கு ஏற்ப இன்றைக்கு விவசாயப் பெருங்குடி மக்களைக் காப்பாற்றுகின்ற வகையில், பல்வேறு நிவாரணத் தொகைகளையும், வட்டி தள்ளுபடியும் செய்து காப்பாற்றி பேருதவி செய்த தர்மத் தாயே, தங்களின் பொற்பாதங்களில், மீண்டும் ஒருமுறை நன்றியைக் காணிக்கையாக்கிக் கொள்கின்றோம்.

முற்பகல் 11-40

பகுத்தறிவுப் பகலவன் பெரியார், பேரறிஞர் பெருந்தகை அண்ணா, பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். ஆகிய முப்பெருந் தலைவர்களின் ஓரே உருவான ஒப்பற்ற தலைவியே! தாங்கள் ஒரு சரித்திர வசந்தம். 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்கிறேன்' என்று கூறியவர் பேரறிஞர் பெருந்தகை அண்ணா. இதை ஏட்டோடு விட்டுவிடாமல், ஏழையெளியோர் வாழ்வு சிறக்க, எத்தனை எத்தனைத் திட்டங்கள்! மக்களின் போராதரவு, நம்பிக்கை, நல்ல சிறந்த தலைமையால்தான் முடியும் என்பது, மக்களாட்சிக் கோட்பாடு. இது ஒன்றும் குடும்ப ஆட்சி, அல்லது வாரிசு ஆதிக்கக் கோட்பாடு அல்ல. தன் குடும்பத்தையே கழகமாக்கி, கழகத் தலைவராக விளங்கிக் கொண்டிருக்கும் கயவர்களின் மத்தியில், நம் கழகத்தைக் குடும்பமாக்கி, குடும்பத் தலைவியாக விளங்கி, அம்மா என்றால் அன்பு, அன்பே தெய்வம் என்று அன்னையும் தெய்வமுமாக எங்களைக் காத்து வழிநடத்தும் இலட்சியத் தாயே! 'கல்லக்குடி இரயிலிலே தலை வைத்தேன்' என்பவர்கள், பாளையங்கோட்டையிலே பாம்புக்கும் பல்லிக்கும் நடுவிலே வாழ்ந்தவன் என்பவர்கள், எங்களின் தாயைப் பெண் என்றும் பாராமல் சிறைவைத்து வஞ்சம் தீர்த்து, பழி வாங்கிய கொடியவர்கள், தனக்குச் சிறைவாசம் என்று வந்தவுடன், ஐயோ, ஐயோ என்று நாடகமாடி அலறியதை இந்த நாடே பார்த்தது. ஆட்சிப் பொறுப்பேற்ற நாளிலிருந்து தீர்வுகாண முடியாத மிகக் கடுமையான நிதி நெருக்கடி; பருவ மழை பொய்த்ததால் ஏற்பட்ட சொல்லொணாத வறட்சி; காவிரி டெல்டா பகுதியில் பயிர்கள் கருகிவிட்ட நிலைமை.



நெற்களஞ்சியம் காலியாகி கடுமையான உணவு நெருக்கடியைச் சந்திக்கும் சூழ்நிலை. இப்படி எந்தவொரு அரசின் உறுதிப்பாட்டையும் நிலைகுலையச் செய்து இருக்கும் சூழ்நிலையில், குன்றாத நெஞ்சுறுதி, குலையாத கொள்கை உள்ளம், நாட்டுப் பற்று, தேசியம், மண்ணையும் மரபையும் மதிக்கும் உயர்ந்த நோக்கு, உழைப்பவர்களை ஊக்குவிக்கும் உயர்ந்த தன்மை, நல்ல உள்ளம், நம்பியவர்களை, நம்பிக்கை உள்ளவர்களை ஆதரித்து அங்கீகரிக்கும் தெளிந்த நோக்குகொண்டு, யான், எனது, எனது குடும்ப ஆதிக்கம் என்று இல்லாமல் நாம், நாடு, நல்லவை எனக் கருதிப் பணியாற்றிக் கொண்டிருக்கும் யோகியாக, சாதாரண ஏழை, நடுத்தர மக்களைப் பாதிக்காதவகையில், கடுமையான முயற்சி மேற்கொண்டு, தமிழகத்தின் முன்னேற்றப் பாதைக்காக இந்தியத் திருநாட்டில் முதன்மை பெற்ற மாநிலமாக, தமிழ்த் திருநாட்டை உயர்த்துவேன் என்று சூளுரைத்து, பல்வேறு முறைகளில், பல்வேறு முனைகளில் திட்டமிட்டு, அம்மா அவர்களின் வழிகாட்டுதலுடன், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் வகுத்திட்ட தமிழகத்தின் வரவு-செலவுத் திட்டம்.

'நாம் விட்டுச் சென்ற நிதிநெருக்கடியை, மிகப்பெரிய பள்ளத்தை மேடாக்கவே முடியாது; புதிய ஆட்சி மீண்டு வரவே முடியாது' என்று பகற்கனவு கண்டுகொண்டிருந்த கயவர்களின் எண்ணங்களில் பேரிடியாக, அம்மா அவர்களின் மின்னல் வேக நடவடிக்கைகளால், நலத் திட்டங்களின் தொடர்ச்சி குலையாமல், நிர்வாகத் துறை தேக்கமடையாமல், 'காலங்கருதி செய்திட்டால், ஞாலமும் கைகூடும்' என்ற வள்ளுவரின் பொய்யாமொழிக்கேற்ப, இன்று தர்மத் தாயின் ஆட்சியில், தமிழகம், தொழிற்புரட்சியை நோக்கி, தகவல் தொழில்நுட்பப் புரட்சியை நோக்கி, வறுமையில்லாத, வளம்நிறைந்த தமிழகத்தை உருவாக்க, வெற்றி நடை, வீறுநடை போட்டு, திட்டங்கள் வகுக்கப்பட்டு செயல்படுத்தப்படுகின்றன.

சட்டமன்றத்தில், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அளித்திட்ட வரவு-செலவுத் திட்டத்தை நடுநிலை தவறாத கண்ணோட்டத்துடன் காணவேண்டும். அந்தப் பாங்கும் பக்குவமும் நம் எதிர்க்கட்சிகளிடம் கடுகளவும் கிடையாது. அவர்கள் வழக்கம்போல் இலாவணிப் பாடி, வெளிநடப்புச் செய்து, மலிவான விளம்பரத்தைப் பெறுவதைத்தவிர, வேறு வேலையில்லை. அதைப்பற்றி நாம் கண்டுகொள்ளவும் தேவையில்லை. ஏனென்றால், மக்கள் நம் காவல் தெய்வம் அம்மா அவர்களை மட்டும்தான் நம்பியிருக்கின்றார்கள் என்பதற்கு சாத்தான்குளம் வெற்றி ஒன்று போதாதா?

சிறப்புற நடந்து கொண்டிருக்கும் வேளையில், மகளிர் காவல் பணியாளர்களின் குழந்தைகளைப் பேணிக் காப்பதற்காக மழலையர் காப்பகங்களைத் தொடங்கியது தமிழகத்தின் ஈடு இணையற்ற ஒப்பற்ற தலைவியின் தாயுள்ளத்தைக் காட்டுகின்றது.

இதயம் காப்போம் திட்டம் கொணர்ந்து, ஏழைகளின் இதய தெய்வமாக வாழ்ந்து கொண்டிருக்கும் ஏழைகளின் ஏந்தலே! கஞ்சித் தொட்டி வைத்து கைத்தறிக் குடும்பங்களைக் காப்பாற்றுகிறேன் என்று நாடகமாடி, அவர்களைக் கேவலப்படுத்தி இழிவுபடுத்திய இழிபாதகர்களின் செயல்களுக்கு முற்றுப்புள்ளி வைத்து, வறுமையில் வாடும் கைத்தறி நெசவாளர்களின் துயர்துடைக்க, வாழ்வில் ஒளியேற்ற, தேங்கிக் கிடந்த வேஷ்டி சேலைகளை ரேஷன் கடைகள் மூலம் மலிவு விலைக்கு விற்பனை செய்து, வழிவகை செய்ய, வறியவரையும் வாழவைக்கும் உயரிய நோக்கம் கொண்ட உத்தமத் தலைவியே! இன்றைக்கு அவர்கள் தங்கள் உற்பத்தி முறைகளை நவீனப்படுத்துவதற்கு, சந்தை ஊக்கத் தொகை மற்றும் கைத்தறித் தள்ளுபடிக்கு என்று 83 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து, போதனை செய்தே பொழுதைப் புண்ணாக்கும் பாதகர்களுக்கிடையில், நீவிர் மட்டும்தான் தாயே சாதனை செய்து இமயமென எழுந்து நிற்கின்றீர்!

பிற்பகல் 11-50

ஒரு நாட்டின் முன்னேற்றம் பொருளாதார வளர்ச்சி, அந்நாட்டின் கிராமங்களிலதான் இருக்கிறது. அப்படிப்பட்ட கிராம மக்களின் சுகாதாரம், துப்புரவு, தூய்மை ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்து, மகளிர்க்கென்று வரும் நிதி ஆண்டிலும் துப்புரவு வளாகங்கள் கட்டுவதற்கு ரூ.104.42 கோடி ஒதுக்கீடு செய்ததோடு மட்டுமல்லாமல், சிறந்த துப்புரவு கிராமங்களுக்கு 75 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து, பரிசு ஒதுக்கீடு செய்து, சுத்தத்திற்கும், சுகாதாரத்திற்கும், ஊக்கப்படுத்திய தாயே!

தொகுப்பு வீடுகளுக்கு என்று நிதி ஒதுக்கீடு செய்ததோடு மட்டுமல்லாமல், மாநிலத்தில் ஊரகக் குடிநீர் வழங்கலுக்கும், 2003-2004 ஆம் ஆண்டிற்காக குறைந்தபட்சத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு 411 கோடி ரூபாய் என்றும், கிராமச் சாலைகளுக்கு, பீடித் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி, மழைநீர் சேகரிப்புக்கு முக்கியத்துவம்



கொடுத்தல், சிறு, குறு விவசாயிகளின் நலன் கருதி, சொட்டு நீர்ப் பாசனத்திற்கு என்று ஒரு தொகை, இப்படி எத்தனையோ திட்டங்களையெல்லாம் அள்ளி அள்ளிக் கொடுத்து, 'பட்டங்கள் ஆள்வதும், சட்டங்கள் செய்வதும், பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்' என்ற மகாகவியின் வரிகளுக்கேற்ப பெண்களின் முன்னேற்றத்திற்காகவும், பொருளாதாரத்தில் முன்னேறுவதற்கும், சுய உதவிக் குழுக்களுக்கு என்று ஊக்கம் கொடுத்து, மேலும் 5 இலட்சம் மகளிரைக் கொண்ட 25,000 மகளிர் சுய உதவிக் குழுக்களை ஏற்படுத்தி, அவர்களுக்கு ரூ.22.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்து, 5 இலட்சம் மகளிர் குடும்பங்களில் விளக்கேற்றி வைத்த குடும்பத்தின் குலவிளக்கே! திட்டுவதை மட்டுமே திட்டமாகக் கொண்ட தீய சக்திகளின் மொத்த உருவங்களே, சன் வெளிச்சம் படாத குருட்டுக் கண்ணாடிகளை குப்புற வைத்துவிட்டுப் பாருங்கள், அப்போது தெரியும், இவையெல்லாம் எங்கள் அம்மா அவர்கள் சாதனைகள் என்று. தாயே! என் தொகுதியினுடைய இரண்டே இரண்டு பிரச்சினைகளை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

காங்கேயம் என்றாலே காளைகள்தான் நினைவுக்கு வரும். அந்தக் காங்கேயக் காளை இனங்கள் அழிந்து வருகின்றன. அவற்றைக் காப்பாற்றுவதற்கு நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அடுத்து, எங்களுடைய காங்கேயம் காவல் நிலையம் மிகுந்த பழமையான கட்டடத்தில் இயங்கி வருகிறது. அந்தக் கட்டடம் கிட்டத்தட்ட 100 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டது என்று சொல்கிறார்கள். அந்தக் கட்டடத்திற்கு மராமத்துப் பணிகள் செய்து மிகக் குறுகிய இடத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது. அதற்கு ஒரு நல்ல கட்டடத்தை அம்மா அவர்கள் கட்டித் தருவதற்கு கருணைகூர்ந்து உதவி செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்களுடைய ஒரத்துப்பாளையம் அணையைப் பற்றிச் சொல்லவேண்டுமென்றால், 'குளத்து நிறைய தண்ணீர் இருக்கு; குருவி குடிக்க தண்ணீர் இல்லை' என்பதுபோல ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது. திருப்பூர் சாயப் பட்டறை கழிவு நீரால் இந்த அணை முழுவதும் பாதிக்கப்பட்டு, விவசாயத்திற்கோ, விவசாய மக்கள் வாழ்வதற்கோ பயன் இல்லாமல் மிகவும் சீரழிந்த சூழ்நிலையில் இருக்கிறது. அதற்கும் ஒரு வழிவகை செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதையே எங்கள் பயணமாக இருக்கும், எங்கள் தாய் காட்டும் திசையே எங்களது

இலட்சியமாக இருக்கும். உலகில் தோன்றிய ஒவ்வொரு பொருளும், ஒவ்வொரு ஜீவனும் தான் பிறந்ததற்கான பிறவிப் பயனை அடைய வேண்டும். இல்லையேல் பிறந்ததற்கான அர்த்தமே இல்லாமல் போய்விடும். நாங்களும் எங்கள் பிறவிப் பயனை அடைந்துவிட்டோம், அம்மா. எப்படியோ? இருண்ட தமிழகத்திற்கு ஒளி தந்து தமிழகம் தழைத்தோங்க, தமிழக மக்களின் வாழ்வு சிறக்க வாழ்ந்து கொண்டிருக்கிற எங்கள் அன்னை, மக்கள் போற்றும் மாதரசி வாழ்ந்த காலத்தில் நாங்களும் வாழ்ந்தோம் என்பதே நாங்கள் பெற்ற பேறு, எங்களின் பிறவிப் பயன் என்று கூறி, தாங்கள் பல்லாண்டு, பல்லாண்டு பல கோடி நூறாயிரம் ஆண்டு வாழ்ந்து நாட்டு மக்களை காப்பாற்ற வேண்டுமென்று கூறிக்கொள்கிறேன்.

வெந்த புண்ணில் நாங்கள் வேல் பாய்ச்சவில்லை. நீங்கள் ரணமாக்கிச் சென்றதற்கு எங்கள் அன்னை மருந்து கொடுத்து, (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) தவித்த வாய்க்கு தண்ணீர் கொடுத்து, பசித்த வயிற்றுக்கு சோறு போட்டு காத்துக் கொண்டிருக்கிறார் என்று கூறி, தாயின் பொற்பாதங்களை வணங்கி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. பொன்முடி. (குறுக்கீடு)

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் அவரவர்களுடைய கருத்துகளை சொல்வதில் நான் தலையிட விரும்பவில்லை. ஆனால், ஒரு மத்திய அமைச்சர் உயிருக்குப் போராடிக் கொண்டு, அமெரிக்காவிலே இன்றையதினம் சிகிச்சை பெறுகின்றார். அதைக் கொச்சைப்படுத்துகின்ற வகையிலே மாண்புமிகு உறுப்பினர் பேசியதை அவைக் குறிப்பிலிருந்து நீக்குவது நல்லது என்று நான் கருதுகின்றேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மத்திய அமைச்சர் அரசு செலவில், வெளிநாட்டில் மருத்துவ சிகிச்சை பெற்றுக் கொண்டிருக்கும்போது, அதற்கு என்ன செலவாயிற்று, அந்த விவரங்களை அரசு வெளியிட வேண்டும் என்று கேட்பதில் எந்தத் தவறும் இல்லை. காரணம், அது மக்கள் பணம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. பொன்முடி, (குறுக்கீடு) டாக்டர் பொன்முடி. (குறுக்கீடு) புகழேந்தி, பொன்முடி அவர்கள்தான் பேசப் போகிறார். (குறுக்கீடு)



***திரு. துரைமுருகன்:** மாண்புமிகு முதலமைச்சர் சொன்னதைப் போல, கேட்பதிலே தவறு இல்லை. ஆனால், கேட்கிற இடம்தான் சரியில்லை. உங்களுடைய பாராளுமன்ற உறுப்பினர், பாராளுமன்றத்திலே கேட்டார். அதற்கு உரிய அமைச்சர் பதிலைத் தந்திருக்கிறார் என்பது முதலமைச்சர் அவர்களுக்குத் தெரியும்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** Speaker Sir, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிற விவசாயிகளுடைய...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன், பிறகு, நீங்கள் பேசும்போது சொல்லுங்கள். (குறுக்கீடு) டாக்டர் க. பொன்முடி. (குறுக்கீடு) ஏன் காலம் கடந்து பாராட்டுகிறீர்கள். பழனிசாமி அவர்கள்தான் முதலில் பாராட்டைச் சொல்லிவிட்டாரே.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிற மக்களுக்கு நிவாரணம் அளிக்கக்கூடிய முறையில், 350 கோடி ரூபாய் நிவாரணத் தொகை அளிக்கப்பட்டு இருக்கிறது. அதற்கு நான் நன்றி சொல்கிறேன். என்று அறிவிக்கப்பட்டு இருக்கிறது. அதற்கு நான் நன்றி சொல்கிறேன். அதோடு, என்னுடைய தாழ்மையான ஒரு வேண்டுகோள்.

*முற்பகல் 11-55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதோடு என்று சொல்வதெல்லாம் அப்புறம் வைத்துக்கொள்ளுங்கள். (குறுக்கீடு) டாக்டர் பொன்முடி (குறுக்கீடு) பொன்முடி, பேசுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தவரையில், இது வாக்களித்த மக்களை வதைக்கிற ஒரு நிதிநிலை அறிக்கையாகத்தான் இருக்கிறது. சமீபகாலமாக யானையே பாகனைக் கொல்லுகிற நிகழ்ச்சிகளைப் பார்த்துக்கொண்டிருப்பதைப்போல, வாக்களித்த மக்களுக்கே ** ஒரு நிதிநிலை அறிக்கையைப்போல இந்த அறிக்கை அமைந்திருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொன்முடி ** என்பதெல்லாம் அமங்கலமான ஒரு சொல்.

**டாக்டர் க. பொன்முடி:** சரி, நன்றி. அந்த வார்த்தையை எடுத்து விடுங்கள். அந்த வார்த்தையை எடுத்துக்கொள்ள ஒப்புக்கொள்கிறேன். வாக்களித்த மக்களை வருத்துவதாக இருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கருத்துகளைச் சொல்வதற்கு எத்தனையோ முறை இருக்கிறது.

**டாக்டர் க. பொன்முடி:** வாக்களித்த மக்களே வருத்தம் தெரிவிப்பதாக இருக்கிறது. பிரான்சு நாட்டைப் பொறுத்தவரையிலே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொன்முடி தெரிவித்த வார்த்தை அவைக் குறிப்பில் இருந்து நீக்கப்படுகிறது.

**டாக்டர் க. பொன்முடி:** பிரான்சு நாட்டைப் பொறுத்தவரையிலே, அந்த நாட்டிலே புரட்சி ஏற்படுகிறபோது, அந்த நாட்டினுடைய பொருளாதார நிலைமையைப்பற்றிச் சொல்வார்கள். Nobles fight; Clergy Pray; Peasants Pay என்று சொல்வார்கள். அங்கே பிரபுக்களும், மேதை ஆண்டனா, அந்த நாட்டினுடைய அரசியாக இருந்தவர்களும், ஆடம்பர வாழ்க்கை வாழ்ந்துகொண்டிருந்தபோது வரிச் சுமைகள் முழுவதும், அந்த நாட்டினுடைய விவசாயப் பெருங்குடி மக்களின் மீதும், பாட்டாளி மக்களின் மீதும் சுமத்தப்பட்டிருந்ததாக அந்த நாட்டினுடைய வரலாற்றில் சொல்வார்கள். அப்படித்தான் இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தவரையில், நடுத்தர வர்க்கத்தைச் சார்ந்தவர்கள். Middle class, Lower middle class, தொழிலாளர்கள் போன்றவர்களின்மீது அவர்களினுடைய சலுகைகள் பறிக்கப்பட்டிருப்பது மட்டுமின்றி, அவர்களின் மீது வரிச் சுமையும் அதிகமாகத் திணிக்கப்பட்டிருக்கிறது என்பதற்கு என்னால் இந்த நிதிநிலை அறிக்கையில் இருந்து பல்வேறு எடுத்துக்காட்டுகளைச் சொல்ல முடியும். குறிப்பாக, இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தவரையில், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்,

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



இதிலே ஒரு கொள்கைக் குறிப்பைக்கூட குறிப்பிட்டு இருக்கிறார்கள். அவருடைய நோக்கமாக வருவாய்ப் பற்றாக்குறை, பக்கம் 90-ல், வருவாய்ப் பற்றாக்குறையின் அளவு நிதிப் பற்றாக்குறையில் 35 சதவிகிதம் என்ற அளவுக்கு படிப்படியாக குறைக்கப்படும் என்று சொல்லி இருக்கிறார். அதை நான் வரவேற்கிறேன். அதிலே குறைக்க வேண்டும் என்பதிலே கருத்து வேறுபாடு இல்லை. ஆனால், அதிலே 88 ஆவது பக்கத்திலே சொல்கிறபோது, வருவாய்ப் பற்றாக்குறை, நிதிப் பற்றாக்குறையில் 35 சதவிகிதத்திற்கு மேல் அது அதிகரித்தால், அது நடைமுறைக்கு உகந்த அறிவார்ந்த செயலாக இருக்காது;—valued judgement—அது அறிவார்ந்த செயலாக இருக்காது என்று சொல்கிற மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள், இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே 56.64 சதவிகிதமாக இந்த வேறுபாடு இருப்பதற்கு என்ன காரணம்? ஆகவே, (குறுக்கீடு)

*மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அத்தகைய நிலையே 1996-ல் இருந்து 2001 வரை எப்படி எப்படி நீங்கள் உருவாக்கிவிட்டுச் சென்றீர்கள் என்பது White Paper-ல், வெள்ளை அறிக்கையிலே தெளிவாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. வெள்ளை அறிக்கையைப் படித்துவிட்டு இதுகுறித்துப் பேசவும்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஐந்தாண்டுகளுக்குப் பிறகு, 3 நிதிநிலை அறிக்கையை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் அளித்திருக்கிறீர்கள். நீங்கள் அளித்த முதல் நிதிநிலை அறிக்கையிலே 57.8 சதவிகிதம்தான் அந்த வேறுபாடு. நீங்கள் அளித்த இரண்டாவது நிதிநிலை அறிக்கையிலே 16 சதவிகிதம் உயர்ந்ததே அது எதனால்?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் கொடுக்காமல் விட்டுச் சென்ற, ஒப்பந்தக்காரர்களுக்கு தரவேண்டிய பணம் ரூ. 1700 கோடிக்கு மேல்; ஊழியர்களுக்கு, அரசு ஊழியர்களுக்கு தராமல் சென்றுவிட்ட பணம்; வாங்கிய கடனை காலத்தே கட்டாமல் சென்று விட்டது; போக்குவரத்துக் கழகங்களினுடைய பேருந்துகளுக்கு டீசல் வாங்குவதற்குக்கூட வகையின்றி டீசல் தரமாட்டோம் கடனைக்

கட்டு என்று இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் சொல்லக்கூடிய அளவிற்கு அங்கு 1300 கோடி ரூபாய்க்கு மேல் கடனை விட்டுவிட்டுச் சென்றீர்கள். அந்தக் கடனை எல்லாம் கட்டிய பிறகுதானே, இந்த நிலைக்கு நாங்கள் வரமுடியும் (மேசையைத் தட்டும் ஒலி) திவால் ஆக்கிவிட்டு சென்று விட்டீர்கள்; கஜானாவை காலியாக்கிவிட்டு சென்று விட்டீர்கள்; ஏகப்பட்ட கடனை வெளியிலே வைத்துவிட்டுச் சென்றுவிட்டீர்கள்; வரி போட்டாலும் வரி போடக்கூடாது என்று சொல்கிறீர்கள்; நானா நோட்டு அடிக்க முடியும்? எப்படிப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும்? எண்ணிப்பார்க்க வேண்டும்.

**டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே, valued judgement என்று சொன்னதால்தான் நான் சொல்ல வந்தேன். அறிவார்ந்த செயலாக இருக்காது என்று சொல்லிவிட்டு, நாமே அதைச் செய்தால் எப்படி என்று சொல்ல வந்தேன். (குறுக்கீடு) கொஞ்சம் பேசிவிடுகிறேன், சார்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிவார்ந்த செயல் மேற்கொள்ளப்படாத காரணத்தால், அறிவார்ந்த செயல் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று சொல்லி, எத்தகைய அறிவார்ந்த செயலை மேற்கொண்டு இருக்கிறோம் என்பதை பின் இணைப்பிலே கொடுத்திருக்கிறோம். அதையும் சேர்த்துப் படித்துப் பார்த்தால் புரிந்துகொள்ளலாம்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தயவுசெய்து ஒரு வேண்டுகோள். அவர் 7 மணி நேரம், 8 மணி நேரம் பதில் அளிப்பதற்குக்கூட, அவருக்கு வாய்ப்பு இருக்கிறது. வரிக்கு வரி குறுக்கிட்டுக்கொண்டு இருந்தால் எப்படி? நான் சொல்ல வேண்டிய கருத்துகளை முதலில் வாங்கிக் கொள்ளுங்கள். பிறகு பதில் சொல்லச் சொல்லுங்கள். (குறுக்கீடு) அதைச் செய்யச் சொல்லுங்கள். நானும் அதைத்தான் சொல்கிறேன்.

நண்பகல் 12-00

உங்கள் நிதிநிலை அறிக்கையிலே ஏன் முதல் ஆண்டு குறைந்தது? அடுத்து 16 சதவிகிதம் உயர்ந்திருக்கிறதே; அதற்குப் பல்வேறு காரணங்கள் இருக்கின்றன. ஆகவே, 35 சதவிகிதம் வேறுபாடு இருக்கவேண்டும் என்பது வேறு; முயற்சிப்பது என்பது வேறு. அது



கொள்கை ரீதியாக நீங்கள் எடுக்கின்ற நடவடிக்கைகள். அது எப்படி இருக்கும் என்பதை பின்னால் பார்க்கலாம், ஐந்து வருடங்களுக்குப் பிறகு. முயற்சிகளை வரவேற்கிறோம். ஆனால், அதேநேரத்திலே, இதுபோன்று முதல் ஆண்டிலே குறைந்தது என்று சொல்லிவிட்டு, அடுத்து 16 சதவிகிதம் இருக்கிறது, அந்த வார்த்தைகள் valued judgement என்பது எல்லாம் இல்லாமல் இருந்திருந்தால் நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தவரையில் சரியாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

அடுத்ததாக, இந்த அறிக்கையைப் பொறுத்தவரையில், எங்களுடைய மாண்புமிகு உறுப்பினர் தளபதி ஸ்டாலின் அவர்கள் இங்கே பேசுகிறபோது ஒன்றைக் குறிப்பிட்டார்கள். வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சுகிறது என்று. குறிப்பாக, பல தரப்பினரும் இன்று வீதியிலே வந்து போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

முதலிலே போக்குவரத்துத் தொழிலாளர்கள். அவர்களைப் பொறுத்தவரையிலே போனஸ் 20 சதவிகிதத்திலிருந்து 8.33 சதவிகிதமாகக் குறைந்துவிட்டதே, ஊதிய ஒப்பந்தம்கூடச் செய்யமுடியாமல் போய்விட்டதே என்று நொந்துபோய்க் கொண்டிருந்த அந்த மக்களிடையே, தொழிலாளர்களிடையே போக்குவரத்துக் கழகங்கள் தனியார்மயமாக்கப்படும் என்ற வேலைப் பாய்ச்சியிருக்கிறீர்கள். ஆகவேதான் அவர்கள் ஊர்வலமாக வந்து இந்த அரசிடம் தங்களுடைய கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், Maxi-cab, Taxi வைத்திருப்பவர்கள் எல்லாம் டீசல் விலை உயர்வு—நீங்களே குறிப்பிட்டதைப்போல—உதிரி பாகங்களின் விலை உயர்வு இவற்றால் பாதிக்கப்பட்டு நொந்துபோய்க் கொண்டிருக்கிற அவர்களுடைய உள்ளங்களிலே அதனுடைய வரியை இரண்டு பங்காக உயர்த்தி வேலைப் பாய்ச்சியிருக்கிறீர்களே என்று அவர்களும் இன்று போராட்டக் களத்தில் குதித்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மன்னிக்க வேண்டும். ஏழைகள் செல்வது அரசுப் பேருந்துகள் அல்லது பேருந்துகள். சற்று வசதிபடைத்தவர்கள் செல்வது Maxi-cab. மாண்புமிகு உறுப்பினர் வசதிபடைத்தவர்களுக்கு வக்காலத்து வாங்குவதனுடைய மர்மம் புரியவில்லை.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிப்பட்ட முறையில் கார் வைத்திருப்பவர்கள் மீது நீங்கள் வரி போட்டிருப்பதை நான் எதிர்க்கவில்லை. Maxi-cab என்பது இன்று நடுத்தர வர்க்கத்தினர் பயணம் செய்யும் வாகனமாக இருக்கிறது. நாமெல்லாம் இளமையில் இருக்கும்போது வேன் ரொம்ப காஸ்ட்லியாக இருந்தது. இப்போது வேனில் நடுத்தர வர்க்கத்தினரும், கீழே இருக்கிற வர்க்கத்தினைச் சேர்ந்தவர்களும் சென்று கொண்டிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, பல பேருக்கு இந்த அரசாங்கத்தில் வேலை இல்லாத சூழ்நிலையில் சுயமாக வேலை செய்கிறவர்கள்கூட இன்று Maxi-cab வாங்கி வைத்துக்கொண்டு பலனடைந்து கொண்டிருக்கிறார்கள். சுய வேலைவாய்ப்பைப் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். இப்படி Maxi-cab, Taxi வைத்துக் கொண்டிருப்பவர்கள் எல்லாம் இருக்கிறார்கள். அவர்களும் இதனால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். நீங்கள் அவர்களுடைய நிலைமையை சிந்தித்துப் பாருங்கள். ஏதோ, பணக்கார வர்க்கத்திற்காக நான் வாதாடவில்லை. அதையும் நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். அவர்களுடைய உள்ளத்திலேயும் நீங்கள் வேலைப் பாய்ச்சியிருக்கிறீர்கள்.

அடுத்து மீனவர்கள். அவர்கள் பக்கத்து மாநிலத்தினால் கைது செய்யப்பட்டு கொண்டுபோகிற நிலைமை. அண்டை நாடுகளினால் கைது செய்யப்படுகின்ற நிலைமை. இப்படி இருக்கின்ற அவர்களுக்கு—ஒரு கட்டடத்தை மாற்ற வேண்டுமென்ற நிலையிலே, இந்த செக்ரடேரியட்டை மாற்ற வேண்டுமென்ற நிலையிலே அங்கேயிருக்கிற நொச்சிக்குப்பம் என்ற அந்த இடங்களை எல்லாம் மாற்றுகிறபோது அவர்களையும் இன்று கைது செய்கிறபோது காப்பாற்றுகிறவர்கள் இந்த நேரத்திலே....

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையில் என்ன கூறப்பட்டுள்ளதோ அதன்மீதுதான் மாண்புமிகு உறுப்பினர் பேச வேண்டுமே தவிர, வதந்திகளின் பேரிலும், யூகத்தின் பேரிலும் இங்கே கருத்துகளைத் தெரிவிப்பது சரியாக இருக்காது.



**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஒரு வரம்பு எல்லோருக்கும் இருக்குமானால் நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். உண்மையிலேயே முதலமைச்சர் மனசாட்சியோடு சொல்வார்கள் என்று சொன்னால், எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர் நிதிநிலை அறிக்கையிலேயா பேசினார்? தயவுசெய்து எண்ணிப் பாருங்கள். நாங்கள் மக்கள் பிரச்சினையைப் பற்றிப் பேசுகிறோம்—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொன்முடி, புதிய உறுப்பினர்களைப்பற்றிக் கவலையில்லை. நீங்கள் அமைச்சராக இருந்தவர். டாக்டர் பொன்முடி.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மூன்றாவது தடவையாகப் பேசுகிறார்கள். நான் மீனவர்களுடைய பிரச்சினையைப்பற்றிச் சொல்கிறேன். (குறுக்கீடு) நீங்கள் மாற்றவில்லை என்று சொன்னால் சரி. அவர்களுடைய பிரச்சினைகளை மக்கள் பிரச்சினைகளைச் சொல்லிக் கொண்டிருக்கிறோம். ஆக, மீனவர்கள் அதுபோன்ற நிலைமையில் இருக்கிறார்கள். தூத்துக்குடியிலே இருக்கின்ற மீனவர்கள் விசைப் படகுகளை ஓட்ட முடியாத காரணத்தால் அவர்களும் பாதிக்கப்பட்டிருப்பதாகப் பத்திரிகைகளிலே செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. ஆக, மீனவர்களைப் பொறுத்தவரையிலும் அவர்களுடைய நெஞ்சிலே இன்று வேல் பாய்ந்ததாக எண்ணி அவர்களும் இன்று போராட்டக் களத்திலே குதித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அடுத்து, சாலைப் பணியாளர்கள் வேலை போய்விட்டது. அரசு உத்தியோகம்தான் போய்விட்டதே என்று நொந்துபோய் இருந்த அவர்களுடைய உள்ளத்திலே, நீ அரசு ஊழியனாக இருந்தபோது வாங்கிய கடனையும், தவணை முறையில் இல்லாமல் ஒரேயடியாகச் செலுத்தவேண்டுமென்று அவனுக்கும் தபால் அனுப்பி, அவனும் இப்போது வெந்த புண்ணிலே வேலைப் பாய்ச்சியதாக போராட்டக் களத்திலே குதித்துக் கொண்டிருக்கிறான்.

அடுத்து குடிசைவாசிகள், கிலோ 3 1/2 ரூபாய் என்று விற்ற அரிசி இப்போது 6 ரூபாய் ஆகிவிட்டது; இலவச வேட்டி சேலையும் கிடைக்கவில்லையே என்று எண்ணிக் கொண்டிருந்த அந்த குடிசைவாழ் மக்கள் இன்று தங்களுக்குக் கிடைத்த, இலவசமாகக் கிடைத்துக்

கொண்டிருந்த விளக்கும் போய்விட்டதே என்று அவர்களும் இன்று போராட்டக் களத்திலே குதித்துக் கொண்டிருக்கிற ஒரு சூழ்நிலை உருவாகியிருக்கிறது...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவையில் இருந்துகொண்டு, காதை மூடிக்கொண்டு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் குடிசை விளக்குக்கு என்ன சொன்னார் என்பதைக் கவனிக்காமல் இருப்பது பேராசிரியர் என்று பட்டம் வைத்துக் கொண்டிருக்கிற பொன்முடிக்கு அழகல்ல. குடிசைகளுக்கு இலவச மின் விளக்குத் திட்டம் தொடர்கிறது.

பிற்பகல் 12-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, பேராசிரியர் ஒரே பேராசிரியர்தான்; இவர் டாக்டர் பொன்முடி.

**டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்ல வந்தது, 10 ரூபாய் அவர்களுக்கு மானியமாகக் கொடுக்கிறோம் என்று இப்பொழுது சொல்லியிருக்கிறீர்களே தவிர, அவர்களுக்கு இலவச மின்சாரம் கொடுக்கவில்லை. (குறுக்கீடு) சொல்கிறேன். அதைத் தான் பின்னால் சொல்ல வருகிறேன். ஆகவே, வியாபாரிகளைப் பொறுத்தவரையில் ஒருமுனை வரியாக இருந்தது இன்று பலமுனை வரியாக மாறிவிட்டதே என்று வேதனைப்பட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு Value Added Tax-VAT என்ற ஒரு வரியும் வரும் என்று சொல்லி, அவர்களையும் இன்று வீதிக்கு அழைத்து, நொந்து கொண்டிருந்த அவர்களுடைய உள்ளத்திலேயும் வேலைப் பாய்ச்சியிருக்கிறீர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி அவர்கள், அவர் இயக்கத்தைச் சார்ந்த மைய அமைச்சர்களிடம் சொல்லி இந்தியாவுக்கு VAT System-மே வேண்டாம் என்று ஓர் ஆணையை இடச் சொல்லுங்கள். நாங்கள் அதைக் கடைபிடிக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே மாமன்றத்தில் VAT Tax அறிவிக்கப்படும் என்று 1996-97 நிதிநிலை



அறிக்கையிலே அறிவிக்கப்பட்டு, 1997-98-லேயே அன்றைய முதல்வர், நிதி அமைச்சர் கலைஞர் அவர்கள், வியாபாரிகளோடு கலந்து பேசி அவர்களுக்குச் சரியாக வராது என்ற காரணத்தால், ஒத்திவைக்கப்படுகிறது என்று இதே மன்றத்திலேயே அறிவித்திருக்கிறார். அதையே நீங்கள் தொடரலாமே.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி அவர்கள், தவறான தகவலை அவைக்குத் தருகிறார்கள். VAT என்பதைப் பொறுத்தவரைக்கும், 1996-97லிருந்து பேச்சுவார்த்தை, மாநிலங்களோடு கலந்துரையாடல், தமிழகத்தினுடைய அன்றைய நிதி அமைச்சர் திரு. கருணாநிதி அவர்கள், தமிழகத்தில் VAT-ஐக் கொண்டுவருவோம் என்று மைய அரசுக்குத் தெரிவித்திருக்கிறார் Chief Ministers' Conference-லேயும் தெளிவுபடுத்தியிருக்கிறார். அதையொட்டி நடப்பாண்டில்தான் மைய அரசு அந்த முடிவை எடுத்திருக்கிறது. ஐந்தாண்டுக் காலம் பேச்சுவார்த்தை மட்டும்தான்.

**டாக்டர் க. பொன்முடி:** 1997-98 நிதிநிலை அறிக்கை பக்கம் 52. 'சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையில் மறு விற்பனையாளர்களுக்கு மதிப்புக் கூட்டு வரி முறையைச் செயல்படுத்த அறிவிக்கப்பட்டது. பின்னர் வணிகர்களின் கோரிக்கையை ஏற்று, மறுபரிசீலனை செய்யும் வரை இந்த வரிவிதிப்பு முறையை அமல்படுத்துவது ஒத்திவைக்கப்பட்டது' என்று சொல்லப்பட்டது.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் சொல்கிறேன். அவைக்கே ஒருவேளை அன்றைய நிதி அமைச்சர் தவறான தகவலைச் சொல்லியிருக்கிறார். VAT என்பதைப் பொறுத்தவரைக்கும் அனைத்து மாநிலங்களிலும் நடைமுறைப்படுத்த வேண்டும். That is an All India Policy. VAT cannot be introduced in a single province, unless it is being introduced for all the States in the Country. அந்த முடிவுக்கு மைய அரசு தற்போது வந்திருக்கிறது. அதை எல்லா மாநிலங்களும் ஏற்றிருக்கின்றன.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய செய்தித்தாள்களிலேகூட மாநிலங்கள் இதைப்பற்றி கலந்தாலோசிக்க வேண்டுமென்று மத்தியிலே இருப்பவர்கள் சொன்னதாகவும் பத்திரிகைகளிலே செய்தி வந்திருக்கிறது. ஆகவே, கலந்தாலோசிப்பதற்கு மத்தியிலே இருப்பவர்களே இப்போது தயங்கிக் கொண்டிருக்கிற காலக்கட்டத்தில் மாநிலத்திலே இருக்கிற நிதியமைச்சர் அவர்கள் அவசரப்படாமல் இருக்க வேண்டும். 31, 1, 2 எல்லாம் வியாபாரிகள் போராட்டம் அறிவித்திருக்கிறார்கள். குறைந்தபட்சம் அந்தப் போராட்டத்தையாவது நிறுத்த....

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** நாங்கள் மைய அரசிடம் தெளிவுபடுத்தியிருக்கிறோம். VAT-ஐ தமிழகத்திலே நடைமுறைப்படுத்துகிறபோது, 2400 கோடி ரூபாய் நமக்கு இழப்பு ஏற்படுகிறது. அந்த 2400 கோடி ரூபாய் இழப்பை ஈடுகட்டினால்தான் நடைமுறைப்படுத்துவோம் என்று சொல்லியிருக்கிறோம். அனைத்து மாநிலங்களும் VAT-ஐ கடைப்பிடிக்கின்றபோதுதான், இந்தியாவிலே VAT நடைமுறைக்கு வரும்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற முறைகளை மாநில அரசு அறிவிக்கிறபோது, சில மாநிலங்கள் பின்பற்றுவதே இல்லை. புதுவை மாநிலத்தில்கூட uniform tax என்று சொன்னோம். இன்றைக்கு நம் மாநிலத்தில் இருக்கிற வாகனங்கள் விற்பனை முழுவதும் பாதிக்கப்படுவதே புதுவையில் இருக்கிற அதனுடைய சட்டங்களினால்தான். Unifrom tax-ஐ அவர்கள் follow பண்ணுவதில்லை. ஆக மத்தியிலே இருப்பவர்கள் சொல்வதை சொல்லிக் கொண்டிருப்பார்கள். மாநில அரசினுடைய நிலைமைக்கேற்ப நாம் பின்பற்றுவது என்பது நீண்டகாலமாக சில விஷயங்களிலே பின்பற்றி வருவதுதான். அதுபோல, uniform tax-ஆக இருந்தாலும், Value Added Tax-ஆக இருந்தாலும் தமிழகத்தினுடைய வியாபாரிகளைக் கலந்து பேசியாவது, வணிகர்களைக் கலந்து பேசியாவது அதிலே இருக்கிற குறைகளை நிவர்த்தி செய்கின்ற வகையிலே நீங்கள் அதை அமல்படுத்துவதற்கு முயற்சிக்க வேண்டுமே தவிர, ஏதோ சொல்லிவிட்டார்கள் என்ற காரணத்திற்காக அதை நடைமுறைப்படுத்துவது சரியாக இருக்காது.



அதுமட்டுமல்ல, இங்கே அடிக்கடி விவசாயிகளுடைய பிரச்சினை பற்றி விவாதிக்கப்பட்டது. விவசாயிகளுடைய பிரச்சினைகளைப் பொறுத்தவரையில்கூட, விவசாயிகள் கரும்புக்கு ஆயிரம் ரூபாய் கிடைக்காதா என்று நொந்து போயிருந்தார்கள். விளைந்த நெல்லை விற்க முடியவில்லையே என்று வேதனைப்பட்டுக் கொண்டு இருந்தார்கள். அவர்களுடைய உள்ளத்திலே வேலைப் பாய்ச்சுவதைப் போல இந்த இலவச மின்சாரமும் எடுக்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்டு வந்த இலவச மின்சாரம் எடுக்கப்படவில்லை. இரத்து செய்யப்படவில்லை. சுருக்கமாக, தெளிவாகச் சொல்ல வேண்டுமென்றால், 3 எச்.பி. பம்ப் செட்டுக்கு அல்லது அதற்குக் கீழ் சக்தியுள்ள பம்ப்செட்டுக்கு ஆயிரம் ரூபாய் வழங்கப்படும். அதைப்போலவே, 5 எச்.பி. பம்ப்செட்டுக்கோ அதற்குமேல் உள்ள பம்ப்செட்டுக்கோ ஒவ்வொரு பம்ப்செட்டுக்கும் ஆண்டுக்கு ரூ.1,250/- இந்த அரசால் வழங்கப்படும். ஆகவே, சிறு, குறு விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் தொடருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

*பிற்பகல் 12-10*

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் தெரிந்துகொள்ள விரும்புவது, நீங்கள் இந்த H.P. யில்தான் கடைசி வரையில் அந்தக் கட்டணத்தை வசூலிக்கப் போகிறீர்களா? ஏனென்றால், நீங்கள் அறிவிப்பிலேயே ஒன்று சொல்லியிருந்தீர்கள்; யூனிட்டுக்கு 20 பைசா வசூல் செய்யப் போகிறோம் என்று சொல்லியிருந்தீர்கள். யூனிட்டுக்கு 20 பைசா என்று வசூல் செய்கிறபோது ஒரு எச்.பி. மோட்டார் ஓடினால் ஒரு மணி நேரம் ஓடினால் குறைந்தபட்சம் ஒரு யூனிட் ஆகும். 5 எச்.பி. இருந்தால் ஒரு மணி நேரம் ஓடினால் அதற்கு 5 யூனிட் ஆகும். ஐந்து Horse Power ஒரு மணி நேரம் ஓடினால் 5 யூனிட் ஆகும். ஒரு நாளைக்கு, ஒரு ஏக்கர் நெல் நட்டிருப்பவர்கள் பாய்ச்ச வேண்டுமென்றால்கூட குறைந்தபட்சம் 5 மணி நேரம் ஆகும். ஒரு மூன்று ஏக்கர் - நீங்கள் சொல்கிற 2½-லிருந்து 5 ஏக்கர் குறு விவசாயிகள், அந்த விவசாயிகள் வைத்துக்கொண்டிருந்தால்கூட, 3 ஏக்கருக்கு ஒரு நாளைக்குப் பாசனம்

பண்ண வேண்டுமென்றால் கிட்டத்தட்ட 15 மணி நேரம் இறைத்தாக வேண்டும். இப்போது நம் அரசு கொடுக்கிற கரண்ட்டே இரவிலே 10 மணி நேரம் கொடுக்கிறது; பகலிலே 8 மணி நேரம் கொடுக்கிறது. இங்கே இருக்கிற பல பேர் விவசாயிகள்தான். அரசியலுக்கு அப்பாற்பட்டுப் பேசினால்கூட, ஒரு நாளைக்கு 15 மணி நேரம், 15 யூனிட் ஆகும். அதாவது, 10 மணி நேரம் ஓட்டினால் 50 யூனிட் ஆகும். யூனிட்டுக்கு 20 பைசா என்று போட்டீர்கள் என்றால் 50 யூனிட்டுக்கு ஒரு நாளைக்கு 10 ரூபாய் ஆகும். ஒரு மாதத்திற்கு 300 ரூபாய் ஆகும். 12 மாதம் அவன் ஓட்ட வேண்டாம். 10 மாதம் ஓடினால்கூட 3,000 ரூபாய்தான் வரும். நீங்கள் கொடுக்கிற...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சாரக் கட்டணங்களை நிர்ணயிப்பது State Electricity Regulatory Commission. இதில் அரசின் பங்கு எதுவுமே இல்லை. இந்த ஆணையம் என்ன சொல்லியிருக்கிறது என்றால், மீட்டர் பொருத்தினால் ஒரு யூனிட்டுக்கு 20 பைசா கட்டணம் விதிக்க வேண்டும் என்று கூறியிருக்கிறது. அதுவரை எச்.பி. கணக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய சந்தேகம் எல்லாம் அதுதான். மீட்டர் பொருத்தினால் என்று சொன்னால், மீட்டர் பொருத்திக்கொள்வது, விவசாயியே பொருத்திக்கொள்ளப் போகிறானா? E.B. Department பொருத்தப் போகிறதா? நீங்கள்தான் பொருத்தப் போகிறீர்கள். பொருத்தும்போது...

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு ஏற்பட்டிருக்கிற சூழ்நிலையில் இன்றைக்கு அனைத்து விவசாயிகளும் தமிழக அரசினுடைய அறிவிப்பை வரவேற்று ஆதரவு தெரிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி அவர்கள் சபையில் பேச வேண்டும்; அதைப் பதிவு செய்ய வேண்டுமென்ற நோக்கத்திற்காகப் பேசுகிறாரே தவிர, வேறெந்த விதமான நோக்கமும் இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



**டாக்டர் க. பொன்முடி:** இவ்வளவு புள்ளிவிவரங்களை சொல்லிப் பேசிக்கொண்டிருக்கிறேன். இதற்கு மின் துறை அமைச்சர் இப்படிப் பேசலாமா? மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இப்போது கேட்பது எல்லாம் கடைசி வரையிலே நீங்கள் Horse Power-லே வாங்கிக் கொள்ளுங்கள் என்று சொல்லிவிடுங்கள். நீங்கள் கொடுக்கிற உதவி இலவச மின்சாரம் என்று நானேகூடச் சொல்கிறேன். ஆனால் Horse Power கிடையாது; மீட்டர் பொருத்திய பிறகு யூனிட்டுக்குத்தான் வசூல் என்று சொன்னீர்கள் என்றால், It is not free current; it is only concessional current. நீங்கள் மின்சாரத்திற்கு சலுகை செய்கிறோம் என்று வேண்டுமானால் சொல்லுங்கள். ஆனால் இலவச மின்சாரம் என்று சொல்ல முடியாது. ஏனென்றால் இங்கு இருக்கிற எல்லோரும் விவசாயிகள். நீங்கள் போய் மீட்டர் போட்டுவிட்டு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு மணித்துளிகள் முடியுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** மீட்டரைப் போட்டுவிட்டு யூனிட் மூலமாக நாம் பார்த்தோம் என்றால் அந்தச் சூழ்நிலைதான் வரும். அதனால்தான் சொல்கிறேன். ஆகவே, அதுமட்டுமல்ல. நீங்கள் 3 Horse Power, 5 Horse Power என்று எல்லாம் சொல்லியிருக்கிறீர்கள். உண்மையிலேயே நீங்கள் யாராவது நடுநிலையோடு, இதைப் பார்க்க வேண்டும். ஒரு E.B. அதிகாரி நான்கு நாளைக்கு முன்னாலே ஒரு பேட்டி அளித்ததைப் பார்த்தேன். பழைய retired ஆன E.B. Chairman ஒரு டி.வி. யிலே பேட்டி கொடுத்துக் கொண்டிருந்தார். அவர் சொன்னார்; நாம் வாங்குகிற மின்சாரம் நெய்வேலியிலே வாங்குகிற மின்சாரம் ரூ. 1.90-க்கு வாங்குகிறோம். நாம் கொடுக்கிற தனியார் கிட்டே வாங்குகிற மின்சாரம் சில நேரங்களிலே 5 ரூபாய்க்கு கூட வருகிறது. ஆக தனியாரிடம் வாங்குகிற மின்சாரத்தைவிட நெய்வேலியிலேயே மின்சாரத்தை வாங்கினால் நாம் இந்த இழப்புகளை ஈடுகட்ட முடியும் என்று அந்த Retired Chairman சொன்னார். அதிலே எந்த அளவிற்கு உண்மை இருக்கிறது என்பது எனக்குத் தெரியாது. நீங்கள் யோசித்துப் பாருங்கள்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய தொகுப்பிலிருந்து, நெய்வேலியிலிருந்து மின்சாரம் நம்முடைய அளவிற்கு அதிகமாகவே நாம் வாங்கிக் கொண்டிருக்கிறோம். இப்போது கூடங்குளத்திலே இருந்து வரக்கூடிய அனல்மின் நிலையத்திலேகூட பெரும்பான்மையான அளவில் நமக்குத் தரவேண்டுமென்று கேட்டிருக்கிறோம். மத்தியத் தொகுப்பிலிருந்து முடிந்த அளவிற்கு நாம் அதிகப்படியாக மின்சாரத்தை வாங்கிக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நாளைய தேவை என்பது ஏறக்குறைய 6,800 மெகாவாட் அளவு ஆகும். அதில் நெய்வேலியில் மட்டும் ஏறக்குறைய 1,800 மெகாவாட் உற்பத்தி செய்யப்படுகின்ற நிலையில் நம்முடைய மாநிலத்தில் அனல், புனல் எல்லாவற்றையும் நாம் depend செய்துகொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெய்வேலியிலே surplus ஆக இருக்கிற காரணத்தினால் குறைந்த விலையில் கிடைக்கிறபோது அதையும் வாங்கலாம் என்பதுதான் என்னுடைய கருத்து. அதைச் செய்தால் அவர் சொன்ன கருத்தை....

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய தொகுப்பிலிருந்துதான் ஒவ்வொரு மாநிலத்திற்கும் இவ்வளவு, இவ்வளவு மெகாவாட் என்று பிரித்து அனுப்பப்படுகிறது. எனவே அது உடன்பாட்டின்படிதான் செய்யப்படுகிறது. அந்த உடன்பாடு மீறப்படக் கூடாது.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெய்வேலியில் அதிகப்படியான மின் உற்பத்தி செய்யப்பட்டிருப்பது உண்மை என்றால், உங்கள் ஆட்சிக் காலத்தில் தனியாருக்கு ஊக்குவிப்புத் தந்து P.P.A. அவர்களோடு agreement போட்டு எதற்காக தனியாரிடமிருந்து நீங்கள் வாங்கினீர்கள்?



**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே புதிதாக நாங்கள் வந்து ஒப்பந்தம் செய்தோம் என்பது உண்மையல்ல. ஏற்கெனவே அ.தி.மு.க. ஆட்சி இருக்கும்போது 13 திட்டங்களுக்கு தனியார்களுக்கு M.O.U.—Memorandum of Understanding போடப்பட்டிருந்தது. அது படிப்படியாக ஒவ்வொரு மாநிலத்திலேயும் அப்போது நரசிம்மராவ் அவர்கள் பிரதமராக இருந்தபோது— நம்முடைய அம்மையார் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது இந்தியா முழுவதும் அது அனுமதிக்கப்பட்டது. அப்படி வந்த திட்டங்களிலே இரண்டு திட்டங்கள் தமிழ் நாட்டிலேயும் அமல்படுத்தப்பட்டன.

*பிற்பகல் 12-15*

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, M.O.U. Sign பண்ணப்பட்டது மாண்புமிகு அம்மாவினுடைய ஆட்சியிலே. எதற்காக என்றால் நம்முடைய மாநிலம் மின்சாரத்திலே தன்னிறைவு பெற வேண்டும் என்கிற ஓர் உயர்ந்த நோக்கத்தோடு செய்யப்பட்டது. ஆனால் அதன் பிறகு Power Purchase Agreement நீங்கள் போட்டு நீங்கள் வந்தீர்கள். அதிகமான அளவுக்கு மின் கட்டணத்தை அவர்களுக்குக் கொடுத்தீர்கள் என்பதுதான் குற்றச்சாட்டு.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவா அவர்களே, அதுமட்டும்அல்ல. எங்கள் ஆட்சிக் காலத்தில் ஒருவேளை நாங்கள் M.O.U. அதற்கான துவக்கத்தை மேற்கொண்டிருந்தாலுங்கூட நீங்கள் ஆட்சியில் இருந்தபோது நெய்வேலியிலே அதிகமாக மின்சாரம் இருந்தபோது முன் ஆட்சியில் எடுத்த முடிவு வேண்டாம், தனியார் மின்சாரமே வேண்டாம், நெய்வேலி மின்சாரம் மட்டுமே போதும் என்ற முடிவை நீங்கள் எடுத்திருக்கலாம் அல்லவா?

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெய்வேலியிலே இருக்கிற மின்சாரத்தை மட்டும் நாம் பயன்படுத்தி இருப்போமேயானால் நமக்குப் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கும். (குறுக்கீடு) அதுதான் சொல்ல வருகிறேன்.

அதற்குப் பிறகு Power Purchase Agreement என்பது நாமாக ஒரு விலையை நிர்ணயிப்பதல்ல. மத்திய அரசாங்கம் எந்தெந்த நிறுவனங்களுக்கு எவ்வளவு கட்டணம் நிர்ணயிக்க வேண்டும் என்று முடிவு செய்கிறது. உதாரணத்திற்குச் சொல்கிறேன். நாப்தா பயன்படுத்தினால் எவ்வளவு கட்டணம், gas பயன்படுத்தினால் எவ்வளவு கட்டணம் என்றெல்லாம் Norms வைத்திருக்கிறார்கள். மின்சார வாரியம் அதையெல்லாம் கணக்கிட்டு மத்திய அரசுக்கு அனுப்புகிறது. அவர்கள் இந்தக் கட்டணத்திற்குத்தான் வாங்க வேண்டும் என்று முடிவு செய்கிறார்கள். அதைத்தான் அப்போது வாங்கினோம். இப்போதும் நடைமுறையிலே இருக்கிறது.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொன்முடி அவர்களுடைய தவறான கேள்விக்குச் சரியான விளக்கம் தந்த மாண்புமிகு ஆற்காட்டார் அவர்களுக்கு நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இலவச மின்சாரத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி எழுப்பிய சந்தேகத்திற்கு நான் விடை அளிக்க விரும்புகிறேன். Electricity Regulatory Commission ஒரு மதிப்பீடு செய்திருக்கிறது. அதாவது ஒரு ஹார்ஸ் பவருக்கு ஓர் ஆண்டிற்கு average consumption என்பது 1000 யூனிட்டுகள் என்று கணக்கிட்டுள்ளது. ஆகவே ஒரு 5 H.P.-set-க்கு ஆண்டுதோறும் ஆகக்கூடிய consumption 5 ஆயிரம் யூனிட்டுகள். யூனிட்டிற்கு 20 காசு என்ற விலையில் ஆண்டுக்குக் கட்ட வேண்டிய கட்டணம் 1,000 ரூபாய் அவ்வளவுதான். ஆனால் அரசு அவர்களுக்கு 1,250 ரூபாய் கொடுக்கிறது. ஆகவே மீட்டர் பொருத்தினால்கூட இந்த சிறு, குறு விவசாயிகளுக்கு இலவசமாக மின்சாரம் கிடைக்கும் என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் கோபப்படக்கூடாது. இந்த அதிகாரிகள் கொடுக்கிற புள்ளிவிவரக் கணக்குகளை, தயவுசெய்து, நடைமுறையிலே இருக்கிற விவசாயிகளிடம் கேட்டுப் பாருங்கள். நான் சொல்வதெல்லாம் (குறுக்கீடு) நான் சொல்வதெல்லாம் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த Horse-Power-லே நடைமுறைச் சிக்கல் இருக்கிறது.



சாதாரணமாக நீர்மூழ்கி மோட்டார் என்று சொன்னால் அது ஆர்.பி.எம். Revolutions per minute என்பது 2,880 சுழற்சி. சாதாரண மோட்டார், நீர்மூழ்கி மோட்டார் இல்லாமல் immersible மோட்டார் இல்லாமல் வெளியிலே இருக்கிற மோட்டார் இருக்கிறது பாருங்கள் அது 1,440 ஆர்.பி.எம். அதற்கு யூனிட் வேறு. நீர்மூழ்கி..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு மணித் துளிகளில் உரையை முடித்து விட வேண்டும்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொஞ்சம் நல்ல argument-லே சொல்வதற்கு, நான் சுட்டிக்காட்டுவதற்கு வாய்ப்பு கொடுங்கள். நான் வேறு ஒன்றும் தவறாகச் சொல்லவில்லை. அதிலே ஆர்.பி.எம். அவ்வளவு இருக்கிறது. அதனால் தயவுசெய்து அவர்கள் சொல்கிற கணக்கு என்பது நடைமுறை விவசாயிகளைக் கூப்பிட்டு கேட்டுப் பாருங்கள். சரி உங்கள் வாதத்தையே நான் ஒத்துக்கொள்கிறேன். யூனிட் போட்டால் கம்மியாக ஆகிறது என்கிறீர்களே அப்புறம் எதற்கு யூனிட் மீட்டர் பொருத்தப் போகிறீர்கள்? ஹார்ஸ் பவர் மூலமாக கடைசி வரையில்...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீட்டர் ஏன் பொருத்தப் போகிறீர்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் கேட்கிறார். மீட்டர்களை 31-12-2003-க்குள் பொருத்துகிறோம் என்று ஒப்புக் கொண்டதே உங்களுடைய தி.மு.க. ஆட்சிதான். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே 2, 3 முறை இந்த அவையிலே சொல்லியிருக்கிறார்கள். 2001 ஆம் ஆண்டு மத்திய அரசாங்கமும் நிதி நிறுவனங்களும் வந்து தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய மின்சார வாரியத்திற்குக் கடன் கொடுக்க வேண்டுமென்றால் நீங்கள் எந்த அளவிற்கு உற்பத்தி செய்கிற மின்சாரத்தை விநியோகிக்கிறீர்கள் என்ற ஒரு கேள்வியைக் கேட்டார்கள். தொழிற்சாலைகள், வீடுகள், வணிக நிறுவனங்களுக்கெல்லாம் 56% மின்சாரத்தை நாம் பயன்படுத்தினோம். 17% line loss மின் இழப்பு ஏற்பட்டது. மீதி ஏறக்குறைய 27% விவசாயிகளுக்கும் குடிசைகளுக்கும் கொடுத்தோம் என்று சொன்னோம்.

பிற்பகல் 12-20

அப்போது அவர்கள் அதற்கு என்ன கணக்கு இருக்கிறது என்று கேட்டார்கள். நாங்கள் சொன்னோம். ஏற்கெனவே தொழிற்சாலைகளுக்கு மீட்டர் வைத்திருக்கின்றோம். வணிக நிறுவனங்களுக்கு வைத்திருக்கிறோம். விவசாயிகளுக்கு மீட்டர் வைக்கவில்லை என்று சொன்னபோது அவர்கள் ஒரு suggestion சொன்னார்கள். நீங்கள் இலவச மின்சாரம்கூட கொடுங்கள், ஆனால் விவசாயிகளுக்கு மீட்டர் பொருத்தினால் எவ்வளவு அவர்கள் பயன்படுத்துகிறார்கள் என்று துல்லியமாக கணக்குத் தெரியும் என்று சொன்னார்கள். ஆனால், அதற்காக நாங்கள் ஒப்பந்தம் செய்யவில்லை. அந்த suggestion-ஐ நாங்கள் பரிசீலிக்கிறோம் என்று சொன்னோம். ஆனால்....

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே இதைப் பற்றித் தெளிவாக இந்த அவையில் விளக்கியிருக்கிறேன். அப்போது மாண்புமிகு முன்னாள் அமைச்சர் இந்த அவையில் இல்லை. தி.மு.க. ஆட்சியில் இருந்தபோது அவர்கள் Accelerated Power Development Programme என்ற திட்டத்தின்கீழ் முன்பணமாக மத்திய அரசிடமிருந்து நிதியைப் பெற்றுவிட்டார்கள். இதற்கு அவர்கள் ஓர் ஒப்பந்தம் செய்துகொள்வதாக ஒப்புக்கொண்டார்கள். அந்த ஒப்பந்தத்தின்படி ஒரு Memorandum of Understanding- கையெழுத்திட வேண்டும். அதில் மின்சாரத் துறையில் பல சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும். Electricity Regulatory Commission என்னும் ஆணையத்தை அமைக்க வேண்டும். தமிழ்நாடு மின்சார வாரியம், இந்த ஆணையத்திற்கு முன்னால் 2002 செப்டம்பர் 30ஆம் தேதிக்குள் மின்சார கட்டணங்களைத் திருத்தி அமைப்பதற்கான விண்ணப்பத்தைத் தாக்கல் செய்ய வேண்டும். மேலும், 2003 டிசம்பர் 31ஆம் தேதிக்குள் மின்சாரம் பயன்படுத்துகின்ற அனைவருக்கும் மீட்டர் பொருத்தப்பட வேண்டும், இந்த ஷரத்துக்களுக்கெல்லாம், இந்த நிபந்தனைகளுக்கெல்லாம் ஒப்புதல் அளித்துதான் முந்தைய தி.மு.க அரசு மத்திய அரசிடமிருந்து முன்பணத்தைப் பெற்றுக்கொண்டு விட்டது. ஆகவேதான், நாங்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தபிறகு, அந்த ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போடுவதைத் தவிர எங்களுக்கு வேறு வழியில்லாமல் போய்விட்டது.



**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** முதலமைச்சர் சொல்கின்ற நோத்திலே நான் குறுக்கிட விரும்பவில்லை. அப்படி ஒரு கருத்து சொல்லப்பட்டபோது, மின்சார வாரியம் அப்போது ஒப்பந்தம் செய்யவில்லை. 2002 ஆம் ஆண்டு ஜனவரி மாதம்தான் திரு. சங்கர், ஐ.ஏ.எஸ். அவர்கள் Chief Secretary-ஆக இருந்தபோதுதான் அந்த ஒப்பந்தம் செய்யப்பட்டது. இதை மத்திய அரசாங்கம்....

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அதை மறுக்கவில்லை. திரும்பத் திரும்ப என்ன சொல்லிக்கொண்டிருக்கிறேன். இத்தகைய ஒரு ஒப்பந்தத்தில் தமிழக அரசு கையெழுத்திடும் என்று ஒப்புக்கொண்டது முந்தைய தி.மு.க. அரசு, அவர்கள் கையெழுத்துப் போடவில்லை. ஆனால், இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திடுகிறோம் என்று ஒப்புக்கொண்டு முன்பணத்தைக்கூடப் பெற்றுவிட்டார்கள். அதனால்தான் நாங்கள் ஆட்சிக்கு வந்தபிறகு, வேறு வழியின்றி இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போட வேண்டிய கட்டாயம் எங்களுக்கு ஏற்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொன்முடி, ஒரு மணித்துளியில் பேசி முடியுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** என்னங்க?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவ்வளவுதான், அவ்வளவுதான்.

**டாக்டர் க. பொன்முடி:** எல்லோருமே interruption-ல் பேசிக் கொண்டிருந்தால் நான் எங்கே பேசுவது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, நீங்கள் 15 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆணையம் உருவாக்கப்பட்டது, 1998 இல். 2001 வரை இந்தக் கழகம் ஆட்சியிலே இருந்தது. 3 ஆண்டுகள்....

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தவறாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார். ஆணையம் அமைக்கப்பட்டது 1999-ல், உங்கள் ஆட்சியில்.

[2003 மார்ச் 28

**டாக்டர் க. பொன்முடி:** நன்றி. 1999-லிருந்து 2001 வரை இரண்டு ஆண்டு காலம் ஆட்சியில் இருந்தபோதுகூட இலவச மின்சாரத்தை நாங்கள் இரத்து செய்யவில்லை. ஏனென்றால், நீங்கள் சொன்னதாகச் சொன்னார்கள். அப்படியே உங்கள் வாதத்தை ஏற்றுக்கொண்டாலும் திராவிட முன்னேற்றக் கழக அரசு சொன்னதையெல்லாம் செய்கின்றோமா? அதிலே எவ்வளவோ மாற்றம் செய்கின்றீர்கள். எவ்வளவோ செய்து கொண்டிருக்கிறீர்கள்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் Regulatory Commission அமைத்தார்கள். அதற்கு நீதிபதியெல்லாம் போடப்பட்டது. அதில் நீதிபதி வந்து பதவி ஏற்கவில்லை என்பதற்காக அவர்கள் வேண்டுமென்றே இதைச் செய்தார்களே தவிர, வேறு எந்தக் காரணமும் இல்லை.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரும்பினால் தாங்கள் மாண்புமிகு உறுப்பினருக்குப் பேசுவதற்கு அதிகமான நேரத்தைத் தரலாம். அதில் எனக்கு ஆட்சேபணையில்லை. ஆனால், பொதுவாக, தி.மு.க.-வில் இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள், நேற்று மாண்புமிகு உறுப்பினர் வேலு, இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி ஆகியோர் அரசின்மீது குற்றச்சாட்டுக்களை நாங்கள் சொல்லிக்கொண்டே இருப்போம், ஆனால், அரசு தரப்பில் அமைச்சர்கள் எழுந்து பதில் சொல்லவே கூடாது என்கிறார்கள். சட்டமன்றத்தின் தத்துவமே என்ன? மக்கள் பிரச்சினைகள் குறித்து சட்டமன்ற உறுப்பினர்கள் நியாயமான சந்தேகங்களை எழுப்ப வேண்டும். நியாயமான கேள்விகளைக் கேட்க வேண்டும். அதற்கு அரசு தரப்பிலேயிருந்து பதில் அளிக்க வேண்டும். விளக்கம் அளிக்க வேண்டும். ஆகவே, நீங்கள் வேண்டுமென்றே அரசின்மீது இல்லாத பொல்லாத குற்றச்சாட்டுக்களை இட்டுக்கட்டிக் கூறவேண்டும், அவற்றை அவைக்குறிப்பில் பதிவு செய்ய வேண்டும், நாங்கள் பதில் சொல்லவே கூடாது என்றால், அதில் என்ன நியாயம் இருக்கிறது? (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன், சொல்லிவிடுகிறேன். இத்தனைக்கும் நான் குறுக்கீடுகளையெல்லாம் கழித்துவிட்டுத்தான் அவர்கள் பேசுகின்ற நேரத்தை வைத்துத்தான் கணக்கிடுகிறேன்.



2003 மார்ச் 28]

**திரு. துரைமுருகன்:** பொதுவாக, உறுப்பினர்கள் பேசுகிறபோது அமைச்சர்கள் குறுக்கிட்டுப் பேசுவதற்கு எல்லா உரிமையும் உண்டு. உறுப்பினர்கள் தவறாகப் பேசினால் தெளிவுபடுத்துவதற்கு உரிமை உண்டு. அது அமைச்சருடைய கடமை. நான் மறுக்கவில்லை. ஆனால், முதலமைச்சருக்கும் தெரியும். மற்றும் இருக்கிற அமைச்சர்களுக்கும், தாங்களுக்கும் தெரியும். நீண்ட நாள் உறுப்பினர் நீங்கள். பெரும் பகுதி, முக்கியமாக, தவிர்க்கவே முடியாது. இது வேறுவிதமாகப் போய்விடும் என்கிறபோதுதான், தேருக்கு கொஞ்சம் முட்டுக்கட்டை போட்டு திருப்புவதைப்போல, அந்த இடத்தில் முதலமைச்சர் எழுந்து சொல்வார்கள். மிச்சத்தை அமைச்சர், பதில் சொல்கிற அமைச்சர், இப்படிச் சொன்னார்கள், என்று திரும்பிச் சொல்வார்கள். ஆனால், நான் இங்கே பார்க்கிறேன். வரிக்கு வரி, வரிக்கு வரி சொல்லிக் கொண்டிருப்பது, அது தயவுசெய்து..

*பிற்பகல் 12-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடர்ந்து வேண்டுமென்றே எதிர்க்கட்சி உறுப்பினர்கள், குறிப்பாக தி.மு.கழகத்தைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் தவறான விவரங்களையே, தவறான தகவல்களையே இந்த அவைக்குத் தந்து கொண்டிருக்கிறார்கள். Wrong facts present செய்து கொண்டிருக்கிறார்கள். அப்போது சரியான விளக்கத்தை இந்த அரசு தர வேண்டாமா?

**திரு. துரைமுருகன்:** நீங்கள் விளக்கம் தருவதிலே எந்தவிதமான தவறும் இல்லை. தவறான செய்தி சொன்னால் அதைத் திருத்துவதற்கு உங்களுக்கு உரிமையுண்டு. நான் மறுக்கவில்லை. ஆனால், அதைக் கொஞ்சம் பேசவிட்டுவிட்டு பின்னால்கூட எழுந்து சொல்லலாம். பேசுகிறவர் தவறாகக்கூடப் பேசுவார். நான் ஒத்துக்கொள்கிறேன். வரிக்கு வரி விளக்கம் சொல்கிறபோது பேசுகிறவருக்கு பேச்சு வராமலேகூடப் போய்விடும். ஆனால் உங்களுக்கு அப்படியல்ல. ஆளுங்கட்சிக்கு நிறைய நேரம் கொடுக்கிறீர்கள். எனவே, இதை நான் ஒரு வாதமாகவோ அல்லது right ஆகவோ கூடக் கேட்கவில்லை. இந்த மன்றத்தின் மரபுக்கு கொஞ்சம் மதிப்பு கொடுங்கள் என்றுதான் கேட்கிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எத்தனை குறுக்கீடுகள் வந்தாலும், அவற்றையெல்லாம் சமாளித்து திறமையாகப் பேசுவதுதான் ஒரு சட்டமன்ற உறுப்பினருக்கு அழகு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொன்முடி, ஒரு மணித்துளியிலே பேச்சை முடித்து விடுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவ்வளவு திறமை வாய்ந்த முதலமைச்சருக்கேகூட—இங்கேயே சொன்னார், எனக்கும்கூட tongue slip ஆகிறது நானும் மனுஷிதானே என்று சொன்னார். அவர்களுக்கே tongue slip ஏற்படுகிறபோது, என்னைப் போன்றவர்களெல்லாம் சிறிதுநேரம் தொடர்ந்து பேசும்போது அடிக்கடி குறுக்கீடு செய்கிறபோது கொஞ்சம் தவறுகள் ஏற்படுவது இயற்கைதான். ஆகவேதான், நாங்கள் கேட்டுக்கொள்கிறோமே தவிர, நீங்கள் பேசுங்கள். பதிலைச் சொல்லுங்கள். நாங்கள் சொல்வதிலே தவறு இருந்தால் சுட்டிக்காட்டுங்கள். திருத்திக்கொள்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கடைசி வாக்கியத்தோடு பேச்சை முடியுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** என்னங்க, முதலமைச்சரே நாங்கள் பேசுவதற்கு டைம் கொடுக்கச் சொல்கிறார்கள். கொஞ்சம் டைம் கொடுங்கள், சார். அவர்களே பேசட்டும் என்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. 17 மணித்துளிகள் பேசியிருக்கிறீர்கள். நான் சபையை நடத்த வேண்டும்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டைம் கொஞ்சம் கொடுங்கள். வெந்த புண்ணிலே வேலைப் பாய்ச்சுவது போல், கடைசியில் இந்த அரசு ஊழியர்கள். அரசு ஊழியர்கள் என்று சொன்னாலே இந்த இரண்டு ஆண்டு காலமாக அவர்கள் மீது ஏதோ மிகுந்த வெறுப்பு. புள்ளி விவரங்களோடு சொன்னார்கள். நேற்றுகூட முதலமைச்சர் அவர்கள் பேசும்போது முதலில் 96 சதவிகிதம் என்று சொன்னார்கள். பிறகு, 94 சதவிகிதம் என்று சொன்னார்கள். அதே



வெள்ளை அறிக்கையிலே சொல்லியிருக்கிறது, மொத்த வருவாயில் 54 சதவிகிதம் என்று. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையிலே அதன் முதற் பக்கத்திலேயே சொல்லியிருக்கிறார்கள். என்னைப் பொறுத்தவரையில், அரசு ஊழியர்கள், இங்கே இருக்கின்றவர்கள், பெரும்பாலும் அண்ணன், தம்பியெல்லாம் 2 சதவீதம் 2 சதவீதம் என்று சொல்லிக் கொண்டு இருக்கிறீர்கள். தயவுசெய்து அதை நீங்கள் மாற்றிக்கொள்ள வேண்டும். ஏனென்றால், பலபேர் இங்கே இருக்கிறவர்கள் எல்லாம் வாத்தியார் பிள்ளைகளாக இருக்கிற அரசு ஊழியர்கள் பிள்ளைகள். அண்ணன் இருக்கிறான், தம்பி இருக்கிறான். எல்லோரும் இருக்கிறார்கள். அவர்களைச் சார்ந்து 50 இலட்சம் பேர் தமிழ்நாட்டிலே இருக்கிறார்கள். அரசு ஊழியர்கள் எல்லோருமே ஏதோ வசதியாக இருப்பதாக எண்ணிவிடக் கூடாது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட நேற்று சொல்லும்போது சொன்னார்கள், தேவைகளை அவர்கள் குறைத்துக்கொள்ள வேண்டுமென்று. எப்போதுமே ஒன்று சொல்லுவார்கள். சோஷலிசம், ஒரு சமதர்ம நாடு என்பது, wage according to the need தேவைக்கு ஏற்ப ஊதியத்தைக் கொடுக்கிற ஒரு நாடு வளரவேண்டுமென்று சொல்வது அடிப்படைக் கொள்கை. ஆனால், அது Ultimate aim, உடனடியாக, அதைப் பெறுவது என்பது முடியாது. அதேநேரத்தில் wage according to the work வேலைக்கு ஏற்ற ஊதியத்தைக் கொடுக்க வேண்டுமென்பதுதான் வளர்ந்து வருகின்ற நாடுகளிலே பின்பற்றப்படுகின்ற ஒரு கொள்கை. அந்த அடிப்படையிலேதான் மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையாக மாநில அரசு ஊழியர்களுக்கு ஊதியமெல்லாம் கொடுக்கப்பட்டது. அவர்கள் புதியதாக சலுகைகளைக்கூடக் கேட்கவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொன்முடி இந்தத் தத்துவத்தோடு பேச்சை முடியுங்கள். அடுத்து திரு. எம்.ஏ. ஹக்கீம். (குறுக்கீடு) 17 நிமிடங்களுக்கு மேல் ஆகிவிட்டது. கடைசி ஒரு நிமிடத்தில் முடியுங்கள். கடைசி வாக்கியத்தோடு நிறைவு செய்யுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** ஆக, இந்த அரசு ஊழியர்களைப் பற்றி கொஞ்சம் பார்க்க வேண்டும். இன்று காலையிலே, பத்திரிகையிலேகூட ஒரு செய்தி. பாலங்களை எல்லாம் தோண்டுவதாக. 10 அடி, 15 அடி தோண்டுகிறார்கள். பாலம் இருக்க வேண்டுமா? வேண்டாமா? தயவு செய்து முதலமைச்சர் அவர்கள் நீங்கள் என்ன எல்லாம் கேஸ்

போடுங்கள், விசாரியுங்கள் அதெல்லாம் பண்ணுங்கள். ஆனால், பொதுமக்களைப் பாதிக்கின்ற அளவுக்கு இருக்கக் கூடாது முதலிலேயே கட்டடங்கள் இடிக்கப்படுவதாக பொதுமக்களே, பொது நல வழக்குகள் மூலம் நீதிமன்றத்திற்குச் சென்று, நீதிமன்றமே இடிக்கக்கூடாது என்று தீர்ப்பளித்திருக்கிறது. ஆனால், இன்றைக்கு இந்தப் பாலங்களின் தூணுக்குப் பக்கத்தில் 10 அடி ஆழம் தோண்டி...

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாலங்கள் பக்கத்தில் இருக்கின்ற மண் தூண்களுடைய தரத்தை பரிசோதனை செய்வதற்காகத்தான் தோண்டிக் கொண்டிருக்கிறார்கள். அதனால், பாலத்திற்கு எந்தவித சேதமும் ஏற்படப் போவதில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா காலைப் பத்திரிகைகளிலேயும் தினமலர், ஹிண்டு, தினகரன் என்று எல்லா செய்தித்தாள்களிலும் வந்திருக்கிறது. அதேமாதிரி ஒவ்வொன்றையும் ஆரம்பித்தால் ஸ்டேடியம் கட்டியதற்குப் போய் இப்போது நாம் தோண்டிப் பார்த்துக்கொண்டிருக்க முடியுமா? எல்லாக் காலங்களிலும், எல்லாம் இருக்கும். இப்படி செய்வது கட்டடங்களுடைய Life-ஐக் குறைத்து விடும். ஆக, நீங்கள் எதை வேண்டுமானாலும் பண்ணுங்கள். ஆனால் அதேநேரத்திலே, இதுபோன்ற செயல்களையாவது நீங்கள் நிறுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஆகவே... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம்.ஏ. ஹக்கீம்.

**திரு. எம்.ஏ. ஹக்கீம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொக்கு பறக்கும், குருவி பறக்கும், புறா பறக்கும்.. ஆனால், திக்கு திசையெல்லாம் தமிழகத்தின் திரும்பிய பக்கமெல்லாம் புரட்சித் தலைவியின் வெற்றிக்கொடி பறந்துகொண்டிருப்பதை இந்த நாடு பார்க்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) கவர்னர் உரையின்போதே, நான் தெரிவித்தேன். சாத்தான்குளத்தின் எபெக்ட்ஸ் என்று சொன்னேன். சாத்தான்குளம், சாத்தான்குளம் என்று சொல்லி அத்தனை பேரும் மொத்தமாகப் படையெடுத்து, முடித்து விடுகிறோம் ஆளுங்கட்சியின்



அதிகாரத்தை என்று எல்லோருமாக வரிந்து கட்டிக்கொண்டுதான் வந்தார்கள். கடைசியில் கதையைப் பார்த்தால், சாத்தான்குளத்திலே அத்தனை கூட்டணிக் கட்சிகளும் ஒன்று திரண்டு வந்து மரணக்கோலத்தை பார்த்ததை இந்த நாட்டு மக்கள் பார்த்தார்கள். தேவன்குளமாக அதை மாற்றுகிறேன் என்று அம்மா அவர்கள் சொன்னார்கள். ஜாதியைத் தூண்டிப் பேசுகிறார் என்று ஒரு தலைவர் வெளியேயிருந்து அறிக்கையும் கொடுத்தார்.

*பிற்பகல் 12-30*

'ஒன்றே குலம், ஒருவனே தேவன்' என்று சொன்னார் அறிஞர் அண்ணா. அவர் ஜாதியைச் சொல்லவில்லை. புரட்சித் தலைவர் அன்றைக்கே பாடினார். 'தவறு செய்தால், அதைத் தெரிந்து செய்தால் அவன் தேவன் என்றாலும் விடமாட்டேன்' என்றார். அதற்கு அர்த்தம் தெய்வத்தையே சொல்வதாக அர்த்தமே தவிர, ஜாதியைச் சொல்வது அல்ல. அதைக்கூட குற்றப்படுத்தி, மாசுபடுத்தி, கொச்சைப்படுத்த நினைத்தார்கள். நடக்கவில்லை.

சாத்தான்குளத்திலே அம்மா பெற்றது சரித்திர வெற்றி என்பது இன்றைக்கு இந்த நாட்டில் எதிர்க்கட்சிகளுக்குத் தெரிந்துவிட்டது. இனி புரட்சித் தலைவியை எதிர்க்க வேண்டுமென்றால் பக்கத்து மாநிலத்திலே இருக்கிற கட்சிகளையும் கூட்டிக்கொண்டு வரவேண்டுமே தவிர (மேசையைத் தட்டும் ஒலி) தங்களாலே முடியாது என்ற நிலைமைக்குத் தள்ளப்பட்டுவிட்டார்கள்.

குமாரதாஸ், ஹக்கீம், ஈஸ்வரன். குமாரதாஸ் நாடார் கிறிஸ்துவர்; ஈஸ்வரன் இந்து மதத்தைச் சேர்ந்தவர்; ஹக்கீம் ஓர் இஸ்லாமியக் குடிமகன். இணைகிறபோதுகூட, அம்மாவிடத்திலே மதச்சார்பற்ற நல்லிணக்கத்தோடு, சமூக உணர்வுகளை (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு ஏற்படுத்துகிற விதத்திலேதான் நாங்கள் இணைந்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) அதைத்தான் கடவுள் செயல் என்று சொல்லுவார்கள். எப்போதுமே இறைவன் அம்மா பக்கத்திலே துணையாக இருக்கிறார். அவருக்குப் பலமாக இருக்கிறார் என்பதற்கு அடையாளமே (மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள் இன்றைக்கு இணைந்து வருகிற இந்தப் போக்கிலேயே தெரியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹக்கீம், 'சங்கர், சலீம், சைமன்' என்ற ஒரு படம் வந்தது, அது உங்களுக்கும் பொருந்தும் என்று கருதுகிறேன்.

**திரு. எம்.ஏ. ஹக்கீம்:** நான் இங்கே வந்தவுடனேயே என் முன்னாடி உட்கார்ந்திருக்கிற பாரதிய ஜனதா கட்சியினுடைய சகோதரர் ராஜா சொல்லிவிட்டார்.

"ரகுபதி ராகவ ராஜாராம்,

பதீத்த பாவன சீத்தாராம்,

ஈஸ்வர அல்லா தேரேநாம்"

என்று. ஏனென்றால் நான் பி.ஜே.பி. பக்கத்திலே இருந்தாலும், ஒரு கண்ணியம் உள்ள பி.ஜே.பி. நண்பர்களைத்தான் பக்கத்திலே வைத்துக்கொண்டு அமர்ந்திருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகையால், நான் அம்மா அவர்களுக்கு என்னுடைய மனப்பூர்வமான நன்றியை, மனம்கனிந்த நன்றியை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. எங்கள் மூவரையும் தன் பிள்ளைகளாக ஏற்றுக்கொண்டு, என் தலைமைக்குப் பின்னாலே வாருங்கள், உங்களுக்கு நல்லகாலம், தமிழகத்துக்கு எப்படி வளமான காலம் உண்டோ, அப்படி நல்லகால அரசியல் என்றைக்கும் என் பின்னால் உங்களுக்கு உண்டு என்று எங்களை ஏற்றுக்கொண்ட எங்கள் தாய்க்கு மீண்டும் என்னுடைய பணிவான நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எனக்கு நன்றாக நினைவு இருக்கிறது. புரட்சித் தலைவர் எம்.ஜி..ஆர். அவர்கள் சொல்லுவார்கள். 'என்னை நம்பாமல் கெட்டவர்கள் நிறைய உண்டு; என்னை நம்பிக் கெட்டவர்கள் இன்றைக்கு வரைக்கும் இல்லை' என்று நாடோடி மன்னன் படத்திலே சொன்னார்கள்.

1980ஆம் ஆண்டு, ஒரு காலக்கட்டத்தில் புரட்சித் தலைவரை மேடையில் வைத்துக்கொண்டு நான் பேசினேன். கூட்டணி அரசியல் கூட்டம்.. அப்போதுதான், புரட்சித் தலைவர் என்னைக் கேட்டார். 'நீ எப்படி தம்பி காங்கிரஸ் கட்சிக்குள்ளே இருக்கே எனக்குப் பெரிய ஆச்சரியமாக இருக்கே', அப்படின்னார்; என்னுடைய பேச்சைக்கேட்டுவிட்டு. அதற்கு யார் ஆதாரம், ஏதாவது சாட்சி உண்டா,



ஆதாரம் உண்டா என்று கேட்டால்கூட சொல்லலாம். அந்த மேடைக்கு என்னை அழைத்துக்கொண்டுப் போனதே என்னுடைய மரியாதைக்குரிய சட்டப் பேரவைத் தலைவர் அண்ணன் அவர்கள்தான். நான் பேசிக்கொண்டிருக்கிறபோது பேராசிரியர் புறப்பட்டுவிட்டாரே என்கிறபோது கொஞ்சம் யோசனை பண்ணிப் பார்க்க வேண்டியிருக்கிறது.

*பிற்பகல் 12-35*

350 கோடி ரூபாய் அம்மா அவர்கள், (குறுக்கீடுகள்) கொஞ்சம் பொறுமையாக இருங்கள். இன்னும் போகப் போகத்தான் வரும். 350 கோடி ரூபாய் விவசாயிகளுக்கு இன்றைக்கு நிவாரணமாக அளித்திருக்கிறார்கள். சர்க்கரை சத்து வந்தவர்கள்கூட கவலைப்படாமல் அல்வா சாப்பிடுகிற மாதிரி ஸ்வீட்டை, இனிப்பை நிறைய சாப்பிடுகிற மாதிரி, கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்களே நன்றி, பாராட்டு, உங்களுக்கு எங்களுடைய வாழ்த்துக்கள் என்று சொல்லக்கூடிய ஓர் அபாரமான திட்டத்தை (மேசையைத் தட்டும் ஒலி), ஏனென்றால் சுலபத்தில் கம்யூனிஸ்ட்கள் பாராட்டவே மாட்டார்கள். ஆனால், இன்றைக்குச் சுவையாகப் பாராட்டியிருக்கிறார்கள். அவர்களுக்கு என்னுடைய நன்றி. வருகிற நேரத்திலே எல்லாம் அம்மா அவர்கள் வாரி, வாரித் தருகிறார்; அள்ளி, அள்ளித் தருகிறார். ஏசுபிரான் சொல்லியதாக எங்களுடைய குமாரதாஸ் சொல்லுவார்;

"தட்டுங்கள் திறக்கப்படும்;

கேளுங்கள் கொடுக்கப்படும்"

என்று. அம்மாவிடத்திலே தட்ட வேண்டியதுமில்லை; கேட்க வேண்டியதும் இல்லை. மக்களின் மனநிலையை அறிந்து, முகமறிந்து, வாரி வாரி வழங்குவதில் (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு புரட்சித் தலைவரின் வாரிசாக நிற்கிறார். ஆகையாலேதான் எங்களுடைய மனமுவந்த பாராட்டுக்களை மக்களின் சார்பிலே இன்றைக்குத் தெரிவிக்கிறோம்.

"கருவிலில் வளரும் மழலையின் உயிரில்

தைரியம் வளர்ப்பாள் தமிழன்னை

களங்கம் பிறந்தால் பெற்றவள் மானம்

காத்திட எழுவான் அவள் பிள்ளை"

என்று சொல்லக்கூடிய அந்த வாசகத்தின் அடிப்படையில் தான் தவறான ஒருவாசகம்; தவறான வார்த்தைகள் வந்துவிடக்கூடாது என்பதில் கூர்ந்த கவனத்தோடு இருந்து,

எந்தக் காலக்கட்டத்திலும் எந்தத் தவறுக்கும் மறந்துபோய்க்கூட இடம் கொடுத்துவிடக்கூடாது என்பதில் கவனமாக இருந்து நம்முடைய அமைச்சர் பெருமக்களும், மாண்புமிக்க அமைச்சர் பெருமக்களும் அப்போதைக்கப்போது பதிலைச் சொல்லிக்கொண்டே வருகிறார்கள். பேசியவர்கள் பக்கங்கள்தான் நிறைய போய்க்கொண்டே இருக்கின்றன; ஆனால் அதே நேரத்தில் என்ன விஷயம் இருக்கிறது என்று தெரியவில்லை என்று ஆச்சரியப்பட்டு கேட்டார்கள். மாண்புமிக்க நிதி அமைச்சர் அவர்கள், 96 பக்கம் என்று பக்கத்தை ஏற்றிக்கொண்டே போகிறார்கள் என்ன இருக்கிறது, என்ன இருக்கிறது என்று கேட்டார்கள். என்ன, பக்கத்திற்குப்பக்கம் ராமஜெயமா எழுதியிருக்கிறார், ஸ்ரீ ராம ஜெயம், ஸ்ரீ ராம ஜெயம், ஸ்ரீ ராம ஜெயம் என்றா இருக்கிறது? எல்லா பக்கங்களிலும் பக்கத்திற்கு நூறு கோடி ரூபாய்த் திட்டங்கள், எதிர்கால தமிழகத்திற்கு தேவை என்பது தொடர்ந்து எழுதப்பட்டுக் கொண்டுதான் இருக்கிறது. தந்துகொண்டுதான் இருக்கிறார்கள். அதையேதான் இன்றைக்கு கேள்விகளாகக் கேட்கிறபோது இத்தனையும் சொல்லப்பட்டு இருக்கிறபோது. அம்மா அவர்கள் சொல்லிவிட்டார்கள். இந்த வரி ரத்து செய்யப்படுகிறது, இந்த கடன் ரத்து செய்யப்படுகிறது, இந்த வட்டி ரத்து செய்யப்படுகிறது. பொது மக்களுக்காக இனி அனைத்தும் ரத்து செய்யப்படுகிறது. விவசாயிகளுக்கு ரத்து செய்யப்படுகிறது, ரத்து செய்யப்படுகிறது, ரத்து செய்யப்படுகிறது என்று அம்மா அவர்கள் தொடர்ந்து கஷ்டங்களை ரத்து செய்து கொண்டே வருகிறார்கள். நான் பத்திரிகைகளை அடிக்கு ஒரு தடவை பார்ப்பேன். அம்மா அவர்கள் கஷ்டத்தை ரத்து செய்து கொண்டே வருகிறார்கள். இன்னொரு பக்கத்திலே ஒரு கட்சி போட்ட கமிட்டிகளையெல்லாம் டெல்லியிலே ரத்து செய்து கொண்டே வருகிறார்கள். இவையெல்லாம் செய்திப் பத்திரிகைகளிலே வரும். ஆனால், அரசியலாக இவை எல்லாம் வந்து



கொண்டிருந்தாலும் இன்றைக்கு அம்மா அவர்களுடைய தலைமையில் நம்முடைய மரியாதைக்குரிய மாண்புமிக்க நிதி அமைச்சர் அவர்கள் இந்த மின்சாரத்தைப் பற்றி, எப்படி எல்லாம் நிவாரணம் வழங்கப்படுகிறது என்பதைப்பற்றி சொல்லிக்கொண்டே வருகிறபோது அம்மா அவர்களும் திரும்பத் திரும்ப சொல்லிக் கொண்டே வந்தார்கள். நானும் பார்த்துக் கொண்டே இருக்கிறேன். மாண்புமிக்க நிதி அமைச்சர் மாதிரி மாண்புமிக்க மரியாதைக்குரிய மின்சாரத்துறை அமைச்சரும் ஒரு பக்கம் திரும்பத் திரும்ப பதில் சொல்லிக்கொண்டே இருக்கிறார். பேசுகிறபோது திரும்பத் திரும்ப அவர்கள் கேள்வி கேட்டுக் கொண்டே இருக்கிறார்கள். இலவச மின்சாரம் ரத்து, இலவச மின்சாரம் ரத்து என்று சொல்லிக் கொண்டே இருக்கிறார்கள். எனக்குப் புரியவில்லை. தவறான செய்தியை மக்கள் மத்தியில் வலுவாகக் கொண்டு போய்ச் சேர்ப்பதற்கு கஷ்டப்பட்டு இவர்கள் முயற்சி எடுக்கிறார்கள் என்பது மாத்திரம்தான் எனக்குத் தெரிகிறது. ஏன் என்று சொன்னால் ஹிட்லரைப் பற்றி சரித்திரத்தில் ஒன்று சொல்வார்கள். முதலிலே சொல்கிறபோதுதான் அது உண்மைக்கு மாறாகத் தெரியும். இரண்டாவது சொல்கிறபோது கொஞ்சம் மங்கலாகத் தெரியும். மூன்றாவதாக அதையே திரும்பச் சொல்கிறபோது அந்தத் தவறான செய்தியே கொஞ்சம் உண்மைபோல் தெரியும். நான்காவதாகச் சொன்னால் அது உண்மையாகிவிடும். ஐந்தாவதாகச் சொன்னால் அது வலுவான உண்மையாகிவிடும். ஆகவே ஹிட்லர் பாணியில் அவருடைய பொலிட்டிகல் அட்வைசராக இருந்த கோயபல்ஸ் எப்படி உலக மக்களை ஏமாற்றுவதற்குத் தவறான செய்திகளை உண்மையாக்குவதற்கு எப்படித் திட்டம் போட்டுச் சொன்னார்களோ அதே வழி முறைகளைத்தான் இலவச மின்சாரத்தில் இங்கு இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய மாண்புமிக்க உறுப்பினர்கள் திரும்பத் திரும்ப பேசி வருகிறார்கள். எப்படியாவது அந்தத் தவறான செய்தியை உண்மையாக்கிவிடலாம் என்கிற எண்ணத்திலே இன்றைக்கு அவர்கள் பேசுகிறார்கள். அது ஒருபோதும் நடவாது என்பதற்காகத்தான் இங்கே நம்முடைய மாண்புமிக்க நிதி அமைச்சர் அவர்கள் திரும்பத் திரும்பச் சொல்கிறார்.

1250 ரூபாய் வரைக்கும் அம்மா, 5 ஹார்ஸ் பவர் வரைக்கும் இலவச மின்சாரம் என்று சொன்னார்கள். மரியாதைக்குரிய மாண்புமிக்க உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் சொன்னார்கள் 1250 ரூபாய் என்பது காணாது, 1500 ரூபாயாக கொடுத்துவிடுங்கள்

அம்மா என்று சொன்னார்கள். அப்பொழுது இங்கே இருக்கக்கூடிய எல்லோரும், நாம் எல்லோருமே சிரித்துக் கொண்டிருந்தோம். ஏன் என்றால் அவர் இருந்த காலத்திலே அதை கொடுக்கவும் முடியவில்லை கேட்கவும் முடியவில்லை. இன்றைக்கு எதிரிலே வந்து உட்கார்ந்ததற்குப் பிறகு அம்மாவிடம் ஏன் கேட்கிறார்கள் என்றால் (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா இரக்கப்பட்டு கொடுப்பார்கள். அதை வாங்கி காலாகாலத்தில் கொடுத்துவிட்டோம் என்று சொன்னால் 1,500 ரூபாய் நான் கேட்டுத்தான் முதலமைச்சர் கொடுத்தார் என்று பெருமையாகச் (மேசையைத் தட்டும் ஒலி) சொல்லலாம் என்கிற மன நிறைவுக்காகக்கூட அவர் சொல்லியிருக்கலாம். ஆகையினாலேயே நான் மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அம்மா உங்கள் முன்னாடி உட்கார்ந்துகொண்டு அவர் எவ்வளவோ கேட்டுக்கொண்டிருக்கிறார். அதிலே இது ஒரு பெரிய தொகையாக இருக்காது. சரி உங்களுடைய எண்ணமும் நிறைவேறட்டும். 350 கோடி கொடுத்து லட்சக்கணக்கான விவசாயிகளை மன நிறைவு அடையச் செய்கிற மாதிரி, 250 ரூபாயைக் கூடுதலாகக் கொடுத்து அவரும் வாழ்க்கை பூராவும் சந்தோஷமாக இருக்கட்டும். நன்றியைத் தெரிவிக்கட்டும். (மேசையைத் தட்டும் ஒலி) 14 இலட்சம் பேருக்கு, 14 லட்சம் குடும்பங்களுக்கு 30 கிலோ அரிசி யார் கேட்டார்கள். யாராவது இங்கே வற்புறுத்திக் கேட்டோமா? இங்கே விவகாரம் செய்தார்களா? கேட்க வேண்டிய எதிர்க்கட்சிகள் பூராவும் கேட்கின்ற நேரத்திலே ஒரே வெளிநடப்பு, உள்ளே வந்த உடனே கவர்னரை பார்த்த மாத்திரத்திலேயே மாட்சிமைக்குரிய கவர்னர் அவர்களே, நாங்கள் சபையிலே இருக்க விரும்பவில்லை. வெளியே போகிறோம். கவர்னர் வாசித்து முடித்ததற்குப் பிறகு விவாதம் ஆரம்பிக்கிறது. விவாதம் ஆரம்பிக்கின்ற அன்றைக்கு பழையபடி உள்ளே வந்து மாண்புமிக்க முதல்வர் அவர்களே, ஒருபோதும் நாங்கள் சபையில் உங்களோடு இருக்க விரும்பவில்லை. நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம். வருகின்ற நேரம் எல்லாம் வெளிநடப்பு, வெளிநடப்பு, வெளிநடப்பு. இதையெல்லாம் சாத்தான்குளத்து மக்கள் பார்த்தார்கள். வெளியவே திரிய விரும்புகிறவர்களை எதற்காக உள்ளே அனுப்ப வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

*பிற்பகல் 12-40*

**டாக்டர் க. பொன்முடி:** நிதிநிலை அறிக்கை மேலே பேசுகின்ற பேச்சா இவையெல்லாம்?



**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** எல்லோரும் ஆளுநர் முன்னிலையிலே படித்துக் காட்டியதற்குப் பிறகுதான் வெளிநடப்புச் செய்தோம். நாங்கள் எங்களுடைய கோரிக்கைகளை ஆளுநர் அவர்களிடம் படித்துக் காட்டி, ஆளுநர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொன்னதற்குப்பிறகுதான் வெளிநடப்புச் செய்தோம். சும்மா வெளிநடப்புச் செய்யவில்லை.

**திரு. எம். ஏ. ஹக்கீம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியவர், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய பெரியவர், நீண்டகால உறுப்பினர் (குறுக்கீடு) எனக்குத் தெரியாதா பெரியவர் ஹேமச்சந்திரன் பெயர்? எங்களுடைய மாண்புமிக்க நிதியமைச்சர் பாணியில் சொல்வது என்றால் மரியாதைக்குரிய ஹேமா அவர்களே (சிரிப்பு) நம்முடைய நிதியமைச்சர் செல்லமாகக் கூப்பிடுவார் (சிரிப்பு) அவரை செல்லமாக ஹேமா அவர்களே என்று சொல்லும்போது எனக்கெல்லாம் கிளுக்கென்று இருக்கும். இருந்தாலும் பரவாயில்லை. நிதியமைச்சர் அவர்கள் மிகவும் கண்ணியத்தோடு மாண்போடு சொல்கிறபோது அவர் சந்தோஷப்படுவார். நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால், அதாவது யாரையும் குற்றம் குறையாகச் சொல்லவேண்டும் என்பதற்காக அல்ல. 14 இலட்சம் குடும்பங்களுக்கு 30 கிலோ அரிசி என்று அம்மா அவர்கள்—இங்கே யாரும் எதையும் பெரிதாக விவகாரம் செய்து போராடிப் பெறவில்லை—அவர்களாக வந்தார்கள். அவைக்கு வந்த மாத்திரத்திலேயே பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நான் தருகிறேன் என்று சொல்லுகிறபோது, எனக்கு ஒரு விஷயம் நினைவுக்கு வந்தது. ஜனவரி 28,29,30 ஆகிய 3 நாட்களும் தினசரி சபையிலே பேசுகிறபோது மாண்புமிகு அம்மா அவர்கள் சொன்னார்கள், சோறு போட்டுக்கொண்டிருக்கிறோம். பதிவு செய்துகொண்டிருக்கிறோம். பசிக்கின்ற மக்களை வரச்சொல்லி இருக்கிறோம். கஷ்டப்படாமல் வரட்டும். நாங்கள் பதிவு செய்து கொண்டிருக்கிறோம். அவர்களை கணக்கெடுத்துக் கொண்டிருக்கிறோம். நல்லவற்றை செய்யவேண்டுமென்று விரும்புகிறோம் என்று திரும்பத் திரும்பச் சொன்னார்கள் அன்னை. அங்கே இருந்தவர்கள் அத்தனை பேரும் கொஞ்சம் சந்தேகத்திற்கு உரிய முறையிலே எதற்காக இப்படி திரும்பத் திரும்பச் சொல்லுகிறார்கள் என்று கேட்டோம். எடுத்த எடுப்பிலேயே அல்வா கிண்டப்படும். பிரியாணி தரப்படும். எல்லோருக்கும் பீடா கொடுக்கப்படும் என்றா சொல்லிக்கொண்டு இருப்பார்கள்? (சிரிப்பு) ஆனால் நம்முடைய மாண்புமிக்க காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர்கள், அந்த அம்மா நேற்று பேசும்போது

கோரிக்கைகள் என்பது கிடப்பிலே போடப்படுவதற்கல்ல. கோரிக்கைகள் என்பது செயல்படுத்துவதற்கும், நிறைவேற்றுவதற்கும்தான் என்பதை நினைவுகூறும்விதமாக பல ஆண்டுகளாக கோரி வருகின்ற சேதுசமுத்திரத் திட்டத்தை நிறைவேற்றக் கோரி மத்திய அரசை மாண்புமிகு அம்மா அவர்கள் தொடர்ந்து வலியுறுத்துவதாக இந்த நிதிநிலை அறிக்கையிலே கோடிட்டுக் காட்டப்பட்டு இருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழை இயல் என்பார்; இசை என்பார்; நாடகம் என்பார். ஆனால் மாண்புமிகு அம்மா அவர்கள்தான் அதை அறிவியல் தமிழ் என்றார். அந்த விஞ்ஞானத்தினுடைய அத்தியாவசியத்தை உணர்ந்ததால்தான் தமிழகத்திலே இருக்கின்ற அனைத்து பள்ளி மாணவர்களுக்கும் கணினி கல்வி கற்பிக்க வேண்டும் என்ற அடிப்படையில் முதல்கட்டமாக 200 மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு கட்டாயக் கணினி கல்வி கற்பிக்க வழிவகை செய்துள்ளார் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை நான் கோடிட்டுக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆணுக்குப் பெண் சமம் என்பது ஏட்டளவில் வெறும் பேச்சளவில் இருக்கும் வார்த்தையல்ல. இன்று உண்மையாய் சாத்தியமாய் ஆகிக்கொண்டு இருக்கின்றது. 5 இலட்சம் மகளிரைக் கொண்ட 25 ஆயிரம் சுய உதவிக் குழுக்கள் புதிதாக உருவாக்கப்பட இருக்கின்றன. அந்தத் திட்டத்திற்காக மாண்புமிகு அம்மா அவர்கள் ரூ. 22.5 கோடி நிதி ஒதுக்கீட்டினைச் செய்து இருக்கிறார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காணி நிலம் வேண்டும் என்றார் பாரதி. கட்டித் தருவோம் வீடுகள் என்றார் பாரதி கண்ட புதுமைத் தாயாக விளங்கும் நம் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். ஏழை எளிய மக்களுக்கு 31,453 புதிய வீடுகளும், 16,164 கச்சா வீடுகளை நிலை உயர்த்தவும் மக்கள் நேயத் திட்டமாகச் செயல்படுகின்றது. மேலும், மனித நேயத் திட்டமாக 2 ஆயிரம் பீடித் தொழிலாளர்களுக்காக புதிய வீடுகள் கட்டப்பட உள்ளன என்பதை நான் இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொண்டு, இது சப்ஜெக்ட் உள்ள பட்ஜெட் என்று அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று என்பதை நான் கோடிட்டுக்காட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன்.



சொல்லியிருக்கிறார்கள். ஆக, பொது விநியோகத் திட்டத்தின் மூலமாக இலவசமாக விநியோகிக்கப்படுகின்ற அரிசியின் அளவு என்ன. இலவசமாக விநியோகிக்கப்படுகின்ற அரிசியின் அளவு 4 கோடியே 20 லட்சம் கிலோவா? கொஞ்சம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். எங்கே இருந்து அந்த அரிசி வருகிறது? ஆக, ஆண்டு ஒன்றிற்கு 50 கோடி கிலோ நம்முடைய தமிழகத்திலே மட்டும் விநியோகம் ஆகிறது என்றால் நல்லது, மகிழ்ச்சி நிறைந்த செய்தி. அது உண்மையா என்று கொஞ்சம் சொல்லுங்கள். கேள்வி என்னவென்றால், 14 இலட்சம் குடும்பங்களுக்கு, குடும்பம் ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு 30 கிலோ அரிசி என்று சொன்னால் அது எவ்வளவு ஆகிறது? நான்கு கோடியே இருபது இலட்சம் கிலோ ஆகிறது. நான்கு கோடியே இருபது இலட்சம் கிலோ மாதம் ஒன்றுக்கு பொது விநியோகத் துறையின் மூலம் இலவசமாக அரிசி விநியோகிக்கப்படுகிறதா என்பதுதான் என்னுடைய கேள்வி.

பிற்பகல் 12-45

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பதினான்கு இலட்சம் பேர் பதிவு செய்து கொண்டு இருக்கிறார்கள். பதினான்கு இலட்சம் பேருக்கு இலவச அரிசி வழங்கப்படுகிறது. இலவச மதிய உணவு என்பது தலைக்கு வழங்கப்பட்டது. இந்த இலவச 30 கிலோ அரிசி என்பது ஒரு குடும்பத்திற்கு வழங்கப்படுகிறது. அதன்படி 9,01,323 குடும்பங்கள் அந்த இலவச அரிசியை பெற்று வருகின்றனர்.

**திரு. எம்.ஏ. ஹக்கீம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதாவது இந்த விஷயத்திலே சந்தேகங்களைக் கேட்டு நிவர்த்தி பண்ணிக்கொள்வதற்குத்தான் இங்கே வாய்ப்புகள் தரப்பட்டிருக்கின்றன. சந்தேகத்தை நிவர்த்தி பண்ணுகிற இடத்திலே மரியாதைக்குரிய நம்முடைய மாண்புமிக்க அம்மா அவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு கொடுக்கிற மனம் இருக்கிறது. கொடுத்துக்கொண்டே இருக்கிறார்கள். இதுவரையிலும் கொடுக்காதவர்கள், கொடுக்க மனம் இல்லாதவர்கள், கொடுக்கப்போகாதவர்கள் கேள்விகளைக் கேட்டுக்கொண்டு திருப்தி அடைய வேண்டியதைத் தவிர வேறு வழி இல்லையென்ற காரணத்தினால் நான் அதைப்பற்றி பெரிதாக கவலைப்படவில்லை.

இருந்தாலும் அந்த ஏழைக் குடும்பங்களுக்கு இன்றைக்கு பசிக்கின்ற காலத்தில், மழை பொய்த்துபோய் விட்டதால். கடும் வறட்சி. கோடைக்காலம். இன்னொரு பக்கத்திலே குடிக்கத் தண்ணீர் பற்றாக்குறை என்று பெருகி வரக்கூடிய கஷ்டங்களுக்கு மத்தியிலே, இந்தக் குடும்பங்களுக்கு, இந்த மக்களுக்கு வயிறார உணவு தருவதற்கு 30 கிலோ அரிசியை இந்த கஷ்டமான நிதி நெருக்கடியிலும், சூழ்நிலையிலும், நான் தருகிறேன் என்று அம்மா அவர்கள் தந்துகொண்டிருக்கிறபோதுதான் எங்கள் தலைவர் காமராஜரை, புரட்சித் தலைவியின் வடிவத்திலே பார்க்கிற அந்த அற்புதமான வாய்ப்பு கிடைக்கிறது. அவரைப் பார்க்கிறோம். ஏனென்றால், நீண்டகாலம் அந்தத் தலைவருடைய பெயரைச் சொல்லி வந்தவர்கள், நீண்டகாலம் அவருடைய புகழைப் பாடி வந்தவர்கள், இன்றைக்கு இந்தத் தாயினுடைய உதவியைப் பற்றி இந்த உதவி செய்யப்படுகிற நிலவாத்தைப்பற்றி தெரிந்து கொள்கிற போதுதான் அந்தத் தலைவர்களையெல்லாம் இன்றைக்கு நினைத்துப் பார்த்து ஒப்பிட்டுச் சொல்ல முடியும். குடும்பங்கள், கஷ்டப்படுகின்ற ஏழைக் குடும்பங்களுக்கு ஒரு விளக்கு என்று சொன்னார்கள். அந்த ஒரு விளக்கிற்கு வருடத்திற்கு 90 ரூபாய் வரும் என்று சொன்னால் அந்த ஏழை விவசாய குடிசைவாழ் குடும்பங்களுக்கு நூறு ரூபாய் தருகிறேன் என்று தாராளமாக அதை அறிவித்தார்கள். அதேபோலத்தான் விவசாயிகளுக்கு ரூ.1250 என்று அறிவிக்கிறார் என்று சொன்னால் அந்த அறிவிப்புக்களுக்குப் பின்னாலே அந்தக் கஷ்டங்கள் தவிர்க்கப்படுகின்ற நிலவாத்தை இன்றைக்கு தமிழகம் உணர்ந்து அதன் மூலம் தன்னுடைய மாண்பை, மரியாதையை தெரியப்படுத்திக்கொண்டு இருக்கிறார். அதேபோலத்தான் பத்தாவது ஐந்தாண்டு திட்டம், நாற்பது ஆயிரம் கோடி ரூபாய். அந்த நாற்பதாயிரம் கோடி ரூபாய் நிதி, ஐந்தாண்டு திட்டதிற்கு என்று ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்தபோது, நேற்றுகூட நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் என்னுடைய அருகிலே இருந்த ஜெகவீரபாண்டியன் பேசியதற்கு அம்மா அவர்கள் விளக்கம் சொன்னார்கள். 25 ஆயிரம் கோடி ரூபாயை தமிழக அரசு, நம்முடைய சார்பில் ஒதுக்கீடு செய்ய வேண்டியிருக்கிறது. 15 ஆயிரம் கோடி ரூபாய்தான், மத்திய அரசின் சார்பிலே அதற்காக ஒதுக்கப்பட்டுவரும் என்கின்றபோது ஒரு பிரம்மாண்டமான தொகையை கெட்டிக்காரத்தனமாக திட்டக் கமிஷனிடத்தில்—பேசிக்கொண்டிருக்கின்ற பேச்சுவார்த்தையை—மிக அற்புதமாக, கெட்டிக்காரத்தனமாக வாதாடி, போராடி இன்றைக்கு தமிழகத்திற்கு அதைப் பெற்றுத் தந்திருக்கிறார்கள் என்பதை இந்த



நேரத்திலே நாங்கள் தெரிவித்துக்கொள்கிறோம். தமிழக மக்கள் நன்றியைத் தெரிவிக்கின்ற அதே நேரத்திலே எங்களுடைய மனம் கனிந்த பாராட்டுக்களையும், தெரிவித்துக் கொள்கிறோம். அதே நேரத்தில் இந்த பெருமைக்குரிய விஷயத்தை நாடு எல்லாம் எடுத்துச் சொல்லக்கூடிய விதத்திலே இன்றைக்கு எங்களுக்கு அந்த வாய்ப்பைத் தந்த அந்த அன்னைக்கு என்னுடைய மனப்பூர்வமான நன்றியையும், வணக்கத்தையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

*பிற்பகல் 12-50*

மீனவர்களைப் பற்றி இங்கே பேசுகிறபோது இங்கே சிறிது நோத்திற்கு முன்னாலே நண்பர் பேசுகிறபோதுதான் எனக்கு மனதிலே பட்டது.

“கட்டிய மனைவி தொட்டிலில் பிள்ளை
உறவைக் கொடுத்தவர் அங்கே;
அலைகடல் மீது அலையாய் அலைந்து
உயிரைக் கொடுப்பவர் இங்கே;
ஒருநாள் போவார், ஒருநாள் வருவார்
ஒவ்வொரு நாளும் துயரம்;
விடிந்தால் விடியும், முடிந்தால் முடியும்
இதுதான் எங்கள் வாழ்க்கை.”

அந்த என்று மீனவக் குடும்பங்களைப் பற்றி அன்றைக்கு புரட்சித் தலைவர் அவர்கள் இந்த நாட்டு மக்கள் மத்தியிலே பாட்டாகப் பாடிக் காட்டினார்கள். அந்த மீனவக் குடும்பங்களுக்கு இன்றைக்கு நம்முடைய மரியாதைக்குரிய, மாண்புமிக்க அம்மா அவர்களின் நிதிநிலை அறிக்கையில் மீன் பிடிக்க இயலாத பருவ காலத்தில் (மணியடிக்கப்பெற்றது) கடல்சார்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் 2, 3, நிமிடங்கள் எடுத்துக்கொள்ளுங்கள்.

[2003 மார்ச் 28

**திரு. எம்.ஏ. ஹக்கீம்:** இரண்டும் மூன்றும் ஐந்து நிமிஷம் பேரவைத் தலைவர் அவர்களே, (சிரிப்பு) கடல்சார் மீனவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக 2003-2004 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் 25 கோடியே 13 இலட்சம் ரூபாய் நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மீனவர்களுக்கான வீட்டுவசதித் திட்டம் அடுத்த நிதியாண்டில் பெருமளவில் முடுக்கிவிடப்படும். இதற்காக 10 கோடியே 21 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு மொத்தம் 48 கோடியே 84 இலட்சம் ரூபாய் செலவில் இராமேஸ்வரத்தில் மீன்பிடித் துறைமுகம் ஒன்றும், 10 கோடியே 60 இலட்சம் செலவில் பழையார் நிலை-2-ல் மீன்பிடித் துறைமுகம் ஒன்றும் அமைக்கும் திட்டச் செயற்குறிப்புகள் நிதியுதவி கோரி மைய அரசிற்கு அனுப்பப்பட்டு இன்றைக்கு 13 கோடியே 23 இலட்சம் ரூபாய் செலவில் 10 இடங்களில் மீன் இறங்குதளங்கள் ஏற்படுத்த ஏற்கெனவே ஒப்புதல் அளிக்கப்பட்டு, ஆறு இடங்களில் பணிகள்தொடங்கபபட்டுவிட்டன என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இவையெல்லாம் இன்றைக்கு பக்கங்களைக் கொஞ்சம் நிதானமாகப் படித்து' வந்தால் தெரிகிறது. எதையாவது ஒன்றைக் குறை சொல்ல வேண்டுமென்று பக்கத்தை அவசரம் அவசரமாக பாட்டுப் புத்தகத்தைப் படிப்பது மாதிரி புரட்டிவிட்டு வருகிறபோது இந்த நிறைகளெல்லாம் இன்றைக்கு அவர்களுக்குத் தெரிவதில்லை. ஆகையினாலேதான் குறைகள், குறைகள் என்று திரும்பத் திரும்ப அவர்கள் சொல்லிப் பார்க்கிறார்கள்.

பேரவைத் தலைவர் அவர்கள் இரண்டொரு நிமிடங்கள் என்று சொல்லிவிட்ட காரணத்தினாலே நான் மாண்புமிகு அம்மா அவர்களுக்குப் பணிவோடு சிலவற்றைச் சமர்ப்பிக்க விரும்புகிறேன்.

காவிரிப் பிரச்சினை அல்லது அதே மாதிரி தண்ணீர் பிரச்சினை என்று பேசப்படுகிறது. நான் மதுரையினுடைய சட்டமன்ற உறுப்பினர், பணிவோடு அம்மா அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். வைகை அணைக்கட்டில் அடிக்கொரு தடவை இந்தப் பற்றாக்குறை ஏற்படுகிற போதெல்லாம், மாவட்ட ஆட்சித் தலைவர் சொல்லியிருக்கிறார் அம்மா, 18 அடி ஆழத்திற்கு சாண்டி, சகதிகள் இருக்கின்றன. அந்த ஈரப்பதம் இருக்கிறது. நீண்ட வருடங்கள் ஆகிவிட்டன தூர் வாரப்பட்டு. தண்ணீர் வருகிறபோதெல்லாம் 71 அடிதான் என்று சொல்கிறபோது, ஏறத்தாழ 18, 20 அடி சகதியாக இருக்கிறது என்று சொன்னால் மிச்சம் இருக்கிற தண்ணீர் பற்றாது. ஏன் என்றால் குடி தண்ணீரும் அதுதான்,



விவசாயத்திற்குப் பயன்படுத்தப்படக்கூடிய தண்ணீரும் அதுதான். இந்த நெருக்கடியான சூழ்நிலையில் எங்களுக்கு எப்போதுமே ஒரு ஆபத்தான நிலைமை உண்டாகக்கூடிய விதத்தில், பதற்றமான சூழ்நிலை உண்டாகக்கூடிய விதத்தில் ஏதாவதொரு சட்டம் அல்லது விதிமுறை, கேரளப் பக்கத்திலேயிருந்து, கேரள அரசாங்கத்திலேயிருந்து ஏற்படுத்தப்பட்டுக்கொண்டே வருவதால் கஷ்டங்கள் வருகின்றன.

பவானி ஆற்றின் குறுக்கே அணை கட்டப் போகிறார்கள்; ஆகையினாலே பாதிக்கப்படும் என்று ஊட்டி, கோவை மாவட்டத்தைப் பற்றிப் பேசுகிறபோதெல்லாம், கேரளாவிலே சொல்வார்கள். அதேமாதிரி 9 பிரசித்தி பெற்ற மிகப்பெரிய ஆறுகள் இங்கே வந்து, கிழக்கே வந்து பெரியாருக்கு வந்து விடாத வகையில் மேற்கு நோக்கி கடலுக்குத் திருப்பப்படுகிற கொடுமைகளுக்கு மத்தியில், வைகை அணையில் போதுமான அளவு தண்ணீர் நீர்ப்பிடிப்பு, இல்லாத காரணத்தினாலே பாதிப்பு என்பது மதுரைக்கு ஏற்படுகிறது. ஆகவே, மாட்சிமைமிக்க அம்மா அவர்கள் இதற்கு ஒரு நல்ல வழியைக் கண்டுபிடித்து, அந்த வைகையைத் தூர் வார வேண்டும் என்பதையும் நான் மெத்தப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோலத்தான், (குறுக்கீடு) வைகை அணையில் வைகை என்று சொல்கிறபோது அணைக் கட்டுத்தான். (குறுக்கீடு) இல்லை, இல்லை மாண்புமிக்க உறுப்பினர் அண்ணன் நன்மாறன் அவர்கள் சொல்லும்போது பாதையாக இருக்குமோ என்று நினைத்து சொல்லிக்கொண்டிருக்கிறார். இல்லையா? (சிரிப்பு) இது, அவர்களுக்கும் சேர்த்துத்தான். அது எதற்காக என்றால், மதுரை என்று வரும்போது என்னுடைய மரியாதைக்குரிய அண்ணன் நன்மாறன் அவ்ர்களுக்கும், சகோதரி அவர்களுக்கும், இங்கே பக்கத்திலே உட்கார்ந்து இருக்கிற மாண்புமிகு அண்ணன், உறுப்பினர் ராஜாங்கம் அவர்கள், அந்த வைகையின் மிகப்பெரிய பகுதிக்குச் சொந்தகாரர். சோழவந்தான், சோழவந்தான் என்று சொன்னால் சோழன் உவந்தான் என்று சொல்கிற இடம். இப்போது அங்கே இருக்கிறவர்களே ரொம்ப மயங்கி கஷ்டத்திலே இருக்கிறது மாதிரி, அங்கே வறட்சி, வைகை வாடிவிட்டது. தென்னை மரங்கள் கோடிக்கணக்கிலே வாடி வதங்கிக் கிடக்கின்றன. அந்தக் கஷ்டங்களை எல்லாம் சொல்கிறபோதுதான் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நேற்று வரைக்கும் சொன்னது

கொஞ்சம். இன்றைக்கு கூடுதலாக அள்ளித் தருகிறேன் என்று 350 கோடி ரூபாயை அள்ளிக் கொடுக்கிறபோது என்னுடைய அருமைக்குரிய சகோதார் ராஜாங்கத்தைப் போன்றவர்கள்தான் மிகுந்த அளவிலே சிரித்தார்கள். மனம் நிறைந்தார்கள்.

பிற்பகல் 12-55

காரணம் கஷ்டத்திற்கு ஆளாக்கப்பட்டவர்கள். அந்த அடிப்படையிலே தான் இன்றைக்குச் சொல்கிறேன். வைகையின் இரு பக்கத்திலேயும் சீரமைப்புத் திட்டம் அற்புதமாக நடக்கிறது. வைகை அணையிலே இன்றைக்கு தூர் வாரி எடுக்கப்படும் என்று சொன்னால், ஏன் என்றால், இராமநாதபுரம் மாவட்டத்திற்கு அம்மா அவர்கள் — அந்த அறிக்கையை நேற்றைக்கு நிதியமைச்சர் அவர்கள் வாசிக்கின்றபோது, அன்றைக்கு நான் பார்த்துக்கொண்டே இருந்தேன். மாண்புமிக்க அமைச்சர், தொழிலாளர் நலத் துறை அமைச்சர் மிகுந்த மன மகிழ்ச்சியோடு இருந்தார்கள். இராமநாதபுரம் மாவட்டத்திற்கு—21 கோடியே 91 இலட்சம். சபாஷ். மிகுந்த மன மகிழ்ச்சி. அதைப் பார்த்தபோது எனக்கு ஒரு நம்பிக்கை. அம்மா அவர்கள் பக்கத்திலே இப்போது நல்ல பிள்ளையாக இருக்கிறோம். இதோடு ஏதும் நாமும் கேட்டு, வைகை அணைக்கட்டிற்கு, வைகைக்குத் தேவையானவற்றை நிச்சயமாகப் பெற முடியும் என்கின்ற நம்பிக்கை. மதுரை, இராமநாதபுரம், மதுரையைச் சுற்றியிருக்கிற பகுதிகள் அனைத்தும் வளத்தோடு, நலத்தோடு வாழ்வதற்கு, தூரை வாரி எடுப்பதற்கு பெரிய அளவிலே அம்மா அவர்கள் உதவி செய்ய வேண்டுமென்பதையும் நான் மெத்தப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன் அதே நோத்தில் நம்முடைய மாண்புமிக்க நிதி அமைச்சர் நேற்றையதினம் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் பதில் சொல்கிறபோது, அதோடு இணைத்து அந்தப் பதிலைத் தெரிவித்தார்.

மதுரையில் பாலரங்காபுரம் ஆஸ்பத்திரி. பெரிய அளவிலே முழுமையான ஆஸ்பத்திரியாக இராஜாஜி ஆஸ்பத்திரிக்கு துணையாக இருக்கின்ற அளவில் மிகப் பிரமாண்டமாக அத்தனை கருவிகளும் பொருத்தப்பட்டு, மதுரையில் இன்னொரு பெரிய ஆஸ்பத்திரியாக துணைக்கு செயல்படும் என்று சொன்னீர்கள். மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரை இன்றைக்கு இந்த உத்தரவைப் பிறப்பிக்க வைத்த



மாட்சிமைக்குரிய என் தாய்க்கு, தமிழகத்தினுடைய அந்த அன்னைக்கு மீண்டும் என்னுடைய மனம் நிறைந்த நன்றியை மதுரை மக்களின் சார்பாக நான் மெத்தப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன.

இதேபோன்று, அம்மா அவர்களுக்கு இன்னொரு humble submission. பணிவான வேண்டுகோள், அருள்மிகு அன்னை மீனாட்சியினுடைய ஆலயம் இருக்கிற இடம். மீனாட்சியின் சகோதார் கூடலழகர் பெருமாள் அங்கேதான் இருக்கிறார். பிரசித்திப் பெற்ற வைகை திருவிழாவிற்கு இலட்சக்கணக்கான மக்கள் கூடுகிற இடம். எப்பொழுதுமே ஒரு floating population என்று சொல்லக்கூடிய வகையில் மதுரைக்குள் இலட்சக்கணக்கிலே மக்கள் வந்து போய் கொண்டிருக்கிறார்கள். அந்த மதுரை மாநகரத்தின் வீதிகளை சீரமைக்க வேண்டுமென்ற அவசியம் இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. மாநகராட்சியில் நிதிப் பற்றாக்குறை, மதுரை மாநகராட்சிக்கு எப்போதுமே ஒரு விதி. நிதி இருக்கவே இருக்காது. ஒரு மிகப் பெரிய சாபக்கேடு மாதிரியே அது ஆகிவிட்டது. ஆனால், இன்றைக்கு இரண்டாவது மிகப் பெரிய தலைநகரம், தமிழகத்தின் அரசியல் தலைநகரம் என்று சொன்னால், மதுரைதான் என்று சொல்லக்கூடிய அளவில் ஒரு பிரசித்திப் பெற்ற அந்த நகாத்தில் இன்றைக்கு இத்தனை இலட்சம் மக்கள் கஷ்டத்திற்கு உள்ளாகக்கூடிய அளவில் இருக்கிறது. வெளியே இருந்து வரக் கூடிய floating population என்று சொல்லக்கூடியவர்களுக்கு நிறைவான அளவில் இந்தத் திட்டங்களை நிறைவேற்றித் தர வேண்டும் என்று நான் மெத்தப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோலத்தான் குடிநீர்ப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்கிற அதேநேரத்தில் இந்தச் சாலைகளை சீரமைக்க வேண்டும். மீனாட்சி அம்மன் கோயிலுக்கும், பெருமாள் கோயிலுக்கும் ஏராளமான வருமானம் வந்து கொண்டிருக்கிறது. நான் ஒரு இஸ்லாமியக் குடிமகன். ஒரு முஸ்லீம் சகோதான். நான் ஏற்கெனவே இந்த மன்றத்தில் பேசியிருக்கிறேன். அம்மா அவர்களுடைய மிகப்பிரமாண்டமான ஆதரவு அலையும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆற்றல்மிக்க அடலேறுகளின் துணையும் எனக்கு இருந்ததால்தான் ஒரு மகத்தான வெற்றியை நான் பெற்றேன். அந்த மத்திய தொகுதியில் மிகுந்த அளவிற்கு கோயில் மாநகரம் என்று சொல்லப்பட்ட இடத்தில் ஒரு முஸ்லீம் சகோதரன் வெற்றி பெற முடியும் என்கின்ற அரசியல் வரலாற்றை உருவாக்குவதற்குத் தாங்கள்

துணையாக இருந்தீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நான் அந்தத் தாய்க்கு, மீண்டும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கவனமாகப் பேச வேண்டியிருக்கிறது, மீனாட்சி அம்மன் கோயில் விஷயத்திற்கு வருகிறபோது, எனக்கு இப்போது ஒரு நம்பிக்கை. அம்மாவிற்கு ஆதரவாக ராஜாவும் இருக்கிறார். நாங்களும் இருக்கிறோம். ஏதாவது ஒரு சிறு வார்த்தை அப்படி பிரண்டால் கூட ஹக்கீமிற்கு துணையாக வருவதற்கு ராஜா இருப்பார் என்ற நம்பிக்கையும் எனக்கு இருக்கிறது. ஏன் என்றால், சிக்கலே வந்தால் அங்கிருந்துதான் வரும். (சிரிப்பு) அதற்காகத்தான் நான் மிகுந்த கவனத்தோடு சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். மீனாட்சி அம்மன் கோயில், பெருமாள் கோயில் வருமானம் கோடிக்கணக்கிலே வருகிறபோது அம்மா அவர்கள் பெரிய மனது வைத்து ஒரு குறிப்பிட்ட அளவு அதனுடைய தொகையை, நிதியைக் கூட மதுரை மாநகரத்தின் எதிர்கால வளர்ச்சிக்காக ஒதுக்கிட உதவி செய்ய வேண்டுமென்று நான் மெத்தப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்திலே பேரவைத் தலைவர் சார்பிலும் ஒரு சிறிய வேண்டுகோள். அதிகப்படியான அளவில் நிலத்தடி நீரை யாரும் தவறாகப் பயன்படுத்தி விடக்கூடாது என்று சொல்லியிருக்கிறீர்கள். சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது. அந்த விதிமுறைக்கு மாறாக இன்றைக்கு எங்களுடைய திருமங்கலத்தில் நிலத்தடி நீரை எடுத்து வருகிறார்கள். நான் மத்திய தொகுதிக்கு எம்.எல்.ஏ.வாக இருந்தாலும், பிறப்பால், வளர்ப்பால், தொகுதி என்ற முறையில் ஓட்டு என்பது எனக்கு திருமங்கலம் என்ற காரணத்தினாலே பேரவைத் தலைவர் அவர்கள் நேற்று பேசுகிறபோது சொன்னார். நம்முடைய சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் அம்மா அவர்களுக்குப் பக்கத்தில் இருந்து அற்புதமாகவே பாட்டுப் பாடி, எப்படியாவது புலவர்களைப்போல சிலவற்றை கேட்டுப் பெற்று விட வேண்டும் என்று பக்கத்தில் பாடியே பாதியைப் பெற்றுவிட்டார். அம்மா அவர்கள் இனிமேல் அவர் பாடினால் சரியாக வராது என்றுதான் பாட்டை நிறுத்துங்கள், கேட்பதைத் தருகிறேன் என்று தாராளமாகக் கொடுக்கவும் செய்தார்.

*பிற்பகல் 1-00*

அதேபோலத்தான், எங்களுடைய நகருக்கு, எங்களுடைய ஊருக்கு எத்தனையோ நன்மைகளை நிறைவாகச் செய்திருக்கிறார்கள். கூட்டுக் குடிநீர்த் திட்டம் எல்லாம் அற்புதமாக உருவாக்கி அன்றைக்கும் தந்தீர்கள். இன்றைக்கு பேரவைத் தலைவர் பல விஷயங்களை அவர்



இருக்கிற இடத்திலேயிருந்து சொல்ல முடியாத காரணத்தினாலே என்னைப் போன்றவர்கள் சொல்ல வேண்டியிருக்கிறது.

**Rayalseema Sleeper Wood Furnishing Industries** என்று ஒன்றிருக்கிறது. நிலத்தடி நீரை மிகக் கடுமையாக எடுத்து வருகிறார்கள். இரயில்வே ஸ்டேஷன்களில், அந்த இரயில்வே டிராக்குகளை இணைக்கிறார்களே, அந்தக் கட்டைகளைப் போடுவதற்காக உள்ளது அந்தத் தொழிற்சாலை. ஒரு நாளைக்கு எக்கச்சக்கமான தண்ணீரை உறிஞ்சி எடுக்கிறார்கள். ஒரு கண்மாய் தண்ணீரை உறிஞ்சி, நிலத்தடி நீரை எடுத்து, அந்தத் தொழிற்சாலைக்குப் பயன்படுத்துகிறார்கள். மக்கள் குடி தண்ணீருக்குப் பற்றாக்குறையாகிவிடும். திருமங்கலம் பாலைவனமாக்கப்பட்டு விடுமோ என்ற பயம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. நான் மாண்புக்குரிய அம்மா அவர்களிடத்திலே என்னுடைய பணிவான வேண்டுகோளாகச் சமர்ப்பிக்கிறேன். திருமங்கலம் மக்களையும், மதுரை மாவட்டத்தையும் நான் ஏற்கெனவே சொன்னதைப்போல இந்தப் பாதிப்புக்குள்ளான மக்களையும் பாதுகாக்கின்ற பெரு முயற்சிக்கு அம்மா அவர்கள் துணையாக இருக்கவேண்டும்.

அதைப்போலத்தான், பேரவைத் தலைவர் அவர்கள் சார்பாக இந்த வேண்டுகோளையும் நான் வைக்கிறேன். திருமங்கலத்திற்கு நான் சொன்னபடி சப்-கோர்ட் என்பது பேசப்பட்டு, அது ஓரளவுக்கு கனிந்த நிலைமைக்கு வந்திருக்கிறது. அதனை ஏற்படுத்தித் தருவதிலே எந்தவிதமான சுணக்கமும் இல்லாமல் விரைவாக எங்களுக்கு ஏற்படுத்தித்தர வேண்டுமென்று மெத்தப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

தொடர்ந்து செல்லட்டும் உங்கள் வெற்றிப் பயணம். நீங்கள் படைக்கின்ற இந்தப் புதிய வரலாற்றின், புரட்சிகரமான சிந்தனையில் எதிர்காலத் தமிழகம் என்பது எப்போதுமே உங்களுக்கு, உங்களுடைய வெற்றிக்கு, உங்களுடைய எதிர்கால நலத்திற்கு, உங்களுடைய எதிர்கால பலத்திற்கு, நீங்கள் எடுத்துக்கொள்ளக்கூடிய முயற்சிகளுக்கு துணையாக இருக்கும். உங்களுடைய மிகப் பெரிய புரட்சிகரமான இந்தப் புதிய அத்தியாய அரசியல் வரலாற்றுத் திருப்பங்களைக்கண்டு தமிழகத்து மக்கள் வெற்றி முத்திரையை தங்கள் கையால் எப்போதும் பதித்துக் கொண்டிருப்பார்கள் என்பதை மீண்டும் மீண்டும் வலியுறுத்தி தெரிவித்துக்கொள்கிறேன். அன்னையின் தலைமையேற்று, இந்த நாட்டு

மக்களுக்குத் தொண்டு செய்வதற்கு ஒரு நல்ல வாய்ப்பினை உருவாக்கித்தந்த இறைவனுக்கு நன்றி சொல்லி, அம்மாவிற்கு என்னுடைய பணிவான வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். தொடரட்டும் உங்கள் பயணம், துணைக்கு வருகிறோம் தாயே; அஞ்ச வேண்டிய அவசியம் என்பது எப்போதும் உங்களுக்கு வந்ததில்லை. எத்தனை யானைகளின் கூட்டம் பெருக்கெடுத்து வந்து, மத யானைக் கூட்டமென வந்து அரசியலில் உங்களை வெற்றி கொள்வதற்காக தாக்குவதற்கு நினைத்தாலும் சிங்கம், சினம் கொண்ட சிங்கம், அத்தனையையும் துரத்தி, அடித்துத் துரத்தி, வெற்றி கண்டுவிட்டுத்தான் மறு வரலாறு என்கின்ற உண்மையை (மேசையைத் தட்டும் ஒலி) காட்டுகின்ற விதத்தில், ஆண்டுக்காண்டு, புதிய ஆண்டு பிறக்கிற போதெல்லாம் அம்மா அவர்கள் ஒரு சிங்கத்தின் படத்தை வைத்துத்தான் 'வாழ்த்துக்கள்' என்று எல்லா உறுப்பினர்களுக்கும் அனுப்புவார்கள். அந்தச் சிங்கத்தின் தோற்றத்தைப் படமாக வைத்து ஏன் அனுப்பினார் என்பதை சாத்தான்குளத்தில் முழுமையாக நான் பார்த்து முடித்து விட்டேன். ஏனென்று சொன்னால், எத்தனை மத வெறி பிடித்தவர்கள், எத்தனை சாதி வெறி பிடித்தவர்கள், எத்தனை இன வெறி பிடித்தவர்கள் வெளியே வந்தாலும், தாக்குபிடிக்க முடியாது. கிறிஸ்துவ பேராலயத்தின் மணியை அடித்து, கட்டப் பஞ்சாயத்து நடத்தி, அரசியலிலே வெற்றி கண்டுவிடலாம் என்று நினைத்த இடத்தில் அது நடவாது என்று சொல்லி,

"காக்கைக் குருவி எங்கள் ஜாதி-நீள்
கடலும் மலையும் எங்கள் கூட்டம்;
நோக்குந் திசையெல்லாம் நாமன்றி வேறில்லை
நோக்க நோக்கக் களியாட்டம்"

என்கின்ற அடிப்படையில் மகத்தான வரலாறு படைத்துவிட்ட தாயே! என்றும் தமிழகம் உங்கள் பின்னால்; என்றும் தமிழ் திருநாட்டின் அரசியல் வெற்றி வாலாறு உங்களுக்குப் பின்னால்.

ஏற்கெனவே, முன்னாலே அமர்ந்திருக்கிற அன்புச் சகோதரி அவர்கள் திருமணம் என்று நடந்திருந்தால், ஒன்றிரண்டு குழந்தைகளுக்குத் தாய் என்று அன்றைக்கு உங்களைப் பார்த்துச் சொன்னார். ஆனால் 6½ கோடி மக்களின் தாயாக இன்றைக்கு தமிழகத்திலே பவனி வரக்கூடிய



(மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவியினுடைய இந்த அரசியல் வீர வரலாறு நாளை 100 கோடி மக்களின் (மேசையைத் தட்டும் ஒலி) தாய் என்ற அந்த அந்தஸ்தைப் பெறுகின்ற ஒரு புரட்சி வரலாறு, புதிய வரலாறு பிறக்கட்டும், சிறக்கட்டும் எனச் சொல்லி அமர்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பாரமலை.

*பிற்பகல் 1-05*

***திரு. க. பாரமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2002-2003 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை மீது பேசுகின்ற வாய்ப்பினை கொடுத்ததற்காக நான் தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழகத்திலே என்றும் கண்டிராத வறட்சி. வறட்சியினால் மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய உணர்வுகளை சட்டமன்றத்திலே எடுத்துச் சொல்கிறபோது, இங்கும் பரபரப்பான சூழ்நிலை நிலவிக் கொண்டிருப்பதை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அப்படிப்பட்ட வறட்சி நிலையிலும், நம்முடைய தமிழக அரசு, மத்திய அரசிடம் கோரியிருந்த ரூபாய் 3,525 கோடி பணத்தைக் கேட்டபோதும், அவர்கள் இதுவரை 258 கோடிதான் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள் என்ற அதிர்ச்சியான செய்தி 3 நாட்களுக்கு முன்புதான் வந்திருக்கிறது. அப்படி இருந்தாலும், தமிழ்நாடு அரசு 276 கோடி ரூபாய் ஒதுக்கி, வேலைகளைத் தொடங்கியிருக்கிறது. வேலைகளைத் தீவிரப்படுத்த வேண்டும். பாதிக்கப்பட்ட பகுதிகளில் வரியை ரத்து செய்ய வேண்டுமென்று கோரிக்கை வைத்தபோது, நேற்றையதினம் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள்—Land kist வசூல் செய்யப்படவில்லை, செஸ் மட்டும் வசூல் செய்கிறார்கள் என்று சொன்னார்கள். இன்று அதையும் ரத்து செய்திருக்கிறோம் என்ற நல்ல செய்தியைச் சொன்னதற்காக நான் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எங்களுடைய உறுப்பினர் சொல்கிறபோது, அரிசி விநியோகத்தைப் பற்றி இப்போது சொன்னார்கள். ஏற்கெனவே சாப்பாடு போடப் பட்டது. சாப்பாடு போடுகிறபொழுது, எவ்வளவு கஷ்டத்திலே இருந்தாலும் ஒரு மைல், இரண்டு மைல் சென்று, அந்தப் பகுதிக்குச்

சென்று சாப்பாடு வாங்குவதை விரும்பாத மக்கள் அங்கே செல்லவில்லை. அங்கே சென்றவர்களைக் கணக்கெடுத்து அவர்களுக்குத்தான் அரிசி போடப்படும் என்று பின்னர் சொன்ன காரணத்தினாலே, இன்றைக்கு உண்மையிலேயே வறுமைக் கோட்டிற்குக் கீழே விவசாயத் தொழிலாளர்களாக இருக்கின்றவர்கள் பல பேருக்கு அது கிடைக்கவில்லை. அது உண்மையான நிலை. அதில் குறிப்பாக ஒன்றைச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், என்னுடைய தொகுதியிலே கீழப்பிடாவூர் என்ற ஊர் இருக்கிறது. அந்த ஊரிலே இந்த சாப்பாட்டிற்கு வந்தவர்கள் 50 பேர் பதிந்து கொண்டவர்கள். அவர்களுக்குச் சாப்பாடு போடப்பட்டது. சாப்பாட்டுக்குப் பின்னாலே, அரிசி கொடுக்கப்படும் என்று அறிவித்த பின்னர், பல பேர் கலெக்டரிடமும், தாசில்தாரிடமும் எங்களையும் பதிந்து கொள்ளவேண்டும் என்று கேட்டார்கள். ஆனால் யார் ஏற்கெனவே பதிவு செய்திருக்கிறார்களோ, அவர்களுக்குத்தான் அரிசி என்று சொல்லி அவர்களுக்கு அரிசி வழங்க இயலவில்லை. இந்த கீழப்பிடாவூரிலே மட்டும் அந்த அரிசி வழங்குவதையே, பக்கத்துக் கிராமத்துக்காரர்கள் தடுத்து நிறுத்திவிட்டார்கள். கடந்த 2 மாதமாக அவர்களுக்கு அரிசி கிடைக்கவில்லை. அதனாலேயே சட்டம்-ஒழுங்கு பிரச்சினை வருகின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே நான் கேட்டுக்கொள்வது இன்றைக்கு கூட்டுறவுக் கடன்களுக்கான வட்டி மற்றும் நிலவரி எல்லாம் ரத்து செய்து, அதற்கும் மேலாக 250 கோடி ரூபாய்க்கும் தாராளமாக திட்டங்களை அறிவித்திருக்கிறார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். உண்மையிலேயே வறுமைக்கோட்டிற்கு கீழே இருக்கிற பாதிக்கப்பட்டவர்கள் மனு செய்கின்றபொழுது அவர்கள் விரும்பிக் கேட்கிறபொழுது அவர்களுக்கும் அரிசி வழங்குவதற்கு முடியுமா என்பதைப் பார்க்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, value added sales tax. இங்கே பெரிய விவாதமே நடந்தது. நமது மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொல்கின்றபொழுதுகூட, மத்திய அரசினுடைய வழிகாட்டுதலில், அனைத்து மாநிலமும் அமல் நடத்துகிற அந்தத் திட்டம் — அந்த என்.டி.ஏ. யிலே இருக்கின்றீர்கள். நீங்கள் சொல்லி மத்திய அரசை நிறுத்தச் சொல்லிவிட்டால் நாங்களும் அதை ஒத்துக்கொள்ளத் தயார் என்ற ஒரு வார்த்தையைச் சொன்னீர்கள். நான் சொல்வதற்குக் காரணம், நேற்றையதினம் ஒரு பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது. அந்த மதிப்புக் கூட்டப்பட்ட வரி 1-4-2003-க்குள்



அமல்படுத்தப்படவேண்டும் என்று ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆனால் டெல்லியிலே இதுபற்றிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டு, இந்த வரி அமலாக்கத்தின் காரணமாக பல பொருட்களின் விலைகள் உயரக்கூடும், அதனால் பாதிப்பு ஏற்படக்கூடும் என்று கருதுகிற பல பகுதிகளில் போராட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. குறிப்பாக டெல்லியிலே வியாபாரிகள் போராட்டத்தைத் தொடங்கியிருக்கிறார்கள். அதன் காரணமாக பெரிய பாதிப்பு ஏற்படக்கூடும் என்று கருதி பாரதீய ஜனதா கட்சியைச் சேர்ந்த தலைவர்கள் நிதி அமைச்சரை சந்தித்து, ஜஸ்வந்த் சிங் அவர்களை சந்தித்து, இந்த VAT—Value Added Tax-ஐ 1-4-2005 வரை நிறுத்தி வைக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர் என்ன முடிவு சொன்னார் என்று தெரியாவிட்டாலும், அவர்களிடமிருந்து கிடைத்த தகவல்கள் அடிப்படையில், இது நிறுத்தி வைக்கப்படக் கூடும் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம், இது மத்திய அரசினுடைய வழிகாட்டுதலின்படி பல மாநிலங்கள் ஒப்புக்கொண்டு நடத்தினாலும், மாநிலங்கள் எல்லாம் மத்திய அரசையே குறை சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, 2004 ஆம் ஆண்டில் நடக்கவிருக்கும் பாராளுமன்றத் தேர்தலை இது பாதிக்கும் என்று கருதுவதால், அதை அவர்களும் யோசிக்க ஆரம்பித்திருக்கிறார்கள். ஒருவேளை, அப்படியொரு தாக்கீது வந்தால், அதை நிறுத்துவதற்கு, 1-4-2005 வரை தள்ளி வைப்பதற்கு நாமும் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-10*

ஒருவேளை தடுக்க முடியாமல், சட்டத்தை நிறைவேற்றுகிற வாய்ப்பு வந்தால்—எனக்கு ஒரு குறிப்பு வந்திருக்கிறது—மாநில அமைச்சர்களுடைய கூட்டுக் குழு, வரி விதிப்புக்கு 5 இலட்சம் என்றும், அது அமல் செய்யப்படுவதற்கு 30 இலட்சம் என்றும் முடிவு செய்திருக்கிறது. ஆனால், நம்முடைய அரசாங்கம் விற்பனை வரி மதிப்புக்கு 3 இலட்சம் எனவும், அமல் செய்ய 10 இலட்சம் எனவும் அதனுடைய தொகையைக் குறைத்திருக்கிறார்கள். இது வெகுவாக பாதிக்கக்கடிய வாய்ப்பிருக்கிற காரணத்தாலே, இதை மறுபரிசீலனை

செய்யவேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதையும் பரிசீலனை செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இலவச மின்சாரத்தைப் பற்றி கடுமையான விவாதங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இலவச மின்சாரம் ரத்து என்று ஒரு பக்கமும்/ எதிர் பக்கமும், ரத்து அல்ல; விவசாயிகள் செலுத்தும் தொகையை நாங்கள் ஈடு செய்து கொடுத்துக் கொண்டிருக்கிறோம் என்று ஆளுங்கட்சியின் சார்பிலும் சொல்லப்பட்டு வருகிறது. அதைப்பற்றிய விவரங்களையெல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நான் கேட்டுக்கொள்வது, மின்சார ஒழுங்குமுறை ஆணையம் சொல்லியிருக்கிறது; இலவச மின்சாரத்திற்கு ஆகும் நிதியை தமிழக அரசு ஏற்றுக்கொண்டால், இலவச மின்சாரம் தொடர அனுமதிக்கப்படும் என்று மின்சார ஒழுங்குமுறை ஆணையம் சொல்லியிருக்கிறது. நம்முடைய குறிப்பிலேகூட ஒரு இடத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. "அந்த மின்சார ஒழுங்குமுறை ஆணையம் சொல்லியிருக்கிற சிபாரிசுகளை சில மாற்றங்களோடு நாம் ஏற்றுக்கொள்ளலாம்" என்று சொல்லியிருக்கிறீர்கள். ஆகவே, அதிலே முடிவு எடுக்கின்ற அதிகாரம் தமிழக அரசுக்குத்தான் இருக்கிறது. அந்தவகையிலே நான் கேட்டுக்கொள்வது, சிறு குறு விவசாயிகளுக்கு— அதைப்போல குடிசைக்கு மின் விளக்கு, இவற்றுக்கு ஆகும் செலவு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்கிறபோது, அதை ஒரு கணக்குப் போட்டுச் சொல்லி, 1000 ரூபாய் வருகிறது; 1250 ரூபாய் கொடுக்கிறோம் என்று சொல்கிற அந்த நிலையில், நான் கேட்டுக்கொள்வது, இந்த விவசாயிகளுக்கு—நேரடியாகக் கொடுக்காமல், அவற்றை மின் வாரியத்திற்கே நேரடியாக நாம் கொடுத்துவிட்டால் நிச்சயமாக பாதிப்பு ஏற்படாது என்று நான் கருதுகிறேன். அப்படி நான் சொல்வதற்கு ஒரு காரணம் இருக்கிறது. என்ன காரணம் என்றால், இலவசம் என்று வந்துவிட்டாலே அது நேரடியாக பயனாளிகளுக்குப் போய்ச் சேருவதில்லை. ஓர் உதாரணம் சொல்லவேண்டும் என்று சொன்னால், ஆதிதிராவிட சமுதாயத்தைச் சேர்ந்த யாராவது இறந்துவிட்டால், அவர்களுக்கு 500 ரூபாய் ஈமச் சடங்கிற்காக அரசு கொடுத்துக் கொண்டிருக்கிறது. அது இனாம் என்று சொல்கிற காரணத்தால், அது பல இடங்களுக்குப் போய்ச் சேருவதில்லை; உரிய நேரத்திலும் கிடைப்பதில்லை. அதனாலே அவர்களுக்குப் பாதிப்பு ஏற்படுகிறது. அந்தவகையிலே, அரசே......



***மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர்களுக்கு இறப்பு நிதியாக, ஈமகிரியைக்கு 500 ரூபாய், செக்-ஐ வங்கியிலே போய் எடுத்துக்கொள்ளக்கூடிய அளவிலே இல்லாமல், இப்போது முன்கூட்டியே அந்தந்த ஊராட்சி மன்றத் தலைவர் மூலமாக நேரடியாகவே ஊராட்சி மன்றத் தலைவரே வழங்கிக் கொண்டு வருகிறார்கள்.

**திரு. க. பாரமலை:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்கூட்டியே என்றால் பிணத்தை எடுப்பதற்கு முன்பாக என்று சொல்கிறார். சாவதற்கு முன்னால் என்று சொல்ல முடியாது. (சிரிப்பு) ஆனால், நான் கேட்டுக்கொள்வது, அரசு ஆணை பிறப்பித்திருப்பது உண்மை. ஆனால், நடைமுறை வேறு என்று நான் சொல்லிக்கொள்கிறேன். எனக்குத் தெரியும். அதுபோல, இப்போது பேருந்துக் கட்டணம் உயர்த்தப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் இரண்டு மணித்துளிகளில் முடித்து விடுங்கள்.

**திரு. க. பாரமலை:** இரண்டு மணித் துளிகள்தான் சார் பேசியிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, 10 மணித்துளிகள் பேசியிருக்கிறீர்கள். குறுக்கீடுகளே இல்லை.

**திரு. க. பாரமலை:** குறுக்கீடு இல்லை. இன்னும் 5 நிமிடங்கள் கொடுங்கள். பேருந்துக் கட்டணம் என்பதை நாம் ஏற்கெனவே உயர்த்தியிருக்கிறோம். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், எந்த இடத்தில், எப்போது என்ற தகவலை குறிப்பாகக் கொடுத்தால் அதற்கான உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. க. பாரமலை:** நன்றி. பேருந்துக் கட்டண உயர்வு குறித்து பல விவாதங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. நான் ஒன்றை மட்டும் சொல்கிறேன். கல்வி நிறுவனங்களுக்கு அளிக்கப்படுகின்ற பேருந்துகளுக்கு காலாண்டு வரி 500 ரூபாய் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு வருடத்திற்கு 2000 ரூபாய். ஆனால் இப்போது இருக்கைக்கு காலாண்டு வரி 150 ரூபாய் என்று சொல்லி, வருடத்திற்கு ஏறக்குறைய 36,000

ரூபாய் ஆக்கப்பட்டிருக்கிறது. கல்வி நிறுவனங்கள் என்று சொல்கிறபோது, கல்வி நிறுவனங்களை நடத்துகிறவர்கள் வசதியானவர்களாக இருக்கிறார்கள். ஆனாலும் அவற்றையெல்லாம் பயன்பெறுகின்ற மாணவர்களிடமிருந்து வசூல் பண்ணுகின்ற காரணத்தால் மாணவர்கள் மிகவும் பாதிக்கப்படுவார்கள். ஆகவே அதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-15*

அடுத்து தமிழக அரசால் ஆதிதிராவிட நலத் துறையின் சார்பிலே ஏற்கெனவே தாழ்த்தப்பட்ட மக்களுக்காக ஒதுக்கப்பட்டு நிரப்பப்படாத இடங்களை நிரப்ப வேண்டுமென்று சொல்லி அரசு ஆணை 44 என்ற ஓர் ஆணை வெளியிடப்பட்டது. அது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்தான் வெளியிடப்பட்டது. ஆனால் அதே ஆட்சியிலே 8-5-2000.....

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தவறான தகவலைக் கொடுத்துக்கொண்டிருக்கிறார். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலேதான் அந்த 44 ஜி.ஓ. நிறுத்தப்பட்டது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. பாரமலை:** தயவுசெய்து நான் பேசுவதை கேட்டுவிட்டு பேசுங்கள். உங்களுக்குத் தெரிந்ததைவிட, நான் விவரம் தெரிந்திருக்கிறேன். நீங்கள் பிறப்பதற்கு முன்பாகவே நான் அரசியலில் இருந்தவன். அதனால் நன்றாக தெரிந்து கொண்டு பேசுங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எனக்கு முன்பாகவே பிறந்திருக்கலாம். ஆனால் கடந்த தி.மு.க. ஆட்சியில் நான் சட்டமன்ற உறுப்பினராக இதே அவையில் இருந்தவன்.

**திரு. க. பாரமலை:** தமிழக அரசு ஆணை 44, தேதி 20-5-1998, 1998-லே எந்த ஆட்சி இருந்தது என்பதை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த ஆட்சியின்போது அப்படி போடப்பட்டது. ஆனால், அதே ஆட்சியில் 8-5-2000 அன்று அரசு ஆணை 33-ன்படி அந்த 44 ஆணையை விலக்கிவிட்டார்கள். அதனாலே ஒரு கடுமையான பாதிப்பு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஏற்பட்டது. அந்த நேரத்திலேகூட.....



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பாரமலை, நீங்கள் சொல்வதும், அமைச்சர் சொல்வதும் ஒன்றுதான். ஒரே கருத்திற்காக ஏன் சண்டை போடுகிறீர்கள் என்று தெரியவில்லை.

**திரு. க. பாரமலை:** இல்லை, இல்லை. தவறான தகவலை சொல்கிறார் என்று சொல்லக் கூடாது. என்னுடைய பேச்சை முழுமையாகக் கேட்ட பின்னால் தவறு என்றால், சொன்னால் நான் திருத்திக்கொள்கிறேன். ஆரம்பிப்பதற்கு முன்பாகவே தவறு என்று சொல்வது எப்படி நியாயம் என்று கேட்கிறேன். ஆகவே அப்போது நீக்கிவிட்டார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் ஒரு மணித்துளிக்குள் முடித்துவிடுங்கள்.

**திரு. க. பாரமலை:** நான் இன்னும் கோரிக்கைக்கே வரவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. அவ்வளவுதான், நேரம் அவ்வளவுதான், இன்னொருவர் பேச வேண்டும்.

**திரு. க. பாரமலை:** ஆகவே அந்த அரசு ஆணையின் காரணமாக தமிழகத்தில் தாழ்த்தப்பட்ட மக்களிடையே மிகப் பெரிய கொந்தளிப்பு ஏற்பட்டது. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அன்று அதற்காகப் போராடினார்கள். அந்தத் தேர்தல் அறிக்கையிலேகூட சொல்லியிருந்தார்கள். நாங்கள் மீண்டும் வந்தால், மீண்டும் அரசு ஆணை 44-ஐ கொண்டு வருவோம் என்று சொன்னார்கள். அதன்படி 28-11-2001 அன்று அரசு ஆணை 91 வழங்கி மீண்டும் 44 அரசாணையை அமலுக்குக் கொண்டு வந்தார்கள். ஆனால் நான் கேட்டுக்கொள்ள விரும்புவது அந்த அரசாணையை முழுமையாக, விரைவாக அமல்படுத்தி அந்த 4 ஐ எடுத்ததன் காரணமாக ஏற்பட்ட இழப்புகளிலிருந்து அந்தச் சமுதாயத்தைப் பாதுகாக்க வேண்டுமென்று கேட்டு, அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** போதும். மற்றவற்றை மானிய கோரிக்கைகளில் பேசுங்கள். திரு. கே. பாண்டுரங்கன். (குறுக்கீடு) மானியக் கோரிக்கைகளிலே பேசலாம். இன்னோர் உறுப்பினர் பேசி முடிக்க வேண்டும். (குறுக்கீடு) சரி, ஒரு மணித்துளிக்குள் பேசி முடிக்க வேண்டும்.

**திரு. க. பாரமலை:** மதுரையில் இருந்து மானாமதுரை வரை வைகையாற்றில் மண்டிக் கிடக்கின்ற நாணல் புதர் மற்றும் முட்புதர்களை அகற்றியும், ஆக்கிரமிப்புகளை அகற்றியும் சீரமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பழையனூர் ஓடத்தூர் சாலையில், கிருதிமால்நதியின்மீது இரண்டு மாவட்ட தலைநகரங்களை இணைக்கின்ற அந்தச் சாலையில் ஒரு மேல்மட்ட பாலம் கட்ட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதோடு திருபுவனம் ஆரம்ப சுகாதார நிலையத்தைப் பற்றிச் சொன்னேன். காலையிலே அமைச்சர் அவர்கள் ஒரு விரிவான பதிலைக் கொடுத்தார்கள். அதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மானாமதுரை வளர்ந்து வருகிற ஒரு பெரிய நகரம். அந்த நகரத்திலே, பேருந்து நிலையத்தையும், கண்ணார் தெருவையும் இணைக்கின்ற விதத்தில் வைகையாற்றில் ஒரு தரைமட்டப் பாலம் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நிலையூர் பாசனக் கால்வாய் விரிவாக்கத் திட்டம் 19 கோடி ரூபாயில் விரைவாக அமல் நடத்த அரசு நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது. அந்தத் திட்டத்தில் எருக்களைவெள்ளூர் என்கிற கிராமக் கண்மாய்கள் விடுபட்டிருக்கின்றன. அவற்றை அவசியம் அந்தத் திட்டத்திலே சேர்த்து நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. பாண்டுரங்கன்.

*பிற்பகல் 1-20*

**திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இமயம் முதல் குமரி வரை பரந்து கிடக்கும் பாரத தேசத்திலே 100 கோடியில் ஒருவராய், கொள்கைத் தங்கமாய், பாரதி கண்ட புதுமைத் தாயாய் வாழும் எங்கள் அன்னையே, "வாழ்ந்தவர் கோடி, மறைந்தவர் கோடி, மக்களின் மனதில் நிற்பவர் யார்; மாபெரும் வீரர், மானம் காப்போர், சரித்திரம் தனிலே நிற்கின்றார்" என்கின்ற வைர வரிகளின் வாற்படமாக, வீரமகள் போராட, வெற்றி மகள் பூச்சூட, மானம் ஒரு வாழ்வாக, வாழ்வு நதி தேனாக, தமிழ்நாட்டை இந்தியத் துணைக் கண்டத்திலேயே முதன்மை மாநிலமாக ஆக்கிட, இரவு பகல் பாராமல் அயராமல் பாடுபட்டு வருபவரும், 6 மொழிகள் பேசக்கூடிய ஆற்றல் மிக்கவரும், 6½ கோடி தமிழ் மக்களின் முதல்வரும், 100 கோடி



இந்தியர்களின் வருங்கால நம்பிக்கை நட்சத்திரமுமான எங்கள் குடும்பத்தினுடைய குலவிளக்கு, இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களது பொற்பாதங்களைப் பணிவுடன் வணங்கி, யாருமே எதிர்பார்க்காத அளவிற்கு சர்க்கரைப் பொங்கலாக இன்றைக்கு தமிழகத்திலே வாடிக் கொண்டிருக்கின்ற விவசாயப் பெருமக்களுக்கு 350 கோடி ரூபாயை வாரி வழங்கிய எங்கள் அன்னைக்கு ஒட்டுமொத்த தமிழ் மக்களின் சார்பாக எங்களுடைய மனப்பூர்வமான நன்றியையும், வணக்கத்தையும், இந்த நேரத்திலே பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

"தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்

நீங்கா நிலனாள் பவர்க்கு"

என்ற வான்புகழ் வள்ளுவர் வாய்மொழிக்கிணங்க, எப்பொழுதும் விழிப்புடன் இருத்தல், தெளிந்த அறிவைப் பெற்றிருத்தல், துணிந்து செயல்படுதல் ஆகிய இம்மூன்று நெறிகளையும் ஒருங்கே பெற்ற ஒப்பற்ற தாய், எங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, கடுமையான நிதி நெருக்கடியான சூழ்நிலையிலும், சமுதாயத்திலுள்ள ஒட்டுமொத்த மக்களின் நல்வாழ்வைப் பாதுகாக்கின்ற வகையிலே சமர்ப்பிக்கப்பட்டுள்ள 2003-2004 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை, இரத்தினச் சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால், பாலைவனத்திலே ஒரு பூஞ்சோலையை உருவாக்கித் தருவதற்கு ஒப்பாகும் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

கடந்த திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியிலே உருவாக்கப்பட்ட பொருளாதாரச் சீரழிவைச் சரி செய்யவும், தமிழகப் பொருளாதார நிலையை மேம்படுத்தவும், ஏழையெளிய மக்களின் நலனைப் பாதுகாக்கவும், தமிழகத்தை வளர்ச்சிப் பாதையிலே கொண்டு செல்லவும் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இந்த நிதிநிலை அறிக்கைக்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகவும், ஒட்டுமொத்த தமிழ் மக்களின் சார்பாகவும் எங்களது மனப்பூர்வமான நன்றியையும், வரவேற்பையும், பாராட்டுதலையும் மகிழ்ச்சியோடு உரித்தாக்கிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்த மக்கள் நல பட்ஜெட்டை வணக்கத்திற்குரிய திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. புகழேந்தி

அவர்கள் குறிப்பிடுகின்றபோதுகூட, அவர்களுடைய தலைவர் அவர்கள் சொன்னதாகக் குறிப்பிட்டார்கள். கொடைக்கானலிலே அவர் இருக்கின்றபோது ஒரு கருத்தைச் சொல்லியிருக்கின்றார்கள். இந்த மக்கள் நல பட்ஜெட்டை திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் குண்டு மழை பட்ஜெட் என்று கருத்து தெரிவித்திருக்கின்றார். அவர் செய்த நிர்வாகச் சீர்கேட்டைத் தடுப்பதற்குப் போடப்பட்டது இக்குண்டு மழை. சிக்கனத்தைக் கடைப்பிடிப்பதற்குப் போடப்பட்டது இக்குண்டு மழை. அரசு கஜானா காலியாவதைத் தடுப்பதற்குப் போடப்பட்டது இக்குண்டு மழை. வரி ஏய்ப்பைத் தடுப்பதற்காகப் போடப்பட்டது இக்குண்டு மழை. தீவிரவாதத்தை ஒழிப்பதற்காகப் போடப்பட்டது இக்குண்டு மழை. வறுமையை ஒழிப்பதற்காகப் போடப்பட்டது இக்குண்டு மழை. ஏழ்மையை விரட்டுவதற்காகப் போடப்பட்டது இக்குண்டு மழை என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. புகழேந்தி அவர்களுக்கும், அவருடைய கட்சியைச் சேர்ந்த தலைவர் அவர்களுக்கும் நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். எனக்கு முன்னாலே பேசிய மிகச் சிறந்த பேச்சாளர் மாண்புமிகு உறுப்பினர் ஹக்கீம் அவர்கள் குறிப்பிட்டதைப்போன்று மாண்புமிகு அம்மா அவர்கள் வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு சரித்திரத் திட்டத்தை அறிவித்தார்கள். ஒரு சரித்திர சாதனையாக, தமிழகத்தினுடைய மக்கள் எல்லாம் இன்றைக்கு போற்றிப் புகழ்ந்து கொண்டிருக்கிறார்கள். வறட்சியாலே பாதிக்கப்பட்ட விவசாயப் பெருமக்களுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் அவர்கள் உண்ணுவதற்காக சமைத்த உணவை நான் கொடுக்கின்றேன் என்று டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தாய் உள்ளத்தோடு அறிவித்தார்கள். அங்கேதான் நாம் புரிந்துகொள்ள வேண்டும். இங்கே அமர்ந்து கொண்டிருக்கின்ற எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு நான் சுட்டிக்காட்டுவது எல்லாம், அம்மா அவர்கள் ஒரு தொலைநோக்குப் பார்வை கொண்டவர் என்பதை இந்த உதாரணத்தின் மூலமாக, நீங்கள் அறிந்து புரிந்துகொள்ள வேண்டுமென்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

*பிற்பகல் 1-25*

அருமை அண்ணன் ஹக்கீம் அவர்கள் குறிப்பிட்டதைப் போன்று எடுத்த எடுப்பிலேயே, நாங்கள் மிகச் சிறந்த அளவிற்கு பிரியாணி போடுகின்றோம், சர்க்கரைப் பொங்கல் போடுகின்றோம் என்றால், வறுமையில் இல்லாதவர்கள்கூட, அரசின் சலுகைதானே என்று எடுத்துச் சொல்லி, அரசினுடைய சலுகையைப் பெற வேண்டுமென்ற அந்த நோக்கத்திற்காக அவர்களும்கூட பதிவு செய்து கொண்டு அந்தச் சலுகையை அனுபவித்து விடுவார்கள். உண்மையாகச் சலுகையைப் பெறுபவர்களுக்கு, அந்தச் சலுகை கிடைக்காது என்பதை மனதிலே வைத்துத்தான், டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதன்முதலாக, வறுமையிலே வாடியவர்களுக்கு, வறட்சியிலே பாதித்துள்ள விவசாயப் பெருமக்களுக்கு, வறட்சியாலே பாதித்த விவசாயத் தொழிலாளர்களுக்கு சமைத்த உணவை நாங்கள் கொடுக்கின்றோம் என்று சொன்னார்கள். எடுத்த எடுப்பிலேயே, டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அவர்களுக்கு இலவச அரிசி கொடுக்கின்றோம் என்று சொல்லியிருந்தால், இங்கே அமர்ந்து இருக்கின்ற எதிர்க்கட்சி உறுப்பினர்கள்கூட என்ன சொல்லி இருப்பார்கள். அரிசி கொடுத்துவிட்டால், அதற்கு உப்பு கொடுப்பது யார், அதற்கு மிளகாய் கொடுப்பது யார், அதற்கு எண்ணெய் கொடுப்பது யார், சமைப்பதற்குண்டான இதரப் பொருட்களையெல்லாம் கொடுப்பது யார் என்று கேட்டிருப்பார்கள். ஆனால், டாக்டர் புரட்சித் தலைவி, அம்மா அவர்கள், இவர்கள் எப்படியெல்லாம் பேசுவார்கள் என்பதை தொலைநோக்குப் பார்வையோடு அறிந்துதான், சமைத்த உணவை கொடுக்கின்றேன் என்று சொன்னார். இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தொலைநோக்குப் பார்வையோடு அத்தனை குடும்பங்களுக்கும் வறுமையாலே, உள்ளபடியே வறட்சியாலே, உள்ளபடியே உணவிற்கு வழி இல்லாதவர்கள், அவர்கள் பயன்பெறுகின்ற அடிப்படையிலே அவர்கள் பதிவு செய்து கொண்டதற்குப் பிறகு, அதற்குப் பிறகும் மூன்று முறை, நான்கு முறை அம்மா, அவர்களுக்கு அவகாசம் கொடுத்தார். பாரதியார் அவர்கள் 'தனி ஒரு மனிதனுக்கு உணவில்லை எனில் ஜெகத்தினை அழித்திடுவோம்' என்றார். 'உண்டி கொடுத்தோர், உயிர் கொடுத்தோர்' என்றார் காப்பியநாயகி மணிமேகலை அவர்கள். சங்கக் காலத்திலே கடையேழு வள்ளல்கள். கடந்த காலத்திலே 8வது வள்ளல் நம் தலைவர் புரட்சித் தலைவர் அவர்கள். ஆனால், இன்றைக்கு இலவச உணவிற்காக ஏற்கெனவே பதிவு செய்யப்பட்டுள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் மாதம் 30 கிலோ இலவச அரிசி வழங்கி 9வது வள்ளலாக வாழ்ந்து வருகின்றார் நம் தலைவி, டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மழை என்கின்ற கருணை வானத்தில் இருந்துதான் பொழியவேண்டுமென்பதில்லை. மாண்புமிகு அம்மா அவர்களின்

அரசும் பொழிந்து கொண்டிருக்கிறது. வறட்சியால் வாடிக்கொண்டிருக்கின்ற 28 மாவட்ட மக்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்குவதற்காக, ஒரு புதிய திட்டம் ரூ.341.92 கோடியிலே செயல்வடிவம் பெற்று இந்த நிதிநிலை அறிக்கையிலே இடம் பெற்றிருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

இங்கே எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எல்லாம், குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் எல்லாம் கண்டன அறிக்கை கொடுத்தார்கள். கண்டன அறிக்கை மின்சார உயர்வுக்கு கொடுப்பதற்கு அவர்களுக்கு என்ன தார்மீக உரிமை இருக்கிறது என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். இங்கேயிருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய மாண்புமிகு உறுப்பினர் பெருமக்களைப் பார்த்துக் கேட்டுக்கொள்வது எல்லாம் ஒரு கண்டன அறிக்கை கொடுப்பதற்கோ அல்லது உண்ணாவிரதம் இருப்பதற்கோ ஒரு தார்மீக உரிமை இருக்க வேண்டும். ஒரு தகுதியிருக்க வேண்டும். நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். 1996 ஆம் ஆண்டு முதல் 2001 ஆம் ஆண்டு வரை மக்கள் விரோத ஆட்சியை நீங்கள் செயல்படுத்தியபோது, மின்சாரத்தை, மின்சார இலாகாவை வகித்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்த காரியம் என்னவென்பதை நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். அவர் கட்சியினுடைய தலைவர் எங்கெங்கு செல்கின்றாரோ, அவருக்கு கைத்தடியாகத்தான் அவர் இருந்தாரேயொழிய மின்சாரத் துறையை முழுமையாக அவர் பராமரித்திருந்தால் இந்த அளவிற்கு நஷ்டம் ஏற்பட்டிருக்காது. மின்சாரத் துறை இந்த அளவிற்கு அவலநிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்காது என்பதை நான் மெத்தப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

நான் இன்னொன்றையும் கோடிட்டுக் காட்ட வேண்டுமென்றால், அந்த 5 ஆண்டுக்காலத்தில் மின்சாரத் துறைக்குத் தேவையான பொருட்களையெல்லாம், உதிரிப் பொருட்களையெல்லாம் நம்முடைய மாநிலத்திலே குறைந்த விலைக்கு கொள்முதல் செய்யாமல் வெளி மாநிலங்களிலே, அரசாணை எண் 75-ஐப் பயன்படுத்தி அவர்கள் வெளி மாநிலங்களிலேயிருந்து, கோடிக்கணக்கான ரூபாயை அதிகமாகக் கொடுத்து, அந்தப் பொருட்களை எல்லாம், தரமில்லாத பொருட்களையெல்லாம் வாங்கியதால் இன்றைக்கு மின்சாரத் துறை



சீரழிந்து போனது. அதற்கு அவர்கள்தான் காரணம் என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1-30

***திரு. இ. புகழேந்தி:** பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சின்ன Point of Order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** புகழேந்தி, அவர் பேசி முடித்துவிடட்டும். டைம் இல்லை. (குறுக்கீடு) அவர் பேசி முடிக்கட்டும். (குறுக்கீடு) பேசி முடிக்கட்டும். (குறுக்கீடு) பேசி முடிக்கட்டும். உறுப்பினர், நீங்கள் ஆரம்பியுங்கள்.

**திரு. கே. பாண்டுரங்கன்:** ஆகவே, கண்டன அறிக்கையைக் கொடுப்பதற்கு அவர்களுக்கு எந்தத் தார்மீக உரிமையும் கிடையாது என்பதை நான் பணிவோடு எடுத்துச்சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பாண்டுரங்கன் அவர்கள் பேசி முடிக்கிற வரைக்கும் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகின்றது.

**திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய மனப்பூர்வமான நன்றி.

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்"

என்ற வள்ளுவரின் குறளுக்கேற்பவும், இந்தியாவின் ஆன்மா கிராமங்களில்தான் இருக்கிறது என்கின்ற காந்தியடிகளின் தத்துவத்தின் அடிப்படையிலும் கிராமங்களிலுள்ள சிறு மற்றும் குறு விவசாயிகள் மின் கட்டணம் செலுத்துவதற்கு ஏதுவாக 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்ததோடு மட்டுமல்லாமல், குடிசைவாழ் மக்கள் மின் கட்டணம் செலுத்துவதற்கு ஏதுவாகவும் ரூபாய் 14 கோடி ஒதுக்கீடு செய்து கருணைமழை பொழிந்திருக்கின்றார். அவர்கள் சொல்லுவதைப்

போன்று குண்டு மழை அல்ல; இது கருணை மழை என்பதை நான் இந்த நோத்திலே கோடிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

"வரப்புயர நீர் உயரும்
நீர் உயர நெல் உயரும்
நெல் உயர குடி உயரும்
குடி உயர கோன் உயரும்"

என்றார் சங்ககாலப் புலவர் ஔவையார் அவர்கள்.

(குறுக்கீடு)--I am not yielding (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. புகழேந்தி அவர்களே, I am not yielding. அதுபோன்று, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (குறுக்கீடுகள்) ஏரிகள், குளங்கள், குட்டைகள் தூர் வாருவதன் மூலமாக நீராதாரங்கள் பெருகும் என்பதாலும், நிலத்தடி நீர் உயரும் என்பதாலும், விவசாயிகளின் வாழ்வுக்கு வழி கோலுவதற்காக ரூ.150 கோடி நிதி ஒதுக்கீடு செய்து, வளமான, செழிப்பான தமிழகத்தை உருவாக்குவதற்கு அன்பு மழை பொழிந்திருக்கிறார் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

வானம் பொய்த்தது, வளமான காவிரியும் வற்றியது. தமிழ்நாட்டில், நெற்களஞ்சியம் வாடியது. மாண்புமிகு அம்மா அவர்கள் வறட்சி நிவாரணப் பணிகளைத் தொடர்ந்து மேற்கொள்வதற்காக ரூ.276 கோடி ஒதுக்கீடு செய்து, பாசமழை பொழிந்திருக்கிறார் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு போவைத் தலைவர் அவர்களே, தீய எண்ணம் படைத்தவர்களுக்குத்தான், குண்டு மழையே தவிர, நல்ல உள்ளம் படைத்தவர்களுக்கு அம்மா அவர்கள் காட்டுவதோ, அன்பு மழை, பாச மழை, கருணை மழை என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்கள் சொல்வதைப்போன்று, அது குண்டு மழை அல்ல; அம்மா அவர்கள்



இந்த நிதிநிலை அறிக்கையிலே கொடுத்திருப்பது, பாச மழை, அன்பு மழை, கருணை மழை என்பதை நான் மகிழ்ச்சியோடு அவர்களுக்குக் கோடிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்த மக்கள் நல பட்ஜெட்டைப் பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள், நடுநிலையாளர்கள், தொழில் வர்த்தக சம்மேளனங்கள், சமூக நிறுவனங்கள், விவசாயிகள், தொழிலாளர்கள், பொது மக்கள், அரசு அலுவலர்கள், பத்திரிகைகள், தொலைக்காட்சிகள் தமிழகத்தை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்லும் சிறந்த பட்ஜெட் என இந்த பட்ஜெட்டின்மீது கருத்து தெரிவித்திருக்கிறார்கள். நான் பேசுகின்றபோது, மரியாதைக்குரிய மாண்புமிகு சட்டமன்ற எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள் இருப்பார் என்று எதிர்பார்த்தேன். நிதிநிலை சமர்ப்பித்த அன்று அவர் வெளியிலேபோய் ஒரு பேட்டி கொடுக்கின்றார், இது சப்ஜெக்ட் இல்லாத பட்ஜெட் என்று. வார்த்தைக்கு வேண்டுமானால் ஜாலமாக இருக்கலாம். ஆனால், இது எந்த அளவுக்கு சப்ஜெக்ட் உள்ள பட்ஜெட்? இது சப்ஜெக்ட் உள்ள பட்ஜெட், சத்தான பட்ஜெட், முத்தான பட்ஜெட் என்று அவருக்குப் பல்வேறு உதாரணங்கள் மூலமாக நான் இந்த நேரத்திலே கோடிட்டுக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். அவர் இருப்பார் என்று எதிர்பார்த்தேன். அவர் இல்லை. இல்லை என்றாலும், அவருடைய இயக்கத்திலே இருக்கின்ற உறுப்பினர்கள் அவருக்கு எடுத்துச் சொல்வார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே கோடிட்டுக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு போவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடுகள்)

*(தி.மு.க. உறுப்பினர்கள் திரு. இ. புகழேந்தி, திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், திரு. கு. பிச்சாண்டி, திரு. மு.பெ. சாமிநாதன் திரு. ஆர். சக்ரபாணி ஆகியோர் எழுந்து நின்று பேச அனுமதிக்குமாறு கோரினர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள் (குறுக்கீடுகள்) அவர் yield ஆகவில்லை. உட்காருங்கள், உட்காருங்கள்

**திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏதோ வார்த்தை ஜாலத்திற்காகச் சொல்லவில்லை. 23-3-2003 ஆம் நாளிட்ட 'இந்து' நாளிதழிலே, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, செலவினத்தை நல்லமுறையிலே.... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், முதலிலே உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 23-3-2003 ஆம் நாளிட்ட 'இந்து' நாளிதழிலே, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு..... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தேவையில்லாமல் குழப்பம் விளைவிக்காதீர்கள். உட்காருங்கள்.

**திரு. கே. பாண்டுரங்கன்:** செலவினத்தை நல்ல முறையிலே கட்டுப்படுத்தியதோடு, வருவாய்ப் பற்றாக்குறையின் விகிதாச்சாரத்தையும் குறைத்துள்ளது என்று குறிப்பிட்டுள்ளது. ஏதோ, அரசியல்வாதிகளோ அல்லது மற்றவர்களோ, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்களோ குறிப்பிட்டதை நான் குறிப்பிடவில்லை. அன்றைக்கு, 23-3-2003 நாளிட்ட 'இந்து' நாளிதழிலே அது மிகத் தெளிவாகக் கோடிட்டுக் காட்டப்பட்டிருக்கிறது. இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, செலவினத்தை நல்ல முறையில் கட்டுப்படுத்தியதோடு, வருவாய்ப் பற்றாக்குறையின் விகிதாச்சாரத்தையும் குறைத்துள்ளது என்று 'இந்து' நாளிதழ் குறிப்பிட்டிருக்கிறது என்பதைக் கோடிட்டுக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

நான் இன்னொன்றையும் கோடிட்டுக்காட்ட வேண்டுமென்றால், பல்வேறு தொழில் அமைப்புகள் எல்லாம் இன்றைக்கு பாராட்டியிருக்கின்றன. இரண்டாம் கட்ட சீர்திருத்தம் Reforms மற்றும் Infrastructure அடிப்படை மற்றும் உள்ளமைப்பு வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருப்பதாக, தொழில் மற்றும் வர்த்தக சபை (Chamber of Industries and Commerce) பாராட்டியுள்ளது. இந்த



வரவு-செலவுத் திட்ட அறிக்கை, வளர்ச்சியை மையமாகக் கொண்டது எனவும், அறிவுத் தொழில் நகரியத்திற்கு, (Knowledge Industry Township) கூடுதல் உந்து வேகம் (impetus) அளிக்கப்பட்டுள்ளதாகவும், இந்தியத் தொழில்களின் கூட்டமைப்பு (Confederation of Indian Industries) பாராட்டியுள்ளது. ஏதோ இங்கே சட்டமன்ற எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதைப் போன்று, இது சப்ஜெக்ட் இல்லாத பட்ஜெட் அல்ல; இது சத்தான பட்ஜெட் என்பதற்கு நான் இன்னொன்றையும் பல்வேறு உதாரணங்கள் மூலமாகக் கோடிட்டுக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1-35

ஜவுளித் தொழிலுக்கென தனிக் குழு அமைத்தல், கட்டுமானத் தொழிலை முறைப்படுத்துதல், கட்டுமானப் பொருட்கள் விநியோகம் மற்றும் ஜவுளித் தொழிலாளர்கள் ஊதியம் போன்றவை குறித்து உயர்மட்டக் குழு அமைத்து இருப்பதை இந்துஸ்தான் வர்த்தக சபை— ஏதோ காற்றிலே போகின்றவர்கள் சொல்லவில்லை; ஏதோ ரோட்டிலே போகின்றவர்கள் சொல்லவில்லை; இந்துஸ்தான் வர்த்தக சபை— (Hindustan Chamber of Commerce) வரவேற்றுள்ளது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று நிதிப் பற்றாக்குறையை சரி செய்ய கடுமையாக முயற்சித்துள்ளதை இந்த நிதிநிலை அறிக்கை எடுத்துக்காட்டியிருப்பதாக இந்திய தொழில் மற்றும் வர்த்தகக் கழக தென்பிராந்தியக் குழு — Southern Regional Council of the Federation of Indian Chamber of Commerce and Industries தெரிவித்துள்ளது. எவ்வளவு பெரிய நிறுவனம்; எவ்வளவு பெரிய அமைப்பு; அது பாராட்டி இருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

'எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு' என்றார் பாரதிதாசன். அந்தச் செம்மொழியை, உலகம் போற்றும் உன்னதத் தமிழ் மொழியை மத்திய அரசினுடைய ஆட்சி மொழியாக ஆக்க வேண்டும் என்று மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையிலே வலியுறுத்தி இருக்கிறார். இது சத்து இல்லையா? இது சப்ஜெக்ட் இல்லாத பட்ஜெட்டா என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சியினுடைய உறுப்பினர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும் என்பதை நான் கனிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கோரிக்கைகள் என்பது கிடப்பிலே போடப்படுவதற்கல்ல. கோரிக்கைகள் என்பது செயல்படுத்துவதற்கும், நிறைவேற்றுவதற்கும்தான் என்பதை நினைவுகூறும்விதமாக பல ஆண்டுகளாக கோரி வருகின்ற சேதுசமுத்திரத் திட்டத்தை நிறைவேற்றக் கோரி மத்திய அரசை மாண்புமிகு அம்மா அவர்கள் தொடர்ந்து வலியுறுத்துவதாக இந்த நிதிநிலை அறிக்கையிலே கோடிட்டுக் காட்டப்பட்டு இருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழை இயல் என்பார்; இசை என்பார்; நாடகம் என்பார். ஆனால் மாண்புமிகு அம்மா அவர்கள்தான் அதை அறிவியல் தமிழ் என்றார். அந்த விஞ்ஞானத்தினுடைய அத்தியாவசியத்தை உணர்ந்ததால்தான் தமிழகத்திலே இருக்கின்ற அனைத்து பள்ளி மாணவர்களுக்கும் கணினி கல்வி கற்பிக்க வேண்டும் என்ற அடிப்படையில் முதல்கட்டமாக 200 மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு கட்டாயக் கணினி கல்வி கற்பிக்க வழிவகை செய்துள்ளார் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை நான் கோடிட்டுக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆணுக்குப் பெண் சமம் என்பது ஏட்டளவில் வெறும் பேச்சளவில் இருக்கும் வார்த்தையல்ல. இன்று உண்மையாய் சாத்தியமாய் ஆகிக்கொண்டு இருக்கின்றது. 5 இலட்சம் மகளிரைக் கொண்ட 25 ஆயிரம் சுய உதவிக் குழுக்கள் புதிதாக உருவாக்கப்பட இருக்கின்றன. அந்தத் திட்டத்திற்காக மாண்புமிகு அம்மா அவர்கள் ரூ. 22.5 கோடி நிதி ஒதுக்கீட்டினைச் செய்து இருக்கிறார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காணி நிலம் வேண்டும் என்றார் பாரதி. கட்டித் தருவோம் வீடுகள் என்றார் பாரதி கண்ட புதுமைத் தாயாக விளங்கும் நம் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். ஏழை எளிய மக்களுக்கு 31,453 புதிய வீடுகளும், 16,164 கச்சா வீடுகளை நிலை உயர்த்தவும் மக்கள் நேயத் திட்டமாகச் செயல்படுகின்றது. மேலும், மனித நேயத் திட்டமாக 2 ஆயிரம் பீடித் தொழிலாளர்களுக்காக புதிய வீடுகள் கட்டப்பட உள்ளன என்பதை நான் இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொண்டு, இது சப்ஜெக்ட் உள்ள பட்ஜெட் என்று அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று என்பதை நான் கோடிட்டுக்காட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன்.



மின்சார உற்பத்தியை மேம்படுத்த வட சென்னையிலும், தூத்துக்குடியிலும் ரூ. 8 ஆயிரம் கோடி செலவில் மின் உற்பத்தி நிலையங்கள் அமைக்கப்பட்டு இருக்கின்றன என்பதை நான் கோடிட்டுக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு கேள்வி நேரத்தில்கூட மாண்புமிகு பெருமைக்குரிய நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் ஒரு பதிலைச் சொன்னார்கள். கடந்த திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியிலே ஊராட்சி ஒன்றியங்களிலே இருக்கின்ற சாலைகளை மேம்படுத்த முடியாமல், அவற்றை நெடுஞ்சாலைத் துறைக்குக் கொடுத்தார்கள். கொடுத்ததற்குப் பிறகு அந்தச் சாலைகளை மேற்கொண்டு பராமரிப்பதற்காக அவர்கள் எந்தவிதமான முயற்சியையும் எடுக்கவில்லை. அந்தச் சாலைகளைப் பற்றி, பொதுமக்கள் போய் கேட்டால், அந்தச் சாலை நெடுஞ்சாலைத் துறைக்கு சொந்தம் என்பார்கள். ஆனால், நெடுஞ்சாலைத் துறையைக் கேட்டால், அது எங்களுக்கு சம்பந்தம் இல்லை; ஒன்றியத்திற்கு சம்பந்தம் உள்ளது என்று சொல்லுவார்கள். ஆனால், ஒன்றியத்திலே போய்க் கேட்டால், அது எங்களிடத்திலே இல்லை; நெடுஞ்சாலைத் துறையிடம் கொடுத்துவிட்டோம் என்று சொல்லுவார்கள். அந்த நிலைமையைப் போக்குவதற்காக தமிழகத்திலே அநாதையாகக் கிடந்த 12 ஆயிரம் கிலோ மீட்டர் சாலைகளை மேம்படுத்துவதற்காக மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றைக்கு கேட்பாரற்றுக் கிடக்கின்ற அந்த 12 ஆயிரம் கிலோ மீட்டர் சாலைகளை ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் பராமரிப்பதற்காக 50 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து இருக்கிறார்கள் என்பதை நான் மெத்தப் பணிவன்போடு சுட்டிக்காட்டி, இது சப்ஜெக்ட் இல்லாத பட்ஜெட்டா என்பதை நீங்கள் பார்க்க வேண்டுமென்று நான் கனிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று தமிழகத்திலே இருக்கின்ற 5 ஆயிரம் கிலோ மீட்டர் சாலைகளை மேம்படுத்துவதற்காக 180 கோடி ரூபாயை இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையிலே ஒதுக்கி இருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே கோடிட்டுக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்திலே உள்ள அனைத்து குடியிருப்புப் பகுதிகளிலும் பள்ளிக்கூடம் ஒன்று அமைக்கப்படும் என்கின்ற ஒரு மாபெரும் திட்டத்தை உருவாக்கித் தந்திருக்கின்றார்கள். 30 உயர்நிலைப் பள்ளிகளும், 30 மேல்நிலைப் பள்ளிகளும் தரம் உயர்த்தப்படும் என்பதையும், 240 பொறியியல் கல்லூரிகள் ஒரே இணையத்தில் கொண்டுவரப்படும் என்பதையும் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையிலே தெரிவித்து இருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-40*

மாநில அளவிலே இரண்டாம் கட்ட பொருளாதார சீர்திருத்தங்களை மேற்கொள்வதில் அம்மா அவர்களின் பங்கு இந்தியாவிற்கே எடுத்துக்காட்டாக உள்ளது. அவர்தம் நிதி நிர்வாகம், ஒழுங்கு ஆகியவை உலக வங்கியின் கவனத்தை ஈர்த்துள்ளது. கிணற்றில் போடப்பட்ட பயனுள்ள திட்டங்களை உலக வங்கி மறு ஆய்வு செய்ய தொடங்கியுள்ளது. உதாரணமாக, எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்முடி அவர்கள்கூடச் சொன்னார்கள்.. இது வெந்த புண்ணிலே வேல் பாய்ச்சுவதாக இருக்கிற பட்ஜெட் என்று. நான் ஒன்றை இந்த நேரத்திலே கோடிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்கள் ஆட்சி செய்த 5 ஆண்டு காலத்திலே தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம், நீர்வள மேம்பாட்டுத் திட்டம், வறுமை ஒழிப்புத் திட்டம், தமிழ்நாடு மக்கள் நல்வாழ்வு வளர்ச்சித் திட்டம், கிராமப்புற குடிநீர்த் திட்டம், அடிப்படை சுகாதார வளர்ச்சித் திட்டம் போன்ற பல்வேறு பணிகளுக்காக உலக வங்கியிடம் அவர்கள் கேட்ட தொகை கிடைக்கவில்லை. அவர்கள் கேட்ட தொகை உலக வங்கியிடமிருந்து கிடைக்கவில்லை. டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சீரிய நிர்வாகத்தாலேதான், இன்றைக்கு சீரழிந்திருக்கிற பொருளாதாரத்தை சரி செய்திருக்கிற காரணத்தாலேதான் இன்றைக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உலக வங்கியின் மூலமாக ஏறக்குறைய 9,847 கோடி ரூபாயை கடன் உதவியாகக் கேட்டிருக்கிறார்கள். நிச்சயமாக அந்தக் கடன் உதவி கிடைக்கும் என்ற அடிப்படையிலே எதிர்பார்க்கப்படும் இம்மாபெரும் முதலீட்டை பொறுத்தமட்டிலே தமிழ்நாட்டில் வளர்ச்சிப் பணிகள் சீரிய முறையில் தொய்வின்றி மின்னல் வேகத்திலே பல்கிப் பெருகி, பயனுள்ள பயன்களைத் தர வழி வகுக்கும். பல இலட்சக்கணக்கான



கிராமப்புற மக்களுக்கு, வேலைவாய்ப்பினை அளித்து அவர்தம் ஆண்டு வருமானத்தை அதிகப்படுத்தும். சாதாரண மக்களின் வாழ்வில் ஒளிவிளக்காக அமையும் என்பதை நான் இந்த நேரத்திலே கோடிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்கள் இதயத்திலே வேலை பாய்ச்சி ஏற்படுத்திய புண்ணிற்கு, இப்போது அம்மா அவர்களுடைய சாதனைகள், டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சாதனை, புண்ணிற்கு மருந்து தருவதற்கு ஒப்பாகும் என்பதை நான் இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அம்மா அவர்களுடைய சீரிய முயற்சியின் காரணமாகத்தான் பத்தாவது ஐந்தாண்டுத் திட்டக் குழுவினால், தமிழ்நாட்டிற்கு ரூ.40,000 கோடி திட்டத் தொகையாக ஒதுக்கப்பட்டுள்ளது. இது ஓர் அரிய சாதனை என்பதை நான் இந்த நேரத்திலே கோடிட்டுக்காட்ட விரும்புகிறேன்.

விவசாயத் துறையிலே வளர்ச்சிக்கான முன்னுரிமைத் திட்டங்கள், நாட்டில் அடிப்படை வசதிகளைப் பெருக்கி, தொழில்களை ஊக்குவிக்க முன்னோடித் திட்டங்கள், தகவல் தொழில்நுட்பத் துறையில் ஏற்றம் பெற எழிலான திட்டங்கள், மனிதவள மேம்பாட்டுத் தொலைநோக்குத் திட்டங்கள், ஏழை எளியோருக்கு சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் ஆகிய பயனுள்ள திட்டங்கள் முதலீட்டை அதிகரிக்கவும், சமுதாயத்தில் சம வாய்ப்பை அளிக்கக்கூடிய, வேலைவாய்ப்பை உருவாக்குவதில் அம்மா அவர்களின் ஆர்வம், அவர்தம் சீரிய சிந்தனை வளத்தையும், நுண்ணறிவையும், செயல் திறனையும் ஒருங்கே காட்டவல்லது என்பதை நான் இந்த நேரத்திலே பணிவன்போடு தெரிவித்துக்கொண்டு, நிறைவாக என்னுடைய தொகுதி சம்பந்தமான இரண்டு முக்கியமான கோரிக்கைகளை மட்டும் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பணிவான கவனத்திற்கு நான் பணிவன்போடு கோடிட்டுக்காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோரிக்கையை எழுதிக் கொடுத்து விடுங்கள். (குறுக்கீடு) கோரிக்கையை எழுதிக் கொடுத்து விடுங்கள்.

**திரு. கே. பாண்டுரங்கன்:** எனக்கு முன்னாலே மாண்புமிகு அருமை அண்ணன் ஹக்கீம் அவர்கள் பேசுகின்றபோது, மாண்புமிகு

அம்மா அவர்கள் எதற்கும் அஞ்ச மாட்டார்கள் என்று சொன்னார்கள். நான் ஒன்றை, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக உறுதியாக தெரிவித்துக்கொள்கிறேன். இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எந்தக் கூட்டணிக்கும் அஞ்சாதவர்கள், எந்தப் படைக்கும் அஞ்சாதவர்கள், எந்தத் தடைக்கும் அஞ்சாதவர்கள், விரோதிக்கும் அஞ்சாதவர்கள், துரோகிக்கும் அஞ்சாதவர்கள், பகைவருக்கும் அஞ்சாதவர்கள், வஞ்சகர்களின் இகழ்ச்சிக்கும் அஞ்சாதவர்கள். சிங்கத்தின் சீற்றத்தையும், சிந்தனையிலே மாற்றத்தையும், தங்கத்தின் தோற்றத்தையும், தரணியை ஆளுகின்ற ஆற்றலும் இருப்பதால், எத்தனை குள்ள நரிகள் தமிழகத்திலே கூக்குரல் இட்டாலும், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களே, வான் உள்ளளவும், நீர் உள்ளளவும், மண் உள்ளளவும், (மேசையைத் தட்டும் ஒலி) இந்த உலகம் உள்ளளவும், ஆம், தமிழகத்தினுடைய தங்கத் தலைவி டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொண்டு, வருங்கால இந்தியாவினுடைய தாயாக, டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விளங்குவார்கள், விளங்குவார்கள், விளங்குவார்கள் என்பதை நான் உறுதியாகத் தெரிவித்துக்கொண்டு, அறம் வெல்லும், அம்மா அவர்களுடைய ஆட்சியும் என்றும் வெல்லும் என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொண்டு, நேரத்தைக் கூட்டி கொடுத்தமைக்காக மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய மனப்பூர்வமான நன்றியை உரித்தாக்கிக் கொண்டு, இந்த நிதிநிலை அறிக்கையிலே பேசுவதற்கு எனக்கு வாய்ப்பினை வழங்கிய எங்களது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற் பாதங்களுக்கு மீண்டும் என்னுடைய நன்றியைக் காணிக்கையாக்கி, வாய்ப்புக்கு நன்றி கூறி, உரையை நிறைவு செய்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் திங்கட்கிழமை *(31-3-2003)* காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

*பின்னர், பேரவை பிற்பகல் 1-44 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*



# 10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

## அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

59. 2001-2002 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு செய்தித்தாள் - காகித நிறுவனத்தின் இருபத்தி இரண்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

60. 2001-2002 ஆம் ஆண்டிற்கான அரசு ரப்பர் கழகத்தின் பதினெட்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

61. 2001-2002 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தின் இருபத்தி ஏழாவது ஆண்டறிக்கையும், கணக்குகளும். [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

62. 2001-2002 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வனத் தோட்டக் கழகத்தின் இருபத்தி எட்டாவது ஆண்டறிக்கையும், கணக்குகளும் [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

89. 2003-2004 ஆம் ஆண்டில் உடனடிச் செலவுக்கான மானிய அனுமதி. (தமிழ், ஆங்கிலம்)

90. 2003-2004 ஆம் ஆண்டு "உடனடிச் செலவுக்கான" மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு. (தமிழ், ஆங்கிலம்)

91. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று முப்பத்து எட்டாவது அறிக்கை. (2001-2003)

92. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று முப்பத்து ஒன்பதாவது அறிக்கை. (2001-2003)

93. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று நாற்பதாவது அறிக்கை. (2001-2003)

[2003 மார்ச் 28

94. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று நாற்பத்தி ஒன்றாவது அறிக்கை. (2001-2003)

95. உடுக்குறியிடாத வினாக்கள் - விடைகள் பட்டியல் (எட்டாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை)

96. உடுக்குறியிடாத வினாக்கள் - விடைகள் பட்டியல் (ஒன்பதாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை).

184535
சென்னை-600 008
நூலகம்

அரசு மைய அச்சகம், சென்னை - 600 079.

**Copies can be had from the**
**Assistant Director,**
**Government Publication Depot,**
**112, Anna Salai,**
**Chennai-600 002.**

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.